ஈகை—இண்டங்கொடி, ஈதல், கற்பகம், பொன், மேகம்.

ஈகையாளன்—கொடுப்போன்.

ஈங்கு—இண்டங்கொடி, இவ்விடம்.

ஈங்கை—இண்டங்கொடி.

ஈசனாள்—ஆதிரைநாள்.

ஈசன்—அயன். அரசன், அரன், அரி, எப்பொருட்குமிறைவன், கடவுள், குரு, மூத்தோன்.

ஈசன்மைந்தன்—முருகன்,விநாயகன்.

ஈசானம்—சிவனைம்முகத்தொன்று, வடகீழ்த்திசை

ஈசானன்—சிவன்

ஈசுரன்—கடவுள், சிவன்.

ஈடு—உவமை,குழைதல்,பெருமை,வலி.

ஈட்டம்—கூட்டம்.

ஈட்டி—சவளம், வினையெச்சம்,

ஈண்டல்-கூட்டம், வியங்கோண்முற்று.

ஈண்டு—ஈண்டென்னேவல்,இவ்வண்ணம், இவ்விடம், சீக்கிரம், புவித்துடக்கி

ஈதல்—கொடுத்தல், சொரிதல்.

ஈநுது—ஈந்து

ஈமத்தாடி—சிவன்

ஈமம்—சுடுகாடு, விறகு.

ஈயம்—பஞ்சலோகத்தொன்று.

ஈயல் — ஈதல், தம்பலப்பூச்சி, வியங்கோண்முற்று.

ஈரங்கொல்லியர்—வண்ணார்.

ஈரப்பலா—ஆசினிப்பலா.

ஈரம—அழகு, அறிவு, அன்பு, கிருபை, குளிர்ச்சி, பகுதி, பண்பு.

ஈரல்—ஈருள், வியங்கோண்முற்று.

ஈரவன்—சந்திரன்.

ஈருள்—ஈரல்.

ஈர்—ஈர்தலைச்செய்யென்னேவல், மயிரிற்பற்றுமீர்.

ஈர்க்கில்—அம்பிறகு.

ஈர்க்கு—ஈர்க்கு.

ஈர்தல்—பிளத்தல்.

ஈர்த்தல்—அறுத்தல், இழுத்தல், பிளத்தல்.

ஈர்ப்பு—ஈர்த்தல்.

ஈர்வாள்—இரம்பம்.

ஈழம்—கள், சிங்களதேசம், பொன்.

ஈறிலி—கடவுள்.

ஈறு—உப்பளம், முடிவு.

ஈனமிலணங்கு—தெய்வப்பெண்.

ஈனம்—இழிவு, குறைபாடு.

ஈனல்—ஈன்றல், கதிர், வியங்கோண்முற்று.

ஈனனம்—வெள்ளி.

ஈனுமணிமை—சூதகம்.

ஈன்றல்—உண்டாதல், பெறுதல்.

ஈன்றாள்—தாய்.

ஈன்றான்—தந்தை, பிரமன்.

உ

உ—ஓரெழுத்து, சுட்டு (உ-ம். உக்கொற்றன், உவன்.

உகப்பு—உயர்ச்சி.

உகம்—நாள், பாம்பு, பூமி, முடிவு.

உகளல்—கடத்தல், குதித்தல், பாய்தல்.

உகிர்—நகம்.

உகுத்தல்—சிந்தல், சொரிதல், விடுத்தல்.

உகைத்தல்—எழுதல், செலுத்தல்.

உக்கம்—ஆலவட்டம், ஏறு, கோழி, தீ, தூசு, மருங்கு.

உக்கல்—பக்கம்.

உக்காரம்—சத்திபண்ணல்.

உக்காரி—பிட்டு.

உக்கிரம்—கொடுமை, தலைக்காவல்.

உக்கிரன்—சிவன், வீரபத்திரன்.

உசனம் — அட்டாதசவுபபுராணத்தொன்று.

உசனன்—சுக்கிரன்.

உசா—உசாவென்னுமேவல், ஒற்றர்.

உசாவுதல்—ஆராய்தல், எண்ணல்.

உசி—கூர்மை.

உசிதசமயம்—அவதரம்.

உசிதம்—தகுதி.

உசிதன்—பாண்டியன்.

உசில்—சிக்கிரிமரம்.

உசு—உளு.

உச்சம்—உயர்ச்சி, வல்லிசை.

உச்சாடனம்—அகற்றல்.

உச்சி—ஆண்மயிர், தலை, நடுத்தலை, நடுப்பகல், தாய், மயிர்முடி.

உச்சிட்டம்—எச்சில்.

உச்சைச்சிரவம்—இந்திரன்குதிரை.

உஞற்று—உஞற்றென்னேவல், ஊக்கம், முயற்சி, வழங்கோதல்.

உஞ்சை—அவந்திநகர்.

உடங்கு—கூடிநிற்றல்.

உடம்பிடி—வேல்.

உடம்பு—உடல், ஒற்றெழுத்து.

உடம்பை—கலங்கனீர்.

உடலல்—சினக்குறிப்பு, பொருதல்.

உடல்—உடம்பு, ஒற்றெழுத்து, பொருதென்னேவல், பொன்.

உடற்றல்—சினக்குறிப்பு, பெருங்கோபம்.

உடன்றல் — கோபம், சினக்குறிப்பு, பொருதல்.

உடு—அகழி, அம்பினிறகு, அம்பு, அம்புத்தலை, ஆடு, ஓடக்கோல், சிக்கிரிமரம், சீலைசுற்றென்னேவல், விண்மீன்.

உடுக்கை—இடைசுருங்குபறை, ஒருகட்பறை, சீலை, வினைமுற்று.

உடுத்தல்—சீலைசுற்றல்.

உடுபதி—சந்திரன்.

உடுபம்—தெப்பம்.

உடுப்பு—சீலை.

உடுப்பை—உடுப்பாயென்னுமுற்று, சிக்கிரிமரம்.

உடுவின்வேந்தன்—சந்திரன்.

உடுவை—அகழ்.

உடை—உடையென்னேவல், உடைமை, சீலை, செல்வம், வினைமுற்று, வேலமரம்.

உடைகுளம்—பூராடநாள்.

உடைதல்—கெடுதல், சாய்தல், தளர்வு.

உடைத்தல்—தகர்த்தல்.

உடைப்பு—தளர்வு.

உட்கல்—அஞ்சல், மடிதல், வியங்கோண்முற்று, வெட்கம்.

உட்கு—அச்சம், உட்கென்னேவல், நாணம்.

உட்கை—உட்கல், உள்ளங்கை, வினைமுற்று.

உட்டணம்—வெப்பம்.

உணக்கம்—வாட்டம், வினைமுற்று.

உணங்கல்—வாடல், வியங்கோண்முற்று.

உணராமை—உன்மத்தம், மயக்கம்.

உணர்தல்—அறிதல், ஊடறீர்தல், எண்ணல், தெளிவு, நினைத்தல், வாடல்.

உணர்த்தல்—அறிவித்தல், சற்பித்தல்.

உணர்வு—அறிவு, தெளிவு, நீங்கல்.

உணவு—உணா.

உணா—அஃறிணைப்பன்மைவினைமுற்று, உணவு, சோறு.

உண்டல்—புசித்தல்.

உண்டாட்டு—மகளிர்விளையாட்டு, விளையாட்டு.

உண்டி—உண்டல், உண்டாயென்னுமுற்று, சோறு, பறவையுணவு.

உண்டை—உண்டாயென்னுமுற்று, திரட்சி, படைவகுப்பு.

உண்ணல்—புசித்தல், வியங்கோண்முற்று.

உண்மை—அறிவு, மெய்.

உதகம்—நீர், பூமி, மழை, மழைத்துளி.

உதகுவன்—தீ.

உதக்கு—வடக்கு.

உதணம்—மொட்டம்பு.

உததி—கடல்.

உதயம்—விடியல்.

உதயன்—சூரியன்.

உதரப்பிரிவு—தங்குடித்தமர்.

உதரம்—வயிறு.

உதவல்—ஈதல், சகாயம், வியங்கோண்முற்று.

உதவி—கொடை, சகாயம், வினையெச்சம்.

உதள்—மேடவிராசி, வெள்ளாட்டுக்கடா.

உதறல் — உதறுதல், வியங்கோண்முற்று.

உதாசனன்—கண்குத்திபாம்பு, நெருப்பு.

உதாரணம்—இலக்கியமெடுத்துக்காட்டல், துணைக்காரணம்.

உதாரம்—கொடை.

உதானம்—கண்டத்தியங்கும்வாயு.

உதானன்—தசவாயுவிலொன்று.

உதி—உதித்தலைச்செய்யெனேவல், உலைத்துருத்தி, ஓர்மரம்.

உதிட்டிரன்—தருமராசன்.

உதித்தல்—தோன்றல், பருத்தல

உதியன்—சேரன், பாண்டியன்.

உதிரம்—இரத்தம்.

உதிரன்—செவ்வாய்.

உதிர்த்தல்—உகுத்தல்.

உது—உஃது.

உதும்பரம்—அத்திமரம், எருக்கு, செம்பு.

உதை — உதைத்தல், உதையென்னேவல்.

உத்தமம்—நன்மை.

உத்தமாங்கம்—தலை.

உத்தரம் — உயர்ச்சி, ஊர்க்கி, எதிர்மொழி, வடக்கு.

உத்தராசங்கம்—உத்தரீயம்.

உத்தரி—குதிரை.

உத்தரித்தல்—சாதித்தல்.

உத்தரீயம்—ஏகாசம்.

உத்தானம்—அடுப்பு, இசைப்பு.

உத்தி—செல்வம், சொல், தந்திரவுத்தி, திருவுறுப்பு, தூக்கங்கள், தேமல், பாம்பின்படப்பொறி.

உத்தியானம்—பூந்தோட்டம்.

உத்தியோகம்—உள்ளமிகுதி, முயற்சி.

உத்துங்கம்—உயர்ச்சி.

உத்துவாகிதமுகம்—அண்ணாந்துபார்த்தல்

உந்தரம்—வழி.

உந்தி—ஆறு, ஆன்கூட்டம், உயர்ச்சி, கடல், கொப்பூழ், தேருருளை, நடு, நீர்ச்சுழி, பரப்பு, மகளிர்விளையாட்டிலொன்று, யாழினுறுப்பு, வினையெச்சம்

உந்திபூத்தோன்—விட்டுணு

உந்துதல்—உயர்ச்சி, ஏறுதல்.

உந்துரு—பெருச்சாளி.

உந்தை—உன்றந்தை, வினைமுற்று.

உந்நதம்—உயர்ச்சி.

உந்மத்தம்—ஊமத்தை, மயக்கம்.

உபகரணம்—துணைக்காரணம்.

உபகாரம்—ஈகை, சகாயம்.

உபகாரி—ஈகையாளன்.

உபதானம்—தலையணை.

உபத்தம்—பெண்குறி.

உபநயனம்—பூணூற்கலியாணம், மூக்குக்கண்ணாடி.

உபநிடதம்—வேதநுட்பம்.

உபமலம்—மணமாசு.

உபயமம்—கலியாணம்

உபயம்—இரண்டு.
உபயவோசை—ஈரடுக்கொலி.
உபரி—மேல்.
உபலம்—கல், சிறுகல்.
உபலாளனம்—தூயதாக்கல்.
உபவநம்—நந்தனவநம்.
உபவீதம்—பூணூல்.
உபாதானம்—பிச்சை.
உபாநதியம்—ஒன்றுவிட்டயல்.
உபாயம்—உபசாரச்சொல், தந்திரம்.
உபேந்திரன்—விட்டுணு.
உப்பமைப்போர் — நெய்தனிலமாக்கள்.
உப்பளம்—உப்புவிளைநிலம், கழி.
உப்பு—அராகம், இனிமை, உப்புதலைச்செய்யென்னேவல், உவர்த்தல், கடல், மகளிர்விளையாட்டு.
உப்புதல்—வீங்கல்.
உப்புவாணிகர்—உப்பமைப்போர்.
உப்பை—ஔவைமுதலிய பெண்பாலொருத்தி, வினைமுற்று.
உமணர்—உப்பமைப்போர்.
உமாபதி—சிவன்.
உமி—உமி.
உமிழ்தல்—கொப்புளித்தல், சத்திசெய்தல், சொரிதல், தெவிட்டல்.
உமை—பார்வதி.
உமைகரநதி—கங்கை.
உமைமகன்—வீரபத்திரன்.
உமையவள்—பார்வதி.
உம்—இடைச்சொல்.
உம்பருலகு—தேவலோகம்.
உம்பர்—ஆகாயம், உயர்ச்சி, உவ்விடம், பார்ப்பார், மேல், வானோர்.
உம்பல்—ஆட்டினேறு, ஆண்யானை, எருது, எருமைக்கடா, எழுச்சி, குலம், கோத்திரம், முறைமை, யானை, வலி, விலங்கேற்றின்பொது.
உம்பி—தம்பி.
உம்மை—கழிபிறப்பு, வருபிறப்பு.
உயங்கல்—வருந்தல், வியங்கோண்முற்று.
உயரம்—மிகுதி, மேல்.
உயர்ச்சி—மேல்.
உயர்தல்—உயர்தல்.
உயர்தினம்—திருவிழா.
உயர்நிலத்தோர்—வானோர்.
உயர்நிலம்—மேடு.
உயர்நிலை—தேவலோகம்.
உயர்ந்தோர்—அறிஞர், பார்ப்பார், முனிவர்.
உயர்வு—உயர்தல், மேன்மை.
உயல்—உயிர்வாழ்தல்.
உயவர்—வருந்தினர்.
உயவு—வருத்தம்.
உயவை—காக்கணஞ்செடி.
உயிர்—ஆன்மா, காற்று.
உயிர்த்தல்—வாய்விடல், விடுத்தல்.
உயிர்த்துணைவி—சரச்சுவதி, மனைவி.
உயிர்நிலை—உடல்.
உயிர்ப்பு—காற்று, மூச்சு.
உய்தல்—உயிர்வாழ்தல்.
உய்தி — உயிர்வாழ்தல், உயிர்வாழ்வையென்னுமுற்று.
உய்த்தல்—செலுத்தல்.
உய்யானனம்—சோலை, பூந்தோட்டம்.
உரகம்—பாம்பு.
உரகர்—சமணர். நாகர்.

உரசல்—உரிஞ்சல்.

உரண்டம்—காக்கை.

உரத்தல்—வலியுறல்.

உரப்பல்—அதட்டல்.

உரப்பு—உரத்தல், உரப்பென்னேவல்.

உரம்—ஊக்கம், ஞானம், மதில், மார்பு, வலி.

உரல்—உரல்.

உரவன்—அருகன்.

உரவு—வலி.

உரவுநீர்—உவர்நீர்.

உரவோர்—அறிஞர், மூத்தோர்.

உரறல்—பெருங்கோபம்.

உரற்றல்—ஒலித்தல், பேரொலி, வியங்கோண்முற்று.

உரன்—அறிவு, உள்ளமிகுதி.

உராஞ்சல்—உரைதல்.

உராதரம்—முலை.

உராய்தல்—உரிஞ்சல்.

உராய்போதல்—உரைதல்.

உரி—உரிதலைச்செய்யெனேவல், ஓரளவு, தோல்.

உரிஞ்சல்—உராய்தல், வியங்கோண்முற்று.

உரிதல்—கழலல்.

உரித்து—உரியது, வினையெச்சம்.

உரிமை—ஒவ்வொன்றிற்குத்தகுவது, குணம், மனைவி.

உரியோர்—அறிஞர், உறவோர்.

உரியோன்—புருடன்.

உரிவை—தோல், வினைமுற்று.

உரு—அட்டை, உடல், உருத்தலைச்செய்யெனேவல், உள், நிறம், நோய், வடிவு,

உருகம்—பிரப்ப.

உருகல்—உருகுதல், வியங்கோண்முற்று.

உருக்கம்—உருகுதல், தொடை.

உருக்கல்—உருக்குதல், வியங்கோண்முற்று.

உருக்கு—உருக்கென்னேவல், எஃகு.

உருக்குமம்—பொன்.

உருசி—சுவை.

உருட்சி—உருண்டிருத்தல்.

உருட்டல் — உருளச்செய்தல், வியங்கோண்முற்று.

உருத்தல் — கோபம், சினக்குறிப்பு, தோற்றம், மிகுதி, முளைத்தல்.

உருத்திதம்— உரியபொருள், தொழிலிலாபம், வளர்தல்.

உருத்திரபஞ்சமம்—ஓர்பண்.

உருத்திரன்—கொடுங்கோபி, சிவன்.

உருத்திராணி—பார்வதி.

உருத்திரை—பார்வதி.

உருப்பம்—உட்டணம், தினைமா, மிகுதி.

உருமம்—உட்டணம், மத்தியானம்.

உருமு—இடி.

உருமேறு—இடி.

உரும்—அச்சம், இடி.

உருவங்காட்டி—கண்ணாடி.

உருவம்—உடல், வடிவு.

உருவாரம்—வெள்ளரி.

உருவிலி—மன்மதன்.

உருவு—அச்சம், உருவென்னேவல், வடிவு.

உருவுதல் — உறுப்புதழைமுதலியவுருவல், கணைவேன்முதலியபுகுந்தோடல், வாண்முதலியகழற்றல்.

உருளரிசி—கொத்துமல்லி.

உருளல் — உருளுதல், வியங்கோண்முற்று.

உருளி — உரோகணிநாள், தேருருளை, வட்டம்.

உருளை—உருள், வினைமுற்று.

உருள்—உருளென்னேவல், உரோகணிநாள், தேருருளை, பண்டி.

உரூபம்—உருவம்.

உரூப்பியம்—வெள்ளி.

உரோந்திரன்—வீரன்.

உரை — உயர்ச்சி, உரையென்னேவல், ஒலி, சொல், சொற்பயன், தேய்வு, பொன்.

உரைசல்-உரைதல்,வியங்கோண்முற்று.

உரைத்தல் — ஒலித்தல், சொல்லுதல், தேய்த்தல்.

உரையல் — உரைதல், வியங்கோண்முற்று.

உரோகணிதநயன்—பலபத்திரன்.

உரோகதி—நாய்.

உரோகம்—நோய்.

உரோங்கல்—உலக்கை.

உரோசல்—உராய்தல்.

உரோணி—உரோகணிநாள்.

உரோதநம்—அழுதல்.

உரோமம்—புறமயிர், மயிர்ப்பரப்பு.

உரோருகம்—முலை.

உலகசயன்—புத்தன்.

உலகநாதன்—பிரமன்.

உலகேந்திரன்—சூரியன்.

உலகபாந்தவன்—சூரியன்.

உலகமாதா — உமையவள், இலக்குமி, சரச்சுவதி.

உலகமீன்றாள்—பார்வதி.

உலகம்—ஆகாயம், உயர்ந்தோர்,உலகு

உலகளந்தோன்—விட்டுணு.

உலகு—ஆகாயம், உயர்ந்தோர், திசை, நாடு, பூமி.

உலகுண்டோன்—விட்டுணு.

உலக்கை—உலக்கை, திருவோணம்.

உலங்கு—கொக்கு.

உலண்டு—கோற்புழு.

உலத்தல்—கெடல், சாதல்.

உலப்பு—கேடு, சாவு.

உலமரல்—அச்சக்குறிப்பு, துன்பம், வியங்கோண்முற்று.

உலம்—கற்றிரள், திரண்டகல்.

உலம்பல்—முழங்குதல், வியங்கோண்முற்று.

உலரல்—காய்தல், வியங்கோண்முற்று.

உலர்தல்—காய்தல்.

உலவை—ஊர், ஓடைக்கொடி, காற்று, குடி, குலம், தழை, மரக்கொம்பு, மரபொந்து, முல்லைநிலக்கான்யாறு, வள்ளி, விலங்கின்கொம்பு,வினைமுற்று.

உலறல்—சினக்குறிப்பு.

உலா—உலாவென்னேவல், ஓர்பிரபந்தம், சாரிவருதல்.

உலாவல் — பொழுதுகழித்துவிளையாடல், வியங்கோண்முற்று.

உலூகம்—கோட்டான்.

உலூகலம்—உரல்.

உலூதை—சிலந்திப்பூச்சி.

உலை—உலையென்னேவல், கொல்லனுலைமுதலாயின.

உலைதல்—அழிதல், கெடுதல், வருந்துதல்.

உலைத்தல்—அலைத்தல், அழித்தல், வருந்தல்.

உலைப்பு—வருத்தம்.
உலைவு—அச்சம், உலைதல், நடுக்கம்.
உலோகம்—எழுவகையுலோகம், பஞ்சலோகம், பூமி
உலோகிதம்—சிவப்பு.
உலோகோயம்—இமயமலைக்குத்தெற்கு மிராமேசுரத்துக்குவடக்கு நிற்குந் தேசங்கள்.
உலோசனம்—கண்
உலோபம்—ஆசை, கொஞ்சம்
உலோமம்—வால்
உலோலம்—அசைவு.
உலோலிதமுகம் — சிந்தையாலொருதோண்மேற்சாய்ந்துநிற்குமுகம்.
உல்கு—ஆயம்.
உல்லம்—ஓர்மீன்
உல்லரி—தளிர்.
உல்லாசம்—அத்தவாளம், உள்ளக்களிப்பு.
உல்லாபம்—மழலைச்சொல்
உலலாபன்—நோயுற்றெழுந்தோன்
உல்லியர்—கூவநூலோர்.
உல்லோலம்—பெருங்கடற்றிரை
உவகை—களிப்பு
உவச்சர்—சோனகர்
உவட்டல்—பெருக்கு, வியங்கோண்முற்று, வெறுத்தல்.
உவணமுயர்த்தோன்—விட்டுணு.
உவணம்—உயர்ச்சி, கருடன், கழுகு, பருந்து.
உவணன்—கருடன்
உவணி—வாள்.
உவணை—உவ்விடம், தேவலோகம்.
உவண்—உவ்விடம்
உவதை—மலையின்வீழாறு
உவத்தல்—மகிழ்தல்
உவப்பு—உயரம், பொலிவு, மகிழ்ச்சி, விளையாட்டு.
உவமம் — ஒன்றோடொன்றையொப்புறுத்தல்.
உவமானம்—உவமிக்கும்பொருள்
உவமாநிலம்—சுவர்
உவமேயம்—உவமிக்கப்படுபொருள
உவமை—உவமம்.
உவரி—கடல்.
உவர்—உவவென்னேவல் உவர்ப்பு.
உவர்க்களம்—உப்பளம்
உவர்த்தரை—உப்பளம்.
உவர்த்தல்—ஓர்சுவை, வெறுத்தல.
உவர்ப்பு—சிந்தை, வெறுப்பு.
உவளகம்—அந்தப்புரம், இடைச்சேரி. இரண்டு, உப்பளம், ஓர் பக்கம், குளம், பள்ளம், மதில்
உவளல - துவளல், வியங்கோண்முற்று
உவளித்தல்—சுத்தஞ்செய்தல்
உவன்—சுட்டுசசொல்
உவா—இளையோன், கடல், தம்பி, நிறைவு, பூரணை, யானை
உவை—சுட்டுச்சொல்.
உவ்—உவை, சுட்டுச்சொல்,
உவ்வி—தலை.
உவ்வு—தவம்.
உழக்கல்—கலக்கல், சிலம்பம்பழகல். வியங்கோண்முற்று.
உழக்கு—உழக்கென்னேவல், ஓரளக்குங் கருவி, ஓரளவு.
உழசியர்—மருதநிலப்பெண்கள்

உழக்குதல்—பழகல்.

உழத்தி—மருதநிலப்பெண், வினைமுற்று.

உழத்தியர்—மருதநிலப்பெண்கள்.

உழப்பு—ஊக்கம், முயற்சி, வலி.

உழம்பல்—ஒலித்தல், வியங்கோண்முற்று.

உழலல்—சுழலல், வியங்கோண்முற்று.

உழல்—உழலென்னேவல, உழுதல், வியங்கோண்முற்று.

உழவர்—சூத்திரர், பூவைசியர், மருதநிலமாக்கள், வேளாளர்.

உழவு—உழுதல்.

உழி—ஏழனுருபு, (உ-ம். அவனுழிவந்தான்,) பக்கம்.

உழிஞை—சிறுபூளை, பகைவரரண்பிடிப்பார்க்குமாலை.

உழிதரல்—சுழலல், திரிதல்.

உழுகை—உழுதல்.

உழுதல்—உழல்.

உழுந்து—ஓர்பயறு.

உழுபடை—கலப்பை.

உழுவம்—எறும்பு, வினைமுற்று.

உழுவல்—உழுவனென்னுமுற்று, குணம், முறைமை, விடாதுதொடர்ந்தவன்பு.

உழுவை—புலி, வினைமுற்று.

உழை—உழையென்னேவல், ஏழனுருபு, (உ-ம். அவனுழைவந்தான்,) சிரத்தாற்பிறக்குமிசை, மான், யாழினோர்நரம்பு, வினைமுற்று.

உழைத்தல்—பேசலாவெழுமொலி.

உழையர்—ஏவல்செய்வோர், மந்திரிகள்.

உளம்—கருத்து, மனம்.

உளர்தல்—சிந்தல், தடவல்.

உளறுதல்—பேரொலி.

உளி—ஏழனுருபு, (உ-ம். அவனுளிவந்தான்,) ஓர்கருவி.

உளியம்—கரடி.

உளை—ஆண்மயிர், உளையென்னேவல், ஒலி, குதிரைக்கழுத்திலணியுமயிர், புறமயிர், பேசலாவெழுமொலி.

உளைத்தல்—அழைத்தல், ஒலித்தல்.

உள்—ஏழனுருபு, (உ-ம். ஊருளிருந்தான்,) உள், நினையென்னேவல், மனம்.

உள்கல்—நினைத்தல், வியங்கோண்முற்று.

உள்குதல்—நினைத்தல்.

உள்வழிகடந்தோன்—கடவுள்.

உள்ளங்கை—அகங்கை.

உள்ளத்துறைவோன்—கடவுள்.

உள்ளமிகுதி—ஊக்கம்.

உள்ளம்—கருத்து, மனம், முயற்சி.

உள்ளல்—உள்ளானகுருவி, நினைத்தல், வியங்கோண்முற்று.

உள்ளார்—பகைவர்.

உள்ளாளனம்—கூத்தின்விகற்பம்.

உள்ளான்—ஓர்குருவி.

உறக்கம்—நித்திரை.

உறங்கல்—நித்திரைசெய்தல், வியங்கோண்முற்று.

உறல்—கிட்டல், வருதல், வியங்கோண்முற்று.

உறவி—உயிர், உலைக்களம், உறவு, ஊற்று, எறும்பு, கிணறு.

உறவு—சுற்றம்.

உறவோர்—சுற்றத்தோர்.

உறழ—உவமையுருபு, (உ-ம். துப்புறழ வளர்சடையான்.)

உறழல்—எண்கூட்டிப்பெருக்கல், வியங்கோண்முற்று.

உறழ்தல் — உவமித்தல், எண்கூட்டிப் பெருக்கல்.

உறழ்வு — இடையீடு, உணர்வு, ஒப்பு, பகை, போர்.

உறி—உறி, உறியென்னேவல்.

உறிதல்—உறிஞ்சுதல்.

உறு—உறுவென்னேவல், மிகுதி.

உறுகணாளர்—தரித்திரர்.

உறுகண் — அச்சம், சரித்திரம், துன்பம், நோய்.

உறுக்கல்—கடத்தல், குதித்தல், கோபம், சினக்குறிப்பு, வியங்கோண்முற்று.

உறுதல்—சேர்தல், வருதல்.

உறுதி—கல்வி, தன்மை, வலி, வினைமுற்று.

உறுநர்—தூதர்.

உறுத்தல்—ஒற்றுதல், பயத்தல், வருவித்தல்.

உறுத்தை—அணில், வினைமுற்று.

உறுபு—செறிவு, பாலையாழ்த்திறம், மிகுதி, வினையெச்சம்.

உறுப்படக்கி—ஆமை.

உறுப்பு — அவயவம், உடல், துறவல், நெருக்கம், மரக்கொம்பு, மிகுதி.

உறுமல்—உறுமுதல், எழும்பல், வியங்கோண்முற்று.

உறுமி—ஓர்பறை, வினையெச்சம்.

உறுவர்—முனிவர்.

உறுவல் — உறுவேனென்னுமுற்று, துன்பம்.

உறுவன் — அருகன், முனிவன், வினைமுற்று.

உறுவை—ஔவைமுதலியபெண்பாலுள்வருமொருத்தி, வினைமுற்று.

உறை—ஆடையழுக்ககற்றுநீர், இடம், இரை, உயர்ச்சி, உறையென்னேவல், ஓரிலக்கக்குறிப்பு, காரம், நீளம், படைக்கூடு, பண்டம்பெய்யுறை, பாலிடுபிரை, மருந்து, மழை, மழைத்துளி, வாழ்நாள், விலங்குணவு, வினைமுற்று, வெண்கலம்.

உறைதல்—தோய்தல், வசித்தல்.

உறைத்தல்—கார்த்தல்.

உறைத்துளி—மழைத்துளி.

உறைப்பு—காரம், கொடுமை.

உறையுள்—உறைகாலம், ஊர்ப்பொது, நாடு, மருதநிலத்தூர், மக்கட்படுக்கை, வீடு.

உறையூர்—சோழனூர், மருதநிலத்தூர்.

உற்கம்—கடைக்கொள்ளி, நீத்திரன்.

உற்குரோசம்—நீர்வாழ்பறவை.

உற்கை — கடைக்கொள்ளி, விண்மீன், விண்வீழ்கொள்ளி.

உற்சவம்—திருவிழா.

உற்சாகம்—ஊக்கம், முயற்சி.

உற்பத்தி—பிறப்பு.

உற்பலம்—கருநெய்தல், செங்குவளை.

உற்பவம்—பிறப்பு.

உற்பாதம்—கொடுமை.

உற்றபண்புரைப்போர்—தூதர்.

உற்றோர்—உறவோர்.

உன்மத்தம்—ஊமத்தை, மயக்கம்.

உன்னம்—அன்னப்புள், நினைவு, நீர்வாழ்பறவைப்பொது, மனம்.

உன்னல் — நினைத்தல், வியங்கோண்முற்று.

உன்னி—குதிரை, வினையெச்சம்.

ஊ

ஊ—ஊன், ஓரெழுத்து.

ஊகம்—குரங்கு, நினைவு, புலி.

ஊக்கம்—உயர்ச்சி, உள்ளமிகுதி, உற்சாகம், முயற்சி, வலி.

ஊக்கல்—ஏறுதல், வியங்கோண்முற்று.

ஊங்கு—மிகுதி.

ஊசல்—அசைதல், ஊஞ்சல்.

ஊசி—இழைவாங்கி, எழுத்தாணி.

ஊஞ்சல்—ஊசல்.

ஊடல் — கலவியிற்பிணங்கல், வியங்கோண்முற்று.

ஊட்டம்—உண்டி.

ஊட்டல்—உண்பித்தல், விலங்கின் கன்றுண்ணல், வியங்கோண்முற்று.

ஊட்டி—உணவு, பறவையுணவு, மழு, மிடறு, வினையெச்சம்.

ஊணம்—ஓர் தேயம்.

ஊணர்—ஊணதேயத்துள்ளோர், பெருண்டியுண்போர்.

ஊண்—இரை, சோறு.

ஊதல்—ஆரவாரம், காற்று, வீங்கல், வியங்கோண்முற்று.

ஊதிகை—முல்லைக்கொடி.

ஊதியம்—இலாபம், கல்வி.

ஊதை—காற்று, குளிர்காற்று, வினைமுற்று.

ஊத்தை—ஊமல்.

ஊமன்—ஊமை, கூகை.

ஊமை—ஊமன்.

ஊரல்—உரிஞ்சல், ஊர்தல், கிளிஞ்சில், வியங்கோண்முற்று.

ஊரன்—மருதநிலத்தலைவன்.

ஊராண்மை—மிக்கசெயல்.

ஊரி—இளமை, சங்கு, மேகம்.

ஊரு—அச்சம், தொடை.

ஊருணி—ஊரடுத்தகுளம்.

ஊர்—ஊரென்னேவல், ஊர்.

ஊர்கோள்—சூரியனைச்சூழத்தோன்றும்வட்டம்.

ஊர்ச்சம்—கார்த்திகைமாதம்.

ஊர்தல்—ஊருதல், செலுத்தல், பரத்தல்.

ஊர்தி—எருது, குதிரை, சிவிகை, தேர், யானை, பண்டிமுதலியவாகனங்கள், வினைமுற்று.

ஊழல்—நரகம், வியங்கோண்முற்று.

ஊழி—உறைகாலம், பூமி, யுகமுடிவு.

ஊழித்தீ—வடவாநலம்.

ஊழ்—ஊழ்த்தலைச்செய்யெனேவல், குணம், பகை, பழமை, முறை, வெயில்.

ஊழ்த்தல் — ஊன், செவ்வி, நினைதல், பதனழிவு, புலால், மடித்தல்.

ஊழ்த்துணை—மனைவி.

ஊளன்—ஆணரி

ஊறல்—ஊறுதல், வியங்கோண்முற்று.

ஊறு — இடையூறு, ஊறெனேவல், கொலை, தீண்டல், தீமை

ஊறுகோள்—கொலை.

ஊறுநீர்—ஊற்றுநீர்.

ஊற்றம்—அசைவின்றிநிற்றல், அறிவுடைமை, ஆற்றல், பற்றுக்கோடு, புகழ்.

ஊற்றல் — பெய்தல், வியங்கோண்முற்று.

ஊற்றால்—உரோகணிநாள், ஊற்றூல்.

ஊற்று — ஊற்றெனேவல், ஊன்றுகோல், நீரூற்று.

ஊற்றுக்கோல்—ஊன்றுகோல்.

ஊனம் — ஈனம், குறைபாடு.

ஊனன்—குறைவுள்ளோன்.

ஊன்—தசை.

ஊன்றல்—தள்ளல், சார்தல், நட்டல், வியங்கோண்முற்று.

ஊன்றி—பாம்பு, வினையெச்சம்.

எ

எ—ஓரெழுத்து, வினு, (உ-ம். எக்கொற்றன், எவன்.)

எகினம்—எகின்.

எகின்—அன்னம், கவரிமா, செம்மரம், நாய், நீர்நாய், புளிமா, புளியமரம்.

எக்கர்—சொரிதல், மறைத்தசொல்.

எக்கல்—ஈறுதல்,பொருதல். வியங்கோண்முற்று.

எக்கழுத்தம்—இறுமாப்பு.

எக்களித்தல்—மிகுமகிழ்ச்சி.

எஃகம் — எறியாயுதம், கைவேல், சக்கரம்.

எஃகல்—ஏறுதல், வியங்கோண்முற்று.

எஃகு—ஆயுதப்பொது, உருக்கு, எஃகென்னேவல், கூர்மை.

எங்கு—எவ்விடம்.

எசம்—நரம்பு.

எச்சம்—எச்சில், குறைபாடு, சேடம், மகள், மகன், யாகம்.

எஞ்சல் — குறைதல்; வியங்கோண்முற்று.

எடுத்தல்—எடுக்குதல்.

எடுப்பல்—எடுத்தல், தூங்கினுனையெழுப்பல், வியங்கோண்முற்று. வினைமுற்று.

எடுப்பு—எடுத்தல், எடுப்பென்னேவல்.

எட்டர்—மங்கலப்பாடகர்.

எட்டல்—தாவுதல், வியங்கோண்முற்று.

எட்டி—ஓர்சாதி. காஞ்சிரமரம், வினையெச்சம்.

எட்டியர்-செட்டிகள், வைசியர்பொது.

எட்டினர்—சிநேகிதர்.

எட்டு — ஆசை, எட்டென்னேவல், ஒரெண்.

எட்டுதல்—தாவுதல்.

எண் — எண்ணிக்கை, எண்ணென்னுமேவல், எளிமை, எள், கணக்கு, சோதிடநூல், வரையறை, வலி, விசாரம்.

எண்கணன்—பிரமன்.

எண்காற்பறவை—சரபம்.

எண்கு—கரடி.

எண்குணன்—அருகன்,கடவுள்,சிவன்.

எண்சிறப்புள்ளோன்—அருகன்.

எண்டோளன்—சிவன்.

எண்டோளி—காளி, துர்க்கை.

எண்ணம்—குறிப்பு, மதிப்பு.

எண்ணர்—மந்திரிகள்.

எண்ணலர்—பகைவர்.

எண்ணல்—குறித்தல், தேர்ச்சி, மதித்தல், வியங்கோண்முற்று.

எண்ணில்கண்ணுடையோன் — புத்தன்.

எண்மை—எளிமை.

எதிரூன்றல்—எதிரல், வியங்கோண்முற்று.

எதிர்—எதிரென்னேவல், ஒப்பு, முன்.

எதிர்தல்—தோன்றல், மலைதல், மாறுபாடு.

எதிர்த்தல்—அலைத்தல், எதிர்த்தல்.

எதிர்ந்தோர்—பகைவர்.

எதிர்ப்பு—எதிர்த்தல்.

எது—யாது.

எந்திரம்—சூத்திரம், தேர், மதிலுறுப்பு.
எந்தை—தந்தை.
எம்பர்—எவ்விடம்.
எம்பி—தம்பி.
எம்மை—எப்பிறப்பும்.
எயில்—ஊர்ப்பொது, திரிபுரம், மதில்.
எயிறு—பல், யானைக்கொம்பு.
எயிற்றியர்—பாலைநிலப்பெண்கள்.
எயினர்—பாலைநிலமக்கள், வேடர்.
எய்-அம்பெய்யென்னேவல், முட்பன்றி.
எய்தல்—அடைதல், அம்பெய்தல்.
எய்த்தல்—இளைத்தல்.
எய்யாமை—அறியாமை.
எரி—எரியென்னேவல், கேட்டைநாள், தீ, நரகம், புநர்பூசம்.
எரிக்கலகாம்போதி—ஓரிராகம்.
எரிசனம்—நரகர்.
எரிதல்—எரியல்.
எரித்தல்—எரியச்செய்தல்.
எரிநாள்—கார்த்திகைநாள்.
எரிப்பு—எரித்தல்.
எரிப்புறம்—நரகம்.
எரிமுகி—சேங்கொட்டைமரம்.
எரியல்—எரிதல், வியங்கோண்முற்று.
எரிவனம்—சுடுகாடு.
எரிவு—எரிதல்.
எரு—எரு.
எருக்கல்—கொல்லல், சுமத்தல், வியங்கோண்முற்று, வெட்டல்.
எருக்கு—எருக்கென்னேவல், ஓர்செடி.
எருது—இடபவிராசி, எருது.
எருத்தம்—பிடர்.
எருந்து—உரல், கிளிஞ்சில்.
எருமணம்—செங்குவளை.
எருமை—எருமை.
எருமையூர்தி—நமன்.
எருவை—உதிரம், கழுகு, கழுதை, கொறுக்கை, கோரை, செம்பு, யானை.
எலி—எலி, பூரநாள்.
எலு—கரடி.
எலுநன்—சோழன்.
எலுமிச்சை—எலுமிச்சை.
எலுவன்—தோழன்.
எல்—இகழ்ச்சிக்குறிப்பு, இரவு, ஒளி, சூரியன், நாள், பகல், வெயில்.
எல்லரி—கைமணி.
எல்லாம்—முழுதும்.
எல்லி—இராத்திரி, சூரியன்.
எல்லை—அளவு, கூப்பிடுதூரம், சூரியன், நாள், முடிவு.
எல்லையின்மை—அளவின்மை.
எல்லோ—அதிசயவிரக்கச்சொல்.
எல்வை—காலம், நாள்.
எவண்—எவ்விடம்.
எவன்-ஐயக்கிளவி, யாது, என்னை, யாவன்.
எவையும்—எல்லாம்.
எவ்—எவை.
எவ்வம்—தனிமை, தீராதநோய், துன்பம்.
எவ்வனம்—மதர்த்தல்.
எழல்—எழும்பல், வியங்கோண்முற்று.
எழால் — யாழ்நரம்பினோசை, வியங்கோண்முற்று.
எழிலி — கடையெழுவள்ளலிலொருவன், மேகம்.
எழில்—அழகு, இளமை, வண்ணம், வலி.

எழினி- இடைச்சீலை, திரைச்சீலை.

எழு—எழுவென்னேவல், கம்பம், வலி தடி.

எழுகை—எழுதல்.

எழுதல்—எழல், எழுதுதல்.

எழுதாக்கிளவி—வேதம்.

எழுத்தாளர்—அறிஞர்.

எழுநா—நெருப்பு.

எழுபவம்—உயர்பிறப்பு, எழுபிறப்பு.

எழுமை—உயர்ச்சி, எழுபிறப்பு.

எழுவாயெழுஞ்சனி—மகநாள்.

எழுவாய்—ஆதி, வினைமுற்று.

எளிஞர்—எளியர்.

எளிமை—தளர்வு, தனிமை.

எளியர்—தரித்திரர்.

எள்—என், எள்ளென்னேவல்.

எள்கல் — நிந்தித்தல், வியங்கோண்முற்று.

எள்ள-உவமைச்சொல், வினையெச்சம்.

எள்ளல்—நகை, நிந்தை, வியங்கோண்முற்று.

எறிதல்—அடித்தல், குத்தல், வெட்டல்.

எறித்தல்—ஒளிவீசல்.

எறிமணி—சேமக்கலம்.

எறும்பி—யானை.

எறுழி—பன்றி.

எறுழ்—தடி, தண்டு, தூண், வலி.

எற்றல்—அடித்தல், அறுத்தல், எறிதல், குத்தல், கொல்லல், வியங்கோண்முற்று, வெட்டல்.

எற்றித்தல்—இரங்கல்.

எற்று—இரக்கக்குறிப்பு, எத்தன்மைத்து, எறிதல், எற்றென்னேவல்.

எற்றுதல்—எறிதல், புடைத்தல்.

எற்றோ—அதிசயவிரக்கச்சொல், இரக்கச்சொல், எத்தன்மைத்தோ.

எனது—எனது.

எனைத்து—எவ்வளவு.

என்—இகழ்ச்சிக்குறிப்பு, இடைச்சொல், ஐயக்கிளவி.

என்பு—எலும்பு, புல்.

என்று—எந்நாள், சூரியன்.

என்றும்—எப்போழ்தும்.

என்றூழ்—சூரியன், வெயில்.

என்ன—உவமைச்சொல்,எத்தன்மைய.

என்னே—என்னோ.

என்னை—என்.

என்னோ—அதிசயவிரக்கச்சொல், இரக்கச்சொல், ஐயக்கிளவி.

ஏ

ஏ-இசைநிறைச்சொல், ஈற்றசைச்சொல், எண்ணின்குறிப்பு, ஒழுத்து, தேற்றக்குறிப்பு, பாணம், பிரிவின்குறிப்பு, வினாக்குறிப்பு.

ஏகதந்தன்—விநாயகன்.

ஏகதேவன்—கடவுள், புத்தன்.

ஏகம்—ஒன்று, தனிமை.

ஏகல்—உயர்ச்சி, நடத்தல், போகல், வியங்கோண்முற்று.

ஏகவேணி—மூதேவி.

ஏகன்—கடவுள், சிவன்.

ஏகாசம்—உத்தரீயம், மேற்கொள்போர்வை.

ஏகாந்தம்—தனித்திருக்குமிடம்.

ஏகாலியர்—வண்ணார்.

ஏகி—கைம்பெண், வினையெச்சம்.

ஏக்கம்—ஏங்கல்.

ஏங்கல்—அழுதல், இரங்கல், ஒலித்தல், மயிற்குரல், வியங்கோண்முற்று.

ஏசல்—ஏசுதல், பழிமொழி, வியங்கோண்முற்று.

ஏசாதவர்—தேவர்.

ஏசி—இனி, வினையெச்சம்.

ஏசு—ஏசென்னேவல், குற்றம்.

ஏடகம்—சீலை, தென்னமரம், பலகை, பனைமரம், பூவிதழ்.

ஏடல்—கருத்து.

ஏடன்—செவிடன், தோழன்.

ஏடா—தோழன் முன்னிலை.

ஏடி—தோழி முன்னிலை.

ஏடு—கண்ணிமை, பனையேடு, பூவிதழ்.

ஏட்டை—ஆசை, தளர்வு.

ஏணம் — நிலைபெறுதல், மான், மான்றோல், வலி.

ஏணி—எல்லை, ஏணி, நாடு, மான்கன்று.

ஏண்—நிலையுடைமை, வலி.

ஏதம்—குற்றம், கேடு, துன்பம்.

ஏதர்—குற்றமுடையோர்.

ஏதி—ஆயுதப்பொது, வாள்.

ஏதிலார்—அயலோர்.

ஏதில்—அயல்.

ஏது—காரணம், யாது.

ஏத்தல்—துதித்தல், வியங்கோண்முற்று.

ஏந்தல்— அரசன், உயர்ச்சி, ஏந்துதல், பெருமை, பெருமையிற் சிறந்தோர், மலை, வியங்கோண்முற்று.

ஏமகூடம்—அட்டமலையிற்பொன்மலை.

ஏமம்—இரா, இன்பம், உன்மத்தம், களிப்பு, காவல், திரைச்சீலை, புதையல், பொன், விபூதி.

ஏமாப்பு—கருத்து, மிகுகளிப்பு.

ஏமி—உடனிகழ்வான்.

ஏமுறல்—ஏமாப்புறல், வியங்கோண்முற்று.

ஏய்தல்—பொருந்தல்.

ஏய்த்தல்—உவமித்தல்.

ஏய்ப்ப—உவமைச்சொல். (உ-ம். முத்தேய்ப்பவொளிர்முறுவல்,) வினையெச்சம்.

ஏய்ப்பு—ஏய்த்தல்.

ஏரகம்—சுப்பிரமணியப்பிரதானத்தலமாறிலொன்று.

ஏரண்டம்—ஆமணக்கு.

ஏரம்பன்—விநாயகன்.

ஏரல்—இளிஞ்சில்.

ஏராண்மை—உழவு.

ஏராளர்—உழுநர்.

ஏரி—குளம், புநர்பூசம்.

ஏரின்வாழ்நர்—பூவைசியர்.

ஏர்—அழகு, உழுமாடு.

ஏர்த்தொழிலர்—பூவைசியர்.

ஏர்பு—எழுச்சி.

ஏலம் — மயிர்ச்சாந்து, வாசனைப்பண்டம்.

ஏலல்—இயலல், வியங்கோண்முற்று.

ஏலா—தோழிமுன்னிலை.

ஏலாமை—கூடாமை, தகாமை.

ஏலி—கள்.

ஏலுதல்—பொருந்தல்.

ஏலுநன்—தோழன்.

ஏல்வை—குளம், வினைமுற்று.

ஏவல் — ஆணைசெலுத்தல், வியங்கோண்முற்று.

ஏவு—அம்பு, செலுத்தென்னேவல், [illegible]ருத்தம்.

ஏழகம் — செம்மறிக்கடா, திருவாட்டேறு.

ஏழை—அறிவில்லான், தரித்திரன், பெண்.

ஏழ்—ஓரெண்.

ஏழ்பரியோன்—சூரியன்.

ஏளனம்—அவமதிச்சிரிப்பு, நீக்கல்.

ஏறங்கோட்பறை-முல்லைநிலப்பறை.

ஏறல்—ஏறுதல், வியங்கோண்முற்று.

ஏருளர்—படைவீரர்.

ஏறு—அச்சுவினிநாள், இடபவிராசி, இடி, எருது, எருமை, கவரி, சங்கு, சுறு, பசு, பன்றி, புல்வாய், மரை, மானிவற்றினாண், ஏறென்னேவல், விலங்கேற்றின்பொது.

ஏறுழவர்—படைவீரர்.

ஏறூர்ந்தோன்—சிவன்.

ஏற்பு—இரப்பு, பொருந்தல்.

ஏற்போர்—இரப்போர்.

ஏற்றம்—ஏற்றமரம், புகழ், மிகுதி, மேன்மை.

ஏற்றல்—அடுக்குதல், இரத்தல், உணர்த்தல், எதிர்த்தல், எழுப்பல், கொள்ளல், வியங்கோண்முற்று.

ஏற்றுவாகனன்—சிவன்.

ஏனம்-எழுத்தின்சாரியை, ஓலைக்குடை, பன்றி, பாவம்.

ஏனல்—கதிர், செந்தினை, தினைப்புனம், பைந்தினை.

ஏனாதி—தந்திரி, நாவிதன், மந்திரி, மறவன்.

ஏனை—மலங்குமீன், மற்று.

ஐ

ஐ—அரசன், அழகு, ஆசான், இரண்டனுருபு, (உ-ம். அறத்தைச்செய்தான்.) இருமல், ஓரெழுத்து, கடவுள், கோழை, சாரியை, (உ-ம். ஏற்றினோடேற்றை,) சுவாமி, நுண்மை, யானையைப்பாகனதட்டுமோசை.

ஐங்கணைக்கிழவன்—மன்மதன்.

ஐங்கரற்கிளையோன் — முருகன், வீரபத்திரன்.

ஐங்கரன்—விநாயகன்.

ஐந்தருநாதன்—இந்திரன்.

ஐந்தானம்—மிருகசீரிடம்.

ஐந்திணை-அன்புடைக்காமம், ஐந்நிலம்.

ஐந்திரம்—இந்திரவியாகரணம்.

ஐந்திரி—கிழக்கு.

ஐப்பசி-அச்சுவினிநாள், ஐப்பசிமாதம்.

ஐமீன்—அத்தநாள்.

ஐமுகன்—சிவன்.

ஐமை—அடர்பு, கூட்டம்.

ஐம்பால்—ஐம்பகுதி, பெண்மயிர்.

ஐம்புலத்தடங்கான்—கடவுள்.

ஐம்புலம்வென்றோர்—முனிவர்.

ஐயங்கவீனம்—புதுவெண்ணெய்.

ஐயம்—இரப்போர்கலம், சந்தேகம், பிச்சை.

ஐயர்—பார்ப்பார், முனிவர், வானோர்.

ஐயவி—கடுகு.

ஐயன்—உபாத்தியாயன், ஐயனார், குரு, தந்தை, மூத்தோன்.

ஐயெனல்—விரைவின்குறிப்பு.

ஐயை—காளி, தலைவி, தவப்பெண், துர்க்கை, பார்வதி, மகள்.

ஐயோ—அதிசயவிரக்கச்சொல், இரக்கச்சொல்.

ஐவகைப்பொன்—பஞ்சலோகம்.

ஐவனம்—மலைநெல்.

ஐவிரல்—அத்தநாள்.

ஒ

ஒகரம்—ஓரெழுத்து, மயில்.

ஒக்கல்—இடைப்பக்கம், உறவு, ஒத்தல், குடி, கூட்டுதல், வியங்கோண்முற்று.

ஒக்குதல்—கொப்பளித்தல், பிற்படவிடல்.

ஒசிதல்—அசைதல், ஒடிதல், முறிதல்.

ஒசித்தல்—அசைத்தல், ஒடித்தல், முறித்தல்

ஒடிசில்—கவண்.

ஒடிதல்—முறிதல்.

ஒடித்தல்—ஒடித்தல், ஒளிசெய்தல்.

ஒடு-ஒடுக்கட்டி, ஓர்மரம், மூன்றனுருபு, (உ-ம் கொடியொடுதுவக்குண்டான்.)

ஒடுக்கம்—அடக்கம், பதுங்கல், முடிவு.

ஒடுங்கல்—அடங்கல், ஒதுங்கல், பதுங்கல், வியங்கோண்முற்று.

ஒடுங்கி—ஆமை, வினையெச்சம்.

ஒட்டகம்—ஒட்டை.

ஒட்டம் — ஓடு, தோண்டலளவைத்திடர், பந்தயம், வினைமுற்று.

ஒட்டல்—உடன்படல், வியங்கோண்முற்று.

ஒட்டார்—பகைவர்.

ஒட்டியம்—ஓர்தேசம்.

ஒட்டு-ஒட்டென்னேவல், படைவகுப்பு.

ஒட்டுநர்—மித்திரர்.

ஒட்டை—ஒட்டகம், வினைமுற்று.

ஒட்பம்—முதுக்குறைவு.

ஒண்டன்—ஆணரி.

ஒண்ணல்—பொருந்தல், வியங்கோண்முற்று.

ஒண்மை—அழகு, அறிவு, ஒழுங்கு, தன்மை, மிகுதி.

ஒதி—உதிமரம்.

ஒதுக்கம்—நடை, மறைவு.

ஒதுக்கல் — ஒதுங்கச்செய்தல், வியங்கோண்முற்று.

ஒதுங்கல்—நடத்தல், பதுங்கல், வியங்கோண்முற்று.

ஒத்தபண்புணைப்போர்—தூதர்.

ஒத்தல்—ஒத்துதல், ஒப்பு, நடு, பொருந்தல், வியங்கோண்முற்று.

ஒத்தறுத்தல்—தாளம்போடல்.

ஒப்ப—உவமையுருபு, (உ-ம். மதியொப்பவொளிர்முகம்,) வினையெச்சம்.

ஒப்பனை—அலங்கரித்தல், அலங்காரம்.

ஒப்பு—அழகு, உவமை, ஒப்பென்னேவல், பொருந்தல்.

ஒப்புரவு—முறைமை.

ஒய்யல்—செலுத்தல்.

ஒய்யெனல்—மந்தக்குறிப்பு.

ஒருகுடி—தாயத்தார்.

ஒருங்கல்—அடங்கல், கேடு, வியங்கோண்முற்று.

ஒருங்கு—அடக்கம், எல்லாங்கூடிநிற்றல். ஒருங்கென்னேவல்.

ஒருசிறை—ஒதுக்கிடம்.

ஒருத்தல்—எருமை, கரடி, கவரி, பன்றி, புலி, புல்வாய், மரை, மான், யானை இவற்றினாண், விலங்கேற்றின்பொது.

ஒருபவம்—ஒருபிறப்பு.

ஒருமரம்—செம்மரம்.

ஒருமித்தல்—ஒன்றுபடல்.

ஒருமை—ஒருபிறப்பு, ஒற்றுமை, தனிமை.

ஒருவந்தம்—ஒற்றுமை, சம்பந்தம், ஸ்ரித்திருக்குமிடம்.

ஒருவு—ஆடு, ஒருவென்னேவல்.

ஒருவுதல்—நீங்கல்.

ஒலி—ஆரவாரம், இடி, ஒலியென்னேவல், ஓசை, காற்று.

ஒலியல்—ஆறு, சீலை, தெரு, தோல், பூமாலை, வியங்கோண்முற்று.

ஒல்—ஒல்லென்னேவல், முடிவிடம்.

ஒல்கல்—குழைதல், தளர்தல், துவளல், வியங்கோண்முற்று.

ஒல்லல்—இயலல், வியங்கோண்முற்று.

ஒல்லாமை—இகழ்தல், இயலாமை, வெறுப்பு.

ஒல்லார்—பகைவர்.

ஒல்லுநர் — நூலுணாயுணர்வோர், மித்திரர்.

ஒல்லெனல்—அநுகரணவோசை.

ஒல்லை—கடுப்பு, காலவிரைவு, சிறுபொழுது, சீக்கிரம், பழமை, வினைமுற்று.

ஒவ்வாமை—பொருந்தாமை.

ஒழிதல்—சாதல், தவிர்தல்.

ஒழித்தல்—எழுச்சி, கொல்லல்.

ஒழிவு—ஒழிகை.

ஒழுகல்—உயர்ச்சி, ஒழுகுதல், ஒழுக்கம், நீர்முதலியவோடல், நீளம், முறையாக நடத்தல், வியங்கோண்முற்று.

ஒழுகை—பண்டி, வினைமுற்று.

ஒழுக்கம்— உயர்ச்சி, ஏழுச்சி, குலம், நடை, பண்பு, முறைமை, வழி.

ஒழுக்கல்—எழுச்சி, ஒழுகுவித்தல், வியங்கோண்முற்று.

ஒழுக்கு—ஒழுகல்.

ஒழுங்கல் — நிரல்படல், வியங்கோண்முற்று.

ஒழுங்கு—ஒழுங்கென்னேவல், நிரல்.

ஒளி—ஒளிப்பிடம், ஒளியென்னேவல், சந்திரன், சூரியன், நெருப்பு, புகழ், விண்மீன், விளக்கு, வெயில்.

ஒளித்தல்—பதுங்கல், மறைதல்.

ஒளியோன்—சூரியன்.

ஒளிர்தல்—ஒளிசெய்தல்.

ஒளிவட்டம்—கண்ணாடி, சக்கரம்.

ஒள்ளியோன் — ஒளிசெய்வோன், சுக்கிரன்.

ஒறுத்தல்—அலைத்தல், நோய்செய்தல், வருத்துதல், வெறுப்பு.

ஒற்கம்—வறுமை.

ஒற்றர்—வேவுகாரர்.

ஒற்றல்—உடுத்தல், ஒற்றுதல், வியங்கோண்முற்று.

ஒற்றி — நிலவடைமானம், வினையெச்சம்.

ஒற்றித்தல்—ஒற்றைப்படவெண்ணல்.

ஒற்று — ஒற்றென்னேவல, மெய்யெழுத்து, வேவு.

ஒற்றுதல் — அடுத்தல், உடுத்தல், ஒற்றல்.

ஒற்றுமை—உரிமை, ஒருமை.

ஒற்றை—ஒன்று, வினைமுற்று.

ஒற்றைக்கொம்பன்—விநாயகன்.

ஒற்றையாழித்தேரோன்—சூரியன்.

ஒற்றையாழித்தேர்—சூரியன்றேர்.

ஒன்பான்—ஒன்பது.

ஒன்றல்—பொருந்தல், வியங்கோண்முற்று.

ஒன்றார்—பகைவர்.

ஒன்று—ஒன்று, ஒன்றென்னேவல்.

ஒன்றுநர்—சிநேகிதர்.

ஒன்றோ--அதிசயவிரக்கச்சொல், இடை

ச்சொல், (உ-ம். பொய்படுமொன்றோ புனைபூணும்)

ஒன்றா—பகைவர்

ஓ

ஓ — அதிசயவிரக்கச்சொல், இரக்கச்சொல், ஓரெழுத்து, மடையடைக்குங் கதவு, ... (உ-ம். சாத்தனோ)

ஓகை—உவகை

ஓக்கம—உயர்ச்சி, எழுஉதல்.

ஓங்கல—அரசன், உயர்ச்சி, எழுச்சி, ... ச்சிபொருளவமானம், மலை, மூங்கில், மேடு, யானை, வியங்கோண்முற்று

ஓசனித்தல்—பறவைச்சிறகடித்தல

ஓசை—ஒலி, சீர்த்தி, வாழை

ஓச்சல—எறிதல், ஓட்டல, செலுத்தல, வியங்கோண்முற்று.

ஓடி—ஒருகாற்சுவாய்த்துப்படுமரம், கொடி.

ஓடம—நீர்மேலோடுமோடம்.

ஓடல் — அச்சக்குறிப்பு, ஓடல், வியங்கோண்முற்று.

ஓடு — ஓடு, ஒடுன்னேவல், நீளுதல, வேற்றுமையுருபு, (உ-ம். சாத்தனோடு)

ஓடை—அகழி, ஓர்கொடி, ஓர்மரம், குளம், நெற்றிப்பட்டம், மலைவழி, யானைநுதற்பட்டம், வினைமுற்று.

ஓட்டம—உதடு, ஓடுமோட்டம், தோல்வி.

ஓட்டல்—செலுத்தல், வியங்கோண்முற்று

ஓணம்—ஆறு, திருவோணம

ஓதம—கடல், கடற்றிரை, வெள்ளம

ஓதல—சொல்லல், படித்தல, வாசித்தல், வியங்கோண்முற்று.

ஓதனம—உண்டி, சோறு.

ஓதவனமை—ஓசற்ற... மை, பா...

ஓதி—அறிவு, இடு... ரிமை, ஓந்தி, கல்வி, ... னம், பூனை, பெண்மயிர், மலைவிளைபெச்சம்.

ஓதிம உயர்த்தோன்—பிரமன்.

ஓதிமம—அன்னம், கவரிமா, ...

ஓதுதல—சொல்லுதல.

ஓதுவான்—ஆசான், படிப்பவன்.

ஓதுவித்தல—படிப்பித்தல்

ஓதை—ஒலி, பேரொலி, மதிலுண்மேடை, மதில, வினைமுற்று.

ஓந்தி—ஓந்தி

ஓத்து — ஓரினப்பொருளையொருவழிவைத்தி ருக்குமியல், வேதம்.

ஓத்துமைபோர— பொருந்தச்சொல்வோர்.

ஓந்தி—ஓணான்

ஓமப்பொடி —திருநீறு

ஓமம்—ஓர்பூடு, யாகம்.

ஓமான்—ஓந்தி.

ஓமை—ஓர்மரம்.

ஓம்படை—காவல.

ஓம்பல — பாதுகாத்தல், வியங்கோண்முற்று.

ஓய்தல்—ஒழிதல், தளாதல்

ஓய்வு—சாதல், தளர்வு, முடிதல்.

ஓரம்—பக்கவாதம், விளிம்பு

ஓரி—ஆணரி, ஆண்மயிர், ஆண்முசு, காளிவாகனம், கிழநரி, புறமயிர், விலங்கேற்றின்பொது.

ஓரும்—அசைச்சொல, (உ-ம். செயற்பாலதோரு மறனே,) பெயரொச்சம், வினைமுற்று

ஓரை—இராசிப்பொழுது, கலன்கள், சமயம், தோழி, மகளிர்கூட்டம், மாதர் விளையாடுங்களம், விளையாட்டு, விழைமுற்று.

ஓர்குடிமணாளன்—சகலன்.

ஓர்தல்—ஆராய்தல்.

ஓர்ப்பு — கருமமுடிக்குந்துணிவு, பொறுமை.

ஓலம்—ஒலி, கடல், பாம்பு.

ஓலை—ஒலி, தாழையோலை, தென்னோலை, பனையோலை.

ஓலைதீட்டும்படை—எழுத்தாணி.

ஓல்—ஒலித்தல்.

ஓவர்—கம்மாளர், பாடற்கிழமக்கள்.

ஓவல்—ஒழிதல், வருந்தல், வியங்கோண்முற்று.

ஓவியம்—சித்திரம்.

ஓவியர்—சித்திரகாரர்.

ஓளி—ஒழுங்கு, யானைக்கூட்டம்.

ஓனம—எழுத்தின் சாரியை.

ஔ

ஔதாரியன்—வரையாதுகொடுப்போன்.

ஔவியம்—அழுக்காறு.

ஔவை—தவப்பெண், தாய்.

க

ககபதி—கருடன்.

ககம்—அம்பு, பறவை.

ககனம்—ஆகாயம், காடு, படை.

ககுபம்—திசை, மருதமரம்.

கக்கல்—சத்திபண்ணல், வியங்கோண்முற்று.

கங்கு—காற்பலம்.

கங்கணம்—கடகம், வளை.

கங்கபத்திரம்—அம்பு, பருந்திறகு.

கங்கம்—சீப்பு, தீப்பொறி, பருந்து.

கங்காதரன்—சிவன்.

கங்காளம்—முழுவெலும்பு.

கங்காளன்—சிவன்.

கங்காளி—காளி.

கங்கு—கருந்தினை, பருந்து, வயலின் வரம்பு, வரம்பின்பக்கம்.

கங்குல்—இரா, இருள், பரணிநாள்.

கங்கை—ஓராறு, சிவன்மனைவி.

கங்கைபெற்றோன்—முருகன், விநாயகன், வீட்டுமாசாரி.

கங்கைமைந்தன்—வீட்டுமாசாரி.

கங்கைவேணியன்—சிவன்.

கசடு—ஐயம், குற்றம், தழும்பு, மாசு.

கசம்—ஓரளவு, கயம், யானை.

கசரிபு—சிங்கம்.

கசற்பம்—மஞ்சள்.

கசிதம்—துடிப்பு, பதித்தல், பூச்சு.

கசிதல்—அழுதல்.

கசிவு—அழுகை, அன்பு, வருத்தம், வெயர்வை.

கசை—கசம், குதிரைச்சம்மட்டி.

கச்சகம்—குரங்கு.

கச்சபம்—ஆமை.

கச்சம்—அளவு, கடன், குதிரையங்கவடி, துணிவு, மரக்கால், மூன்றுனை, யானைக்கழுத்திடுகயிறு, வார்.

கச்சனம்—இருள், கணணிலிடுமை.

கச்சி—காஞ்சிபுரம்.

கச்சு—முலைக்கட்டு.

கச்சை—கயிறு, கவசம், தழும்பு, யானைகட்டுங்கயிறு.

கச்சைக்கொடியோன்—கன்னன்.

கச்சோணி—வாசனைப்பண்டம்.

கச்சோதம்—மின்மினி.

கஞறம்—கள்.

கஞறல்—எழுச்சி, கடுப்பு, சினக்குறிப்பு, நெருங்கல், பொலிவு, மிகுதி.

கஞன்றல்—எழுச்சி.

கஞ்சகம்—கச்சுவிடுந்தலைப்பு, மூன்றுனை.

கஞ்சகாரர்—கன்னூர்.

கஞ்சம்—அப்பவர்க்கம், கஞ்சா, கைத்தாளம், தாமரை, நீர், வஞ்சம், வெண்கலம்.

கஞ்சரீடம்—வலியான்குருவி.

கஞ்சனம்—கரிக்குருவி, கண்ணுடி, கைத்தாளம், வலியான்.

கஞ்சனை—கண்ணுடி, கலசப்பானை.

கஞ்சா—கஞசா, கள்.

கஞ்சி—கஞ்சி, காஞ்சி.

கஞ்சிகை — இரத்தினச்சிவிகை, சீலை, திரைச்சீலை.

கஞ்சுகம்—சட்டை.

கஞ்சுகன்—வயிரவன்.

கஞ்சுகி—காவலன், சட்டை, திரைச்சீலை, பாம்பு.

கஞ்சுளி—சட்டை.

கடகடெனல்—ஈரொலிக்குறிப்பு.

கடகம்—கங்கணம், கூத்தின்விகற்பம், கெண்டிகை, கேடகம், கைவளை, மதில், மலைப்பக்கம், யானைக்கூட்டம், வட்டம்.

கடத்தல்—செலுத்தல், தாண்டல், நடத்தல்.

கடப்பாடு—ஈகை, முறைமை.

கடமை—முறைமை.

கடம்—அருநெறி, உடல், கயிறு, காடு, குடம், தோட்டம், நீதி, மலைப்பக்கம், யானைக்கதுப்பு, யானைக்கூட்டம், யானைமதம், வான்.

கடம்பல்—குமிழமரம்.

கடம்பன்—முருகன்.

கடம்பு—ஓர்மரம்.

கடலகம்—ஊர்க்குருவி.

கடலர்—நெய்தநிலமாக்கள்.

கடலை—ஓர்பயறு.

கடல்—சமுத்திரம்.

கடல்வண்ணன்—விட்டுணு.

கடவல்—செலுத்தல், வியங்கோண்முற்று.

கடவுண்மூர்த்தி—அருகன்.

கடவுமரம்—கடவை.

கடவுளர்—தேவர்.

கடவுள்—குரு, தெய்வம், நன்மை, முனிவன்.

கடவை—ஏணி, கடவுமரம், குற்றம், வினைமுற்று.

கடறு—அருநெறி, காடு, வாளுறை.

கடற்சார்பு—நெய்தநிலம்.

கடற்சேர்ப்பன்—நெய்தநிலத்தலைவன்.

கடற்பிணு—நெய்தநிலப்பெண்.

கடற்பிறந்தாள்—இலக்குமி.

கடன்—அளத்தல், இருணம், குடியிறை, மரக்கால், முறைமை,

கடா—ஆடு, எருமைஇவற்றினுண், கடாவென்னேவல்.

கடாம்—யானைமதம்.

கடாரம்—ஓரூர், கருமைகலந்தபொன்மை, கொப்பரை.

கடாரி—ஈனுவிளமாடு.

கடாவல்—கடவல், செலுத்தல், வியங்கோண்முற்று, வினவல், வினைமுற்று.

கடி—அச்சம், இன்பம், ஒளி, கடியென்னேவல், கரிப்பு, களிப்பு, காலம், காவல், கூர்மை, கைப்பற்றல், சிறப்பு, சீக்கிரம், நந்தவனம், நிதம்பம், பிசாசம், புதுமணம், புதுமை, பொழுது, வாசனை, விளக்கம்.

கடிகை—சமயம், தாழக்கோல், துண்டம், நாழிகை.

கடிகைமாக்கள்—மங்கலப்பாடகர்.

கடிஞை—இரப்போர்கலம்.

கடிதடம்—நிதம்பம்.

கடிதல்—அறுத்தல், கோபம், சினக்குறிப்பு, வெட்டல்.

கடிந்தோர்—முனிவர்.

கடிப்பகை—கடுகு.

கடிப்பம்—ஆபரணப்பெட்டி, காதணி, கெண்டிகை, வினைமுற்று.

கடிப்பிணை—காதணி.

கடிவை—யானை, வினைமுற்று.

கடினம்—கொடுமை.

கடு—கசப்பு, கடுக்காய்மரம், கடுவென்னேவல், கார்த்தல், நஞ்சு, முள்.

கடுகம்—கார்ப்பு.

கடுகல்—வியங்கோண்முற்று, விரைவு.

கடுகு—கடுகு.

கடுக்கை-கொன்றைமரம், வினைமுற்று.

கடுக்கைக்கண்ணியன்—சிவன்.

கடுதல்—திருடல், பறித்தல.

கடுத்தலை—வாள்.

கடுத்தல்—உவமை, ஐயம், கோபம், சினம், வேகம்.

கடுப்ப—உவமைச்சொல்.

கடுப்பு—சினம், விரைவு.

கடுமுள்—ஆயுதப்பொது.

கடுமை—கொடுமை, சீக்கிரம், மிகுதி.

கடும்பு—உறவு, சும்மாடு.

கடுவன்—குரங்கு, பூனை, முசுஇவற்றினாண், விலங்கேற்றின்பொது.

கடை—ஆவணம், ஏழனுருபு, (உ - ம். அவன் கடைசென்றான்,) கடையென்னேவல், கீழ், புறவாயில், பூணின் கடைப்புணர்வு, முடிவு, வழி, வாயில்.

கடைகுளம்—உத்திராடநாள்.

கடைச்சி—மருதநிலப்பெண்.

கடைஞர்—மருதநிலமாக்கள்.

கடைதடம்—வாயில்.

கடைதல்—குடைதல்.

கடைநாள்—இரேவதி.

கடைப்பிடி — கருமமுடிக்குந்துணிவு, தேற்றம், மறவாமை.

கடைமீன்—இரேவதிநாள்.

கடையம்—இந்திராணிகூத்து.

கடையனல்—ஊழிதீ.

கடையெழுஞ்சனி—உத்திரநாள்.

கட்கம்—வாள்.

கட்சி—காடு, பறவைக்கூடு, மனிதர்படுக்கை, வழி.

கட்செவி—பாம்பு.

கட்டம்—காடு, தாழி, துன்பம், வினைமுற்று.

கட்டல்—தடை, திருடல், தோண்டல், பிணித்தல், மூடல், வியங்கோண்முற்று.

கட்டழகு—அலங்காரம், பேரழகு.

கட்டளை—இட்டிகையியற்றுங்கருவி, உரையறிகருவி, உவமை, துலாராசி, நிறை, நிறையறிகருவி.

கட்டளைக்கல்—உரைகல், நிறைகல்.

கட்டி—அகமகிழ்ச்சி, ஓர்புள், கட்டி, கருப்புக்கட்டி, வினையெச்சம்.

கட்டில்—மஞ்சம்.

கட்டிளமை—மிக்கிளமை.

கட்டு—உறுதி, கட்டென்னேவல், காவல், குறி, தளைதல், மலைப்பக்கம், மிகுதி.

கட்டுரை—உறுதிச்சொல்.

கட்டை—விறகு, வினைமுற்று.

கட்டோசை—பேரொலி.

கணகம்—படையிலோர்தொகை.

கணக்கன்—கணக்கன், புதன்.

கணக்காயர்—அறிஞர், ஓத்துரைப்போர், பொருந்தச்சொல்வோர்.

கணக்கு—எண், எழுத்து.

கணபதி—விநாயகன்.

கணம்—ஓர்நோய், காலநுட்பம், கூட்டம், சிறுமை, திரட்சி, படையிலோர் தொகை, பிசாசம், மாத்திரை, வட்டம், விலங்கின்கூட்டம்.

கணவம்—அரசமரம்.

கணவன்—தலைவன்.

கணவீரம்—அலரிச்செடி.

கணி—ஓர்சாதி, கணியென்னேவல், மருதநிலம், வேங்கைமரம்.

கணிகம்—நூறுகோடி.

கணிகை—வேசி.

கணிச்சி—உளி, தறிகை, நமனுயுதம், மழு.

கணிதம்—எண்ணிக்கை, சோதிடநூல்.

கணித்தல்—எண்ணல், மதித்தல்.

கணு—கணு.

கணை—அம்பு, திரட்சி, நிறைவு, பூரநாள், வளைதடி.

கணையம்—காவற்காடு, பொன், போர், யானைக்கம்பம், வளைதடி.

கண்—இடம், ஏழனுருபு, (உ-ம். மணிக்கண்ணொளி,) கணு, கண்ணென்னேவல், கண்ணோட்டம், பெருமை, மயிற்றோகைக்கண்.

கண்டகம்—காடு, சுரிகை, முள், வாள்.

கண்டகர்—அசுரர், கீழ்மக்கள்.

கண்டம்—எல்லை, எழுத்தாணி, கண்டசருக்கரை, கவசம், கழுத்து, கைப்பிடிவாள், சிறுவாள், திரைச்சீலை, துண்டம், நாடு, மணி, மணியுளோசை, யானைக்கச்சை, வெல்லம்.

கண்டல்—தாழை, நீர்முள்ளி.

கண்டறை—கற்புழை.

கண்டன்—ஓர்சோழன், புருடன்.

கண்டாரவம்—ஒரிசை.

கண்டி—கண்டியென்னேவல், கழுத்தணியிலொன்று.

கண்டிகை—கடகம், தோளணி, பணிச்செப்பு, பதக்கம், மாதரணிவடம்.

கண்டிதம்—கண்டிப்பு.

கண்டித்தல்—தறித்தல், வெட்டல்.

கண்டிப்பு—கண்டித்தல்.

கண்டியர்—பாணர்.

கண்டீரவம்—சூதுரக்களளி, சிங்கம்.

கண்டு — கருப்புக்கட்டி, கழலைக்கட்டி, வினைமுற்று, வினையெச்சம்.

கண்டூதி—காஞ்சொறி, தினவு.

கண்டை-சீலை, பெருமணி, யானைமணி, வினைமுற்று.

கண்ணஞ்சல்—அஞ்சுதல்.

கண்ணல் — கருதல், குறித்தல், வியங்கோண்முற்று.

கண்ணழித்தல்—பதப்பொருளுரைத்தல்.

கண்ணறை—அகலம்.

கண்ணன்—திருமால்.

கண்ணாளர்—கம்மாளர்.

கண்ணாள்—வாணி.

கண்ணி—அரும்பு, தாம்பு, புட்படுக்குங் கயிறு, பூங்கொத்து, பூமாலை, வினையெச்சம்.

கண்ணிகை—தாமரைக்கொட்டை, பூவரும்பு.

கண்ணுகம்—குதிரை.

கண்ணுதல்—கருதல், சிவன்.

கண்ணுளர்—கண்ணாளர், நாடகர்.

கண்ணுள்—கூத்து.

கண்ணுறல்—காணல், வியங்கோண்முற்று.

கண்ணோட்டம்—நாகரிகம்.

கண்படல்—நித்திரைசெய்தல், வியங்கோண்முற்று.

கண்படை—நித்திரை, மனிதர்படுக்கை, வினைமுற்று.

கண்மை—கண்ணோட்டம்.

கண்வளர்தல்—துயிலல்.

கண்வினைஞர்—கம்மாளர்.

கதம்—கோபம், பாம்பு.

கதம்பம்—ஆன்கூட்டம், கடப்பமரம், மேகம், வாசனைப்பொடி, வெண்கடம்பு.

கதலி—காற்றாடி, தேற்றாமரம், வாழை, விருதுக்கொடி.

கதலிகம்—தேற்றாமரம்.

கதலிகை—துகிற்கொடி.

கதவம்—கதவு, காவல்.

கதவு—கதவு, காவல்.

கதழ்வு—உவமைச்சொல், கடுப்பு, சிறப்பு, பெருமை, மிகுதி.

கதறல்-கூப்பிடல், வியங்கோண்முற்று.

கதனம்—கடுப்பு, கலக்கம், போர்.

கதாயுதம்—தண்டாயுதம்.

கதாயுதன்—வயிரவன், வீமன்.

கதி—கதியென்னேவல், குதிரைநடை, நடை, நாற்கதி, பரகதி.

கதித்தல்—எழுச்சி, ஒலித்தல்.

கதிரம்—அம்பு, கருங்காலி.

கதிரவன்—சூரியன்.

கதிர்—கதிர், சூரியகிரணம், சூரியன், தேருட்பரப்பின்மரம், பயிர்க்கதிர்.

கதிர்நாள்—உத்திரநாள்.

கதிர்ப்பகை—கேது.

கதிர்மகன்—கன்னன், சனி, சுக்கிரீவன்.

கது—வடுப்படல், வெடிப்பு.

கதுப்பு—கவுள், பசுக்கூட்டம், பெண்மயிர், மைந்தர்மயிர்.

கதுமெனல்—சீக்கிரம், சீக்கிரத்தின்குறிப்பு.

கதுவாய்—வடுப்படல்.

கதுவுதல்-கலங்குதல், நீங்காதுபற்றல்.

கதை—காரணச்சொல், சொல், சொல்லென்னேவல், தடி, தண்டாயுதம்.

கதைத்தல்—சொல்லுதல்.

கத்தரி—ஓர்பாம்பு, கத்தரியென்னேவல், வழுதுணை.

கத்தரிகை—கத்தரிக்குங்கருவி.

கத்தரிக்கை—சத்தரித்தல்.

கத்தரித்தல்—அறுத்தல்.

கத்தல்—கூப்பிடல், பிதற்றல், வியங்கோண்முற்று.

கத்தன்—கடவுள்.

கத்தா—கடவுள்
கத்தி—வாள், வினையெச்சம்.
கத்திகை—கருக்குவாளிமரம்,சிறுகொடி, துகிற்கொடி, பூமாலை.
கத்தியம்— இலக்கணமின்றியிலக்கணப்பாட்டுப்போற்சொல்வது, சீலை, நல்லாடை.
கத்தியோதம்—மின்மினிப்பூச்சி.
கத்திரி—ஓர்பாம்பு.
கத்து—கத்தென்னேவல், சந்து.
கத்துதல்—கூப்பிடல், பிதற்றல்.
கத்தூரிப்பிள்ளை—ஓர்மிருகம்.
கத்தை—கழுதை, வினைமுற்று.
கந்தகம்—ஓர்மருந்து.
கந்தப்பொடி—வாசனைப்பொடி.
கந்தம்—இந்திரியம், கருணை, கழுத்தடி, கிழங்குப்பொது, பங்கு, பஞ்சகந்தம், வாசனை.
கந்தரம்—கழுத்து, மலைக்குகை,மேகம்.
கந்தருவம் — இசை, இசைப்பாட்டு, குதிரை.
கந்தர்ப்பன்—மன்மதன்
கந்தல்—கெடுதல்,வியங்கோள்முற்று.
கந்தவகம்—மூக்கு.
கந்தவகன்—காற்று.
கந்தவாகன்—காற்று.
கந்தவாரம்—அரசன்றேவியிருக்கை.
கந்தளம்—கவசம்.
கந்தன்—முருகன், குமரன்.
கந்தி—கமுகு, தவப்பெண், மணவென்னேவல், வினையெச்சம்.
கந்தித்தல்—மணத்தல்.
கந்து—கழுத்தடி, கெடுவென்னேவல், தூண், பண்டி, பண்டியுள்ளிருப்பு, பற்றுக்கோடு, யாக்கையின்மூட்டு, யானையணைதறி.
கந்துகம்—குதிரை, குறுநிலமன்னர்குதிரை, பந்து.
கந்துளம்—பெருச்சாளி
கந்துள்—கரி.
கந்தை—சீலை, நல்லாடை, பீறல்,வினைமுற்று.
கபடம்—வஞ்சகம்.
கபம்—கோழை.
கபாலதரன்—சிவன்.
கபாலம்—தலைமண்டை.
கபாலி—சிவன், வைரவன்.
கபி—குரங்கு.
கபிஞ்சலம்—காடை.
கபித்தம்—விளாமரம்.
கபிலம்—கருமைகலந்தபொன்மை, திணைண்ணுபபுராணத்தொன்று.
கபிலை—கருமைகலந்தபொன்மை, தென்கீழ்த்திசையானைக்குப்பெண்யானை, தேவப்பசு, பசு.
கபோதம்—கரும்புறா, புறா.
கபோலம்—கதுப்பு.
கப்படம்—சீலை.
கப்பணம் — இரும்பினியற்றியநெருஞ்சின்முள், கழுத்திடுமிரும்புத்தகடு, கைவேல்.
கப்பம்—அரசிறை.
கப்பரை—இரப்போர்கலம்.
கப்பி—தானியம்.
கப்பு—கவர்கொப்பு
கமடம்—ஆமை.
கமம்—நிறைதல்.
கமர்—நிலப்பிளப்பு
கமலக்கண்ணன்—விட்டுணு.

கமலம்—தாமரை, நீர்.

கமலயோனி—பிரமன்.

கமலவூர்தி—அருகன்.

கமலாலயை—இலக்குமி.

கமலை—இலக்குமி.

கமழ்தல்—மணத்தல்.

கமித்தல்—பொறுத்தல்.

கமுகு—பாக்குமரம்.

கமை—பொறுமை.

கம்—ஆகாயம், காற்று, தலை, நீர், பிரமன், மேகம், வெண்மை.

கம்பம்—அசைவு, தூண், நடுக்கம், விளக்குத்தண்டு.

கம்பலம்—கம்பளி, செவ்வாடை, மேற்கட்டி.

கம்பலை—அச்சம், ஒலி, துன்பம், நடுக்கம், மருதநிலம், வயல்.

கம்பளம் — கம்பளி, செம்மறிக்கடா, செவ்வாடை, துருவாட்டேறு.

கம்பளர்—மருதநிலமாக்கள்.

கம்பன்—ஓர்புலவன்.

கம்பி—கம்பி, கம்பியென்னேவல், காதணி.

கம்பிதம்—அசைவு, நடுக்கம்.

கம்பித்தல்—நடுங்கல்.

கம்பீரம்—ஆழம், செருக்கு.

கம்பு—ஓர்பயிர், சங்கு, செந்தினை, மரக்கொம்பு.

கம்புள்—சங்கு, சம்பங்கோழி, வானம்பாடி.

கம்மியம்—பேறு.

கம்மியர் — கம்மாளர், தொழிற்செய்வோர்.

கம்மெனல்—வாசனைக்குறிப்பு.

கயக்கு—கசக்கென்னேவல், சோர்வு.

கயந்தலை—யானைக்கன்று.

கயமுகன்—விநாயகன்.

கயமுனி—யானைக்கன்று.

கயம்—அசடு, ஆழம், இளமை, ஓர்நோய், கீழ், குளம், கேடு, தேய்வு, நீர், பெருமை, மென்மை, யானை.

கயல்—கெண்டைமீன்.

கயவர்—கீழ்மக்கள்.

கயவாய்—கரிக்குருவி, கழிமுகம்.

கயவு—கழிமுகம், களவு, பெருமை, மிகுதி, மென்மை.

கயிரவம்—செவ்வாம்பல்.

கயிளை—சுற்றம்.

கயிலாசம்—கைலை.

கயிலை—வெள்ளிமலை.

கயிலையாளி—சிவன்.

கயில்—ஆபரணக்கடைப்புணர்வு, பிடரி.

கயிறு—கயிறு.

கயினி—அத்தநாள், கைம்பெண்.

கரகம்—ஆலாங்கட்டி, கமண்டலம், கெண்டிகை, வட்டில்.

கரசாகை—விரல்.

கரசீகரம்—துதிக்கையுமிழ்நீர்.

கரடம்—காக்கை, யானைமதம், யானைமதம்பாய்சுவடு.

கரடி—கரடியென்னும்விலங்கு.

கரடு—காற்பரடு.

கரணம்—அந்தக்கரணம், உபகரணம், எண்ணிக்கை, ஐம்பொறி, கணிதம், கலவி, காரணம், கூத்தின்விகற்பம்.

கரணிதம்—கலவி, கூத்தின்விகற்பம், மனம், புத்தி, அகங்காரம், சித்தம்.

கரண்டகம்—சுண்ணமுதலியபெய்யுஞ்செப்பு.

கரண்டம் — கமண்டலம், கரண்டகம், நீர்க்காக்கை.

கரண்டை—முனிவரிருக்கும்வாசம்.

கரத்தல்—ஒளித்தல், கொடாமை, திருடல்.

கரந்தை — ஓர்பூ, பகைவரோட்டினநிரைமீட்டவர்க்குமாலை, வினைமுற்று.

கரபத்திரம்—ஈர்வாள்.

கரப்பு—ஒளித்தல், களவு.

கரமஞ்சரி—நாயுருவி.

கரமுகன்—விநாயகன்.

கரம்—எழுத்தின்சாரியை, (உ-ம். அகரம்,) கழுதை, கிரணம், குடியிறை, கை, நஞ்சு.

கரம்பு—பாழ்நிலம்.

கரவடம்—களவு.

கரவடர்—திருடர்.

கரவர்—திருடர்.

கரவாகம்—காக்கை.

கரவாளம்—வாள்.

கரவீரம்—அலரிச்செடி.

கரவு—ஒளித்தல், களவு, கொடாமை.

கரளம்—எட்டிமரம், நஞ்சு.

கரன்—ஓரவுணன்.

கரா—ஆண்முதலை, முதலை.

கராசனம்—புலி.

கராம்—ஆண்முதலை, முதலை.

கராளம்—தீக்குணம்,

கராளி—தீக்குணம்.

கரி—கரி, கரியென்னேவல், சாட்சி, நஞ்சு, யானை, வயிரம்.

கரிகாடு—யானைதிரியுங்காடு.

கரிணி—பெண்யானை, யானை.

கரிதல்—கருகுதல், பெருங்கோபம்.

கரிதன்—அச்சமுள்ளோன்.

கரிப்பு—அச்சம், கரித்தல்.

கரிமா—அட்டசித்தியிலொன்று.

கரிமுகன்—விநாயகன்.

கரியவன்—கடவுள், சனி, சிவன், தேவேந்திரன், விட்டுணு.

கரில்—கார்ப்பு, குற்றம், கொடுமை.

கரிவாகனன்—ஐயனார்.

கரீரம் — அகத்தி, கும்பவிராசி, மிடா, யானை, யானைக்கொம்படி.

கரு — கருப்பம், கருப்பொருள், முட்டை, நடு, நிறம், மேடு.

கருகல்—கரியாதல், தீதல், வியங்கோண்முற்று.

கருக்கல் — இருள், கருக்குதல், வியங்கோண்முற்று.

கருக்கு—கருக்கென்னேவல், வாட்கருக்கு.

கருக்குவாளி—ஓர்மரம்.

கருங்கடல்வண்ணன்—ஐயனார், விட்டுணு.

கருங்காலி—ஓர்மரம்.

கருங்குதிரையாளி—வயிரவன்.

கருங்கோல்—இரும்பு.

கருடகேதனன்—விட்டுணு.

கருடன்—செம்பருந்து.

கருணன்—கன்னன்.

கருணாலயன்—கடவுள், சிவன்.

கருணி—குகை, வெற்பு.

கருணிகை—பூவினுட்கொட்டை.

கருணை—ஓர்கிழங்கு, கிருபை, பொரிக்கறி.

கருதலர்—பகைவர்.

கருதல்—எண்ணல், மதித்தல், வியங்கோண்முற்று.

கரூத்தபம்—கழுதை.

கருத்தன்—அரன், அருகன்.

கருத்தா — அருகன், கடவுள், சிவன், வினைசெய்வோன்.

கருத்து—குறிப்பு, நினைவு.

கருத்துரை—செய்யட்கருத்துரைத்தல்

கருநந்து—நத்தை.

கருநிலம் — நீரின் மலையின் வனத்திற்ப யன்படாமிகுநிலம்.

கருநெறி—தீ.

கருந்தாது—இரும்பு.

கருந்திடர்—மேடு.

கருந்துகிலோன்—பலபத்திரன்.

கருந்தோளி—அவுரி.

கருப்பம்—சினை.

கருப்பு—குறுவிலைக்காலம்.

கருப்புவில்—மன்மதன் வில்.

கருப்புவில்லி—மன்மதன்.

கருப்பூரம்—கர்ப்பூரம், பொன்.

கருப்பை—கருவின்பை, காரெலி.

கருமத்தலைவர்— வருங்காரியஞ்சொல் வோர்.

கருமபாகை—வேதநூற்பொருள்.

கருமம்—உட்டணம், தொழில்.

கருமயிர்—கரடி.

கருமா—பன்றி.

கருமான்-கலைமான்,கொல்லன்,பன்றி.

கருமுகை—இருவாட்சி, சிறுசம்பகம்.

கருமை—கறுப்பு, பெருமை, வலி.

கரும்பாம்பு—இராகு.

கரும்பிள்ளை—காக்கை.

கரும்பு—கன்னல், புநர்பூசம்.

கரும்புசம்—வண்டு.

கரும்புள்—வண்டு.

கரும்புறம்—பனை.

கரும்பொன்—இரும்பு.

கருவம்—சினை.

கருவரி—இருள்.

கருவி—ஆயுதப்பொது, உபகரணம், கவசம், குதிரைக்கல்லணை, கூட்டம், தொடர்பு, நட்பு, மேகம், யாழ், வாச்சியம், வீணைக்கருவி.

கருவிப்புட்டில்—ஆயுதவுறை.

கருவிளை—காக்கணஞ்செடி.

கருவூர்—சேரனூர்.

கருவை—ஓரூர், வரகுவைக்கோல்.

கருள்—இருள், கறுப்பு, நல்லாடை.

கரேணு—பெண்யானை.

கரை — எல்லை, கரையென்னேவல், சொல், முடிவு.

கரைதல்—அழைத்தல், ஆரவாரம், இரங்கல், ஒலித்தல், கரைதல், சொல்லுதல், பேரொலி.

கரைத்தல்—எழுத்திலாவோசை, கரைக்குதல், சொல்லாலெழுமொலி.

கரோடி—தலையோட்டுப்பொருத்து, முடிமாலை.

கரோடிகை—கழுதை, சூட்டுமாலை, முடிமாலை.

கரோருகம்—நகம்.

கர்க்கடகம்—ஓரிராசி, நண்டு.

கர்ச்சூரம்—கழற்கொடி, பேரீந்து.

கர்த்தபம்—கழுதை.

கர்வடம்—நானூறு கிராமத்துக்குத்தலைக்கிராமம், மலையும்யாறுஞ்சூழ்ந்த வூர்.

கர்வம்—இலட்சங்கோடி, செருக்கு.

கலகம்—பேரொலி, போர்.

கலகலம்—பறவைக்குரல்.

கலக்லெனல்—ஈரடுக்கொலிக்குறிப்பு.

கலக்கம்—அச்சம், ஆரவாரம், துன்பம்.

கலக்கல்—குழப்பல, வியங்கோண்முற்று.

கலங்கல் — அஞ்சல், அழுதல், சேற்று நீர், வியங்கோண்முற்று.

கலசப்பானை—கஞ்சனை.

கலசம்—குடம், பால்.

கலணை—குதிரைக்கல்லணை.

கலதி—மூதேவி.

கலதை—கலக்கம்.

கலத்தல்—எழுத்திலாவோசை, புணர்ச்சி.

கலந்தை—பெருமை, வினைமுற்று.

கலடம்—கலாபம்.

கலப்பு—கலத்தல்.

கலப்பை — உழுபடை, கலப்பையுறுப்பு, வினைமுற்று.

கலமர்—பாணர்.

கலம்—ஆபரணம், இரேவதி, உண்கலம், ஓரளவு, மட்கலம், மரக்கலம், யாழ்.

கலம்பகம்—ஓர்பிரபந்தம், கலப்பு, சாந்து.

கலர்—கீழ்மக்கள்.

கலவர்—படைவீரர்.

கலவல்—எழுத்திலாவோசை, கலத்தல், வியங்கோண்முற்று, வினைமுற்று.

கலவி—புணர்ச்சி.

கலவை—கலப்பு, சாந்து, சேறு, வினைமுற்று.

கலவைச்சேறு — சாந்து, பரிமளச்சேறு.

கலனை—கலப்பை, கலப்பையுறுப்பு.

கலன் ஆபரணம், மரக்கலம், யாழ்.

கலன்கழிமடந்தை—கைம்பெண்.

கலாநிதி—சந்திரன்.

கலாபம்—அரைப்பட்டிகை, சரமணிக்கோவை, பதினாறுகோவைபுளமணி, பீலிக்குடை, மயிலிறகு, மயிற்றோகை.

கலாபி—ஆண்மயில்.

கலாம்—கொடுமை, கோபம், சினம்.

கலாவல் — கலத்தல், வியங்கோண்முற்று.

கலி—ஒலி, கடல், கடையுகம், கலிவெண்பாவல், போர், வஞ்சகம், வலி.

கலிகை—இளம்பூவரும்பு.

கலிங்கம் — ஊர்க்குருவி, ஓர்தேசம், சீலை, பதினெண்பாடையிலொன்று, வானம்பாடி.

கலிசம்—வன்னிமரம்.

கலிதம்—பொருத்தம்.

கலித்தல்—ஆரவாரம், எழுச்சி, ஒலித்தல், தழைத்தல், பொலிவு.

கலித்துருமம்—தான்றிமரம்.

கலிப்பு—மிகுதி.

கலியர்—படைவீரர்.

கலியாணம்—பொன், விவாகம்.

கலியாணி—ஓரிராகம்.

கலினம்—கடிவாளம்.

கலினி—திப்பிலி.

கலினை—மிளகு.

கலுடம்—கலங்கனீர், பாவம்.

கலுவடம்—பூவரும்பு.

கலுழம்—கலங்கனீர்.

கலுழன்—கருடன்.

கலுழி—கலங்கனீர், முல்லைநிலக்கானியாறு.

கலுழ்தல்—அழுதல், கலங்கல்.
கலை—அரைப்பட்டிகை, ஆண்மான், ஆண்முசு, கலையென்னேவல், கல்வி, காலநுட்பம், சந்திரன்பங்கு, சீலை, சுறாமீன், துர்க்கைவாகனம், நூல், மகரமீன், மகரவிராசி, மரக்கொம்பு, மேகலை, வயிரம், விலங்கேற்றின்பொது.
கலைஞர்—புலவர்.
கலைதல்—குலைதல்.
கலைத்தல்—குலைத்தல்.
கலைநாதன்—அருகன்.
கலைநாயகன்—புத்தன்.
கலைமகள்—சரச்சுவதி.
கலையானத்தி—துர்க்கை.
கலையினன்—சந்திரன்.
கலையுணர்புலவன்—குமரன்.
கலையூர்தி—துர்க்கை.
கலைவல்லோர்—அறிஞர், புலவர்.
கல்—ஒலிக்குறிப்பு, கல், கல்லென்னேவல், மலை.
கல்லகம்—மலை.
கல்லகாரம்—செங்குவளை, நீர்க்குளிரி.
கல்லல் — தோண்டல், பேசலாவெழுமொலி, வியங்கோண்முற்று.
கல்லாரம்—செங்குவளை, நீர்க்குளிரி.
கல்லார்—கீழ்மக்கள்.
கல்வி—ஆமை, ஊர்க்குருவி.
கல்வியம்—கள்.
கல்லூரி—கல்விபயிலிடம்.
கல்லெறி—கவண்.
கல்லெனல்—அநுகரணவோசை.
கல்லை — இலைக்கலம், பாதக்குறட்டின்குமிழ், வினைமுற்று.
கல்லோலம்—கடற்பெருந்திரை, புனற்றிரை.
கல்வளை—மலைப்பிளப்பு.
கல்வி—அறிவு, கற்றல், வித்தை.
கல்விபயிலிடம்—பள்ளிக்கூடம்.
கல்வியூரி—கல்லூரி.
கவம்—மத்து.
கவக்குன்று—கடற்கடைந்தமத்தாகிய மந்தரமலை.
கவசகுண்டலன்—கவசத்தோடுங்குண்டலத்தோடும்பிறந்தகன்னன்.
கவசம்—சட்டை.
கவடி—பலகறை.
கவடு — கழுத்திடுகயிறு, மரக்கொம்பு, யானைகட்டுங்கயிறு.
கவட்டல்—மெல்லல், வியங்கோண்முற்று.
கவணை—கவண்.
கவண்—கவணை.
கவண்டர்—சண்டாளர்.
கவந்தம்—உடற்குறை, நீர்.
கவயம்—காட்டா.
கவரம்—சாமரம், சினம்.
கவரி—எருமை, கவரிமா, சாமரை, தேர்.
கவரிமா—ஓர்மிருகம்.
கவரிறுக்கு—கடவுமரம்.
கவர் — கவரென்னேவல், மரக்கப்பு, வாழை.
கவர்தல்—ஆசைப்பெருக்கம், கடைதல், கொள்ளையிடல், திருடல், வாருதல்.
கவலல்—பேசலாவெழுமொலி, வருந்தல், வியங்கோண்முற்று.
கவலை—அச்சம், ஓர்கொடி, கவர்வழி,

சத்தி, செந்திணை, துன்பம், நோய், மரக்கொம்பு, வினைமுற்று.
கவவு—அகத்திடுதல்.
கவழிகை—திரைச்சீலை.
கவளம்—சோறு, வாயளவுகொண்டவுணவு.
கவறல்—வருந்துதல்.
கவற்சி—வருத்தம்.
கவனம்—கடுப்பு, கலக்கம், காடு, குதிரைநடை, சீக்கிரம், படை.
கவனன்—வேகமுள்ளோன்.
கவாடம்—கதவு.
கவான்—தொடை.
கவி—கவியென்னேவல், குரங்கு, சுக்கிரன், பா, புலவன்.
கவிகற்றோர்—மங்கலப்பாடகர்.
கவிகை—ஈதல், கவிதல், குடை.
கவிஞர்—கலைவல்லோர், புலவர்.
கவிதை—பா.
கவித்தல்—மூடுதல்.
கவிப்பர்—செட்டிகள்.
கவிப்பு—குடை, மூடுதல்.
கவியம்—கடிவாளம்.
கவிரம்—அலரிச்செடி.
கவிர்—முண்முருக்கு.
கவிவல்லோர்—புலவர்.
கவிழ்த்தல்—கவிழ்த்தல்.
கவின்—அழகு.
கவினம்—பசுமேய்ந்தவிடம்.
கவுசி—குழைவு, வருத்தம்.
கவுடி—ஓர்பண்.
கவுள்—கதுப்பு, யானைக்கதுப்பு, யானைமதம்பாயிடம்.
கவை—கவர்வழி, காடு, கோட்டை, மரக்கப்பு.
கவைத்தாள்—நண்டு.
கவ்வாணும்—ஓர்பண்.
கவ்வு—பெருமை.
கவ்வை—எள்ளிளங்காய், ஒலி, கள், துன்பம், பழிமொழி.
கழகம்—கல்வி, சூது, படை, மல்இவை பயிலிடம்.
கழங்கம்—சூதாடுகருவி.
கழங்கு—ஓராடல், கழற்சிக்கொடி, வெறியாட்டாளனுடல்.
கழஞ்சு—ஓர்நிறை.
கழலல்—வியங்கோண்முற்று, விலகல்.
கழலை—கழலைக்கட்டி, வினைமுற்று.
கழல்—ஆடவர்கொடைவீரத்தணிவது, கழலென்னேவல், கழற்சிக்கொடி, கால், செருப்பு.
கழறல்—உறுதிச்சொல், கழலுதல், சொல்லல், நெருங்கல், வியங்கோண்முற்று.
கழனி—சேறு, திரைச்சீலை, மருதநிலம், வயல்.
கழனியடுத்தவர்—மருதநிலமாக்கள்.
கழாயர்—கழைக்கூத்தாடிகள்.
கழி — உப்பளம், கழியென்னேவல், மிகுதி
கழிதல்—கடத்தல், சாதல், நடத்தல், மிகுதல்.
கழித்தல்—நீக்குதல்.
கழிநிலம்—உப்பளம், உவர்த்தரை.
கழிபிறப்பு—முற்பிறப்பு.
கழிப்பு—கழிந்தல், குற்றம்.
கழிமுகம்—ஆற்றுநீர்க்கழிவு.

கழியர்—உப்பமைப்போர், நெய்தநில மாக்கள்.

கழிவு—உள்ளது, இறத்தல், கழிதல், மிகுதி.

கழு—கழுவென்னேவல், சூலம்.

கழுகு—ஓர்பறவை.

கழுக்கடை—ஈட்டி.

கழுது—காவல்,பரண்,பிசாசம்,வண்டு.

கழுதை—கழுதை, வடமேற்றிசைப்பாலன்குறி.

கழுதைவாகனி—மூதேவி.

கழுத்து—கண்டம்.

கழுந்து—தேய்ந்துமழுங்கிய திரண்டவடிவு.

கழுமல்—நிறைதல், பற்றுதல், மயக்கம், மிகுதி, வியங்கோண்முற்று.

கழுமுள்—ஆயுதப்பொது, ஈட்டி, கழுமரம், சூலம், மாதளை.

கழுவல் — கழுவுதல், வியங்கோண்முற்று.

கழை—கரும்பு, புநர்பூசம், மூங்கில்.

களா—களாச்செடி.

களகண்டம்—குயில்.

களகம்—பெருச்சாளி.

களகளம்—பேரொலி.

களகவெனல்—ஈரடுக்கொலிக்குறிப்பு.

களகர்—புலையர், வேடர்.

களங்கம்—அடையாளம், கறுப்பு, குற்றம், நீலம், மாசு.

களங்கன்—சந்திரன்.

களதவுதம்—வெள்ளி.

களத்திரம்—குடும்பம், மனைவி.

களந்தை—களத்தூர்.

களபம்—கலப்பு, கலவைச்சாந்து, சுட்டசாந்து, யானை, யானைக்கன்று.

களமர்—உழுநர், சூத்திரர், பூவைசியர், மருதநிலமாக்கள்.

களம்—இடம், களர், களர்நிலம், கறுப்பு, நெற்களம், போர்க்களம், மனைவி, மிடறு, விடம்.

களரவம்—புறா.

களரி—கருமை, களர்நிலம், காடு, கூட்டம், பாழ்நிலம், போர்க்களம், மிடறு.

களவம்—கலப்பு.

களவர்—கள்ளர்.

களவன்—கள்ளன், கர்க்கடகவிராசி.

களவு—உன்மத்தம், களாச்செடி, திருட்டு.

களன்—இடம், உன்மத்தம், ஒலி, சிநேகம், மருதநிலம்.

களி—களிப்பு, களியென்னேவல், கள், குழம்பு, செருக்கு, மயக்கம்.

களிகை—இளம்பூவரும்பு.

களிதம்—வழுக்கல்.

களித்தல்—மதர்த்தல்.

களிப்பு—இன்பம், உள்ளக்குறிப்பு.

களிமம்—எலி.

களிம்பு—மலினம்.

களிறு—அத்தநாள், ஆண்சுறா, ஆண்பன்றி, ஆண்யானை, விலங்கினாண்பொது.

களேபரம்—உடல், எலும்பு, பிணம்.

களை—அயர்வு, அழகு, களையென்னேவல், குற்றம்.

களைஞர்—சண்டாளர்.

களைதல்—களைகட்டல், கொல்லல்.

களைத்தல்—இளைப்புறல்.

கள்—களவு, கள்ளென்னேவல், பொய், மது.

கள்வன்—கரியன், கள்ளன், கர்க்கடகவிராசி. குரங்கு, நண்டு, முசு, யானை.

கள்ளம்—களவு, குற்றம், பொய்.
கள்ளல்—களவு, வியங்கோண்முற்று.
கள்ளி—ஓர் மரம், திருடி.
கள்ளுணி—வண்டு.
கறங்கல் — ஒலித்தல், சுழலல், பேய், வளைதடி, வியங்கோண்முற்று.
கறங்கு—கறங்கென்னேவல், காற்றாடி, சுழற்சி.
கறத்தல்—பால்கறக்குதல்.
கறல்—விறகு, வியங்கோண்முற்று.
கறவை—பான்மாடு, வினைமுற்று.
கறா—காடைக்குரல், வினைமுற்று, வினையெச்சம்.
கறி—கறி, கறியென்னேவல், மிளகு.
கறித்தல்—கடித்தல், புசித்தல்.
கறுப்பு—கறை, கோபம், சினக்குறிப்பு.
கறுவம்—சினம்.
கறுவல் — சினக்குறிப்பு, வியங்கோண் முற்று.
கறுவு—கறுவென்னேவல், சலஞ்சாதித்தல், சினக்குறிப்பு, சினம், தணியாக்கோபம்.
கறுள்—கடிவாளம்.
கறை—உதிரம், உரல், கறுப்பு, குடியிறை, குற்றம், நிறம், மாசு, வினைமுற்று.
கறைமிடற்றோன்—சிவன்.
கறையடி—யானை
கற்கசர்—கீழ்மக்கள்.
கற்கம்—பலவகைகூடியமருந்து.
கற்கரி—கரகம், தயிர்கடையுந்தாழி.
கற்கி — குதிரை, திருமாலவதாரத்தி லொன்று, தேவர்கோயில்.
கற்பகச்சோலை— தேவேந்திரனந்தன வனம்.
கற்பகம் — ஐந்தருவில்வேண்டிற்றெல் லாந்தருமரம்.
கற்படை—கோட்டையிற்கள்ளவழி.
கற்பம் — ஆயிரங்கோடி, உலகமுடியுங் காலம், தேவலோகம், பிரமனாயு.
கற்பித்தல்—படிப்பித்தல்.
கற்பு—கல்வி, மகளிர்கற்பு, மதிலுண் மேடை, மதில், முல்லைக்கொடி.
கற்றல்—படித்தல்.
கற்றவர்—புலவர்.
கற்றோர்—அறிஞர்.
கற்றை—கதிர்த்தொகுதி மயிர்த்தொகு திபோலவன, வினைமுற்று.
கனகக்கொடியோன்—கன்னன்.
கனகதம்—ஒட்டகம்.
கனகதர்—சண்டாளர், புலையர்.
கனகம்—பொன்.
கனசாரம்—கர்ப்பூரம்.
கனம்—அகலம், கூட்டம், கோணாக்கிழங்கு, சீர்மை, செறிவு, பாரம், பொன், மேகம், வட்டம்.
கனரசம்—நீர்.
கனருசி—மின்னல்
கனலி—சூரியன், நெருப்பு, பன்றி.
கனல்—கனலென்னேவல், நெருப்பு.
கனவட்டம்—பாண்டியன்குதிரை.
கனவிரதம்—நீர்.
கனவு—கனா, நித்திரை, மயக்கம்.
கனறல்—சினக்குறிப்பு.
கனனம்—பனைத்தல்.
கனன்றல்—சினக்குறிப்பு
கனா—கனவு.
கனி — கனியென்னேவல், தித்திப்பு,

பழம், பொன்முதலியவும், இரத்தினங்களும் பிறக்குமிடம்.
துய்த்தல்—புசித்தல்.
துரகதம்—குதிரை.
துரகம்—குதிரை.
துரங்கம்—குதிரை.
துரத்தல் — செலுத்தல், வியங்கோண் முற்று.
துரந்தரன்—பாரந்தாங்குவோன்.
துரவு—கிணறு.
துரால்—செத்தை, துன்பம்.
துரிசு—துன்பம்.
துரிஞ்சில்—உசிலமரம், வௌவால்.
துரிதம்—கலக்கம், கேடு, சீக்கிரம், துன்பம், பாவம்.
துரியம்—சுமத்தல், நான்காமவத்தை, பொதியெருது.
துருக்கம்—கத்தூரிமிருகம், கலக்கம், காடு, குங்குமமரம், மலைமேற்கோட்டை.
துருக்கர்—ஓர்சாதியார்.
துருக்கு—மிலேச்சசாதி.
துருசு—களிம்பு, சீக்கிரம்.
துருத்தி—ஆற்றிடைக்குறை, தோற்றுருத்தி.
துருமம்—மரப்பொது.
துருமோற்பலம்—கோங்குமரம்.
துரும்பு—திரணம்.
துருவண்ணம்—வெள்ளி.
துருவம்—அசையாநிலை.
துருவல்—கடைதல், துளைத்தல், தேடல், வியங்கோண்முற்று.
துருவை—செம்மறியாடு.
துரோணம் — அண்டங்காக்கை, காக்கை, தனுவிராசி, தும்பைச்செடி, பதக்கு, வில்.
துர்க்கந்தம்—தியவாசனை.
துர்க்கம்—மலைமேற்கோட்டை.
துர்த்தூரம்—ஊமத்தை.
துலக்கல்—விளக்கல், வியங்கோண்முற்று.
துலங்கல்—ஒளிசெய்தல், வியங்கோண்முற்று.
துலம்—கனம், நிறை.
துலவம்—பஞ்சு.
துலா—ஏற்றமரம், நிறைகோல்.
துலாம் — ஏற்றவுறுப்பு, ஓரிராசி, ஓர் நிறை.
துலிதம்—அசைவு.
துலை—கனம், துலாராசி, நிறை, நீரிறைக்குந்துலை.
துல்லம்—பேரொலி.
துல்லியம்—உவமை.
துவக்கல்—ஆரம்பித்தல், கட்டல், வியங்கோண்முற்று.
துவக்கு—உடல், சங்கிலி, துவக்கெனேவல், தோல், பிணக்கு.
துவசம்—அடையாளம், விருதுக்கொடி.
துவசர்—கள்விற்போர்.
துவட்டல்—துடைத்தல், துவட்டுதல், வியங்கோண்முற்று.
துவட்டா—கம்மாளர்.
துவட்டாநாள்—சித்திரைநாள்.
துவந்துவம்—இரண்டு.
துவம்—அசையாநிலை.
துவரம்—துவர்ப்பு.

துவரை—ஓர்பயறு, துவாரகை.

துவர்—சிவப்பு, துவர்ப்பு, பகை, பவளம், விறகு.

துவர்க்காய்—பாக்கு.

துவர்தல்—திமிர்தல்.

துவர்த்தல்—ஓர்சுவை.

துவலை—மழை, மழைத்தூவல்.

துவல்—சீக்கிரம்.

துவளல்—அசைதல், திவளல், வியங்கோண்முற்று.

துவறல்—துவலைவிடுதல், விரைவு.

துவன்றல்—சாதல், நிறைதல், நெருங்கல், பொலிவு, வியங்கோண்முற்று.

துவாதசான்மா—சூரியன்.

துவாந்தம்—இருள், நரகம்.

துவாரம்—வாயில்.

துவி—இரண்டு.

துவிதம்—இரண்டு.

துவை — இறைச்சி, ஒலி, துவையென்னேவல், பருகுதற்குரியன, பிண்ணாக்கு, புளிங்கறி.

துவைத்தல்—ஒலித்தல், பேரொலி, வாச்சியம்வாசித்தல், விடுதல்.

துவைபாயனன்—வியாசன்.

துவ்வல்-புசித்தல், வியங்கோண்முற்று.

துவ்வாமை—வெறுப்பு.

துவ்வு-அனுபவம், ஐம்பொறிநுகர்ச்சி.

துழனி—ஒலி, பறவைக்கூட்டத்தொலி.

துழாய்—துளசி, வினையெச்சம்.

துழாய்மௌலி—திருமால்.

துழாய்வனம்—துளசி.

துழாவல்—கலத்தல், வியங்கோண்முற்று, வெட்டல்.

துளக்கம்—அச்சம், ஒளி, சோதிநாள்.

துளங்கல் — ஒளிசெய்தல், வியங்கோண்முற்று.

துளங்கொளி—கேட்டைநாள்.

துளவம்—துளசி.

துளவு—துளசி.

துளி — துளியென்னேவல், பெண்ணாமை, மழை, மழைத்துளி.

துளித்தல்—மழைபெய்தல்.

துளிர்—தளிர், துளிரென்னேவல்.

துளிர்த்தல்—தளிர்த்தல்.

துளும்பல்—அலைதல், திமிர்தல், வியங்கோண்முற்று.

துளுவம் — ஓர்தேசம், பதினெண்பாடையிலொன்று.

துளை — துவாரம், துளையென்னேவல், மூங்கில், வாயில்.

துளைத்தல்—துளைக்குதல்.

துள்ளல்—ஆடு, கலிப்பாவோசை, குதித்தல், கூத்து, கொசுகு, வியங்கோண்முற்று.

துறக்கம்—தேவலோகம்.

துறத்தல்—துறவு, நீக்கல்.

துறந்தோர்—நீத்தோர்.

துறவர்—முனிவர்.

துறவி—முனிவன்.

துறவோர்—நீத்தோர்.

துறு—துறுகல், துறுவென்னேவல்.

துறுகல்—ஓர்கல், சலதாரைமுதலியவடைக்குங்கல்.

துறுத்தல்—துறுக்குதல்.

துறுபவம்—நெருக்கம்.

துறுமல்— திரட்சி, நெருங்கல், வியங்கோண்முற்று.

துறுவல்—நெருங்கல், புசித்தல், வியங்கோண்முற்று.

துறை—ஆறு, இடம், நீர்த்துறை, பாவினத்தொன்று, வழி.

துறைவல்லோர்—கற்றோர்.

துறைவன்—நெய்தனிலத்தலைவன்.

துற்றல்—உண்டல், குவிதல், நிறைதல், வியங்கோண்முற்று.

துற்று—சோறு, துறுகல், துற்றென்னேவல், நெருக்கம்.

துனி—அச்சம், ஆறு, கோபம், சினம், துன்பம், நோய், புலவிநீட்டம்.

துன்பு—துன்பம்.

துன்றல்—நெருங்கல், வியங்கோண்முற்று.

துன்னம்—தைத்தல்.

துன்னர்—சக்கிலியர், செம்மார், தையற்காரர்.

துன்னல்—கிட்டல், நெருங்கல், வியங்கோண்முற்று.

துன்னார்—பகைவர்.

துன்னு—இறைச்சி, துன்னென்னேவல், முதுகு.

துன்னுநர்—சிநேகிதர்.

தூ

தூ—ஓரெழுத்து, சுத்தம், தசை, தூவென்னேவல், பகை, பற்றுக்கோடு, புள்ளிறகு, வெண்மை.

தூக்கம்—ஆபரணத்துடக்குவடிவு, காதணி, சல்லியம், நித்திரை.

தூக்கல்—ஆராய்தல், தூக்குதல், நிறுத்தல், வியங்கோண்முற்று.

தூக்கு—ஆராய்தல், உயர்ச்சி, உவமைச்சொல், உறி, காற்றுலாம், கூத்து, துலாராசி, தூக்கங்கள், தூக்கணாங்குருவி, நிறை, பா.

தூங்கல்—ஆடல், உறங்கல், கூத்து, சோம்பல், தாழ்வு, யானை, வியங்கோண்முற்று.

தூசரம்—கொஞ்சவெள்ளை.

தூசர்—வண்ணார்.

தூசி—குதிரை, கொடிப்படை, படைவகுப்பு, புழுதி.

தூசு—சித்திரைநாள், சீலை, யானைகட்டுங்கயிறு.

தூட்டி—சீலை.

தூணம்—அம்புக்கூடு, தூண், பகை.

தூணி—அம்புக்கூடு, ஓரளவு.

தூணிகர்—செட்டிகள்.

தூணீரம்—அம்புக்கூடு.

தூண்—தூண், பற்றுக்கோடு.

தூண்டல்—எழுப்பல், செலுத்தல், வியங்கோண்முற்று.

தூண்டில்—மீன்பிடிக்குங்கருவியிலொன்று.

தூதன்—தூதுவன்.

தூதி—தூதுவள்.

தூது—செல்லுந்தூது.

தூதுணம்—தூக்கணாங்குருவி, புறா.

தூதுவன்—தூதன், புதன்.

தூபமுட்டி—தூபக்கால்.

தூபம்—புகை.

தூபரம்—கொம்பிலாவிலங்கு.

தூபிதம்—சூடு.

தூமகேது—கொடுமை, தீ.

தூமான்—பீடிகை.

தூமம்—புகை, மட்கலஞ்சுடுசூளை.

தூமலம்—கருமைமிக்கசிவப்பு.

தூமிரம்—கருமைமிக்கசிவப்பு.

தூமை—தூய்மை.

தூம்பிரம்—கருமைமிக்கசிவப்பு.

தூம்பு—அருநெறி, உட்டுளை, சலதாரை, மடை, மரக்கால், மூங்கில், வழி, வாயில்.

தூயவர்—முனிவர்.

தூயாள்—சரச்சுவதி.

தூய்தன்மை—அசுத்தம்.

தூய்தாக்கல்—செப்பம்பண்ணல்.

தூய்து—சுத்தம்.

தூய்மை—சுத்தம்.

தூரம்—சேய்மை.

தூரல்—துன்பம், வியங்கோண்முற்று.

தூரியம் — உவகைப்பறை, எருது, எழுதுகோல், எறிபடைப்பொது, கைவேல், நல்லாடை, பறைப்பொது, முரசு.

தூர்—தூவென்னேவல், வேர்.

தூர்க்கை—பூரநாள்.

தூர்த்தர்—வஞ்சகர், விடர்.

தூர்த்தல்—செறுத்தல்,

தூர்த்தன்—வஞ்சகன், விடன்.

தூர்த்தை—தூர்த்தகுணமுள்ளாள்.

தூர்வகம்—சுமத்தல், பொதியெருது.

தூர்வாசம் — அட்டாதசவுபபுராணத்தொன்று.

தூர்வை—அறுகு, செதுகை.

தூலம்—பஞ்சு, பருமை, வீட்டுத்திரம்.

தூவத்தி—வாள்.

தூவல் — சிந்தல், மழை, மழைபெய்தல், மழைத்துளி, மழைத்தூவல், வியங்கோண்முற்று.

தூவி—அன்னத்திறகு, இறகு, மயிற்றோகை, வினையெச்சம்.

தூவு—உளன், தூவென்னேவல்.

தூளி — குதிரையிளைப்பு, பராகம், புழுதி.

தூளிதம்— தூளையுடையதாகப்பண்ணப்பட்டது.

தூள்—புழுதி, பூந்தாது.

தூறல்—பழிச்சொல், மழை, மழைத்துளி, மழைபெய்தல், வியங்கோண்முற்று.

தூறு — கூட்டம், சிறுசெடி, தூறென்னேவல், பழிச்சொல்.

தூற்றல்—தூற்றுதல், பழிகூறல், வியங்கோண்முற்று.

தூற்றுதல்—பழிகூறல்.

தெ

தெகுளம்—நிறைதல், பெருகுதல்.

தெகுளல்—பெருகல்.

தெங்கணம்—ஓர்தேயம்.

தெங்கு—தென்னமரம்.

தெட்டல்—வஞ்சித்தல், வியங்கோண்முற்று.

தெடபம்—முதிர்ச்சி.

தெண்டிரை—கடல்.

தெண்ணீர்—தெளிநீர்.

தெப்பம்—நீந்துந்தெப்பம்.

தெய்ய—இடைச்சொல், (உ-ம். சொல்லேன்றெய்யநின்னொடுபெயர்ந்தே.)

தெய்வதம்—தெய்வம்.

தெய்வமந்திரி—வியாழம்.

தெய்வும்—ஊழ், கடவுள், வருடம்.

தெய்வயானைகாந்தன்—குமரன்.

தெய்வவிரதன்—வீட்டுமாசாரி.

தெரிசொல்—சத்தியம், காரணம்.

தெரிதல்—ஆலோசனை, காணல்.

தெரித்தல்—எழுதல், சொல்லுதல், மாறுபாடு.

தெரிமா—சிங்கம்.

தெரியலர்—அறியாதார்.

தெரியல்—ஆராய்தல், காணல், பூமாலை, வியங்கோண்முற்று.

தெரிவு—தெரிதல்.

தெரிவை—பெண், முப்பத்தொருவயதுப்பெண், வினைமுற்று.

தெரு—வழி, வீதி.

தெருட்சி—அறிவு, தெளிவு.

தெருட்டல்—உறுதிப்படுத்தல், வற்புறுத்தல்.

தெருமரல்—சுழலல்.

தெருளல்—தெளிவு, வியங்கோண்முற்று.

தெருள்—தெருளென்னேவல், தெளிவு.

தெவிட்டல்—உமிழ்தல், ஒலித்தல், நிறைதல், நினைத்தல், வியங்கோண்முற்று.

தெவிளல்—நிறைதல்.

தெவு—கொளற்பொருட்டு, (உ-ம். நீர் தெவுநிரைத்தொழுவர்.

தெவுட்டல்—அடைத்தல், ஒளித்தல், கொப்புளித்தல், தங்கல், நிறைதல், நினைத்தல், வியங்கோண்முற்று.

தெவுளல்—பெருகுதல், வியங்கோண்முற்று.

தெவ்—பகை, போர்.

தெவ்வர்—பகைவர்.

தெவ்வினை—போர்.

தெவ்வு—சந்திரன், பகை, போர்.

தெழித்தல்—அதட்டல், கோபம், சினக்குறிப்பு, கனைக்கல், பேரொலி.

தெளிதல்—ஆராய்தல், ஆலோசனை, துணிதல், தெளிவு.

தெளித்தல்—ஒலித்தல், கொழித்தல், துப்புரவாக்கல், தூவல், விதைத்தல்.

தெளிர்—உள்ளோசை.

தெளிர்தல்—பேசலாலெழுமொலி.

தெளிவு—அறிவு, துணிவு.

தெள்ளல்—கொழித்தல், தெளிதல், வியங்கோண்முற்று.

தெள்ளி—யானை, வினையெச்சம்.

தெள்ளுதல்—கொழித்தல், தெரிதல், தெளிதல்.

தெறித்தல்—தெறிக்குதல்.

தெறுக்கால்—தேள், விருச்சிகராசி.

தெறுதல்—அழித்தல், தங்கல்.

தெறுத்தல்—நெரித்தல்.

தெறுநர்—பகைவர்.

தெற்றல்—அலைத்தல், மாறுபாடு, வியங்கோண்முற்று.

தெற்றி—சித்திரகூடம், திண்ணை, வினையெச்சம்.

தெற்று—தெற்றென்னேவல், தெற்றம்.

தெனாது—தெற்குள்ளது.

தென்—அழகு, இசை, கறுப்பு, தெற்கு, தென்னமரம்.

தென்காலு—தென்காற்று.

தென்கீழ்த்திசையிறை—தீ.

தென்புலத்தார்—பிதிர்த்தேவதைகள்.

தென்மலை—பொதியமலை.

தென்மேற்றிசைப்பாலன்—நிருதி.

தென்றல்—தென்காற்று, முன்பனிப்பருவத்தின்காற்று.

தென்றற்றேரோன்—மன்மதன்.

தென்றி—தென்காற்று.

தென்றிசைக்கோன்—நமன்.

தென்னவன்—பாண்டியன்.

தென்னை—தெங்கமரம்.

தே

தே—ஓரெழுத்து, கடவுள், கிருபை.

தேகம்—உடல்.

தேக்கல் — நிறைதல், வியங்கோண்முற்று.

தேக்கு — ஓர்மரம், சமுகு, தித்திப்பு, தேக்கென்னேவல்.

தேங்கல் — அச்சக்குறிப்பு, நிறைதல், வியங்கோண்முற்று.

தேசா—ஓரிராகம்.

தேசி—பெருங்குதிரை.

தேசிகம்—அவ்வவநாட்டுச்சொல், அழகு, ஒளி, ஓர்கூத்து, பொன்.

தேசிகன் — உபாத்தியாயன், குரு, தேசாந்தரி.

தேசிகர்—செட்டிகள்.

தேசியம்—திசைச்சொல்.

தேசு—ஒளி, பொன்.

தேடல்-தேடுதல், வியங்கோண்முற்று.

தேட்கடை—மூலநாள்.

தேட்டு—தேடுதல்.

தேமல்—படர்சுணங்கு.

தேமா—தித்திப்புள்ளமாமரம்.

தேம்—ஏழனுருபு, (உ-ம். கோடாய்தேத்து, கள், தித்திப்பு, வாசனை.)

தேம்பல்—இளைத்தல், பழம்பூ, மெலிதல், வாடல், வியங்கோண்முற்று.

தேயம்—இடம், உடல், களவு, நாடு.

தேயு—நெருப்பு.

தேய்தல் — இளைப்பு, உரைதல், குறைதல்.

தேய்த்தல் — அழித்தல், உரைத்தல், கொல்லல்.

தேய்ப்பு—தேய்த்தல்.

தேய்வு—குறைபாடு, மெலிவு.

தேய்வை — பரிமளச்சாந்து, வினைமுற்று.

தேரகன்—தேர்ப்பாகன்.

தேரர்—புத்தர்.

தேரன்—ஆயுர்வேத முழுதுணர்ந்தவொர்புலவன்.

தேரார்—கல்லாதார், சிழ்மக்கள், பகைவர்.

தேரை — தவளையிலோர் பேதம்.

தேர்—இரதம், உரோகணிநாள், தேரென்னேவல்.

தேர்ச்சி—எண்ணம், கல்வி, தெளிவு.

தேர்ச்சித்துணைவர்—மந்திரிகள்.

தேர்தல்—ஆராய்தல், சொல்லல், தெளிதல்.

தேவகாந்தாரி—ஓரிராகம்.

தேவகி—கண்ணன்றாய்.

தேவகிமைந்தன்—கண்ணன்.

தேவகுலம்—தேவர்கோயில்.

தேவசாட்சி—ஆணை.

தேவசேனாபதி—குமரன்.

தேவதத்தன்—ஓர்வாயு.

தேவதாரம்—ஐந்தருவிலொன்று, ஓர்மரம், செம்புளிச்சைமரம்.

தேவதேவன்—சிவன்.

தேவநகர்—தேவர்கோயில்.

தேவன்—அருகன், கடவுள்.

தேவாங்கம்—பட்டுச்சீலை.

தேவாதி—கடவுள்.

தேவாலயம்—தேவர்கோயில், பொன்மலை.

தேவி—காளி, துர்க்கை, பார்வதி, மனைவி.

தேவை—ஒரூர்.

தேளி—ஓர்மீன்.

தேள்—அனுடநாள், தேள், விருச்சிகவிராசி.

தேறல்—கள், தங்கல், துணிவு, நிச்சயம், வியங்கோண்முற்று.

தேறு — தேற்றுமரம், தேறெனேவல்.

தேற்றம்—கருமமுடிக்குந்துணிவு, நிச்சயம்.

தேற்றல்—தேற்றுதல், வியங்கோண்முற்று.

தேனர்—திருடர்.

தேனு—எருமை, களபு, குதிரை, தேவப்பசு, பசு.

தேன்—கள், பெண்வண்டு, வண்டு, வாசனை.

தை

தை—ஒரெழுத்து, ஓர்மாதம், தையெனேவல், பூசநாள், மகரராசி.

தைகல்—அலங்கரித்தல்.

தைத்தல்—அழுத்தல்.

தைத்தியமந்திரி—சுக்கிரன்.

தைத்தியர்—அசுரர்.

தைத்திரீயம்—இரண்டாம்வேதம்.

தைப்பை—சட்டை, வினைமுற்று.

தையல்—அழகு, பெண், வியங்கோண்முற்று.

தைவரல்—அடிவருடல், வியங்கோண்முற்று.

தொ

தொகல்—கூடல், வியங்கோண்முற்று.

தொகுதி—கூட்டம், திரட்சி.

தொகுத்தல்—கூட்டல்.

தொகை—கூட்டம்.

தொக்கு—உடல், தோல்.

தொங்கல் — ஆண்மயிர், ஆபரணத்திற்றொங்கணி, காதணி, தூக்கங்கள், பீலிக்குடை, பூமாலை, மயிற்றோகை, வியங்கோண்முற்று, வெண்குடை.

தொடக்கம்—ஆதி.

தொடங்கல்—துவக்கல், வியங்கோண்முற்று.

தொடர்—சங்கிலி, தொடரென்னேவல், பஞ்சிநூல், பழமை, பின்பு, பூமாலை, விலங்கு.

தொடர்ச்சி — தொடர்பு, பூங்கொத்து, மலர்த்திரள்.

தொடர்தல்—கட்டல், நேடல்.

தொடர்ந்தோர்—மித்திரர்.

தொடர்பு—உறவு, சிநேகம், பழமை, பா, முறைமை, வினையெச்சம்.

தொடலை—மகளிர்விளையாட்டு, மாலை, விளையாட்டு.

தொடல்—சார்தல், தீண்டல், தோண்டல், பிடித்தல், வியங்கோண்முற்று.

தொடி—ஒருபலம், கங்கணம், கைவளை.

தொடு — தொடுவெனேவல், தோட்டம், மருதப்பூமி, வஞ்சம்.

தொடுக்கம்—பொன்.

தொடுதல்—தீண்டல், தோண்டல்.

தொடுதோல்—செருப்பு.

தொடுத்தல்—கட்டல், பற்றல், வளைத்தல்.

தொடுபதம்—சோறு.

தொடுப்பு—கலப்பை, தொடுத்தல், வேறும்புறங்கூறல்.

தொடுவு—கொல்லை.

தொடை—அம்பு, சுவர்ப்புறத்துநீண்டவுத்திரம், செய்யுளுறுப்பிலொன்று, தொடை, நாணி, பூமாலை, மதிற்சுற்று.

தொடையல்—தொடுத்தமாலை, மாலை, வாசிகை.

தொட்டல்—தீண்டல், தோண்டல்.

தொட்டி—தொடடி.

தொட்டியம்—ஓர் கருநூல்.

தொட்டில்—தொட்டில்.

தொண்டகம்—குறிஞ்சிநிலப்பறை.

தொண்டலம்—யானைத்துதிக்கை.

தொண்டி—ஓரூர், கள்.

தொண்டு—அடிமை, ஒன்பது, பழமை.

தொண்டை—ஆதொண்டைச்செடி, கழுத்து, கோவைச்செடி, யானைத்துதிக்கை.

தொத்து—அடிமை, பழமை, பூங்கொத்து.

தொந்தம்—இரண்டு, சலஞ்சாதித்தல்.

தொந்தி—தொந்தியென்னேவல், வயிறு.

தொப்பி—கள்.

தொப்பை—தொந்தி.

தொயில்—தொய்யில்.

தொய்யகம்—தலைப்பாளை.

தொய்யல்—அகமகிழ்ச்சி, இன்பம், உழவு, சேறு, துன்பம்.

தொய்யில்—உழுநிலம், சாந்திலெழுதிடுங்கோலம்.

தொலை—உவமை, தொலையென்னேவல்.

தொலைதல்—கெடுதல்.

தொலைத்தல்—கொல்லல்.

தொலைவு—தோல்வி.

தொல்லை—பழமை.

தொழல்—தொழுதல், வியங்கோண்முற்று.

தொழில்—செயல்.

தொழு—இராவிடுமாய், தொழுமரம், தொழுவென்னேவல், பசுக்கொட்டம்.

தொழுகுலத்தோர்—அந்தணர்.

தொழுகை—தொழுதல்.

தொழுதல்—கும்பிடுதல், வணங்கல்.

தொழுதி—கூட்டம், திரட்சி, பறவைக்கூட்டத்தொகுதி.

தொழுத்தை—வசவி.

தொழுப்பு—உழுதொழில்வளைப்பு.

தொழும்பர்—அடிமைகள்.

தொழும்பு—அடிமை.

தொழுவம்—ஆனிலை, வினைமுற்று.

தொழுவர்—தொழில்செய்வோர், மருதநிலமாக்கள்.

தொளி—சேறு.

தொள்ளம்—சேறு, தெப்பம்.

தொள்ளல்—துளைத்தல், வியங்கோண்முற்று.

தொள்ளி—குழைசேறு.

தொள்ளை—துளை, துளையுடைப்பொருள், மரக்கலம்.

தொறு—அடிமை, கூட்டம், தொழிற்பயில்வு, பசுக்கூட்டம், பொலிவு.

தொறுவர்—இடையர்.

தொறுவியர்—இடைச்சிகள்.

தொறுவு—அடிமை, செய்தொழில், பசுக்கூட்டம்

தொனி—ஒலி, தொனியென்னேவல்.

தொனித்தல்—ஒலித்தல்.

தொன்மரம்—ஆலமரம்.

தொன்மை — எண்வகைவனப்பினுளொன்று, பழமை.

தொன்று—பழமை.

தொன்னீர்—கடல்.

தோ

தோகம்—சிறுமை.

தோகை—இறகு, மயில், மயிற்றோகை, முன்றானை, வால், விருதுக்கொடி.

தோக்கை—சீலை, மேற்போர்வை.

தோசை—அப்பவர்க்கம்.

தோடகம்—தாமரை.

தோடி—ஒரிராகம்.

தோடு—காதணி, கூட்டம், தாழை, தெங்கு, பனை, புலி, பூவினிதழ்.

தோட்கோட்பு—கடுப்போரு.

தோட்சுமை—காவடி.

தோட்டம்—கொல்லை.

தோட்டி—அழகு, கதவு, சுழ்கழியிருக்கை, யானைக்குடாரி, வாயில்.

தோட்டிமை—ஒற்றுமை.

தோணி—அம்பு, இரேவதிநாள், சேறு, நீர், மதிலுறுப்பு, மரக்கலம்.

தோண்டல்—அகழ்தல், முகத்தல், வியங்கோண்முற்று.

தோண்டான்—கோணய்.

தோண்டி—சிறுபானை, வினையெச்சம்.

தோண்மேல்—பிடரி.

தோதகம்—வஞ்சகம்.

தோத்திரம்—துதித்தல்.

[illegible]—[illegible].

தோமரம்—எறியாயுதம், கைவேல், பெருஞ்சவளம்.

தோம்—குற்றம்.

தோயம்—நீர்.

தோயல்—கலத்தல், குளித்தல்.

தோய்த்தல்—துவைத்தல்.

தோய்வு—சார்தல், தோய்தல்

தோரணம்—தலைவாசலின்வாயில், தெருவிற்கட்டுந்தோரணம்.

தோரி—சோறு.

தோரை—இரத்தம், ஓர்வகைநெல், சரமணிக்கோவை, மூங்கிலரிசி, விரலிறை.

தோலாமை—தோல்வியின்மை.

தோல் — அழகு, எண்வகைவனப்பினுளொன்று, சொல், துருத்தி, தோலாற்செய்தகேடகம், தோலென்னேவல், தோல், யானை.

தோல்வு—தோல்வி.

தோழம்—தொழுவம்.

தோழன்—பாங்கன்.

தோழி—பாங்கி.

தோளி—ஒருவகைச்சிவிகை, நீலி.

தோள்—கை, புயம்.

தோற்பரம்-தோலாற்செய்தகேடகம்.

தோற்றம்—ஏற்றமொழி, சொல், பிறப்பு, மகன், வலி.

தோற்றரவு—தோற்றல்.

தோற்றல்—தோல்வி, தோன்றல், பிறந்தல், முளைத்தல், வியங்கோண்முற்று.

தோற்றுவித்தல்—உண்டாக்கல்.

தோற்றுன்னர்-சக்கிலியர், செம்மார்.

தோன்றல் — ஆண்மகன், இராசா, தமையன், பெருமையிற்சிறந்தோன்,

மகன், முல்லைத்தலைவன், வியங்கோண்முற்று.

தோன்றி—இரத்தம், காந்தள், செங்காந்தள், வினையெச்சம்.

தோன்றிகள்—செட்டிகள்.

தோன்றுதல்—பிறத்தல், முளைத்தல்.

தௌ

தௌதம்—வெள்ளி.

தௌரிதகம்—குதிரைவட்டமாய்த்திருப்பல்.

தௌவல்—கெடுதல், வியங்கோண்முற்று.

தௌவை—அக்காள், தாய், மூதேவி.

ந

நகம்—உகிர், பூமி, மரம், மலை.

நகரம்—இராசமனை, ஒரெழுத்து, மருதநிலத்தூர், மருதப்பதி.

நகர்—நகவென்னேவல், மருதநிலத்தூர், வீடு.

நகாயுதம்—சிங்கம்

நகிலம்—முலை.

நகுதல்—இகழ்தல், ஒளிவிடுதல், சிரித்தல்.

நகுலம்—கீரி.

நகை—ஆபரணம், இகழ்ச்சி, இன்பம், எயிறு, ஒளி, களிப்பு, சிரிப்பு, நகையென்னேவல், பல், பூவரும்பு, மலர்ச்சி.

நகைச்சொல்—சிரித்துப்பேசல்.

நகைத்தல்—சிரித்தல், நிந்தித்தல்.

நக்கல்—நக்குதல், வியங்கோண்முற்று.

நக்கன்—அருகன், சிவன், நிருவாணி.

நங்கை—பெண்ணிற்சிறந்தாள்

நசித்தல்—கெடுத்தல்

நசை—ஆசை, ஒழுக்கம்.

நசைநர்—நண்பர்.

நச்சல்—வியங்கோண்முற்று, விரும்பல்.

நச்சு—ஆசை, நச்சென்னேவல், விடம்.

நச்சுதல்—ஆசைப்பெருக்கல்.

நஞ்சு—விடம்.

நடத்தல்—செலுத்தல், போகல்.

நடம்—ஓர்இராகம், கூத்து, தாளவொத்தினடிப்பது.

நடர்—நாடகர்.

நடலை—துன்பம், நடுங்கல், பொய், வஞ்சனை.

நடல்—நடுதல், வியங்கோண்முற்று.

நடவை—கடவுமரம், வழி.

நடனம்—கூத்து.

நடனர்—கூத்தர்.

நடி—நடியென்னேவல், நாடகக்கணிகை, பெருமை.

நடித்தல்—ஆடல்.

நடு—இடை, நடுவென்னேவல், நீதி, பூமி

நடுக்கம்—நடுங்கல்.

நடுங்கல்—நடுங்குதல், நோய், வியங்கோண்முற்று.

நடுதல்—நடல்

நடுநாள்—சித்திரைநாள்.

நடுப்பகல்—மத்தியானம்.

நடுவன்—நமன்.

நடை—ஒழுக்கம், கூத்து, செல்வம், வழி.

நடைப்பரிகாரம்—பலபண்டம்.

நட்டபாடை—ஓர்பண்.

நட்டம்—கூத்து. சே

நட்டல்—உறவாடல், நடுதல்.

நட்டுவன்—ஆட்டுவோன்.

நட்டோர்—உறவோர்.

நட்பு—உறவு, சிநேகம்.

நணுகல்—கிட்டல்,வியங்கோண்முற்று.

நணுகுதல்—சார்தல்.

நண்டு—கர்க்கடகவிராசி, நண்டு.

நண்ணலர்—பகைவர்.

நண்ணல்—கிட்டல், சார்தல்,வியங்கோண்முற்று.

நண்ணார்—பகைவர்.

நண்ணுநர்—மித்திரர்.

நண்பகல்—மத்தியானம்.

நண்பன்—குறிஞ்சிநிலத்தலைவன், தோழன், புருடன்.

நண்பு—நட்பு.

நதம்—மேற்கோடுமாறு.

நதி—கிழக்கோடுமாறு.

நதிசரம்-ஆற்றுச்சார்பிற்பிறந்தயானை.

நதிபதி—கடல்.

நதுத்தல்—அவித்தல்.

நத்தமாலம்—புன்கமரம்.

நத்தம்—இராத்திரி, இருள், ஊர், சங்கு, நத்தை, புன்கமரம்.

நத்து—சங்கு.

நத்தை—கருநந்து.

நந்தகோபன்—இடையரரசன்.

நந்தநந்தனன்—கண்ணன்.

நந்தர்—இடையர்.

நந்தல்—ஆக்கம், கெடுதல், நிந்தை,வியங்கோண்முற்று.

நந்தனம்—இந்திரன்பூந்தோட்டம்,ஓராண்டு, பூந்தோட்டம்.

நந்தனவனம்—பூந்தோட்டம்.

நந்தனன்—மகன்.

நந்தனி—மகள்.

நந்தன்—ஓரரசன், நந்தகோபன்.

நந்தி — அட்டாதசவுபபுராணத்தொன்று, இடபவிராசி, எருது, ஓரரசன், சிவன், சிறுபறை, செக்கான், வினையெச்சம்.

நந்தியாவட்டத்தாமன் — துரியோதனன்.

நந்தியாவர்த்தம்—நந்தியாவட்டம்.

நந்திகேச்சுரன்—சிவனூர்தி, சிவன்.

நந்து—சங்கு, நத்தை.

நந்துதல்—ஆதல், கெடுதல்.

நந்தை—கொத்தான்செடி, சந்திரன்முதற்பக்கம்.

நபம்—ஆகாயம், ஆவணிமாதம்.

நபுஞ்சகம்—பேடு.

நபோமணி—சூரியன்.

நமர்—சுற்றத்தார்.

நமன்—இயமன், சுற்றத்தான்.

நமை—ஓர்மரம்.

நம்—சாரியை, (உ-ம். எல்லாநம்மையும்.)

நம்பல்—ஆசைப்பெருக்கம், நம்புதல், வியங்கோண்முற்று.

நம்பன்—சிவன்.

நம்பி—அரசமாதைப்பார்ப்பானிராக்கதமணஞ்செய்யப்பிறந்துவிட்டுணுவையருச்சிப்பான், ஆணிற்சிறந்தவன்,வினையெச்சம்.

நம்பு—ஆசை, நம்பெனேவல்.

நயக்கன்—நாய்.

நயச்சொல்—சிரித்துப்பேசல்.

நயத்தல்—ஆசைப்பெருக்கம்.

நயந்தோர்—சிநேகிதர்.

நயப்பு—ஆசை.

நயப்புணர்வு—கண்ணோட்டம்.

நயம் — இன்பம், உபசாரம், நன்மை, நீதி.

நயவர்—சிநேகிதர்.

நயனம்—கண்.

நயன்—இன்பம், நன்மை, பயன், மகிழ்ச்சி.

நரகம்—பாதாளம்.

நரகர்—பாதாளலோகத்தார்.

நரகு—நரகம்.

நரசிங்கம்-விட்டுணுபத்தவதாரத்தொன்று.

நரதேவன்—அரசன்.

நரந்தம்—கத்தூரிமிருகம், காக்கை, நாரத்தை, வாசனை.

நரபதி—அரசன்.

நரம்பு—இசை, நாடி, நாணி.

நரர்—மனிதர்.

நரலல்—ஒலித்தல், பேசலாவெழுமொலி, வியங்கோண்முற்று.

நரலை—கடல்.

நரல்—செத்தை, நரலென்னேவல்.

நரல்வு—உள்ளோசை.

நரவாகனன்—குபேரன்.

நரற்றல் — ஒலித்தல், வியங்கோண்முற்று.

நரன்—மனிதன்.

நராந்தம்—காக்கை.

நராலை—நரகம்.

நரி—நரி.

நரிப்பு—இகழ்வு.

நரிப்புறம்—மிருகசீரிடம்.

நரேசன்—அரசன்.

நரேந்திரன்—அரசன்.

நரை—இடபவிராசி, எருது, சணை, சாபம், நரையென்னேவல், நாரை, வெண்மை.

நரைத்தல்—மயிர்முதலியவெளுத்தல்.

நலம்—அழகு, இன்பம், உபகாரம், கண்ணோட்டம், நன்மை.

நலன்—இன்பம்.

நலி—நலியென்னேவல், நோய்.

நலிதல்—சரிதல், மெலிதல்.

நலிவு—அழிவு.

நல்கல்—ஆசைபெருக்கம், ஈதல், வியங்கோண்முற்று.

நல்குரவு—தரித்திரம்.

நல்கூர்ந்தோன்—தரித்திரன்.

நல்லம்—கறுப்பு.

நல்லவர்—அறிஞர், சிநேகிதர்.

நல்லார்—அறிஞர், மாதர்.

நல்லாள்—பெண்.

நல்லோர்—அறிஞர்.

நல்வினை—அறம்.

நவநீதம்—வெண்ணெய்.

நவம்—ஒன்பது, கார்காலம், பேண்மை, சிநேகம், புதுமை,

நவரோசு—ஓரிராகம்

நவியம்—கோடாலி, புதுமை, மழு.

நவிரம்—ஆண்மயிர், உச்சி, தலை, புன்மை, மயில், மருதயாழ்த்திறம், மலை, வாள்.

நவிர் — ஆண்மயிர், மருதயாழ்த்திறம், வாள்.

நவிலல் — கற்றல், சொல்லல், வியங்கோண்முற்று.

நவிழ்த்தல்—அவித்தல்.

நவிறல்—சொல்லல்.

நவீனம்—புதுமை.

நவை—இகழ்ச்சி, குற்றம்.

நவ்வி — அத்தநாள், அழகு, இளமை, தோணி, மான்.

நவ்வு—மரக்கலம்.

நழுவல் — நழுவுதல், வியங்கோண்முற்று.

நள—ஓராண்டு.

நளகூபரன்—குபேரன்மகன்.

நளம்—அகலம், தாமரை.

நளன்—முதலெழுவள்ளலிலொருவன்.

நளி—அகலம், குளிர்ச்சி. கூட்டம், செறிவு, தேள், பெருமை.

நளிர்—குளிர், நண்டு, பெருமை.

நளினச்சொல்—சிரித்துப்பேசல்.

நளினம்—தாமரை.

நளினி—இலக்குமி, ஓர்பண், குளம்.

நளுத்தை—ஓர்பண்.

நள் — உச்சிப்பொழுது, திருவோணம், நடு, நள்ளென்னேவல்.

நள்ளல்—நட்டல், வியங்கோண்முற்று

நள்ளார்—பகைவர்.

நள்ளி-உறவு, கடையெழுவள்ளலிலொருவன், கர்க்கடகவிராசி, நண்டு.

நள்ளுநர்—சிநேகிதர்.

நறவம் — அனிச்சமரம், குங்குமமரம், ஞாழல், தேன், வாசனை.

நறவு—கள், குங்குமம், தேன், வாசனை.

நறா—கள், வாசனை.

நறுமை—நன்மை, வாசனை.

நறுவிலி—ஓர்மரம்.

நறை-கள்,குற்றம், நறும்புகை, வாசனை.

நற்கோள்—புதன், வியாழம், வெள்ளி.

நற்செங்கல்—காவிக்கல்.

நனந்தலை—உச்சி, நடு.

நனவு—அகலம், களன், தெளிவு.

நனி—இடங்கழிமை, பெருமை, மிகுதி.

நனை — கள், நனையென்னேவல், பூவரும்பு.

நனைதல்—நனையல்.

நனைத்தல்—ஈரமாக்கல்.

நனைவு—நனைதல்.

நன்கு—அழகு, நன்மை, மிகுதி.

நன்மை—உபகாரம்.

நன்றி—நன்மை.

நன்று—நன்மை, பெருமை.

நன்னயம்—உபசாரச்சொல், நினைவு.

நன்னர்—நன்மை.

நன்னிலை—ஒழுக்கம், சுகம், சுவர்க்கம்.

நா

நா—ஒரெழுத்து, நடு, நாக்கு.

நாகநாதன்—தேவேந்திரன்.

நாகம் — ஆகாயம், ஒலி, கருங்குரங்கு, காரீயம், குரங்கு, ஞாழல், தேவலோகம், நற்சீலை, பாம்பு, புன்னைமரம், மலை, யானை,

நாகரம்—ஓருவிசி, சுக்கு.

நாகரி—குருக்கத்தி.

நாகரிகம்—கண்ணோட்டம்.

நாகரிகர்—காமுகர், நகரப்பதியோர்.

நாகலோகம்—கீழுலகத்தொன்று, தேவலோகம்.

நாகவல்லி—வெற்றிலைக்கொடி.

நாகன்—ஓர்வாயு.

நாகாசனன்—கருடன்.

நாகு — இளமரம், இளமை, சங்கு, நத்தை, புற்று, பெண்ணெருமை, பெண்மரை, பெண்மீன்.

நாக்கு—நா.

நாகீகூழ்—நாகப்பூச்சி.

நாசமிசி—சிவன்.

நாசம்—சாவு.

நாசன்—நமன்.

நாசி—மூக்கு.

நாசிகை—மூக்கு.

நாஞ்சில்—கலப்பை, மதிலுறுப்பு.

நாஞ்சிற்படையோன்—பலபத்திரன்.

நாடகத்தமிழ்—முத்தமிழிலொன்று.

நாடகம்—கூத்து.

நாடரியர்—நாடகர்.

நாடல்—தேடல், வியங்கோண்முற்று.

நாடன்—கார்த்திகைநாள்.

நாடி—ஆன்மயிர், உட்டுளை, நரம்பு, மூக்கு, யாழினரம்பு, வினையெச்சம்.

நாடு — இடம், இடனுடைமை, நாடென்னேவல், பக்கம், பூமி, பூவுலகப்பொது.

நாட்டம்—ஓர்பண், கண், வாள்.

நாட்டல்—தாபித்தல், வியங்கோண்முற்று.

நாட்டியம்—கருத்து, குறிப்பு, கூத்து.

நாட்டை—ஓர்பண்.

நாட்பு—வசி.

நாணம்—வெட்கம்.

நாணல்—நாணற்புல், நாணுதல், வியங்கோண்முற்று.

நாணி—வில்விநாணி, வினையெச்சம்.

நாணுகம்—குதிரை.

நாண்—கயிறு, நாணென்னேவல், வெட்கம்.

நாதம்—ஓசை.

நாதன்—அரசன், அருகன், எப்பொருட்குமிறைவன், கடவுள், குரு, சிவன் மூத்தோன்.

நாந்தகம்—வாள்.

நாபி—ஓர்மருந்து, கொப்பூழ்.

நாப்பண் — தேர்நடு, நடு, யாழுறு?ப்பு.

நாமகள்—சரச்சுவதி.

நாமதேயம்—பெயர்.

நாமம்-பெயர், வைட்டுணுவர்நாமம்.

நாம்—அச்சம், தன்மைப்பெயர்.

நாம்பல்—இளைத்தல், வியங்கோண்முற்று

நாம்பு-நாம்பென்னேவல், மெலிவுறு.

நாயகம்—தலைமை.

நாயகன் — எப்பொருட்குமிறைவன், கடவுள், சிவன், தலைவன்.

நாயகி—பார்வதி, மனைவி.

நாயன்—இராசா, சிவன்.

நாயில்—மதில்.

நாயிறு—ஓர்கிழமை, சூரியன்.

நாய் — சுனகன், தென்மேற்றிசைப்பாலன்குறி.

நாய்கர்—வணிகர்.

நாரங்கம்—நாரத்தை.

நாரசிங்கம் — அட்டாதசவுபபுராணத்தொன்று.

நாரணன்—விட்டுணு.

நாரணி—துர்க்கை.

நாரதம்—மேசம்.

நாரதன்—ஓரிருடி.

நாரதீயம் — அட்டாதசபுராணத்துமட்டாதசவுபபுராணத்துமொன்று.

நாரத்தை—நாரத்தை.

நாரம்—அன்பு, கயிறு, நாரத்தை, நீர், பாசி.

நாராசம்—சலாகை.
நாராயணகவுளம்—ஓரிராகம்.
நாராயணம் — அரசமரம், ஒருபதிடதம், மீன்.
நாராயணன்—அயன், அரன், அரி, சந்திரன், வருணன்.
நாராயணி—இலக்குமி, ஓரிராகம், கங்கை, சத்தமாதர்களிலொருத்தி, துர்க்கை.
நாரி—நாணி, பன்னாடை, பார்வதி, பெண், வாசனை.
நாரிகேளம்—தென்னமரம்.
நாரை—நீர்வாழோர்புள்.
நார்—அன்பு, கயிறு.
நாலல்—தாழ்தல், தொங்கல், வியங்கோண்முற்று, விழுதல்.
நாலி—முத்து.
நால்வாயன்—இந்திரன், விநாயகன்.
நால்வாய்—யானை, வினைமுற்று.
நாவணம்—உண்ணுக்கு.
நாவலர்—கற்றவர், புலவர்.
நாவல்-ஓர்மரம், நெற்போர்தெழிக்கும் பகட்டினங்களைத்துரப்பதோர்சொல்.
நாவாய்—இரேவதிநாள், மரக்கலம்.
நாவி—கத்தூரிமிருகம்.
நாவிதன்—கார்த்திகைநாள், நாவிதன், பூரநாள்.
நாவிப்பிள்ளை—ஓர்மிருகம்.
நாழி — அளக்குநாழி, உட்டுளை, பூரட்டாதி.
நாழிகை—உத்திரட்டாதி, நாழிகை.
நாளம்—உட்டுளை.
நாளி—கள், நாய்.
நாளிகம்—வள்ளைச்செடி.
நாளிகேளம்—தென்னமரம்.
நாளினி—புளிப்புள்ளமாமரம்.
நாள்—அச்சுவினிமுதலிருபத்தேழுநாண்மீன், காலம்.
நாறல்—தோன்றல், மணத்தல், முளைத்தல்.
நாறு—நாறென்னேவல், பயிர்முளை.
நாற்சந்தி—நாற்றெருக்கூடுமிடம்.
நாற்றம்—கள், வாசனை.
நானமா—கத்தூரிமிருகம்.
நானம்—கத்தூரி, கவரிமா, குளிர்தல், வாசனை.
நானு—பல.
நானுவிதம்—பலவிதம்.
நான்மருப்பியானை — தேவேந்திரன்யானை.
நான்முகன்—அருகன், பிரமன்.
நான்முகன்கிழத்தி—சரச்சுவதி.
நான்முகன்வாழ்நாள்—கற்பம்.

நி

நிகண்டு—ஓர்நூல், நிச்சயம்.
நிகமம்—நகரம், வேதம்.
நிகர—உவமைச்சொல், வினையெச்சம்.
நிகரம்—ஒரெழுத்து, கூட்டம்.
நிகர்—உவமை, ஒளி, நிகரென்னேவல்.
நிகர்த்தல்—உவமித்தல், பொருதல்.
நிகர்ப்பு—ஒப்பு, போர்.
நிகலம்—தோண்மேல்.
நிகழ்ச்சி—நிகழ்தல்.
நிகழ்தல்—ஒளிசெய்தல், நடத்தல்.
நிகளம்—கால்விலங்கு, சங்கிலி, யானைச்சங்கிலி.
நிகாசம்—உவமை.
நிகாதன்—வஞ்சனையாளன்.

நிகாயம் — கூட்டம், மருதநிலத்தூர், வீடு.
நிகாரணம்—கொலை.
நிகாரணன்—கொலைசெய்வோன்.
நிகாரம்—பனி.
நிகிலம்—எல்லாம்.
நிகுஞ்சம்—புதர்வீடு, மலைக்குகை.
நிகும்பிலை — இந்திரசித்துயாகம்பண்ணினவிடம்.
நிகேதனம்—தேவர்கோயில், மருதநிலத்தூர், வீடு.
நிசம்—மெய்.
நிசா—இராத்திரி.
நிசாகரன்—சந்திரன்.
நிசாசரர்—அசுரர், இராக்கதர்.
நிசாசரி—கூகை.
நிசாதனம்—இடம், மெய்.
நிசாந்தம்—விடியற்காலம், வீடு.
நிசாபதி—சந்திரன்.
நிசாமணி—மின்மினி.
நிசாரணம்—கொலை.
நிசாரணன்—கொலைசெய்வோன்.
நிசானம்—ஓர்சட்பறை.
நிசி—இரா, இருள், பொன், மஞ்சள்.
நிசிசரர்—அசுரர்.
நிசிதம்—கூர்மை.
நிசிதர்—அசுரர்.
நிச்சயம்—மெய்.
நிச்சிந்தன்—அருகன்.
நிட்தம் — அட்டபருப்பதத்தொன்று, ஓர்தேசம்.
நிடேதனம்—கொலை.
நிடேதனன்—கொலைசெய்வோன்.
நிட்சேபம்—புதையல்.
நிட்டை—மனமசைவற்றிருத்தல்.
நிணத்தல் — கொழுத்தல், முடைதல், வியங்கோண்முற்று.
நிணம்—கொழுப்பு.
நிதம்பம்—கடிதடம், மலைப்பக்கம்.
நிதரிசனம்—திருட்டாந்தம்.
நிதனம்—சாவு.
நிதானம்—ஆதிகாரணம், கடவுண்மணிக்குநவமணிக்கும்பொது, நிச்சயம், படை, பொன்.
நிதானன்—கடவுள்.
நிதி—ஆபரணத்திற்பெருங்கணி, கடவுண்மணிக்குநவமணிக்கும்பொது, நிறைவு, பொன்.
நிதிக்கிழவன்—குபேரன்.
நிதிபதி—குபேரன்.
நிதியம்—கடவுண்மணி, பொன்முதலியபதினொன்குவகைப்பொது.
நிதியோன்—குபேரன்.
நித்தம்—எப்போழ்தும்.
நித்தன்—அருகன், கடவுள், சிவன்.
நித்தியம்—எப்போழ்தும்.
நித்தியவிதி—ஓமகுண்டம்.
நித்திலம்—முத்து.
நிநதம்—ஒலி.
நிநாதம்—ஒலி.
நிந்தித்தல்—இகழ்தல்.
நிந்தை—இகழ்ச்சி.
நிபம்—உவமை, காரணம்.
நிபிடம்—நெருக்கம்.
நிபுணர்—அறிஞர், மிகவல்லோர்.
நிபுணன் — அறிஞன், புதன், மிகவல்லோன்.
நிமம்—பிடர்.

நிமலன்—கடவுள்.
நிமி—சூரியகுலத்தோரரசன்.
நிமிடம்—காலநுட்பம்.
நிமித்தம்—அடையாளம், காரணம்.
நிமித்தர்—வருங்காரியஞ்சொல்வோர்.
நிமித்திகன்—புரோகிதன்.
நிமிர்தல்—உயர்ச்சி, ஓடல், சோறு, நெருங்குதல், வளர்தல்.
நிம்பம்—வேம்பு.
நியக்குரோதம்—அகலம், ஆலமரம்.
நியதி—ஊழ், செய்கடன்.
நியதுதல்—விடுதல்.
நியமம்—அட்டயோகத்தொன்று, இடம், கடைவீதி, செய்கடன், தெரு, தேவர்கோயில், நிச்சயம், நெடுந்தெரு, மருதநிலத்தூர், முறைமை.
நியமித்தல்—பிறப்பித்தல்.
நியர்ப்புதம்—பதினாயிரங்கோடி.
நியாசம்—வேம்பு, வைப்பு.
நியாதம்—வேம்பு.
நியாயம்—இடம், நீதி.
நியுதம்—நூறாயிரம்.
நிரஞ்சனன்—அருகன், கடவுள்.
நிரந்தம்—இடங்கழிமை.
நிரந்தரம்—இடமின்மை, எப்போழ்தும், குரங்கு, நெருக்கம்.
நிரந்தரன்—கடவுள்.
நிரப்பு — குறைபாடு, தரித்திரம், நிரப்பென்னேவல், நிறைவு, மடிமை.
நிரப்போர்—இரப்போர்.
நிரம்பரன்—அருகன், கடவுள்.
நிரம்பல் — நிறைதல், வியங்கோண்முற்று.
நிரம்பாமென்சொல்—மழலைச்சொல்.
நிரயம்—நரகம்.
நிரல்—ஒழுங்கு.
நிராகம்—உடலின்மை.
நிராகாரம்—ஆகாயம், நீக்கல்.
நிராசனம்—இருப்பின்மை.
நிராதரம் — ஆசையின்மை, ஆதரவின்மை.
நிராமயன்—கடவுள், நோயிலான்.
நிராயுதன்—அருகன், ஆயுதமில்லான்.
நிரியாணம்—சாவு, யானைக்கடைக்கண்.
நிருணமன்—அருகன், கடவுள்.
நிருதர்—இராக்கதர்.
நிருதி— தென்மேற்றிசைப்பாலன், முதலெழுவள்ளலிலொருவன்.
நிருத்தமாது—நாடகக்கணிகை.
நிருத்தம்—கூத்து.
நிருத்தர்—கூத்தர்.
நிருத்தன்—நிருத்தஞ்செய்வோன்.
நிருபன்—அரசன்.
நிருமதம்—மதமொழிந்தயானை.
நிருமலம்—மாசின்மை.
நிருமலன்—அரன், அருகன், கடவுள்.
நிருமாணம்—நிருமித்தல்.
நிருமாலியம் — பூசித்துக்கழித்தபொருள்.
நிருமிதம்—நிருமாணம்.
நிருமித்தல்—நிருமாணம்.
நிருவாணம் — அம்மணம், தண்மை, மோக்கம்.
நிரூபணம்—நிரூபித்தல்.
நிரூபன்—கடவுள்.
நிரூபித்தல்—ஆராய்தல்.
நிரை—ஒழுங்கு, ஓரசை, நிரையென்னேவல், பசுக்கூட்டம், பசுப்பொது, படைமுன்னணி, படைவகுப்பு.

நிரைதல்—வரிசையாதல்.

நிரைத்தல்—ஒலித்தல், நிரல்படவைத்தல்.

நிர்க்குணன்—கடவுள்.

நிர்க்குண்டி—வெண்ணொச்சி.

நிர்ப்புதம்—ஓரெண்.

நிர்விகாரி—கடவுள்.

நிலப்பிளப்பு—கமர்.

நிலமகன்—செவ்வாய்.

நிலம்—இடம், பூமி.

நிலம்பி—கொசுகு.

நிலயம்—கூத்து, தேவர்கோயில், பூமி, மருதநிலத்தூர்.

நிலவல் — ஒளிசெய்தல், வியங்கோண்முற்று.

நிலவு—ஒளி, சந்திரன், நிலவென்னேவல்.

நிலா—ஒளி, சந்திரன், வினைமுற்று, வினையெச்சம்.

நிலாமுகி—சகோரம்.

நிலாமுற்றம் — வீட்டின்மேலுலாவும் வெளி.

நிலை—ஆபரணத்திற்றொங்கணி, இடம், குணம், நிலையென்னேவல், பூமி, பொழுது, முறைமை.

நிலைத்தல்—நிலைபெறுதல்.

நிலைபெறுத்தல்—காத்தல்.

நிலைபெறுத்துகை—திதத்தாபகம்.

நிலைபேறு—தூண், மானம், மோக்கம்.

நிலைமை—குணம், மெய்.

நிலையகம்—மனை.

நிலையழிவு—தோல்வி.

நிவகம்—கூட்டம்.

நிவத்தல்—உயர்த்தல்.

நிவப்பு—உயர்ச்சி.

நிவர்தல்—ஓங்கல்.

நிவறல்—நுணுக்கம், மொய்த்தல்.

நிவாரணம்—நீங்கல், விடுத்தல்.

நிவிர்த்தி—துறவு.

நிவேசம்—வீடு.

நிவேசனம்—ஊர், வீடு.

நிவேதனம்—கொடுத்தல், சொல்லல்.

நிழலி—காற்று.

நிழல்—அருள், ஒளி, குளிர்ச்சி, சாயை, செல்வம், நிழலென்னேவல், நோய்.

நிழற்றல் — நிழல்செய்தல், நுண்மை, மென்சொல், வியங்கோண்முற்று.

நிறம்—ஒளி, குணம், மார்பு.

நிறுத்தல்—கொடாமை, நிலைப்படுத்தல், நிறுக்குதல்.

நிறுப்பான்—துலாவிராசி.

நிறுவல் — நிலைபெறுத்தல், வியங்கோண்முற்று.

நிறை—அழிவின்மை, துலாவிராசி, நிறையென்னேவல், நீர்ச்சால், நூறுபலம், மாட்சிமை, முறையினிலைமை, வரையறை.

நிறைசெல்வன்—குபேரன்.

நிறைதல்—நிறைவு, பெருகுதல்.

நிறைந்திடல்—நிறைதல்.

நிறைமொழியாளர்—சான்றோர்.

நிறைவு—மாட்சிமை.

நிற்றல்—நிலை.

நினதம்—ஒலி.

நினைதல்—நினைத்தல்.

நினைத்தல்—நினைக்குதல்.

நினைப்பு—நினைவு.

நினைவு—கருத்து.

நின்று — அசைச்சொல், (உ-ம். அழல வைடந்தமன்றத்தலந்தயராநின்றார் நிழலகைடந்தேநின்னையென்றேத்த,) வினையெச்சம்.

நீ

நீகம்—தவளை, மேகம்.

நீகாசம்—உவமை.

நீகாரம்—பனி.

நீகான்—மீகாமன்.

நீக்கம்—நீக்கல், நீளம்.

நீக்கல் — அகற்றல், கொல்லல், நீளல், மாறுபாடு, மாற்றல், வியங்கோண்முற்று.

நீங்கல் — நீங்குதல், பிரிதல், போகல், மாற்றல், வியங்கோண்முற்று.

நீசம்—ஈனம்.

நீசர்—கீழ்மக்கள்.

நீடல்—நீளல், வியங்கோண்முற்று.

நீடாணம்—கறி.

நீடு—நீளல், நீளென்னேவல், நெடும்பொழுது.

நீடுதல்—தாண்டல், நீளல்.

நீட்சி—நீளம்.

நீட்டல் — ஈதல், நீட்டுதல், வியங்கோண்முற்று.

நீட்டித்தல் — நெடும்பொழுது, முடித்தல்.

நீதம்—நீதி.

நீதி—நியாயம், மெய்.

நீதிநூலன்—அருகன்.

நீதிபரன்—கடவுள்.

நீதியறிந்தோர்—மந்திரிகள்.

நீத்தம்—வெள்ளம்.

நீத்தல்—ஒழுக்கம், துறவு, நீங்கல், பிரிதல்.

நீத்தவன்—அருகன்.

நீத்து—நீந்துபுனல்.

நீத்தோர்—முனிவர்.

நீந்தல் — கடத்தல், நீரினீந்தல், வியங்கோண்முற்று.

நீபம் — உத்திரட்டாதிநாள், கடப்பமரம், வெண்கடம்பு.

நீப்பு—துறவு, பிரிவு.

நீமம்—ஒளி.

நீரம்—நீர்.

நீராழி—கடல்.

நீரிலாநிலம்—பாலைநிலம்.

நீரோருகம்—தாமரை.

நீர்—குணம், நீர், முன்னிலைப்பெயர்.

நீர்நாய்—நீர்நாய்.

நீர்நாள்—பூராடநாள்.

நீர்நிலை—குளம்.

நீர்மை—ஒப்புரவு, குணம்.

நீலகண்டன்—சிவன்.

நீலகிரி—அட்டபருப்பதத்தொன்று,அத்தமிக்குமலை.

நீலந்தர்—பாடுவர்.

நீலம் — இருள், கருங்குவளை, கறுப்பு, காற்று, நஞ்சு, நீலநிறம், நீலமணி, பனைமரம்.

நீலவண்ணன்—விட்டுணு.

நீலன்—சனி.

நீலாம்பரன்—பலபத்திரன்.

நீலாம்புரி—ஓரிராகம்.

நீலி—அவுரி, கறுப்பு, காளி, துர்க்கை, பார்வதி, மேகவண்ணப்பூவுள்மருதோன்றிமரம்.

நீலோற்பலம்—கருங்குவளை.
நீல்—காற்று, நீலம்.
நீவல்—தடவல், துடைத்தல், வியங்கோண்முற்று.
நீவாரம்—குளநெல்.
நீவான்—மீகாமன்.
நீவி—சீலை, கொய்சகம், வினையெச்சம்.
நீவியம்—சீலை.
நீழல்—ஒளி, நிழல், நோய்.
நீளம்—தூரம், நெடுமை.
நீளல்—ஓடல், தூரம், வியங்கோண்முற்று
நீளிடை—சேய்மை.
நீள்—உயர்ச்சி, ஒளி, நீளென்னேவல்.
நீறணிந்தோன்—சிவன்.
நீறு — திருநீறு, நீறென்னேவல், பராகம்.

நு

நுகம்—நுகத்தடி.
நுகர்ச்சி—அனுபோகம், உண்டல்.
நுகர்தல்—அனுபவித்தல், புசித்தல், விழுங்கல்.
நுங்கல் — வியங்கோண்முற்று, விழுங்கல்.
நுசுப்பு—இடை.
நுடங்கல்—ஆடல், துவளல், முடங்கல், வியங்கோண்முற்று.
நுட்பம்—காலநுட்பம், நுண்மை.
நுணக்கம்—நுணங்கல்.
நுணங்கல்—துவளல், நுண்மை, முடங்கல், வியங்கோண்முற்று.
நுணங்கு — தேமல், நுணங்கென்னேவல், நுண்மை.
நுணலை—தவளை.
நுணல்—தவளைப்பேதம்.
நுணவு—தணக்கமரம், நுணுமரம்.
நுணவை—தணக்கமரம்.
நுணா—நுணுமரம்.
நுணித்தல்—குணம், நுணுக்கல்.
நுணுக்கம்—கூர்மை, நுண்மை.
நுணுக்கல்—நுண்மையாக்கல்.
நுணுங்கல்—நுண்மை, வியங்கோண்முற்று.
நுணுங்கு — நுணுங்கென்னேவல், நுண்மை.
நுண்ணிடை—இடை, பெண்.
நுண்ணியர்—மந்திரிகள்.
நுண்பொடி—புழுதி.
நுதலணி—சுட்டி.
நுதலல்—கருதல், குறித்தல், வியங்கோண்முற்று.
நுதல்—நுதலென்னேவல், நெற்றி, புருவம்.
நுதற்சுடிகை—சுட்டி.
நுதி—முனை.
நுதுத்தல்—அவித்தல்.
நுந்துதல்—தூண்டல்.
நுமன்—உம்மவன்.
நும்—சாரியை, (உ-ம். எல்லீர் நும்மையும்.)
நுரை—குமிழி, நுரை, நுரையென்னேவல், வெண்ணெய்.
நுரைத்தல்—நுரைக்குதல்.
நுவணம்—கல்விநூல், தினைமா, நுண்மை, பஞ்சிநூல்.
நுவணை — கல்விநூல், தினைமா, நுண்மை, பஞ்சிநூல்.

நுவலல்—சொல்லல், வியங்கோண்மு ற்று.
நுவல்—சொல், நுவலென்னேவல்.
நுவற்சி—சொல்லல்.
நுழை—நுண்மை, நுழையென்னேவ ல், நுழைவாயில், பலகணி.
நுழைத்தல்—நுழைவித்தல்.
நுளம்பு—கொசுகு, மின்மினி.
நுளை—ஈனம்
நுளைச்சி—நெய்தனிலப்பெண்.
நுளையர்—நெய்தனிலமாக்கள்.
நுனி — நுண்மை, நுனியென்னேவல், முனை.
நுனித்தல்—கூர்மைசெய்தல்.
நுனை—முனை.

நூ

நூக்கல்—தள்ளல்,வியங்கோண்முற்று.
நூங்கு—பெருமை, மிகுதி.
நூதனம்—புதுமை.
நூதனன்—புதியோன்.
நூபம்—எருது.
நூபுரம்—காற்சிலம்பு, பாதகிண்கிணி.
நூலோர்—அறிஞர், பார்ப்பார், மந்தி ரிகள்.
நூல்—எண்ணெல், கல்விநூல், நூலெ ன்னேவல், பஞ்சினூல்.
நூல்வல்லோர்—மந்திரிகள்.
நூவு—எள்.
நூழில்—குவிதல், கொடிக்கொத்தான், கொலை, படர்கொடி, யானை.
நூழை—நுண்மை.
நூறல்—அழித்தல்,வியங்கோண்முற்று.
நூறு—சதம், நூறென்னேவல்.
நூறை—மலங்குமீன்.
நூற்றல்—நூற்குதல்.
நூற்பா—அகவல், சூத்திரப்பா.
நூனம்—குன்றல், நிச்சயம்.
நூனுழி—நாடா.
நூன்முகம்—பாயிரம்.

நெ

நெகிழ்தல்—குழைதல், மலர்தல்.
நெஞ்சு—மனம், மார்பு.
நெடநெடெனல்—ஈரமெக்கொம்பிக்குறி ப்பு.
நெடி—சிள்வண்டு.
நெடித்தல்—பொழுதுநீட்டித்தல்.
நெடியவட்டம்—மரவட்டணம்.
நெடியோன்—விட்டுணு.
நெடில்—நீளம், நெட்டெழுத்து, மூங் கில்.
நெடுங்கழுத்தல்—ஒட்டகம்.
நெடுந்துயில்—சாவு.
நெடுமை—நீளம், பெண்மயிர்.
நெடுமொழி—தன்மேம்பாடுரைத்தல்.
நெட்டி—நெட்டிச்செடி.
நெட்டில்—மூங்கில்.
நெட்டை—தசைகழிந்தவெறும்பு, நெடு மை.
நெய்—இரத்தம், சித்திரைநாள், தேனை ம், நெய், நெய்யென்னேவல்.
நெய்தல் — ஆடைமுதலியநெய்குதல், ஆம்பல், ஓர்நிலம்.
நெய்தற்பறை—சாபறை.
நெய்தை—பெருமை.
நெய்த்தோர்—இரத்தம்.
நெய்யரி—பன்னாடை.

நெய்யல் — நெய்தல், வியங்கோண்முற்று.
நெரிதரல்—ஓடல், வியங்கோண்முற்று.
நெரிதல்—சாய்தல்.
நெரித்தல்—நெரியச்செய்தல்.
நெரிவு—நெர்தல்.
நெருக்கம்—நெருங்கல்.
நெருக்கல்—நெருக்குதல்,வியங்கோண்முற்று.
நெருங்கல்-உறுதிச்சொல், கொல்லல். செறிவு, வியங்கோண்முற்று.
நெருடல்—இழைமுதலியநெருடல், வியங்கோண்முற்று.
நெருநல்—முன்னைநாள்.
நெருப்பு—தீ.
நெரோலெனல்—ஒலிக்குறிப்பு.
நெல்—ஓர்பயிர்.
நெல்லி—நெல்லிமரம்.
நெளி — கைவிரலணி, நெளியென்னேவல்.
நெளித்தல்—நெளிதல்.
நெளிர்—பேசலாலெழுமொலி.
நெளிர்தல்—பேசலாலெழுமொலி.
நெறநெறெனல் — ஈரடுக்கொலிக்குறிப்பு.
நெறி—செவ்வை, நீதி, நெறியென்னேவல், வழி.
நெறித்தல்—செவ்வேநிற்றல்.
நெறியிலார்—கீழ்மக்கள்.
நெற்றி—நுதல், படைவகுப்பு.
நெற்று—பழமுதிர்ச்சி.
நென்னல்—முன்னைநாள்.

நே

நேசம்—நேயம்.
நேடல்—தேடல், வியங்கோண்முற்று.
நேத்திரம்—கண், பட்டுச்சீலை.
நேபாளம்—ஓர்தேசம்.
நேமம்—நியமம்.
நேமி—கடல், சக்கரம், தேருருளை, பூமி, மூங்கில், வட்டம்.
நேமிநாதன்—அருகன், கடவுள்.
நேமிப்புள்—சக்கரவாகப்புள்.
நேயம்—அன்பு, நன்மை, நெய்.
நேர—உவமைச்சொல்.
நேரம்—காலம்.
நேரலர்—பகைவர்.
நேரார்—பகைவர்.
நேரியன்—சோழன்.
நேரிவெற்பன்—சோழன்.
நேரிறை—சோழன்.
நேரோடம்—நாவன்மரம்.
நேரோடு—நாவன்மரம்.
நேர்—உடன்பாடு, உவமை, ஓரசை, செவ்வை, நீளம், நுட்பம், நேரென்னேவல், பாதி.
நேர்தல்—ஈதல், உடன்படல், எதிர்த்தல், இட்டல், பொருதல், வேண்டல்.
நேர்ந்தார்—சிநேகிதர்.
நேர்பாடு—நீளம்.
நேர்பு—எழுச்சி, நீளம், வினையெச்சம்.
நேர்மை—நுண்மை.
நேர்வளம்—செவ்வழியாழ்த்திறம், பாலையாழ்த்திறம்.
நேர்வான்—சித்திரைநாள், வினையெச்சம்.

நை

நைகசிகம்—ஓர் மருந்து, காக்கை.

நைதல்—இரங்குதல், கெடுதல், தளர்தல், வாடல்.

நைதிகை—முல்லைக்கொடி.

நைநெனல்—இரக்கக்குறிப்பு, மெலிவின் குறிப்பு.

நைமிசம்—ஓராரணியம்.

நைருதி—நிருதித்திசை.

நைவளம்—குறிஞ்சியாழ்த்திறம்.

நொ

நொ—ஓரெழுத்து, துன்பம், நொவ்வென்னேவல், நோய்.

நொசிவு—நுண்மை, வருத்தம்.

நொச்சி—ஓர்செடி, சிற்றூர், தன்னரண் காப்பார்க்குமாலை, மதில்.

நொடி—காலநுட்பம், சொல், நொடியென்னேவல்.

நொடித்தல் — சொல்லல், நொடிக்குதல்.

நொடை—விலை, விற்றல்.

நொண்டல்—நொண்டுதல், வியங்கோண்முற்று, விழுங்கல்.

நொதி—பெருஞ்சேறு.

நொதுத்தல்—அவித்தல்.

நொதுமலர்—அயலோர்.

நொய்—நொய்மை.

நொய்தல்—நுண்மை.

நொய்தெனல்—சீக்கிரக்குறிப்பு.

நொய்மை—நொய்வு.

நொய்யெனல்—நுண்மையின்குறிப்பு

நொய்வு—நொய்மை.

நொலையல்—அப்பவர்க்கம்.

நொவ்வு—நொய்மை.

நொள்கல்—அச்சக்குறிப்பு, முகத்தல், வியங்கோண்முற்று.

நொள்ளல்—நுளம்பு.

நொள்ளை—குருடு, நாகரவண்டு.

நொறில்—அடக்கம், விரைவு.

நொறுங்கு-நொய், நொறுங்கென்னேவல்.

நொறுங்குதல்—நொய்தாதல்.

நோ

நோ—ஓரெழுத்து, நோதல், நோவென்னேவல்.

நோக்கம்—அழகு, உயர்ச்சி, கண், பார்வை.

நோக்கல் — காணல், காத்தல், வியங்கோண்முற்று.

நோக்கு—அழகு,கண், நோக்கென்னேவல்.

நோண்டல் — கிண்டல், தோண்டல், முகத்தல், வியங்கோண்முற்று.

நோதல்—நோயுறல்.

நோய்—துன்பம், வருத்தம், வியாதி.

நோய்முகன்—சனி.

நோலாமை—தவமின்மை,பொறாமை.

நோவு—நோய்.

நோழிகை—நூலின்றூர்.

நோற்பு—பொறுத்தல்.

நோற்றல் — தவஞ்செய்தல், பொறுத்தல்.

நோனுமை—தவஞ்செய்யாமை, பொறாமை.

நோனார்—தவமிலார், பகைவர்.

நோன்பு—தவம்.

நோன்மை — தவம், பெருமை, பொறுமை, வலி.

நோன்றல் — தள்ளல், நிலைநிறுத்தல், பொறுத்தல்.

ப

பகடு—ஆண்யானை, இடபம், எருமைக்கடா, ஓடம், தெப்பம், பெருமை, பொதியெருது.

பகண்டை—சிவல்.

பகபகெனல்—ஈரொலிக்குறிப்பு.

பகம்—அவாவின்மை, ஈச்சுரத்தன்மை, சீர்த்தி, செல்வம், ஞானம், வீரியமாகியவறுகுணம், கொக்கு, பெண்குறி.

பகரம்—அலங்காரம், ஓரெழுத்து, சிறப்பு.

பகர்ச்சி—சொல்,

பகர்தல்—சொல்லல், விற்றல்.

பகலவன்—சூரியன், பரணிநாள்.

பகலோன்—சூரியன்.

பகல்—ஒளி, சூரியன், நடுநாள், நுகத்திலாணி, பகுத்தல், பிரிதல், பிளத்தல், மத்தியானம்.

பகவதி—தருமதேவதை, துர்க்கை, பார்வதி.

பகவதிநாள்—பூரநாள்.

பகவன்—அயன், அரன், அரி, அருகன், கடவுள், குரு, புத்தன்.

பகழி—அம்பு, அம்புக்குதை.

பகன்றை — கிலுகிலுப்பை, சிவேதை, சீந்தில்.

பகாசுரவைரி—வீமன்.

பகாப்பதம் — பகுப்பிற்பயன்படாப்பதம்.

பகாப்பொருள்—கடவுள்.

பகிர்—பகிரென்னேவல், பகுப்பு.

பகிர்தல்—பங்கிடல்.

பகினி—உடன்பிறந்தாள்.

பகீரதி—கங்கை.

பகுதி—இயல்பு, குடியிறை, பகுத்தல், பகுபதத்தோருறுப்பு, படை.

பகுத்தல்—ஈதல், தறித்தல், பங்கிடல், வெட்டல்.

பகுபதம் — பகுதிவிகுதிமுதலியவுறுப்பினானியன்றபதம்.

பகுவாய்—அகன்றவாய், பிழா.

பகை—பகை, பகையென்னேவல்.

பகைஞர்—பகைவர்.

பகைத்தல்—முரணல்.

பகையகம்—போர்க்களம்.

பக்கணம்—ஊர், வேடர்வீதி.

பக்கம் — அருகு, இடம், இறகு, சந்திரனாள், நட்பு.

பக்கர்—சுற்றத்தார்.

பக்கி—பக்கியென்னேவல், பறவை.

பக்கித்தல்—உண்டல், புசித்தல்.

பக்குவம்—அமைதல்.

பஃறி — இரேவதிநாள், ஓடம், மரக்கலம்.

பங்கம் — அலை, குழைசேறு, குளம், துண்டு, தோல்வி, பாவம், புழுதி, வேறுபாடு.

பங்கயம்—தாமரை.

பங்கயன்—சூரியன், பிரமன்.

பங்கி—ஆண்மயிர், பிறமயிர்.

பங்கு—சனி, பாதி, முடவன்.

பங்குசம்—தலைக்கோலம்.

பங்குனி—உத்திரநாள், ஓர்மாதம்.

பசத்தல்-துன்பத்தாணிறம்வேறுபடல்.
பசப்பு—பசலை, பொன்மைநிறம்.
பசலை—துன்பத்தால்வேறுபட்டநிறம்.
பசி—உதரக்கனல், பசியென்னேவல்.
பசித்தல்—உதரக்கனலெழும்பல்.
பசு—இடபவிராசி, உயிர், எருது, பசு.
பசுக்காவலர்—வைசியரிலொருவகை.
பசுங்கதிர்த்தே—சந்திரன்.
பசுநா—பிராயமரம்.
பசுபதி—சிவன்.
பசுமை—பச்சை, மெய்.
பசும்பிடி—பச்சிலைமரம்.
பசும்புல்—பயிர்.
பசை—ஆசை, இலாபம்.
பசைந்தார்—சிநேகிதர்.
பச்சிமம்—மேற்கு.
பச்சிலை—பச்சிலைமரம்.
பச்சை—ஓர்புதர், தோல், பசுமை, பரிமளம், புதன், மரகதம், விட்டுணு.
பச்சைச்சடையன்—வயிரவன்.
பஞ்சதம்—சாவு.
பஞ்சதாரை—சருக்கரை.
பஞ்சதை—சாவு.
பஞ்சபாணன்—மன்மதன்.
பஞ்சமகதி—மோக்கம்.
பஞ்சமம்—ஓர்பண்.
பஞ்சமி—ஐந்தாந்திதி.
பஞ்சம்—ஐந்து, கருப்பு.
பஞ்சரம்—கழுகு, கூடு, செருந்திமரம், மட்கலம்வனையுங்கூடம்.
பஞ்சவர்—பாண்டுமக்கள்.
பஞ்சவர்தூதன்—கண்ணன்.
பஞ்சவன்—பாண்டியன்.
பஞ்சாய்—கோரை.
பஞ்சானனம்—சிங்கம்.
பஞ்சானனன்—சிவன்.
பஞ்சிகம்—தாளி.
பஞ்சிதம்—விண்மீன்.
பஞ்சு—சீலை நூற்கும்பஞ்சு, பருத்தி.
பஞ்சுரம்—ஓர்பண், குறிஞ்சியாழ்த்திறம், பாலைநிலத்திராகம்.
பஞ்சுகம்—பெருமை.
பஞ்சை—தரித்திரன்.
படகம்—கவரிமா, தம்பட்டம், திரைச்சீலை, பரண்.
படங்கு—கூடாரம், பெருங்கொடி, மேற்கட்டி.
படபடெனல்—ஈரடுக்கொலிக்குறிப்பு.
படப்பம்—மருங்கிலூர்சூழ்பதி.
படப்பை—கொல்லை, நாடு, பசுவின்கொட்டம், மருதநிலத்தூர்.
படம்—எழுத்துப்படம், சீலை, திரைச்சீலை, பாம்பின்படம், யானைமுகபடாம், விருதுக்கொடி.
படர்—கருத்து, துன்பம், செலவு, நோய், பகை, படரென்னேவல், படைவீரர், மேடு, வழி.
படர்க்கை—மூவிடத்தொன்று.
படர்ச்சி—நடை, பரவுதல்.
படர்தல்—அகலம், நடத்தல், நினைத்தல்.
படலம்—இரதனக்குற்றம், இலக்கியச்செய்யுட்கூறுபாடு, கூட்டம், நேத்திரபடலம்.
படலிகை—கைம்மணி, பெரும்பீர்க்கு, வட்டம்.
படலை—கோத்தமாலை, பூமாலை.
படல்—உண்டாதல், கெடுதல், சாத்தும்படல், படுதல், வியங்கோண்முற்று.

படாகை—கொடிச்சீலை.

படாம்—சீலை, திரைச்சீலை, பெருங்கொடி, வினைமுற்று.

படி—குணம், குதிரையங்கவடி, சோபானம், நாழி, நூறுபலம், பகை, படியென்னேவல், பூமி.

படிகம்—கூத்து, பளிங்கு, பிச்சை.

படிதல்—கலத்தல், குளித்தல்.

படித்தரம்—கட்டளை.

படித்தல்—வாசித்தல்.

படித்திரம்—சூட்டிறைச்சி.

படிப்போன்—கற்போன்.

படிமக்கலம்—கண்ணாடி.

படிமத்தோன்—தேவராளன்.

படிமை—தவவேடம்.

படியகம்—படிக்கம்.

படிவம்—உடலுருவம், உடல், நோன்பு, வடிவு.

படிவர்—சடைமுடியோர், முனிவர்.

படிறர்—திருடர், தூர்த்தர், பொய்யர், வஞ்சகர்.

படிறு—களவு, பொய், வஞ்சம்.

படினம்—வெற்றி.

படீரம்—சந்தனம், சிவப்பு.

படு—கள், குளம், கொத்து, நன்மை, படுவென்னேவல்.

படுகர்—இழிந்தேறும்வழி, குளம், பள்ளம், மருதநிலம், வயல்.

படுகளம்—போர்க்களம்.

படுகாடு—சுடுகாடு.

படுதல்—உண்டாதல், சாதல், பூத்தல்.

படுத்தல்—கொலைசெய்தல், படுத்தல்.

படுநிலம்—பாலைநிலம்.

படுமலைப்பாலை—ஓரிசை.

படுவர்—கள்விற்போர்.

படுவி—வசவி.

படுவை—தெப்பம், வினைமுற்று.

படை—ஆயுதம், கலப்பை, கல்லணை, தானை, படையென்னேவல், போர்.

படைக்கலம்—ஆயுதம், எழு.

படைத்தல் — உண்டாக்கல், ஊண்பகுத்திடல்.

படைத்தோன்—கடவுள், பிரமன்.

படையாளர்—படைவீரர்.

படையுறை—ஆயுதவுறை.

படைவரம்—குதிரைக்கல்லணை.

படைவாள்—கலப்பை.

பட்டடை—அடைகல், பண்டவிராசி.

பட்டணம்—நகரம்.

பட்டம்—ஆயுதம், கவரிமா, குளம், சீலை, நெற்றிப்பட்டம், பதவி, மனிதர்படுக்கை, வழி, விலங்கின்படுக்கை.

பட்டாங்கு—மெய்.

பட்டாரகர்—கடவுளர், குருக்கள்.

பட்டாரகன்—அருகன், குரு.

பட்டி—இடம், ஓர்செடி, களவு, சிற்றூர், சீலை, தெப்பம், பலகறை, பிள்ளை, விக்கிரமாதித்தன்மந்திரி.

பட்டிகள்—திருடர்.

பட்டிகை—அரைநாண், சீலை, சீவந்தில், தெப்பம், தோணி, முலைக்கச்சு.

பட்டிமை—களவு, வஞ்சம்.

பட்டினம்—ஊர், நெய்தனிலத்தூர்.

பட்டு — உல்லாசம், சிற்றூர், பட்டுச்சீலை, வினையெச்சம்.

பட்டை—மரத்தோல்.

பணம்—பருமை, பாம்பின்படம், பாம்பு, பொற்காசு.
பணயம்—பணம்.
பணவம்—தம்பட்டம்.
பணவை—கழுகு, பரண்.
பணி—ஆபரணம், ஏவல், சொல், தொழில், தோற்கருவி, பட்டுச்சீலை, பணியென்னேவல், பாம்பு.
பணிக்கன்—உபாத்தியாயன்.
பணிதல்—வணங்கல்.
பணித்தல்—ஈதல், சொல்லல்.
பணியல்—வணங்கல், வியங்கோண்முற்று.
பணிலம்—சங்கு, வலம்புரிச்சங்கு.
பணிவு—வணக்கம்.
பணை—அரசமரம், குதிரைப்பந்தி, பணையென்னேவல், பருமை, பறைப்பொது, பிழைத்தல், பெருமை, மரக்கொம்பு, மருதநிலப்பறை, மருதநிலம், முரசு, மூங்கில், வயல், விலங்கின்படுக்கை.
பணைத்தல்—பருத்தல், பிழைத்தல்.
பண் — இசைப்பாட்டு, குதிரைக்கல்லணை, நிறைநரம்புள்ளவீணை, பண்ணென்னேவல்.
பண்டசாலை - அணிகலன்முதலியவைக்கும்வீடு.
பண்டம்—பண்ணிகாரம், பொன், மெய்யறிவு.
பண்டர்—பாடற்கீழ்மக்கள்.
பண்டனம்—போர்.
பண்டாரம்—பலபண்டம், பொக்கசம்.
பண்டி—உரோகணிநாள், பண்டி, வயிறு.
பண்டிதன்—சுக்கிரன், புதன், புலவன், வைத்தியன்.
பண்டு—பழமை.
பண்ணல்—செய்தல், வியங்கோண்முற்று.
பண்ணவர்—கடவுளர், தேவர், பாடகர், முனிவர்.
பண்ணவன்—அருகன், குரு, திண்ணியன்.
பண்ணிகாரம்—பலபண்டம்.
பண்ணியங்கூலம்—பலபண்டம்.
பண்ணுவர்—குதிரைப்பாகர், யானைப்பாகர்.
பண்ணை—ஓர்செடி, குளம், மகளிர்கூட்டம், மகளிர்விளையாட்டு, மருதநிலம், வயல, விலங்கின்படுக்கை.
பண்படல்—செவ்விதாதல், வியங்கோண்முற்று.
பண்பு—குணம்.
பண்புரைப்பார்—தூதர்.
பதகம்—பறவை.
பதகர்—கீழ்மக்கள்.
பதகன்—பாதகன்.
பதக்கம்—பதக்கம், மாதரணிவடம்.
பதக்கு - இரண்டுமரக்காற்கொண்டது.
பதங்கமம்—பறவை.
பதங்கம்—பறவை, விட்டிற்பறவை.
பதங்கன்—சூரியன்.
பதடி—பதர்.
பதணம்—மதிலுண்மேடை, மதில்.
பதபதெனல்—ஈரடுக்கொலிக்குறிப்பு.
பதப்பாடு—மதிலுறுப்பு.
பதம் — அடையாளம், அழகு, அறுகு, இடம், உண்டல், காலம், கால், சொல், சோறு, நாழிகை, வரிசை, வழி.
பதரி—இலந்தைமரம்.

பதர்—பதர்.

பதலை—சிறுமலை, தாழி, மத்தளம், மலை, வாயகன்றபறை.

பதவி—செல்வம், தேவலோகம், வழி.

பதவுரை— சொற்றோறும்பொருளுரைத்தல.

பதவை—வழி.

பதறல்-வியங்கோண்முற்று, விரைதல்.

பதன்—பக்குவம்.

பதாகினி—படை.

பதாகை—விருதுக்கொடி.

பதாதி—காலாள், படை, படையினோர்தொகை.

பதி — அரசன், இடம், ஊர், எப்பொருட்குமிறைவன், குரு, கொழுநன், நகரம், பதியென்னேவல், மருதநிலத்தூர, மூத்தோன், வீடு.

பதிகம் — பத்துச்செய்யுளான்முற்றுப்பெறுதல், பாயிரம்.

பதிகன்—வழிச்செல்வோன்.

பதிதன்—குலஞ்சமயமுதலியவொழுக்கத்திற்றுறந்தோன்.

பதித்தல்—புதைத்தல்.

பதித்திரி—உலைத்துருத்தி.

பதியம்—பாசி.

பதிரன்—செவிடன்.

பதுக்கை—சிறுதிட்டை, சிறுதூறு, பாறை.

பதுங்கல்—ஒளித்தல், வியங்கோண்முற்று.

பதுமநாபன்—விட்டுணு.

பதுமநிதி—தாமரையுருவாய்க்கிடக்கும்பொன்.

பதுமம் — அட்டாதசபுராணத்தொன்று, கோடாகோடி, சோதிநாள், தாமரை, முடியுறுப்பு.

பதுமராகம்—நவமணியிலொன்று.

பதுமன் — அட்டநாகத்தொன்று, பிரமன்.

பதுமினி — நால்வகைப்பெண்களின்முதல்வள்.

பதுமை—இலக்குமி, காளி.

பதைத்தல்—அச்சக்குறிப்பு.

பத்ததி—ஒழுங்கு,கருமங்களைவிதிக்கிறவொருநூல், சொற்பயன், வழி.

பத்தல்—நீரிறைக்கும்பத்தல்.

பத்தன்—அன்புடையோன்.

பத்தா—புருடன்.

பத்தி—அன்பு,ஆராதனை, ஒழுக்கம்,ஒழுங்கு, படைத்தொகை, முறைமை.

பத்தியம்—ஆந்திரமாரியமிவற்றின்செய்யுள், இதம், கடுமரம்.

பத்திரம் — அம்பு, அழகு, இலை, இறகு, உடைவாள், மலை, முடியுறுப்பு.

பத்திராசனம்—சிங்காசனம்.

பத்திரி — அம்பு, இலை, காளி, குதிரை, பறவை.

பத்திரை — சந்திரனிரண்டாம்பக்கம், நற்பசு.

பத்திரைகேள்வன்—வீரபத்திரன்.

பத்தினி—கற்புடையாள்.

பத்து—ஓரெண்.

பந்தகம்—பந்தனை.

பந்தம்—அழகு, உறவு, கட்டு, கொண்டை, திரட்சி, பெருந்துருத்தி, மதில், முடிப்பு, முறைமை.

பந்தர்—ஓர்நகர், பந்தல்.

பந்தனம்—கட்டல், காவல்செய்தல்.

பந்தனை—பந்தித்தல், மகள்.

பந்தி—ஒழுங்கு, பந்தியென்னேவல்.

பந்தித்தல்—பிணித்தல்.

பந்து—சுற்றம், திரட்சி, திரிகை, மட்ட த்துருத்தி.

பந்துரம்—அழகு.

பந்துவராளி—ஓரிராகம்.

பப்பரம் — ஓர்தேசம், பதினெண்பா டையிலொன்று.

பப்பு—பரப்பு.

பப்புவர்—புகழ்வோர்.

பம்—விண்மீன்.

பம்பரம் — மந்தரமலை, விளையாடுங்க ருவி.

பம்பல்—எழுச்சி, நெருங்கல், பரவல், பொலிதல், வலி, வியங்கோண்முற்று.

பம்பை—ஓர்நதி, ஓர்வாச்சியம், முல்லை நிலப்பறை.

பயங்கரம்—பயப்படுத்தல்.

பயசு—நீர், பால்.

பயத்தல்—உண்டாதல், கிடைத்தல்.

பயந்தாள்—தாய்.

பயப்படல்—அஞ்சல்.

பயப்பு—கிருபை, நிறம், பசப்பு.

பயம்—அச்சம், குளம், சுதை, நீர், பய ன், பால்.

பயம்பு—பள்ளம், யானைபடுங்குழி.

பயல்—பையல்.

பயறு—சித்திரைநாள், பயறு.

பயனிலாள்—வேசி.

பயனுரைத்தல்—உரைசொல்லுதல்.

பயன் — அகலம், இலாபம், சொல்லு ரை, பால்.

பயிக்ஷம—பிச்சை.

பயிர் — இடும்பயிர், பயில், பறவைக்கு ரல்.

பயிர்த்தல்—பேசலாலெழுமொலி.

பயிர்ப்பு—அசுத்தம், அருவருப்பு.

பயிலல்—சொல்லுதல், படித்தல், விய ங்கோண்முற்று.

பயில்—சைகை, சொல், பயிலென்னே வல், பாதி.

பயிறல்—ஒலித்தல், கூடுதல், சொல்லு தல், பேசலாலெழுமொலி.

பயிற்றுதல்—படிப்பித்தல்.

பயினி—கூடல்.

பயின்—உட்பருகுருத்து, பிசின்.

பயோததி—கடல்.

பயோதரம்—கடல், முலை, மேகம்.

பரகதி—முத்தி.

பரசிராமன்—திருமாலவதாரத்தொரு வன்.

பரசு—பரசென்னேவல், மழு.

பரசுதல்—துதித்தல்.

பரசுபாணி—சிவன்.

பரஞ்சோதி—கடவுள்.

பரடு—கரடு.

பரணம்—கவசம், பட்டுச்சீலை.

பரணி—அணிகலச்செப்பு, ஆயிரம்யா னைகொன்ற தலைவனைப்பாடும்பிரபந் தம், ஏரிமதகு, ஓர்நாள், கூத்து.

பரண்—பரண்.

பரதகண்டம்—நவகண்டத்தொன்று.

பரதம்—ஓரண், கூத்து, பரதநூல்.

பரதர் — செட்டிகள், துரியோதனன்கு லத்தோர், நெய்தனிலமாக்கள்.

பரதவர்—நெய்தனிலமாக்கள்.

பரதன் — இராமன்றம்பி, சந்திரகுலத் தோரரசன், பரதமுணர்ந்தோன்.

பரதி—கூத்தாடிச்சி.

பரத்தர்—நூர்த்தர்.

பரத்தல்—பரவுதல்.

பரத்தி — நெய்தனிலப்பெண்.

பரத்தை—வேசி.

பரந்தவட்டம்—கைம்மணி.

பரந்தவட்டிகை—சேமக்கலம்.

பரபிருதம்—காக்கை, குயில்.

பரபுட்டம்—குயில்.

பரப்பிரமம்—பிரமம்.

பரப்பு—அகலம், கடல், பரத்தல், பரப்பென்னேவல்.

பரமசுந்தரி—தருமதேவதை.

பரமம்—பிரமம்.

பரமன்—கடவுள், சிவன்.

பரமேச்சுரன்—கடவுள், சிவன்.

பரமேட்டி—அயன், அரன், அரி, அருகன்.

பரம்—உடல், கடவுள், கவசம், குதிரைக்கல்லணை, பாரம், மிகுதி.

பரம்பரம்—முறைமை.

பரம்பு — கழனிதிருத்தும்பலகை, வரம்பு.

பரர்—அந்நியர், பகைவர்.

பரல்—பருக்கைக்கல், விதை.

பரவல்—சொல்லுதல், பரத்தல், புகழ்தல், வணங்கல், வியங்கோண்முற்று.

பரவை—இலக்குமிகூத்து, கடல், பரப்பு.

பரன்—சிவன்.

பராகம்—பூந்தாது.

பராக்கிரமம்—வலி, வீரம்.

பராசரம்-அட்டாதசவுபபுராணத்தொன்று, அட்டாதசதருமநூலிலொன்று.

பராசரன்—ஓரிருடி.

பராசனம்—கொலை.

பராசனன்—கொலைசெய்வோன்.

பராடம்—பாலைநிலம்.

பராபரன்—கடவுள்.

பராமுகம்—பின்னோக்கியமுகம்.

பராயணி—கன்னன்.

பராரை—உள்ளோசை.

பரார்த்தம்—ஓரெண்.

பராவிருத்தமுகம்— வேண்டாமைக்குமுகந்திருப்பல்.

பரி—அச்சுவினிநாள், அன்பு, உயர்ச்சி, கறுப்பு, குதிரை, சீக்கிரம், சுமை, பரியென்னேவல், பருத்தி, பாதுகாத்தல், பெருமை, வருத்தம், வழி.

பரிகம்—அகழ், மதிலுண்மேடை, வளைதடி.

பரிகாரம்—பரிகரித்தல், பெண்மயிர்.

பரிகை—அகழ்,பரிவு,மதிலுண்மேடை.

பரிசம்—தொடல்.

பரிசனம் — உறவு, ஏவல்செய்வோர், தொடுதல்.

பரிசன்னியம்—பொன்மலை.

பரிசாரகர்—ஏவல்செய்வோர்.

பரிசாரம் — ஏவற்றொழில், பெண்மயிர்.

பரிசிலாளர்—இரப்போர்.

பரிசு—ஈகை, குணம்.

பரிசை—கேடகம்.

பரிச்சேதம்—இலக்கியச்செய்யுட்கூறுபாடு.

பரிணமித்தல்—வேறுபடல்.

பரிணயம்—கலியாணம்.

பரிணாமம்—வேறுபாடு.

பரிதல்—அறுத்தல், அன்பு, அன்பொடுபேசல், இரங்கல், ஒடிதல், தறித்தல், வெட்டல்.

பரிதி—ஒளி, சக்கராயுதம், சூரியன், சூரியசந்திரரைச்சூழத்தோன்றும்வட்டம், தேருருளை, வட்டம்.

பரித்தல்—சுமத்தல்.

பரிபவம்—இகழத்தகுபொருள், இழிவு, எளிமை.

பரிபுரம்—காற்சிலம்பு, பாதகிண்கிணி.

பரிபூரணன்—சிவன்.

பரிப்பு—சுமை.

பரிமளம்—மிகுவாசனை.

பரிமாணம்—அளவு.

பரிமாவடிப்போர்—குதிரைப்பாகர்.

பரிமுகம்-அச்சுவினிநாள், கணைக்கால்.

பரியகம்—காற்சரி, கைச்சரி, பாதகிண்கிணி.

பரியங்கம்—கட்டில், மக்கட்படுக்கை.

பரியந்தம்—எல்லை.

பரியவம்—பலர்செல்லுநெறி.

பரியாயம் — ஒருபொருள்குறித்தபலசொல், பலமுறை.

பரியாளம்—பரிவாரம்.

பரிவட்டம் — சீலை, நெய்வோர்கருவியிலொன்று.

பரிவயம்—அரிசி, யௌவனம்.

பரிவாகிதமுகம்—மதத்தாலொருபுறஞ்சாயத்தலையைச்சுற்றியாட்டல்.

பரிவாதம்—பழிச்சொல்.

பரிவாரம்—படை.

பரிவு— அன்பு, இன்பம், துன்பம்.

பரிவேடம் — சூரியசந்திரரைச்சூழத்தோன்றும்வட்டம்.

பரு—சிலந்திநோய், பருவென்னேவல்.

பருகல் — உண்டல், குடித்தல், வியங்கோண்முற்று.

[illegible]

பருக்கை—பருக்கைக்கல், பளிங்கு.

பருணிதர்—புலவர்.

பருத்தல்—பருமையாதல்.

பருத்தி—ஓர்செடி.

பருந்து—ஓர்பறவை.

பருப்பதம்—மலை.

பருப்பதி—பார்வதி.

பருப்பு—பருத்தல், பருப்பு

பருமம்—கவசம், குதிரைக்கல்லணை, முவாறுகோவைமணியணி.

பருமித்தல்—சிரமஞ்செய்தல்.

பருவம்—அமாவாசியை, இளமை, உயர்ச்சி, கணு, காலம், பொழுது, பௌர்ணிமி.

பருவரல்—அருவருத்தல், துன்பம், வருந்தல், வியங்கோண்முற்று.

பரூஉ—பருமை, பறித்தல், வினையெச்சம்.

பரை—பார்வதி.

பர்க்கன்—சிவன், சூரியன்.

பலகணி—சாளரவாயில்.

பலகாரம்—பலபண்டம், யானைமேற்றவிசு.

பலகை—கேடகம், பலகை.

பலசூதனன்—இந்திரன்.

பலதேவன்—பலபத்திரன்.

பலமுறை—நானாவிதம், பலதரம்.

பலமூலசாகாசனர்—முனிவர்.

பலம்—ஊன், காய், கிழங்கு, நிறைகல், நிறையளவிலொன்று, நெற்றி, படை, பயன், பழம், பொன், வலி.

பலர்—சபை, பல்லார்.

பலர்க்கம்—கதுப்பு.

பலவழித்தோன்றல்—மருமகன்.

பலவிதம்—நானாவிதம்.
பலவு—பலாமரம்.
பலன்—இலாபம், காய், பழம்.
பலா—பலாமரம்.
பலாகம்—கொக்கு.
பலாசம்—இலை, பச்சைநிறம், பலாமரம், முருக்கு.
பலாசி—மரப்பொது.
பலாசு—இலை, பச்சைநிறம், புனமுருக்கு, முருக்கு.
பலாண்டு—ஈரவெண்காயம்.
பலாரி—இந்திரன்.
பலாலம்—வைக்கோல்.
பலி—காய்ந்திருந்தமரம், சாம்பல், சோறு, நீறு, பிச்சை, பூசை, விண்ணோருணவு.
பலிதம்—நரை, பலிப்பது.
பலித்தல்—இலாபம்.
பலிபுட்டம்—காக்கை.
பலினம்—காய்த்திருந்தமரம்.
பலினி—கோங்குமரம், ஞாழல்.
பல்—பல்.
பல்லணம்—குதிரைக்கல்லணை.
பல்லம்—அம்பு, ஒரெண், கரடி, குதிரைக்கல்லணை.
பல்லவம்—ஓர்தேசம், தளிர்.
பல்லவர்—கீழ்மக்கள், தூர்த்தர்.
பல்லவை—கீழ்மை, பலபொருள்.
பல்லாண்டு—வாழ்த்து.
பல்லாதகி—சேங்கொட்டைமரம்.
பல்லார்—பலர்.
பல்லியம்—சங்கீதம், வாச்சியப்பொது.
பல்லி—இடையரூர், கௌளி.
பல்லூகம்—கரடி.
பல்வலம்—குளம்.
பவ—ஓராண்டு.
பவணை—கழுகு.
பவமானன்—காற்று.
பவம்—நரகம், பாவம், பிறப்பு.
பவர்க்கம்—நரகம்.
பவளம்—பவளம்.
பவளநெடுங்குஞ்சியோன்—வயிரவன்.
பவனம்—அரமனை, இராசிப்பொது, காற்று, கொழித்தல், தானியந்தூற்றல், தேவலோகம், நாகலோகம், பாவனை, பூமி, பூனை, வீடு.
பவனாசனம்—பாம்பு.
பவனி—உலாப்போதல்.
பவன்—சிவன்.
பவானி—பார்வதி.
பவி—வச்சிராயுதம்.
பவிடியம்—செல்வம், நிகழ்காலம்.
பவித்திரம்—தூய்மை.
பவித்திரி—தருப்பை.
பவுரி—கூத்தின்விகற்பம்.
பவ்வம்—மரக்கணு.
பழகல்-பழகுதல், வியங்கோண்முற்று.
பழக்கம்—பழகல்.
பழங்கண்—இளைப்பு, துன்பம், மெலிவு.
பழஞ்சொல்—முதுசொல்.
பழமலை—விருத்தகிரி.
பழமை—தொன்மை.
பழமொழி—ஓர்நீதிநூல், முதுசொல்.
பழம்பஞ்சுரம்—ஓர்பண்.
பழனம்—மருதநிலம், வயல்.
பழனி—திருவாவினன்குடியென்னுந் திருப்பதி.

பழி-குற்றம், பழியென்னேவல்,பொய்.

பழிகூறல் — தூற்றுதல், வியங்கோண் முற்று.

பழிச்சல்—துதித்தல், வியங்கோண்முற்று.

பழித்தல்—நிந்தித்தல்.

பழிப்பு—நிந்தை.

பழு — ஏணிப்பழு, பழுவென்னேவல், விலா.

பழுது—குற்றம், பொய்.

பழுதை—கயிறு.

பழுத்தல்—முதிர்தல்.

பழுப்பு—அரிதாரம், இலைமுதலியமுதிர்தல்.

பழுமரம்—ஆலமரம்.

பழுவம்—காடு.

பழையர்—கள்விற்போர்,தொல்லோர்.

பளபளனல்—ஒளிக்குறிப்பு.

பளிங்கு—கண்ணாடி, சுக்கிரன், படிகம்.

பளிதம்—ஓசோண், கருப்பூரம்.

பள்ளம்—ஆழம், குழி.

பள்ளர்—உழவர்.

பள்ளி—அறச்சாலை, ஓர்சாதி, சிற்றூர், தேவர்கோயில், நித்திரை, மக்கட்படுக்கை, மருதநிலத்தூர், முனிவர்வாசம்.

பள்ளு—ஓர்சாதி, பள்ளுப்பாட்டு.

பள்ளை—ஆடு, வெள்ளாடு.

பறத்தல்—பறக்குதல்.

பறந்தலை—சுடுகாடு, போர்க்களம்.

பறப்பன்—தேள், விருச்சிகவிராசி.

பறம்பர்—தோல்வினைஞர்.

பறம்பு—மலை, மலை.

பறவை — அவிட்டநாள், புள், புள்ளிறகு.

பறவைவேந்தன்—கருடன்.

பறழ் — அணில், குரங்காதிகோட்டில் வாழ்விலங்கு, அரா, ஆடு,கீரி, நரி, நாய், பன்றி, புலி, பூனை, மான், முயலிவற்றின்குட்டி.

பறளிகை—பற்றிரும்பு.

பறளை—பற்றிரும்பு.

பறி—பறியென்னேவல், பொன், மீன்படுக்குங்கருவி, மீன்பெய்யுங்கருவி.

பறித்தல்—களைதல், கள்ளல்.

பறிவை—சீவந்தில்.

பறை—இறகு, சொல், பறையென்னேவல், வாச்சியம்.

பறைதல்—சொல்லல்.

பற்குனன்—அருச்சுனன்.

பற்குனி—உத்திரநாள்.

பற்சர்—பகைவர்.

பற்பம்—அட்டாதசபுராணத்தொன்று தாமரை, நீறு.

பற்றல்—ஆசைப்பெருக்கம், குறித்தல், தொடர்தல், பிடித்தல், வியங்கோண் முற்று.

பற்றற்றூர்—முனிவர்.

பற்றுக்கை — அம்புத்திரளைக்கட்டுங்கயிறு, கிட்டுங்கயிறு.

பற்றார்—பகைவர்.

பற்றினர்—உறவோர், சிநேகிதர்.

பற்று — அன்பு, ஆசை, பற்றென்னேவல்.

பற்றுக்கோடு—தஞ்சம்.

பற்றுக்கோல்—பற்றுக்கோடு.

பற்றை—செங்காந்தள்.

பனசம்—பலாமரம்.

பணசை—ஓர்பாம்பு, பனையூர்.

பனந்தாரான்—சேரன், பலபத்திரன்.

பனம்பாரனார்—அகத்தியர்மாணாக்கர் பன்னிருவரிலொருவர்.

பனி — அச்சம், குளிர், துன்பம், நடுக்கம், பனியென்னேவல்.

பனிக்கதிர்—சந்திரன்.

பனிச்சை—மயிர்ச்சுருள்.

பனித்தல்—சொரிதல், நடுங்கல், வருந்துதல், விடாமழைபெய்தல்.

பனிப்பகை—சூரியன்.

பனிப்பு—அச்சம். நடுக்கம்.

பனிமலை—இமயமலை.

பனுவலாட்டி—சரச்சுவதி.

பனுவல்—ஆகமம், சொல், நூல், பஞ்சிநூல்.

பனை—அனுடநாள், ஓர்மரம்.

பனைக்கொடியோன்—பலபத்திரன்.

பனைமீன்—யானைமீன்.

பன்மை—பலவற்றின்றன்மை.

பன்றி—வராகம்.

பன்னகம்—பாம்பு.

பன்னகவயிரி—கருடன்.

பன்னம்—இலை.

பன்னல் — சொல்லுதல், நெருங்கல், பருத்தி, வியங்கோண்முற்று.

பன்னாடை—நெய்யரி.

பன்னி—மனைவி, வினையெச்சம்.

பா

பா—ஓரெழுத்து, பாவென்னேவல், வெண்பாமுதலியபா.

பாகசன்—ஓரிராக்கதன்.

பாகசாதனன்—இந்திரன்.

பாகசாலை—மடைப்பள்ளி.

பாகதம்—எல்லாநாட்டுமொழி.

பாகம்—ஓரளவு, பக்குவம், பங்கு, பாதி, பிச்சை.

பாகலம்—யானைநோய்.

பாகல்—பலாமரம், பாகற்கொடி.

பாகவதம் — அட்டாதசபுராணத்தொன்று.

பாகவதர்—விட்டுணுசமயத்தார்.

பாகன் — தேர்முதலியநடத்துவோன், புதன்

பாகி—நாய், பக்குவன்.

பாகிடுதல்—பங்கிடுதல்.

பாகீரதி—கங்கை.

பாகு—குழம்பு, சருக்கரை, பங்கு, பரணிநாள், பாகன், பாக்கு.

பாகுடம்—அரசிறை.

பாகுலம்—கார்த்திகைமாதம்.

பாக்கம் — ஊர்ப்பொது, நெய்தனிலத்தூர், மருதநிலத்தூர்.

பாக்கன்—பூனை.

பாக்கு-எதிர்காலவிடைச்சொல், (உ-ம். உண்பாக்குச்சென்றான்,) துவர்க்காய்.

பாங்கர்—இடம், தோழர், பக்கம்.

பாங்கன்—தோழன்.

பாங்கி—தோழி.

பாங்கு—அழகு, உரிமை, பக்கம்.

பாசகரன்—காலன், நமன்.

பாசகர்—மடையர்.

பாசடை—இலை.

பாசம் — அன்பு, ஊசித்துளை, கவசம், கயிறு, சிவனாயுதம், நமனாயுதம், பிசாசம், பிரமனாயுதம்.

பாசறை — துன்பம், பகைமேற்சென்றோருறைவிடம்.

பாசறைமுல்லை - பாசறைத்தலைமகன் றலைவியையுள்ளல்.
பாசனம்—உண்கலம், உறவு, மட்கலம்.
பாசன்—சிவன்.
பாசாங்குசன்—விநாயகன்.
பாசி—சடைச்சி, நாய், நீர்ப்பாசி, வருணன்.
பாசிலை—பச்சிலை.
பாசு—பச்சை, மூங்கில்.
பாசுபதர்—சிவசமயத்தோர்.
பாசுரம்—வசனம்.
பாச்சல்—எழுச்சி.
பாஞ்சசன்னியம் — சலஞ்சலமென் னுஞ்சங்காயிரஞ்சூழ்ந்தசங்கு.
பாஞ்சாலம்—ஓர்தேயம்.
பாஞ்சாலி—துரோபதி.
பாடகம்—காலணியிலொன்று.
பாடம்—இடையர்வீதி, தெரு, பாடம்.
பாடலம் — குதிரை, சிவப்பு, சேரன்குதிரை, பாதிரிமரம்.
பாடலி—கள்.
பாடல் — சங்கீதம், வாசித்தல், வியங்கோண்முற்று.
பாடவம்—களிப்பு, வடவாநலம்.
பாடவள்—மிதுனவிராசி.
பாடவை—மிதுனவிராசி.
பாடாணம்—கல்.
பாடன்மகடூ—பாண்மகள்.
பாடி —ஊர், ஓர்ராகம், கவசம், சேரி, நகரம், நாடு, படை, முல்லைநிலத்தூர், வினையெச்சம்.
பாடிலம்—நாடு.
பாடிவீடு—பகைமேற்சென்றோருறைவிடம்.
பாடினி—பாடுவள்.

பாடு—இடம், ஓசை, குணம், கேடு, பக்கம், படுதல், பாடென்னேவல், பெருமை.
பாடை—ஆசந்தி, சொல்.
பாட்டன்—மூதாதை.
பாட்டி—ஒருசார்விலங்கின்பெண்பொது, பாடுவள், பெண்ணரி, பெண்ணாய், பெண்பன்றி, மூதாய்.
பாட்டு—இசைப்பா, செய்யுள்.
பாணம் — அம்பு, மழைவண்ணக்குறிஞ்சி.
பாணர்—புகழ்ந்துபாடுவர்.
பாணி — இசைப்பாட்டு, ஊர்சூழ்சோலை, கள், காலம், கூத்து, கை, சங்கீதம், சொல், தாமதம், நீர், பலபண்டம்.
பாணிக்கிரகணம்—கைப்பற்றல்.
பாணித்தல்—பொழுதுநீட்டித்தல்.
பாண்—இசைப்பாட்டு, கள்.
பாண்டம்-பாத்திரப்பொது, மட்கலம்.
பாண்டரங்கம்—சிவன்கூத்து.
பாண்டரங்கன்—சிவன்.
பாண்டரம்—வெண்மை.
பாண்டவர்முன்பிறந்தோன் — கன்னன்.
பாண்டி—ஓர்தேயம், ஓர்பண்.
பாண்டியம்—ஓர்தேயம்.
பாண்டியன்—பாண்டிதேயத்தரசன்.
பாண்டில்—அகல், இடபவிராசி, எருது, கட்டில், கைத்தாளம், நாடு, பண்டி, மூங்கில், வட்டம், வாகைமரம்.
பாண்டு — ஓர்நோய், குருகுலத்தரசருளொருவன், வெண்மை.
பாண்டுமைந்தர்—தருமராசன்முதலைவர்.
பாண்டுரம்—வெண்மை.

பாண்மகள்—பாடுவெள்.
பாதகடகம்—பாடகம்.
பாதகம்—பாவம்.
பாதகர்—கீழ்மக்கள்.
பாதகன்—கீழ்மகன்.
பாதகாப்பு—செருப்பு.
பாதசாலம்—காலணிப்பொது.
பாதபம்—மரப்பொது.
பாதம்—கால், நாலிலொன்று.
பாதரசம்—இரதம்.
பாதராயணன்—வேதவியாசன்.
பாதலம்—பாதாளம்.
பாதவம்—கொல்லை,மரப்பொது, மலை.
பாதாளம்—கீழுலகம், நரகம்.
பாதி—அரை, பங்கு.
பாதிரி—ஓர்மரம், மூங்கில்.
பாதீடு—செறித்தல், பாதுகாத்தல்.
பாதுகம்—பாதகுறடு.
பாதுகாத்தல்—ஓம்பல்.
பாதேயம்—கட்டுச்சோறு.
பாதை—மரக்கலம், வழி.
பாத்தம்—எல்லாநாட்டின்மொழி.
பாத்தி—சிறுசெய், பங்கு, வீடு.
பாத்தியம்—சம்பந்தம், பெரியோர்கட்குப்பாதங்கழுவக்கொடுக்குநீர்.
பாத்திரபதம்—புரட்டாசிமாதம்.
பாத்திரம்—இரப்போர்கலம், உண்கலம், தகுதி, புரட்டாசிமாதம்
பாத்தில்—வீடு.
பாத்து—கஞ்சி, சோறு, பங்கு, பாதி.
பாந்தல் — பதுங்கல், வியங்கோண்முற்று.
பாந்தள்—பாம்பு, பெரும்பாம்பு.
பாந்தன்—வழிச்செல்வோன்.
பாபத்தி—வேட்டை.
பாபம்—பாவம்.
பாபி—பாவி.
பாமகள்—சரச்சுவதி.
பாமடந்தை—சரச்சுவதி.
பாமரம்—அறிவின்மை.
பாமுதல்வி—சரச்சுவதி.
பாம்பு—அரவு, ஆயிலியநாள்.
பாம்புரி—அகழி.
பாயசம் — பாற்சொற்றிச்செடி, பாற்சோறு.
பாயல்—மக்கட்படுக்கை, வியங்கோண்முற்று.
பாயிரம்—முகவுரை.
பாயு—குதம்.
பாய்—கப்பலில்விரிக்கும்பாய், படுக்கும்பாய், வினையெச்சம்.
பாய்ச்சல்—பாய்தல்.
பாய்தல்—குதித்தல், தாண்டல், தாவுதல், பரவுதல்.
பாய்த்தல்—பாயச்செய்தல்.
பாய்மா—குதிரை, புலி.
பாய்விரி—பசிரி.
பாரகம்—திரைச்சீலை, பூமி.
பாரசிகை—பருந்து.
பாரணம்—சோறுண்டல்.
பாரதம்—இரதம், ஐந்தாம்வேதம், பாரதவருடம்.
பாரதர்—குருகுலவேந்தர்.
பாரதி—சரச்சுவதி, மரக்கலம்.
பாரதிகொழுநன்—பிரமன்.
பாரத்துவாசம் — கரிக்குருவி, வலியன்.

பாரத்துவாசன் — ஓரிருடி, துரோணு சாரி.

பாரத்துவாசி—துரோணுசாரி.

பாரம்—கரைப்பொது, கல்லுணை, கவசம், சுமை, நிறை, பூமி, வரம்பு.

பாரம்பரியம்—முறைமை

பாராசரியன்—வியாசன்.

பாராட்டல் — கொண்டாடல், வியங்கோண்முற்று.

பாராட்டு—கொண்டாடல், பாராட்டென்னேவல்.

பாராயணம்—நியமமாகப்படித்தல்.

பாராயணர்—குறிக்கொள்வோர்.

பாராவதம்—கரும்புரு.

பாராவளையம்—வளைதடி.

பாராவாரம்—கடல், கடற்கரை.

பாரி—கடையெழுவள்ளலிலொருவன், கட்டில், நற்சீலை, பாரியென்னேவல், பூமி, மனைவி.

பாரிசம்—பக்கம்.

பாரிசாதம்—ஐந்தருவிலொன்று, பவளமல்லிகை.

பாரிடம்—பூதகணம், பூமி.

பாரித்தல் — உண்டாக்கல், தோற்றல், பரப்பல்.

பாரியை—மனைவி.

பாரை—கடப்பாரை.

பார்—உரோகணிநாள், தேரின்பரப்பு, பாரொன்னேவல், பூமி.

பார்க்கவம்— அட்டாதசபுராணத்தொன்று.

பார்க்கவன்—சுக்கிரன்.

பார்க்கவி—இலக்குமி.

பார்த்தல்—காணல், வணங்கல்.

பார்த்தன்—அருச்சுனன்.

பார்த்திவம்—பூமி.

பார்த்திவன்—அரசன்.

பார்ப்பு— கோட்டில்வாழ்விலங்கின்பிள்ளை, தவழ்சாதியின்பிள்ளை, பறவைக்குஞ்சு, மான்கன்று.

பார்மிசையோன்—புதகன்.

பார்வதி—உமை.

பார்வதிகொழுநன்—சிவன்.

பார்வை—கண், மதிப்பு.

பாலம்—ஆற்றுப்பாலம், நெற்றி, பூமி, மரக்கொம்பு, மழு.

பாலரசம்—பொன்னிறம்.

பாலர்—இடையர், பிள்ளைகள்.

பாலனன்—காப்போன்.

பாலி—ஆலமரம், கள், பாலியென்னேவல்.

பாலிகை—உதடு, படைவாளின்முட்டி, முளைதெளிக்கும்பாலிகை, வட்டம்.

பாலித்தல்—ஈதல், காத்தல்.

பாலுகம்—கருப்பூரம்.

பாலை — ஓர்நிலம், ஓர்மரம், ஓர்வகைப்பாடல், கடல், புநர்பூசநாள், மிருகசீரிடநாள்.

பாலைக்கிழத்தி—துர்க்கை.

பால்—இடம், உரிமை, குணம், பக்கம், பங்கு, பாதி, பால், வெண்மை.

பாவகம்—இயல்பு, கருத்து, கொலை.

பாவகன்—தூய்மைசெய்வோன், நெருப்பு.

பாவகி—முருகன்.

பாவமூர்த்திகள்—வேடர்.

பாவலர்—கவிகள், புலவர்.

பாவல் — பாதகுறடு, வியங்கோண்முற்று.

பாவனம்—தூய்து, தூய்மைசெய்வது.

பாவி—தீயோன், பாவியென்னேவல்.

பாவுதல்—தாண்டல்.

பாவை-சித்திரப்பாவை, பெண்,மதில்.

பாழி—அகலம், உரை, ஊர், குகை, சயனம், தேவர்கோயில், பகைவரூர்,பெருமை, மருதநிலத்தூர், முனிவர்வாசம், வலி, விலங்கின்படுக்கை.

பாழ்—பாழென்னேவல்,பாழ்த்தல்.

பாழ்த்தல்—பாழாதல்.

பாளி—அடையாளம், பாசறை.

பாளிதம்—கண்டசருக்கரை, கருப்பூரம், சோறு, பட்டுச்சீலை, பாற்சோறு.

பாளை—கமுகு, தெங்கு, பனைமுதலியவற்றின்பாளை.

பாளையம்—பாசறை.

பாறல்--இடபவிராசி, எருது, ஓடல்,பொதியெருது, பொருதல், வியங்கோண்முற்று.

பாறு—பருந்து, பாறென்னேவல், மரக்கலம்.

பாறை—திட்டை.

பாற்கடற்பிறந்தாள்—இலக்குமி.

பாற்குநம்—பங்குனிமாதம்.

பாற்குநி—உத்திரநாள்.

பாற்குநிகம்—பங்குனிமாதம்.

பானசியர்—மடையர்.

பானம்—கள், குடித்தல், துவை, பருகுவன.

பானல்-கருங்குவளை,மருதநிலம்,வயல்.

பானாள்—பாதிநாள்.

பானி—படை, பானஞ்செய்வோன்.

பானீயம்—நீர்.

பானு—சூரியன்.

பானுமைந்தன்—யமன்.

பானை—மிடா.

பான்—எதிர்காலவிடைச்சொல், (உ-ம். உண்பான்வந்தான்.)

பான்மை—குணம்.

பி

பிகம்—குயில்.

பிங்கதிருட்டி—சிங்கம்.

பிங்கம்—பொன்மைகலந்தசிவப்பு.

பிங்கலந்தை—ஓர்நிகண்டு.

பிங்கலம்—பிங்கலந்தை, பொன், பொன்மைநிறம், வடக்கு.

பிங்கலன்—ஓர்நிகண்டாசிரியன, குபேரன்.

பிங்கலை—ஆந்தை,சூரியசரம்,பார்வதி.

பிங்களா—ஓராண்டு.

பிங்களை -தென்றிசையானைக்குப்பெண்யானை.

பிசங்கம்—பொன்மைகலந்தசிவப்பு.

பிசம்—இறகு.

பிசனம்—செஞ்சந்தனம்.

பிசி—அரும்பொருள், சோறு, பொய்.

பிசிதம்—உதாரணம்,ஊன்,நீர்,வேம்பு.

பிசிதாசனர்—இராக்கதர்.

பிசிர்—தூவல்.

பிசினம்—கோட்சொல்லல்.

பிசின்—நீர்வஞ்சி, பஞ்சினூல், பிசின், வெட்டுக்குருத்து.

பிசுமந்தம்—வேம்பு.

பிசுனன்—உலோபன், கோளன், பொய்யன்.

பிச்சம்—ஆண்மயிர், இறகு, பீலிக்குஞ்சம், வெண்குடை.

பிச்சி—ஓர்கொடி.

பிச்சு—பித்து.

பிச்சை—ஐயம்.

பிஞ்சகன் — கொலைசெய்வோன், சிவன்.

பிஞ்சம்—இறகு, சோலை.

பிஞ்சு—இளங்காய்.

பிஞ்ஞகம்—தலைக்கோலம்.

பிஞ்ஞகன்—சிவன்.

பிடகம்—நூல், பிச்சை, புத்தநூல்.

பிடகன்—புத்தன், வைத்தியன்.

பிடர்—பிடரி.

பிடர்த்தலை—பிடரி.

பிடவம்—பின்புறம்.

பிடாரி—காளி.

பிடி—கைப்பிடி, பிடியென்னேவல், பெண்கவரி, பெண்ணொட்டகம், பெண்யானை.

பிடிகம்—பிள்ளைக்கைவளை.

பிடித்தல்—கட்டல், சார்தல்.

பிடியல்—சீலை, நல்லாடை, வியங்கோண்முற்று.

பிடுங்கல் — பறித்தல், வியங்கோண்முற்று.

பிட்டம்—கடிப்பிரதேசம், சிற்றுண்டி.

பிட்டு—சிற்றுண்டி, தினைமா, வினையெச்சம்.

பிணக்கம்—பிணங்கல்.

பிணக்காடு—சுடுகாடு.

பிணங்கல்—நெருங்கல், பின்னல், மாறுபடல், வியங்கோண்முற்று.

பிணம்—பிசாசம், பிரேதம்.

பிணம்வீழ்களம்—சுடுகாடு.

பிணர்—கோங்கு, சர்ச்சரைவடிவு.

பிணவு—நாய், பன்றி, புல்வாயிவற்றின்பெண்.

பிணா—கவரிமா, நாய், பன்றி, புல்வாயிவற்றின்பெண்; பெண்பொது, விலங்கின்பெண்பொது.

பிணி—கட்டு, துன்பம், நோய், பிணியென்னேவல்.

பிணித்தல்—கட்டல்.

பிணிமுகம்—பறவைப்பொது, மயில்.

பிணை—ஆசை, உடன்பாடு, ஒட்டகம், கவரி, கழுதை, குதிரை, நாய், பன்றி, புல்வாய், யானையிவற்றின்பெண், கட்டு, பிணையென்னேவல், பூமாலை.

பிணைத்தல்—கட்டல்.

பிணையல்—பின்னியமாலை, மாலை, வியங்கோண்முற்று.

பிணைவு—புணர்ச்சி.

பிண்டம்—உடல், உண்டை, கருப்பத்திருக்கும்பிண்டம், கவளம், கூட்டம், சோறு, பிச்சை.

பிண்டி—அசோகமரம், கூட்டம், தினைமா, பிண்டியென்னேவல், பிண்ணாக்கு, புநர்பூசம், மா.

பிண்டித்தல்—பிண்டமாக்கல்.

பிண்டிவாலம்—எறியாயுதம்.

பிதற்றல்-பேசலாலெழுமொலி, விடாதுபேசல், வியங்கோண்முற்று.

பிதா — அருகன், கடவுள், சிவன், தந்தை, பெருநாரை.

பிதாமகன்—பாட்டன், பிரமன்.

பிதிர்—கதை, காலநுட்பம், திவலை, நொடி, பராகம், பிதிரென்னேவல், பிதிர்கள்.

பிதிர்நாள்—அமாவாசியை, இறந்தோர்நாள், மகநாள்.

பிதிர்பதி—யமன்.

பிதிர்வனம்—சுடுகாடு.

பிதுக்கல்—பிதுங்கச்செய்தல்.

பித்தம் — கூத்தின்விகற்பம், மயக்கம், முப்பிணியிலொன்று.

பித்தன்-கள்ளன், சிவன், பித்தன், வைரவன்.

பித்தி—சுவர்.

பித்திகை—கருமுகை, சுவர்.

பித்து—பித்தம்.

பித்தை—ஆண்மயிர்.

பிந்து—விந்து.

பிபீலிகை—எறும்பு.

பிப்புலம்—அரசமரம்.

பிப்பிலி—திப்பிலி.

பிரகதி—கத்தரிச்செடி.

பிரகம்பிதமுகம் — அதிசயத்தாற்சிறிதாய்த்தலையாட்டல்.

பிரகரணம்—ஒருவிடயமுடிவு, சமயம்.

பிரகற்பதி - அட்டாதசதருமநூலிலொன்று, வியாழம்.

பிரகாசம்—ஒளி, வெயில்.

பிரகாமியம்—அட்டமாசித்தியிலொன்று, நிறைவு.

பிரகாரம்—தன்மை, விசேடணம்.

பிரகிருதி—இயல்பு, பிரதானம்.

பிரசம்—கள், தேனீ, தேன், தேன்கூடு, வண்டு.

பிரசன்னம்—காட்சி.

பிரசாதம்—பயன்.

பிரசாபதி—ஆண்குறி, பிரமன்.

பிரசாரம்—வேங்கைமரம்.

பிரசித்தம்—அறிவிப்பு.

பிரசுரன்—சுக்கிரன்.

பிரதம்—ஈகை.

பிரதரம்—அம்பு.

பிரதனம்—படையிலோர்தொகை.

பிரதானம்—முக்கியம்.

பிரதிலோமன்- இழிவுயர்வாண்பெண்ணிற்பிறந்தோன்.

பிரதீசி—மேற்கு.

பிரதேசம்—இடம்.

பிரத்தல்—எழுத்திலாவோசை.

பிரத்தியக்கு—மேற்கு.

பிரத்தியாகாரம் — அட்டாங்கயோகத்தொன்று.

பிரபஞ்சம்—உலகம், சேனை, விசாலம்.

பிரபஞ்சனன்—காற்று.

பிரபம்—தண்ணீர்ப்பந்தல்.

பிரபவ—ஓராண்டு.

பிரபா—தண்ணீர்ப்பந்தல்.

பிரபாகரன்—சூரியன்.

பிரபாவம்—ஒளி, கீர்த்தி, மகிமை.

பிரபு—அதிகாரி, வல்லவன்.

பிரபை—ஒளி, தண்ணீர்ப்பந்தல்.

பிரப்பு—ஒருகலத்திற்பல்லுணவின்பரப்பு, பெருங்கொடி.

பிரமகற்பம்—ஆயிரங்கோடாகோடி.

பிரமகைவர்த்தம்—அட்டாதசபுராணத்தொன்று.

பிரமசாரி—நாலாச்சிரமிகளிலொருவன், வீட்டுமாசாரி.

பிரமணம்—சுழலல்.

பிரமம் — அட்டாதசபுராணத்தொன்று, அட்டாதசவுபபுராணத்தொன்று, கடவுள், சலகம், தத்துவம், தவசு, நடு, மயக்கம், முத்தி, வேதம்.

பிரமரம்—வண்டு.

பிரமரி—கூத்தின்விகற்பம், சுழலல்.

பிரமலோகம்—மேலேழுலகிற்சத்தியலோகம்.

பிரமனாள்—உரோகணிநாள்.

பிரமன்—அயன்.

பிரமன்றந்தை—திருமால்.

பிரமாணம்—அளவை, ஆணை.

பிரமாண்டம் — அட்டாதசபுராணத் தொன்று, பிரமாண்டம்.

பிரமாதம்—தவறல்.

பிரமாதி—ஓராண்டு.

பிரமாதீச்ச—ஓராண்டு.

பிரமாநந்தம்—மோட்சவின்பம்.

பிரமாயுதம்—பத்திலட்சம்.

பிரமேயம்—அறியப்படுதல்.

பிரமை—அறிவு, மயக்கம்.

பிரமோதம்—உவகை.

பிரமோதூத—ஓராண்டு.

பிரம்பு—தேரின்முட்டி,பிரப்பு, வரம்பு

பிரயத்தனம்—முயற்சி.

பிரயாசம்—வருத்தம்.

பிரயாணம்—வழிச்செல்கை.

பிரயுதம்—பத்திலட்சம்.

பிரயோகம்—ஏவல், செய்தல்.

பிரவாளம்—பவளம்.

பிரளயம்—படையிலோர்தொகை,வெள்ளம்.

பிரளல்—எழுத்திலாவோசை.

பிராகாரம்—மதில்.

பிராகிருதம்—வடமொழி.

பிராசயம்—ஆதி.

பிராசி—கிழக்கு.

பிராசீனம்—பழமை.

பிராசேதசன்—வான்மீகி.

பிராட்டி—பெருமாட்டி.

பிராணன்-இயத்தியங்கும்வாயு, உயிர்.

பிராணுயாமம — அட்டாங்கயோகத் தொன்று.

பிராதக்காலம்—விடியல்.

பிராந்தி—மயக்கம்.

பிராப்பியம்—பேறு.

பிராமி—சரச்சுவதி.

பிராய்—ஓர்மரம்.

பிராவம்—கொல்லை.

பிராறு—நிறைபுனல்.

பிரான்—எப்பொருட்குமிறைவன், கடவுள், சிவன்.

பிரி—பிரிதல், பிரியென்னேவல்.

பிரிதல்—அகறல், போகல்.

பிரித்தல்—நீக்கல்.

பிரியகம்—கடம்பு.

பிரியம்—உவகை.

பிரியலர்—சிநேகிதர்.

பிரியன்—தலைவன்.

பிரியை—பெண், மனைவி.

பிரிவு—பிரிதல்.

பிரீதி—உவகை.

பிருகதி—கத்தரி.

பிருகு—ஓரிருடி, சுக்கிரன்.

பிருகுடி—புருவம்.

பிருங்கம்—வண்டு.

பிருட்டம்—பின்பக்கம்.

பிருதுமானம்—யானைக்கொம்பினடு.

பிருதுவி—பூமி.

பிருத்தியர்—அடிமைகள்.

பிருந்தம்—கூட்டம், துளசி.

பிருந்தை—சலந்தரன்மனைவி, துளசி.

பிரேதம்—பிசாசம், பிணம்.

பிரோயம்—கள்

பிறை—பான்முதலியவற்றையுறைவிக்கும்பொருள்.

பிலகரி—ஸ்ரீராகம்.
பிலஞ்சுலோபம்—எறும்பு.
பிலம்—கீழறை, குகை, வளை.
பிலவகம்—குரங்கு, தேரை.
பிலவங்கம்—குரங்கு, தேரை.
பிலன்—எறும்பு.
பிலிற்றல்—கொப்புளித்தல், வியங்கோண்முற்று.
பில்கல் — கொப்புளித்தல், வியங்கோண்முற்று.
பில்லடை—அப்பவர்க்கம்.
பில்லி—பூனை.
பிழம்பு—திரட்சி.
பிழார்—இறைகூடை.
பிழி—கள், பிழியென்னேவல்.
பிழிதல் — ஒன்றனீரக்கைமுதலியவற்றாலொருக்கிவெளிப்படுத்தல்.
பிழியர்—கள்விற்போர்.
பிழை—குற்றம், பிழையென்னேவல்.
பிழைக்கை—பிழைத்தல்.
பிழைத்தல்—உய்தல், பிழைசெய்தல்.
பிளத்தல்—அறுத்தல், போழ்தல்.
பிளவு—பிளத்தல்.
பிளிர்த்தல்—கொப்புளித்தல்.
பிளிறல்—ஒலித்தல், கிண்டல், பேசலாவெழுமொலி, வியங்கோண்முற்று.
பிளிறு — ஆரவாரம், எழுத்திலாவோசை, சேறு, பிளிறென்னேவல்.
பிள்ளை — அன்றிற்குஞ்சு, இளமையோன், கரிக்குருவி, கிளி, குரங்காதிகோட்டில்வாழ்விலங்கின்பிள்ளை, தெங்கின்கன்று, நாகணவாய்ப்புள், பறவைக்குஞ்சு, பன்றிக்குட்டி, பூனைக்குட்டி, மகன், மரக்கன்று, மான்குட்டி, முயற்குட்டி, வயிரவன்.

பிற—அசைச்சொல், (உ-ம். யாஞ்சிலவரிசிவேண்டினேமாகத்தான்பிறவரிசையறிதலிற்றன்னுந்தூக்கி.
பிறகிடல்—பின்றல்.
பிறகு—பின்புறம்.
பிறக்கம்—அச்சம், மரக்கொம்பு.
பிறக்கிடல்—பின்றல்.
பிறக்கு—அசைச்சொல், (உ-ம். நகைசாரவந்தோர் நகைபிறக்கொழிய,) பின்புறம், வழு.
பிறங்கடை—மகன், வழித்தோன்றல்.
பிறங்கல் — உயர்ச்சி, ஒலித்தல், சிறுமலை, நிறைதல், பெருமை, மலை, மிகுதி, வியங்கோண்முற்று.
பிறங்கியல்—முதுகாடு.
பிறங்கு-பிறங்கென்னேவல், விரலிறை.
பிறத்தல்—பிறப்பு.
பிறந்தகம்—தாய்மனை.
பிறந்தவம்—பிறப்பு.
பிறந்தை—பவம், பாவம், வினைமுற்று.
பிறப்பிடம்—உறைவிடம்.
பிறப்பிலி—சிவன்.
பிறப்பிறப்பில்லான்—கடவுள், சிவன்.
பிறப்பு—அச்சம், உற்பத்தி, நெருக்கம்.
பிறவினை—காமம், பாவம், பிறவினை.
பிறழ்தல்—ஒளிசெய்தல், சொல்லுதல், நடுக்கம், வேறுப்பு, வேறாகப்போதல்.
பிறை—சந்திரப்பிறை.
பிறைசூடி—சிவன்.
பிற்கொழுங்கோல் — உத்திரட்டாதிநாள்.
பிற்றல்—பிறகிடல்.
பிற்றை—பின்னைநாள்.
பிஞகபாணி—சிவன்.

பிநாகம்—சிவன்வில், திரிசூலம், மணிமாலை, மண்மாரி.

பிநாகி — ஒருருத்திரன், சிவன், பெண்ணையாறு.

பின் — ஏழனுருபு, (உ-ம். காதலிபின் சென்றதம்ம,) கடை, காரணம், பெருமை, வழி.

பின்பனி—மாசிபங்குனியின்பருவம்.

பின்பிறந்தாள்—தங்கை.

பின்பு—பின்.

பின்றல்—பிறகிடல்.

பின்றை—பின்னைநாள்.

பின்றோன்றல்—தம்பி.

பின்னகம்—மயிர்முடி.

பின்னம் — பராகம், பிணக்கு, வேற்றுமை.

பின்னர்—பிறகு.

பின்னல்—சடை, வியங்கோண்முற்று.

பின்னவர்—சூத்திரர்.

பின்னவன்—தம்பி.

பின்னிடல்—தோல்வி.

பின்னிளவல்—தம்பி.

பின்னை—இலக்குமி, இளையவள், இளையவன், பின்பு.

பின்னைகேள்வன்—திருமால்.

பின்னோன்—தம்பி.

பீ

பீசம்—ஆண்குறி, தாமரைப்பூச்சுருள், விதை.

பீடம்—ஆசனம், சிங்காதனம்.

பீடரம்—கோயில்.

பீடனம்—பீடித்தல்.

பீடிகை—அணிகலச்செப்பு, கடைவீதி, பீடம், பூந்தட்டு, முனிவரிருக்கும்பீடம்.

பீடு—பெருமை, வலி.

பீடை—துன்பம்.

பீட்டை—பயிரிளங்கதிர்.

பீதகம்—சாந்து, பொன், பொன்னிறம், வெட்டிவேர்.

பீதகன்—வியாழம்.

பீதகாரம்—வேங்கைமரம்.

பீதம் — நால்வகைச்சாந்து, பொன், பொன்னிறம், மஞ்சள்.

பீதன்—அச்சமுள்ளோன்.

பீதாம்பரன்—திருமால்.

பீதி—அச்சம்.

பீதை—பொன்னிறப்பூவுளமருதோன்றிமரம்

பீரம்—பீர்க்கு, பூவரசு, வாகைமரம்.

பீரு—அச்சமுள்ளோன். புருவம்.

பீருகன்—அச்சமுள்ளோன்.

பீர்—அச்சம்,பசலை,பீர்க்கு,முலைப்பால்

பீலி—ஆலவட்டம், சிறுசின்னம், பெருஞ்சவளம், பொன், மதில், மயில், மயிற்றோகை, மாதர்காலணியிலொன்று, வாச்சியம், விசிறி.

பீலித்தண்டு—எறியாயுதம்.

பீலுகன்—அச்சமுள்ளோன்.

பீழை—துன்பம்.

பீள்—கருப்பம், பயிரிளங்கதிர்.

பீறல்—கிழித்தல், வியங்கோண்முற்று.

பீனம்—பருமை, பாசி.

பு

புகர் — கபிலநிறம், குற்றம், சுக்கிரன், நிறம்.

புகர்முகம்—யானை.

புகர்வு—சோறு.

புகலல் — சொல்லல், வியங்கோண்முற்று.

புகலிடம்—ஊர், தஞ்சம்,

புகல் — உடல், குதிர், சொல், தஞ்சம், புகலென்னேவல், வியங்கோண்முற்று, வெற்றி.

புகழ்—கீர்த்தி, புகழென்னேவல்,

புகழ்ச்சி—துதி.

புகழ்தல்—துதித்தல்.

புகறல்—குறித்தல், சொல்லல்.

புகார்—கழிமுகம், காவிரிப்பூம்பட்டினம், வினைமுற்று.

புகுடி—கழி, புருவம், வாயில்.

புகுதி—நுழைவாயில், வினைமுற்று.

புகுத்தல்—புகவிடல்.

புகை—தூமம், தென்கீழ்த்திசைப்பாலன்குறி, புகையென்னேவல்,யோசனைதூரம்.

புகைதல்—சினக்குறிப்பு,புகையெழல்.

புகைத்தல்—புகையச்செய்தல், சினக்குறிப்பு.

புக்கல்—புகுதல்.

புக்கி—பிராய்மரம்.

புக்கில்—உடல், வீடு.

புங்கம்—அம்பு, அம்புக்குதை, உயர்ச்சி, சீலை.

புங்கவர்—கடவுளர், வானோர்.

புங்கவன்—கடவுள், குரு, புத்தன்.

புசித்தல்—உண்டல்.

புச்சம்—தேள், வால்.

புஞ்சம்—திரட்சி.

புஞ்சவனம்—கருக்கொண்டமூன்றாந்திங்களிற்செய்கருமம்.

புடம்—இடம், புடம், புறம்.

புடவி—பூமி.

புடை—இடம், பக்கம், புடையென்னேவல்.

புடைத்தல்—அடித்தல், குட்டுதல், குத்தல், பறவைச்சிறகடித்தல், புடைத்தல், வீங்குதல்.

புடைவை—சீலை.

புட்கரம்—ஆகாயம், ஓர்தீவு, குருகு,தாமரைப்பூ, தீர்த்தம், நீர், யானைத்துதிக்கைநுனி, வாள்.

புட்கரிணி—தாமரைக்குளம், நாற்சதுரவாவி.

புட்கலம்—நிறைதல்.

புட்கலைமணாளன்—ஐயனார்.

புட்டகம்—சீலை.

புட்டம்—காக்கை, சீலை, நிறைவு.

புட்டில்—இறைகூடை, கூடை.

புட்பகம்—இரத்தினகங்கணம், குபேரவிமானம்.

புட்பகவிமானன்—குபேரன்.

புட்பகேது—மன்மதன்.

புட்பதந்தம்—வடமேற்றிசையானை.

புட்பம்—பூ.

புட்பலாவகன் – பார்ப்பனப்பெண்ணுக்குஞ்சாலியனுக்கும்பிறந்து பூக்கொய்து மாலைவிற்போன்.

புணரி—கடல், கடற்றிரை.

புணர்—புணரென்னேவல், புதுமை.

புணர்ச்சி—இசைப்பு, கலத்தல்.

புணர்தல்—கலத்தல், சார்தல்.

புணர்ப்பு—உடல், கூடல்.

புணர்வு—இசைப்பு, உடல், கலத்தல்.

புணை—தெப்பம், புணையென்னேவல், மரக்கலம், மூங்கில், விலங்கு.

புதன்—ஓர்கிரகம், தேவன், புலவன்.

புண்—ஊன், விரணம்.

புண்டரம்—ஓரிரோகை, கழுகு, நெற்றிக்குறி, வெண்கரும்பு.

புண்டரீகக்கண்ணன்—திருமால்.

புண்டரீகம்—கழுகு, தாமரை, தென்கீழ்த்திசையானை, புலி, வண்டு, வெண்கொற்றக்குடை, வெண்டாமரை.

புண்ணியமுதல்வன்—புத்தன்.

புண்ணியமூர்த்தி—புத்தன்.

புண்ணியம்-அறம், தூய்மை, நல்வினை.

புண்ணியன்—அரன், அருகன்.

புண்ணீர்—இரத்தம்.

புதர்—புதர், புலவர்.

புதல்—புருவம், புல், பூடு.

புதல்வன்—மகன்.

புதல்வி—மகள்.

புதவு—ஓர்வகைப்புல், கதவு, கோபுரவாயிலிற்கதவுவிட்டுப்புகும்வழி.

புதன்—ஒருகிரகம், தேவன், புலவன்.

புதா—கொக்கு.

புதியர்—விருந்தினர்.

புதுக்கல்—புதுப்பித்தல், வியங்கோண்முற்று.

புதுமை—நூதனம், மிகுதி.

புதுவை—புதுச்சேரி.

புதை—அம்பின்கட்டு, அம்பு, உடல், புதுமை, புதையென்னேவல், மறைவு.

புதைத்தல்—சேமித்தல்.

புதையல்—நிட்சேபம், புதைத்தல், வியங்கோண்முற்று.

புத்தகம் — எழுதுபுத்தகம், சித்திரப்படாம்.

புத்தர்—பௌத்தர்.

புத்தன் — திருமாலவதாரத்தொன்று, புத்தன்.

புத்தி—அறிவு.

புத்திரன்—மகன்.

புத்திரி—மகள்.

புத்தேணுடு—தெய்வலோகம்.

புத்தேளிர்—தெய்வம், வானோர்.

புத்தேள்—தெய்வம், புதுமை.

புநர்தம்—புநர்பூசநாள்.

புநிதன்—அரன், அருகன், இந்திரன்.

புந்தி—அறிவு, புதன்.

புந்தியர்—புலவர்.

புமான்—ஆண்மகன்.

புயகடி—பாம்பு.

புயகம்—பாம்பு.

புயங்கம்—பாம்பு.

புயம்—தோள்.

புயல்—சுக்கிரன், மேகம்.

புய்த்தல்—பயத்தல், பறித்தல்.

புரசு—ஓர்மரம்.

புரட்டல்—புரளச்செய்தல், வியங்கோண்முற்று.

புரட்டாதி—ஓர்மாதம், பூரட்டாதி.

புரட்டை—பூரட்டாதி.

புரணி—ஊன், தோல்.

புரத்தல்—காத்தல், கொடுத்தல், நிலைபெறுதல்.

புரந்தரன்—இந்திரன்.

புரமூன்றெரித்தோன்—சிவன்.

புரம்—இராசதானி, உடல், ஊர், நகரம், மருதநிலத்தூர், முன்.

புரவலன் —அரசன், காத்தளிப்போன், கொடையாளன்.

புரவி—அச்சுவினிநாள், குதிரை.

புரவிவட்டம்—குதிரைவையாளிவீதி.

புரவு—கொடை.

புரளல-புரளுதல், வியங்கோண்முற்று.
புராடம்—நகருட்சஞ்சாரம்.
புராணம் — கதை, காந்தமுதலியபுராணம், பழமை.
புராதனம்—பழமை.
புராரி—சிவன்.
புரி—ஆசை, இராசதானி, ஊர், கட்டு, கயிறு, கோட்டை, சங்கு, சுருள், புரியென்னேவல், மருதநிலத்தூர்.
புரிசை—மதில்.
புரிதல்—செய்தல், விரும்பல்.
புரிந்தோர்—சிநேகிதர்.
புரிமுகம்—கோபுரம்.
புரியம்—கூத்து.
புரிவு—அன்பு, ஆசை.
புரீடம்—மலம்.
புருகுற்சன்—ஓர்சக்கரவர்த்தி.
புருகூதன—இந்திரன்.
புருடநாள்—இரேவதிநாள்.
புருடர்—ஆடவர்.
புருடவாகனன்—குபேரன்.
புருடன்—ஆன்மா, தலைவன், மக்களிலாண்.
புருடோத்தமன்—திருமால்.
புருவம்—குதிரை, புருவம்.
புருவை—ஆடு, இளமை.
புரூரம்—புருவம்.
புரூரவன்—ஓர்சக்கரவர்த்தி.
புரை—உட்டுளை, உயர்ச்சி, உவமை, குற்றம், புரையென்னேவல்.
புரைதல்—போலுதல்.
புரைய — உவமைச்சொல், வினையெச்சம்.
புரையுள்—வீடு.
புரையோர்—திருடர்.
புரோகதி—நாய், முன்னடப்பது.
புரோகிதன்—இந்திரன், வருங்காரியஞ்சொல்வோன்.
புரோசு—குறுநிலவேந்தர்.
புரோசை—யானைகட்டுங்கயிறு.
புலத்தல் - புணர்ச்சிக்கமையாததுபோலமுறைபடல்.
புலத்தியன்—ஓரிருடி.
புலத்தியன்மைந்தன்—வியாசன்.
புலமையர்—புலவர்.
புலம்—அறிவு, இடம், ஒலிமுதலைம்புலம், திசை, வயல்.
புலம்பல்—ஆரவாரம், இரங்கல், ஒலித்தல், வியங்கோண்முற்று.
புலம்பன்—நெய்தனிலத்தலைவன்.
புலம்பு — அச்சம், ஒலி, கலக்கம், தனிமை, துன்பம், புலம்பென்னேவல்.
புலரி—விடியல்.
புலர்தல்—வாடல்.
புலர்த்தல்—பூசுதல், வாட்டல்.
புலவர்—அறிஞர், தேவர்.
புலவன்—அருகன், அறிஞன், கம்மாளன், கூத்தன், தேவேந்திரன், பாடுவோன், புதன், புலவன், முருகன், வானோன்.
புலவி—ஊடலின்முதிர்தல்.
புலவு—ஊன், நரகம்.
புலன்—புலம்.
புலன்வென்றோர்—முனிவர்.
புலால்—ஊன்.
புலானீர்—இரத்தம்.
புலி—சிங்கவிராசி, நால்வகைச்சாந்து, புலி.
புலிக்கொடியோன்—சோழன்.

புலிங்கம்—ஊர்க்குருவி, தீப்பொறி.
புலிதொடக்கி—இண்டு.
புலித்தோலுடையோன்—சிவன்.
புலிந்தம்—புளிந்தம்.
புலுதம்-அளபெடை, குதிரைமுழுவோட்டம்.
புலை—புலால், விடக்கு.
புலைஞர்—சண்டாளர்.
புலைமகன்—புலையன்.
புலைமை—புலைத்தன்மை.
புலோமசை—இந்திராணி.
புலோமன்—இந்திராணிதகப்பன், ஓரசுரன்.
புல்—அனுடநாள், பனைமரம், புலி, புல், புல்லென்னேவல், புன்மை.
புல்கல் — புணர்தல், வியங்கோண்முற்று.
புல்லகண்டம்—சருக்கரை.
புல்லகம்—நுதலணி.
புல்லம்—இடபவிராசி, எருது.
புல்லர்—கீழ்மக்கள், வேடர்.
புல்லல்—அமைதல், கூடுதல், சார்தல், புணர்தல், வியங்கோண்முற்று.
புல்லார்—பகைவர், வினைமுற்று.
புல்லி—புறவிதழ், வினையெச்சம்.
புல்லியர்—கீழ்மக்கள்
புல்லுநர்—சிநேகிதர்.
புல்லெனல்—ஒளிமழுங்கல், பொலிவழிதல்.
புல்வாய்—கலைமான், வினைமுற்று.
புவலோகம்—மேலேழுலகிலொன்று.
புவனம்—உலகப்பொது, நீர், பூமி.
புவனி—பூமி.
புவி—பூமி.
புழக்கம்—பழகல்.
புழல்—ஓரூர், சலதாரை, துளையுடைப்பொருள்.
புழு—கிரிமி, புழுவென்னேவல்.
புழுக்கம்—வெம்மை.
புழுக்கல்-சோறு, வியங்கோண்முற்று.
புழுங்கல்—சினக்குறிப்பு, புழுக்குவது, வியங்கோண்முற்று.
புழுத்தல்—புழுக்கத்தினுண்டாதல்.
புழுதி—பராகம், புழுதி.
புழுது—அம்புக்குதை.
புழை—உட்டுளை, கதவுவிட்டெப்புகுவழி, துளையுடைப்பொருள்.
புழைக்கை—யானை.
புளகம்—கண்ணாடி, சோறு, புடைப்பு, மயிர்சிலிர்த்தல்.
புளகித்தல்—மயிர்சிலிர்த்தல்.
புளவை—விரணம்.
புளி — ஓர்சுவை, புளியமரம், புளியென்னேவல்.
புளிங்கறி—புளிப்புள்ளகறி.
புளிஞர்—வேடர்.
புளிதம்—ஊன்.
புளித்தல்—நெருங்கல், புளிப்பு,
புளிந்தம்—ஓர்தேயம்.
புளிந்தன்—வேடன்.
புளிப்பு—ஓர்சுவை.
புளிமா—புளிப்புள்ளமாமரம்.
புளினம்-மணற்குன்று, மணற்றிட்டை.
புளினர்—வேடர்.
புள்—அவிட்டநாள், பறவைப்பொது, வண்டு.
புள்ளம்—கொடுவாள்.
புள்ளரசு—கருடன்.

புள்ளி—இலக்கப்புள்ளி, ஒற்றெழுத்து, நண்டு, பல்லி, பொறி, மதிப்பு.

புள்ளீட்டம்—பறவைக்கூட்டம்.

புள்ளுவம்—வஞ்சம்.

புள்ளுவர்—கீழ்மக்கள், பாலைநிலமாக்கள்.

புள்ளொலி—பறவைக்கூட்டம்.

புறக்காழ்—புறவயிரம்.

புறங்காடு—சுடுகாடு.

புறங்காழ்—புறவயிரம்.

புறங்கூறல்—தூற்றல், வியங்கோண்முற்று.

புறணி—புறம்.

புறத்தவன்—ஐயனார்.

புறத்திணை—ஒழுக்கம்.

புறநீர்மை—ஓர்பண்.

புறந்தரல் — ஓம்பல், தோல்வி, வியங்கோணமுற்று.

புறம்—ஏழனுருபு, (உ-ம். செல்லுமெஸ்னுயிர்ப்புறத்திறுத்தமருண்மாலை,)பக்கம், பின்புறம், மதில், முதுகு, வீரம்.

புறம்பணை-குறிஞ்சிநிலம்,முல்லைநிலம்.

புறவணி—குறிஞ்சிநிலம்,முல்லைநிலம்.

புறவம்—காடு, குறிஞ்சிநிலம், புறா, முல்லைநிலம்.

புறவு-குறிஞ்சிநிலம்,முல்லைநிலம்,புறா.

புறவுரை—பாயிரம்.

புறன்—புறம், முதுகு.

புற்கசன்—சண்டாளன்.

புற்கலம்—உடல்.

புற்கலன்—உயிர்.

புற்கு—கபிலநிறம்.

புற்கை—கூழ்.

புற்பதி—பனைமரம்.

புற்புதம்—நீர்க்குமிழி.

புற்றளி—அனுடநாள், பனைமரம்.

புற்று—புற்று.

புனம்—கொல்லை.

புனருத்தி—கூறியதுகூறல்.

புனர்ப்பவம்—நகம், மீண்டுபிறத்தல்.

புனல்—ஆறு, நீர்.

புனல்வேந்தன்—வருணன்.

புனவர்—குறிஞ்சிநிலமாக்கள்.

புனனாடன்—சோழன்.

புனிறு — ஈன்றணிமை, சூதகம், தோல், புதுமை.

புனிதம—சுத்தம், புநர்பூசம்.

புனிதன்—அரன், அருகன், இந்திரன், தூயவன், புத்தன்.

புனை — கால்விலங்கு, சீலை, புதுமை, புனையென்னேவல்.

புனைதல்—அணிதல், அலங்கரித்தல்.

புனைந்துரை — சிறிதினைப்பெருக்கிப் பெரிதினைச்சுருக்கிக்கூறல், பாயிரம்.

புனைவர்—கம்மாளர்.

புன்கண்—துன்பம், நோய், மெலிவு.

புன்கம்—சோறு.

புன்காலி—காயாமரம், பாதிரிமரம்.

புன்கு—புனமுருங்கை, புன்கமரம்.

புன்மை—ஈனம், மறதி.

புன்னாகம்—புன்னைமரம்.

புன்னாகவராளி—ஓரிராகம்.

புன்னை—ஓர்மரம்.

பூ

பூ—அழகு, இலை, ஓரெழுத்து, கூர்மை, பிறப்பு, பூ, பூமி, பூவென்னேவல், பொலிவு.

பூக்தர்—புகழ்வோர்.
பூகம்—கமுகு, கூந்தற்பனை, திரட்சி.
பூக்கம்—ஊர், கமுகு, மருதநிலத்தூர்.
பூசம்—ஓர் நாள்.
பூசல்—பூசுதல், பெரிதொலித்தல்,பொருதல், வியங்கோண்முற்று.
பூசனை—ஆராதனை.
பூசித்தல்—பூசனை.
பூசுதல்—அலங்கரித்தல், சந்தனமுதலியபூசல்.
பூசுரர்—அந்தணர்.
பூசை—ஆராதனை, பூனை.
பூஞை—பூனை.
பூடணம்—ஆபரணம்.
பூடு—பூண்டு.
பூட்கை—மேற்கோள், யாளி, யானை.
பூட்சி—உடல், பூணல்.
பூட்டல் — பூட்டுதல், வியங்கோண்முற்று.
பூட்டு — நாணி, பூட்டும்பூட்டு, பூட்டென்னேவல்.
பூட்டை — ஏற்றமரம், காராம்பி, செக்கு.
பூணல்-அணிதல், வியங்கோண்முற்று.
பூணி—எருது, இடபவிராசி.
பூணை—முல்லைநிலம்.
பூண்—ஆபரணம், பூணென்னேவல்.
பூண்டி—ஊர், வினைமுற்று.
பூண்டு—பூடு.
பூததாத்திரி—பூமி.
பூதநாதன்—சிவன்.
பூதம்—இறந்தகாலம், உயிர், ஐம்பூதம், தூய்து, பரணிநாள், பேய்.
பூதரம்—பொன்மலை, மலை.
பூதலம்—பூமி.
பூதவம்—ஆலமரம், மருதமரம்.
பூதாரம்—பன்றி
பூதாரன்—அரசன்.
பூதி — கொடுமை, சாம்பல், செல்வம், துர்க்கந்தம், நரகம், புலால், புழுதி, விபூதி.
பூதியம்—உடல், பூமி.
பூதை—அம்பு.
பூத்தல்—உண்டாதல், பயத்தல், மலர்தல்.
பூநாகம்—நாகப்பூச்சி.
பூநீர்—பனிநீர்.
பூந்துணர்—பூங்கொத்து.
பூந்தை—ஓரூர், பூதன்றந்தை.
பூந்தோட்டம்—நந்தனவனம்.
பூபதி—அரசன், ஒருகுளிகை.
பூபன்—அரசன்.
பூபாலர்—பூவைசியர்.
பூபாலன்—அரசன், வேளாளன்.
பூபாளம்—ஓரிசை.
பூப்பகம்—பெண்குறி.
பூப்பு—மகளிர்சூதகம்.
பூமகள்—இலக்குமி, பூமிதேவி.
பூமன்—செவ்வாய்.
பூமி—பூவுலகு.
பூமிகொழுநன்—திருமால்.
பூமிசன்—அங்காரகன், நரகாசுரன்.
பூமிசைநடந்தோன் — அருகன், புத்தன்.
பூமின்—இலக்குமி, பூமிதேவி
பூரகம்—மூச்சுள்ளேவாங்கல்.
பூரணம்—எல்லாம், நிறைவு, பெருகுதல்.

பூரணன்—அரன், அருகன், கடவுள்.
பூரணி—இலவமரம்.
பூரணை—சந்திரனைந்தாம்பக்கம், சாத்தாவின்றேவி.
பூரணைகேள்வன்—ஐயனார்.
பூரம்—ஓர்நாள், ஓர்மருந்து, பூதம்.
பூரவாகினி—சரச்சுவதி.
பூரி—ஓரிசை, ஓரெண், கலப்புநெல்,நாணி, பூரியென்னேவல்,பொன்,மிகுதி.
பூரிகம்—அப்பவர்க்கம்.
பூரிகலியாணி—ஓரிராகம்.
பூரிகை — அப்பவர்க்கம், ஊதிடும்பூரிகை.
பூரிதம்—நிரம்பப்பட்டது.
பூரித்தல்—உவத்தல், நிறைத்தல்.
பூரிப்பு—மிகுகளிப்பு, மிகுதி.
பூரிமாயு—ஆணரி, பழமை.
பூரியம்—அரசிருக்கை, ஊர், மருதநிலத்தூர், வேந்தர்வீதி.
பூரியர்—கீழ்மக்கள்.
பூரு—புருவம்.
பூருகம்—மரம்.
பூருண்டி—மல்லிகை.
பூருவம்—ஆதி, கிழக்கு, சந்திரன்முன்பக்கம், பழமை, முன்பு.
பூருவகவுளம்—ஓரிசை.
பூர்த்தி—நிறைவு.
பூலத்தி—மருதமரம்.
பூல்—ஓர்செடி.
பூவணம்—ஓர்சிவதலம்.
பூவம்பன்—மன்மதன்.
பூவரசு—ஓர்மரம்.
பூவலயம்—பூமி.
பூவல்—சிவப்பு, திரவு.
பூவாளி—மன்மதன்.
பூவை—காயாமரம்,நாகணவாய்ப்புள், பெண்.
பூவைசியர்—உழவர், வேளாளர்.
பூழான்—கவுதாரி, கானங்கோழி.
பூழி—குழைசேறு, சேற்றிலெழுங்குழி, பராகம், புழுதி.
பூழியன்—சேரன்.
பூழில்—அகில்.
பூழை — கோபுரவாயிற்கதவிலிட்டுப்புகும்வழி.
பூழ்தி—பராகம், புலால், புழுதி.
பூளை—இலவம்பஞ்சு, ஓர்செடி.
பூனை—பூஞை.

பெ

பெங்கு—கள்ளிலோர்பேதம்.
பெடம்—மிகுதி.
பெடை—பறவைப்பெண்.
பெட்டகம்—பெட்டி.
பெட்டல்—ஆசைப்பெருக்கம், விரும்பல்.
பெட்டார்—சிநேகிதர்.
பெட்டி—பேழை.
பெட்டு—பொய்.
பெட்டை—ஒட்டகம்,கழுதை, குதிரை, சிங்கம், மனாயிவற்றின்பெண், பறவைப்பெண்.
பெட்பு—ஆசை.
பெண்-பெண்,விலங்கின்பெண்பொது.
பெண்டர்—அலியர்.
பெண்டகர்—அலியர்.
பெண்டு—பெண்மகள்.
பெண்ணை—அநுடநாள், ஓராறு, பனைமரம்.

பெண்மரம்—புறவயிரமுள்ளமரம்.
பெண்மை — பெண்டன்மை, மாட்சிமை.
பெதும்பை—பதினொருவயதுப்பெண், பெண்பொது.
பெம்மான்—பெருமான்.
பெயர்—நாமம், பெயரென்னேவல், பெருமை.
பெயர்தல்—ஆடல், உரிஞ்சல், போகல், வேறுபடல்.
பெயர்த்தல்—வேறுபடுத்தல்.
பெயர்வு—பெயர்தல்.
பெயலை—மழை.
பெயல் — மழை, மழைத்துளி, வியங்கோண்முற்று.
பெய்தல் — செறித்தல், போடுதல், மழைபொழிதல், விடுதல்.
பெய்துளை—பாயிரம்.
பெரிது—பெரியது.
பெருகல்—நிறைதல், மிகுதல், வியங்கோண்முற்று.
பெருகு—தயிர், பெருகென்னேவல்.
பெருகுதல்—நிறைதல்.
பெருக்கம்—செல்வம், பெருகுதல், மிகுதி.
பெருக்கல் — துடைப்பத்தாற்பெருக்கல், நிறைத்தல், மிகப், வியங்கோண்முற்று.
பெருக்கு—பெருக்கென்னேவல், வெள்ளம்.
பெருங்கிராமம்—அஞ்ஞூறுகுடியூர்.
பெருங்கிழமை—முழுதமுரிமை.
பெருங்குருகு—சக்கரவாகப்புள்.
பெருங்கோடணை—முரசு.
பெருச்சாளி—பெருச்சாளி.
பெருஞ்சொல்—பலரறிசொல்.
பெருநாள்—இரேவதிநாள்.
பெருநீர்—கடல்.
பெருந்தகை—அரசன்.
பெருந்தன்மை—மானம்.
பெருந்திணை—வழுவுடைக்காமம்.
பெருமகன்—அரசன், சிறந்தோன்.
பெருமலை—பொன்மலை.
பெருமா—யானை.
பெருமாட்டி—தலைவி.
பெருமான்—அரசன், குரு, சிவன், சிறந்தோன், மூத்தோன், விட்டுணு.
பெருமிதம்—களிப்பு, மிகுதி.
பெருமீன்—யானைமீன்.
பெருமை-பொலிவு,மாட்சிமை,மிகுதி.
பெரும்பதி—மருங்கிலூர்சூழ்பதி.
பெரும்பறவை—எண்காற்புள்.
பெரும்புள்—கூகை.
பெரும்பூண்—பெரும்பதக்கம்.
பெரும்பூழை—கதவிலிடும்வாயில்.
பெறல்—அடைதல், கிடைத்தல், வியங்கோண்முற்று.
பெறுவதுகொள்வோர்—கூத்தியர்.
பெற்றம்—இடபவிராசி, எருது, பசுச்சாதிப்பொது, வினைமுற்று.
பெற்றோர்—தந்தைதாயர்.
பெற்றி—குணம்.
பெற்றிடல்—பெறுதல்.

பே

பே—ஓரெழுத்து, நுரை.
பேகம்—தவளை.
பேகன் — கடையெழுவள்ளலிலொருவன்.

பேகி—தவளைப்பெண்.

பேசல் — சொல்லல், வியங்கோண்மு ற்று.

பேச்சு—சொல், சொல்லல்.

பேடர்—அலியர்.

பேடாடல்—காமனுடல்.

பேடியர்—அலியர்.

பேடு—அலி, ஊர், மன்மதன்கூத்து.

பேடை—பறவைப்பெண்.

பேட்டை—நகரத்தருகுஞ்சந்தைகூட லுமாகியவூர்.

பேணல்—ஆசைப்பெருக்கம், ஓம்பல், கருத்து, குறித்தல், வியங்கோண்முற் று, விரும்பல்.

பேதம்—வேற்றுமை.

பேதி—இரதம், பேதம், பேதியென்னே வல்.

பேது—உன்மத்தம்.

பேதை — அறிவில்லான், ஏழுவயதுப் பெண், கள், தரித்திரன், பெண், பேடி.

பேதைமை—அறிவின்மை.

பேதையர்—கீழ்மக்கள், தரித்திரர், பா லைநிலமகளிர்.

பேம்—அச்சம்.

பேயோடாடி—சிவன்.

பேய்—பிசாசம்.

பேய்த்தேர்—கானல்.

பேரணிகலம்—பெரும்பதக்கம்.

பேரறிவு—முதறிவு.

பேரன்—பெயரன்.

பேராண்மை—அரியசெயல்.

பேராந்தை—நிலாமுகிப்புள்.

பேராளன்—மிருகசீரிடநாள்.

பேரி—பறைப்பொது, முரசு.

பேரிகை—ஓர்வாச்சியம்.

பேரிளம்பெண் — நாற்பதுவயதுப் பெண்.

பேரின்பம்—ஆனந்தம்.

பேர்தல்—அகலல், பெயர்தல்.

பேர்த்தல்—பெயர்த்தல்.

பேர்த்தி—பெயர்த்தி, வினைமுற்று.

பேழை—பெட்டி.

பேழ்—பெருமை.

பேழ்வாய்—பெருவாய்.

பேறு—இலாபம்.

பேனம்—நுரை.

பை

பை—அழகு, ஒழுத்து, நிறம், பச்சை, பாம்பின்படம், பை, பையென்னேவ ல், மந்தம்.

பைங்கூழ்—நோய், பயிர்.

பைசாசம்—பிசாசம்.

பைஞ்ஞிலம்—மக்கட்பரப்பு.

பைஞ்ஞீலி—ஓரூர்.

பைதல்—துன்பம், பையல்.

பைதிரம்—நாடு.

பைத்தல்—கோபம், சினக்குறிப்பு, ப சுத்தல், பாம்புப்படம்விரித்தல்.

பைத்தியம்—ஓர்நோய்.

பைத்து—பச்சை.

பைமை—தவப்பெண், பச்சை.

பைம்பொன்—பொன், மேருகிரி.

பையுள்—சிறுமை, துன்பம், நோய்.

பையெனல்—மந்தக்குறிப்பு.

பைரவம்—அச்சம், பயங்கரம்.

பைரவன்—க்ஷேத்திரபாலன்.

பைரவி—ஓரிசை, காளி.

பொ

பொருட்டு—சேற்றிலெழுங்குமிழி,தாமரைக்கொட்டை, மலை.
பொக்கம்—பொய், பொலிவு, மிகுதி.
பொக்கு—குற்றம்.
பொங்கடி—யானை.
பொங்கர்—இலவமரம், மரக்கொம்பு, மலை.
பொங்கல்—உயர்ச்சி, பொலிதல், மிகுதி, வியங்கோண்முற்று.
பொங்கழி—தூற்றுநெல்.
பொசிதல்—நீரரும்பல்.
பொச்சாப்பு—மறதி.
பொச்சை — கரிகாடு, காடு, சிறுமலை, மலை.
பொடி—பராகம், புழுதி, பொடியென்னேவல்.
பொடிதல்—கெடுதல்.
பொடித்தல்—கெடுத்தல், புழுதியாக்கல், முளைத்தல்.
பொட்டு—ஓர்புழு, தாலிப்பொட்டு, தானியப்பொட்டு, நெற்றித்திலகம்.
பொதி—அம்பலம், ஓலைக்குடை, கரிகாடு, பொதி, பொதியென்னேவல்.
பொதிசோறு—கட்டுச்சோறு.
பொதிதல்—மூடுதல்.
பொதிப்போதா—பெருநாரை.
பொதியம்—தென்மலை.
பொதியவெற்பன்—பாண்டியன்.
பொதியில்—பொதியமலை.
பொதிர்தல்—மிகுதல்.
பொதிர்ப்பு—அச்சம், நடுக்கம்.
பொது—சாதாரணம்.
பொதுக்கல்—களைத்தல்.
பொதுமகள்—வேசி.
பொதுமை—பொதுத்தன்மை.
பொதும்பர்—மரச்செறிவு, மரப்பொந்து.
பொதுவர்—இடையர்.
பொதுவியர்—இடைச்சியர்.
பொதுவில்—அம்பலம்.
பொதுளல் — தழைத்தல், நெருங்கல், வியங்கோண்முற்று.
பொந்து—மரப்பொந்து.
பொம்மல்—சோறு, பொலிவு, மிகுதி.
பொம்மெனல்— அனுகரணவோசை.
பொய்—பொய், பொய்யென்னேவல், மரப்பொந்து.
பொய்கை—குளம், கோட்டான்.
பொய்தல் — தோழி, மகளிர்கூட்டம், மகளிர்விளையாட்டு.
பொய்த்தல்—பொய்சொல்லல்.
பொய்யன்—பொய்சொல்லுவோன்.
பொரி — கரிக்காடு, பொரி, பொரியென்னேவல்.
பொரிதல்—பொரியாதல்,
பொரித்தல் — பொரிக்கறி, பொரியச்செய்தல்.
பொரியல்—பொரிக்கறி, பொரிதல், வியங்கோண்முற்று.
பொருகளம்—போர்க்களம்.
பொருகு—சோறு.
பொருக்கு—சீக்கிரத்தின்குறிப்பு,பொருக்குமண்.
பொருக்கெனல்—சீக்கிரக்குறிப்பு, சீக்கிரம்.
பொருட்செல்வி—இலக்குமி.
பொருட்டு—காரணம்.
பொருட்பெண்டிர்—வேசிகள்.

பொருணி—கள்.

பொருதல்—ஒப்புசுல், போர்செய்தல், வியங்கோண்முற்று.

பொருத்தம் — பொருந்தல்.

பொருத்தல்—பொருத்துதல்,மூட்டல், வியங்கோண்முற்று.

பொருத்து—சந்து, பொருத்தென்னேவல்.

பொருத்துதல் — அமைத்தல், மூட்டுதல்.

பொருநர்—படைவீரர்.

பொருநன்—அரசன், குறிஞ்சிநிலத்தலைவன், திண்ணியன், நாடகன்,படைத்தலைவன், படைவீரன்.

பொருநை—ஓராறு.

பொருநைத்துறைவன்—சேரன்.

பொருந்தம — பொருநையாறு.

பொருந்தர்—வேடகாரர்.

பொருந்தலர்—பகைவர்.

பொருந்தல்—அடுத்தல், அமைதல்,சலத்தல், வியங்கோண்முற்று.

பொருந்தாமை—வெறுப்பு.

பொருபுவி—பாலைநிலம்

பொருப்பன்—குறிஞ்சிநிலத்தலைவன்.

பொருப்பு—கொல்லிமலை, மலை.

பொருமல்—அழுதல், வியங்கோண்முற்று.

பொருவ — உவமைச்சொல், வினையெச்சம்.

பொருவு—உவமை, பொருவென்னேவல்.

பொருவுதல்—உவமை, ஒப்பல்.

பொருள் — சொற்பொருள், தலைமை, பணம், பலபண்டம், பிள்ளை, பொன் வாய்மை.

பொலங்கலம்—ஆபரணம்.

பொலம்—அழகு, பொன்.

பொலன்—பொலிவு, பொன்மைநிறம்.

பொலி—தூற்றுநெல்,பொலியென்னேவல்.

பொலிசை—இலாபம்.

பொலிதல்—எழுச்சி, மிகுதி.

பொலிவு—பொலிதல்.

பொலலம்—தைத்தல்.

பொல்லர்—சக்கிலியர், செம்மார், தையற்காரர்.

பொல்லாங்கு—ஈனம், மறதி.

பொல்லு—பசர்.

பொழிதல்—ஈதல், மழைபெய்தல்.

பொழிப்புத்திரட்டல்—பொழிப்புரையுரைத்தல்.

பொழிப்புரை — ஒவ்வொருசொற்பயனுமையாமற்செய்யுட்பொருளைத்தொகுத்துரைத்தல்.

பொழில்—உலகப்பொது, சோலை, நாடு, பூந்தோட்டம், பூமி, பெருமை.

பொழுது—காலம்.

பொழுதுபோக்கல்— பொழுதுகழித்துவிளையாடல்.

பொள்ளல்—அப்பவர்க்கம், பொளிதல், மரப்பொந்து, வியங்கோண்முற்று.

பொள்ளெனல்—அநுகரணவோசை, சீக்கிரக்குறிப்பு, சீக்கிரம்.

பொறி—அடையாளம், அறிவு, இலக்குமி, எழுத்து, ஐம்பொறி, செல்வம்,தேமல், தோணி, புள்ளி, பொலிவு, பொறியென்னேவல், மதிலுறுப்பு, முத்திரை, விரலிறை.

பொறித்தல்-எழுதல், சித்திரமெழுதல்.

பொறியிலார்—கீழ்மக்கள்.

பொறுக்கல் — பொறுக்குதல், வியங்கோண்முற்று.

பொறுத்தல்—சுமத்தல்.

பொறுப்பு—பொறுத்தல்.

பொறுமை—பொறை.

பொறை—சலதாரைமுதலியவடைக்குங்கல், சுமை, பாரம், பூமி, பொறுமை, மலை.

பொறையன்—சேரன், தருமராசன்.

பொறையிலார்—வேடர்.

பொற்பு—அழகு, ஒப்பனை, பொலிவு, மிகுதி.

பொற்புறுத்தல்—அலங்கரித்தல்.

பொற்றை—சிறுதூறு, சிறுமலை, மலை.

பொன்—அழகு, இலக்குமி, பஞ்சலோகப்பொது, பொலிவு, பொன், வியாழம்.

பொன்செய்கொல்லர்—தட்டார்.

பொன்வாய்ப்புள்—சிச்சிலிக்குருவி.

பொன்வினைமாக்கள்—தட்டார்.

பொன்றல்—சாதல், வியங்கோண்முற்று.

பொன்னகர்—தேவலோகம்.

பொன்னகர்க்கிறைவன்—இந்திரன்.

பொன்னவன்—இரணியன், வியாழம்.

பொன்னி—காவேரி.

பொன்னித்துறைவன்—சோழன்.

பொன்னுலகு—தேவலோகம்.

பொன்னெயிற்கோன்—அருகன்.

போ

போ—அசைநிலை, (உ-ம். எரியினன்னசெந்தலையன்றில் பிரியின்வாழாதென்போ,) ஓரெழுத்து, போவென்னேவல்.

போகடல்—போகவிடல்.

போகபூமி—தேவலோகம், விளைநிலம்.

போகம்—அநுபோகம், செல்வம், பாம்பினுடல், விளைவு.

போகல் — உயர்ச்சி, செல்லல், நீளம், வியங்கோண்முற்று.

போகி — இந்திரன், பாம்பு, போகியென்னேவல், வினையெச்சம்.

போகில் — கொப்பூழ், பறவை, பூவரும்பு.

போக்கல்—செலுத்தல், வியங்கோண்முற்று.

போக்கு—போகுதல், போக்கென்னேவல், வழி.

போசனம்—உணவு, புசித்தல்.

போசன்—ஓரரசன், செல்வன்.

போடகம்—ஓர்நோய்.

போடம்—ஓர்தேசம்.

போடல்—எறிதல், வியங்கோண்முற்று, வைத்தல்.

போதகம்—இளமை, சிங்கக்குட்டி, புலிக்குட்டி, மரக்கன்று, யானை, யானைக்கன்று.

போதம்—அறிவு, [illegible], [illegible]லம்.

போதரல்—கொடுபோதல், கொடுவரல், வியங்கோண்முற்று.

போதராவிடல்—உயிர்த்தல்.

போதல்—அகலம், நீளம், போகல், வரல், வியங்கோண்முற்று.

போதன்—அருகன், பிரமன்.

போதா—பெருநாரை.

போதி—அரசமரம், போதியென்னேவல், மலை, வினைமுற்று.

போதிகை—குறுந்தறி.

போதிவேந்தன்-புத்தன், மலையரசன்.
போது—காலம், பூ, பூமலரும்பருவத்தரும்பு, போதென்னேவல்.
போதை—முதறிவு.
போத்திரி—பன்றி.
போத்து—எருமை, காட்டுப்பசு, பசு, புலி, புல்வாய், பூனை, மயில், மரையிவற்றினாண், செம்போத்து, நீர்ச்சாதியினாண், மரக்கன்று, விலங்கின்படுக்கை.
போந்தின்றோன்—சேரன்.
போந்து—அனுடநாள், பனைமரம், வினையெச்சம்.
போந்தை—அனுடநாள், இளம்பனை, பனை, வினைமுற்று.
போம்—அசைச்சொல், அச்சம், பெயரெச்சம், வினைமுற்று.
போருடன்றல்—போர்.
போரேறு—செவ்வாய்.
போர்—சதையநாள், நெற்போர், பொருதல், போரென்னேவல்.
போர்த்தல்—மூடுதல்.
போர்ப்பு—போர்த்தல்.
போர்வை—தோல், மூடுதல்.
போல—உவமைச்சொல், வினையெச்சம்.
போலுல்-உவமை, வியங்கோண்முற்று.
போலி—ஒன்றுபோலொன்றிருத்தல்.
போலும்—இசைநிறையசைச்சொல். (உ—ம். வடிவென்றகண்ணைப்பொருந்தினைபோலும்,) பெயரெச்சம், வினைமுற்று.
போல்—உவமை, பதர், போலென்னேவல், மூங்கில்.
போழ்தல்—பிளத்தல்
போழ்து—காலம்.
போழ்முகம்—பன்றி.
போளி—அப்பவர்க்கம்.
போற்றல்—பாதுகாத்தல், புகழ்தல், வணங்கல், வியங்கோண்முற்று.
போற்றார்—பகைவர்.
போனகம்—சோறு.

பௌ

பௌஞ்சு—சேனை.
பௌடம்—தைமாதம்.
பௌடிகம்—அட்டாதசபுராணத்தொன்று, முதல்வேதம்.
பௌடியம்—அட்டாதசபுராணத்தொன்று.
பௌண்டிரம்—ஓர்தேயம்.
பௌத்தம்—புத்தமதம்.
பௌத்திரன்—பெயரன்.
பௌத்திரி—பெயர்த்தி.
பௌத்தர்—புத்தர்.
பௌமன்—செவ்வாய்.
பௌரிணை—பூரணை, மரக்கன்று.
பௌரவர்—குருகுலவேந்தர்.
பௌர்ணமி—பூரணை.
பௌவம்—கடல், நீர்க்குமிழி, [illegible], பூரணை.

ம

மக—இளமை, மகன்.
மகடு—பெண்.
மகதம்—ஓர்தேசம், பதினெண்பாடையிலொன்று.
மகமுறை—யாகக்கிரமம், விருந்[illegible]
மகம்—ஓர்நாள், யாகம்.

மகரகேதனன்—மன்மதன்.

மகரந்தம்—கள், தேன், பூந்தாது.

மகரம்—ஒருமீன், ஓரிராசி, ஒரு [illegible] மீன், பூ[illegible] குழை.

மகரயாழ்—நால்வகையாழிலொன்று.

மகராலயம்—கடல்.

மகரிகை—சிங்காதனம்.

மகவான்—இந்திரன்.

மகவு—குரங்கின்குட்டி, வாழ்விலங்கின்பிள்ளை, குழந்தை, மகன்.

மகள்—பெண்.

மகன்—ஆண்மகன், பிள்ளை.

மகாகர்வம்—பத்திலட்சங்கோடி.

மகாநிதி—கோடிகோடாகோடி.

மகாக்ஷோணி—இலட்சங்கோடாகோடி.

மகாசனை—வாடாப்பூவுளமருதோன்றிமரம்

மகாசங்கம்—ஆயிரங்கோடாகோடி.

மகாசேனன்—முருகன்.

மகாசோபம்—நூறுகோடிகோடாகோடி.

மகாநசம்—மடைப்பள்ளி.

மகாபதுமம்—பத்துக்கோடாகோடி.

மகாபதுமன்—அட்டநாகத்தொன்று.

மகாமேரு—பொன்மலை.

மகாயுகம்—நாலுயுகங்கூடினநாற்பத்துமூன்றிலட்சத்திருபதினாயிரம்வருடம்.

மகாரணியம்—பெருங்காடு.

மகாரதன்—பதினாயிரந்தேர்க்காரரோடொருதனியான்.

மகாராசன்—குபேரன், யானைகட்டிவாழ்பவன்.

மகாராட்டிரம்—ஓர்தேயம், ஓர்பாடை.

மகார்—குழவிப்பன்மை.

மகாலோகம்—மேலேழுலகிலொன்று.

மகி—பூமி.

மகிடம்—எருமை.

மகிடமர்த்தனி—காளி, துர்க்கை.

மகிமா—மகத்துவம்.

மகிமை—பெருமை.

மகிழ்—மகிழமரம், மகிழென்னேவல்.

மகிழ்ச்சி—இன்பம், களிப்பு.

மகிழ்தல்—களித்தல்.

மகிழ்நன்—புருடன், மருதநிலத்தலைவன்.

மகிழ்வு—இன்பம், களிப்பு.

மகீதரம்—மலை.

மகுடம்—முடி. முடியுறுப்பு.

மகுடாமகிரியம்—ஓர்பண்.

மகேசன்—சிவன்.

மகேசுவரன்—சிவன்.

மகேசுவரி—பார்வதி.

மகேந்திரசாலம்—வானிலற்புதங்காட்டும்வித்தை.

மகேந்திரம்—ஓர்மலை.

மகேந்திரன்—இந்திரன்.

மகோததி—கடல்.

மகோதரம்—ஓர்நோய்.

மகோதரன்—இராவணன்மந்திரி.

மக்கள்—மனிதர்.

மங்கலப்பாடகர்—கடிகைமாக்கள்.

மங்கலம்—தருமம், பொலிவு, விவாகம்.

மங்கலன்—செவ்வாய், நாவிதன்.

மங்கலி—சிற்பத்தொழிலோர்மாதுக்குஞ்செக்காறுக்குப்பிறந்து மயிர்களைவோன்.

மங்கல்—கெடுதல், வியங்கோண்முற்று.

மங்களகௌசிகம்—ஓர்இராகம்.

மங்களம்—வாழ்த்து.

மங்குதல்—கெடுதல்.

மங்குல்—ஆகாயம், இராவு, மேகம்.

மங்கை—பதின்மூன்றுவயதுப்பெண், பெண்.

மங்கைபாகன்—சிவன்.

மசகம்—கொசுகு.

மச்சம்—அட்டாதசபுராணத்தொன்று, ஓர்தேசம், மச்சம், மீனவிராசி, மீன்

மச்சிகை—மோர்

மசகு—குற்றம், மேனிலை.

மஞ்சம்—கட்டில்.

மஞ்சரி—ஓர்பிரபந்தம், தளிர், பூங்கொத்து பூச்சரம், பூமாலை.

மஞ்சனம்—குளித்தல், நீரின்மூழ்கல்

மஞ்சாடி—ஓர்மரம், வயிரநிறுக்குநிறை

மஞ்சாலி—வயிரநிறுக்குநிறை.

மஞ்சிகம்—நாவிக்கொடி, பெட்டி.

மஞ்சிகன்—நாவிதன்.

மஞ்சிகை—காதணி, குண்டலம், காளிசகொடி, பேழை.

மஞ்சில்—பழயவரம்பின்வழி.

மஞ்சு—அழகு, ஆபரணம், இளமை, கட்டில், பனி, முகில், மேகம், யானைமுதுகு, வலி.

மஞ்சுமம்—கொங்கு.

மஞ்சுளம்—அழகு

மஞ்சூடை—பேழை.

மஞ்சூரம்—கடலை.

மஞ்ஞை—மயில்.

மஞ்ஞையூர்தி—குமரன்.

மடக்கு—ஓர்சித்திரக்கவி, ஓர்பாத்திரம், மடக்கென்னேவல்.

மடங்கல்—இடி, ஊழித்தீ, காலன், சிங்கம், நோய், மீளல், முடங்கல், யுகமுடிவு வியங்கோண்முற்று.

மடங்கற்கொடியோன்—வீமன்.

மடங்கு—அளவு மடங்கென்னேவல், வியாதி.

மடந்தை—பத்தொன்பதுவயதுப்பெண், பெண்.

மடப்பம்—ஐஞ்ஞூறுகிராமத்துக்குத்தலைக்கிராமம்.

மடமை—அறிவின்மை.

மடம்—அறிவின்மை, சத்திரம், முனிவர்வாசம்.

மடலூர்தல்—தலைவன் காமத்தாற்றாது பனைமடலாற்செய்யப்பட்டமாமேலூர்தல்.

மடல்—ஏற்றமடல், ஓர்பிரபந்தம், ஈந்தில், கமுகு, தாழை, தெங்கு, பனை, வாழைமுதலியவற்றிற்குரியவேடு, பூவிதழ், வியங்கோண்முற்று.

மடவரல்—பெண்.

மடவாள்—பெண்.

மடவை—ஓர்மீன், கடவுமரம்.

மடன்—அறிவிலான், உன்மத்தம்.

மடி—கேடு, சீலை, சோம்பல், தாழை, நோய், பொய், மடியென்னேவல், முலைமேற்பிரசு, வயிறு.

மடிதல்—கெடுதல், சாதல், மடங்குதல்.

மடித்தல்—மடிக்குதல்.

மடிமை—சோம்பு.

மடிவு—சாவு.

மடு—ஆற்றினுட்பள்ளம், குளம், மடுவென்னேவல்.

மடுத்தல்—பருகல், வாய்முதலியவற்றின்மடுத்தல்.

மடை — ஆபரணக்கடைப்பூட்டு, சோறு, துவாரம், நீர்பாயுமடை.

மடையர்—சமையற்காரர்.

மட்கல்—அழுக்கேறல், ஒளிமழுங்கல், வியங்கோண்முற்று.

மட்டத்துருத்தி—ஓர்சிவிறி.

மட்டம்—அளவு, கேடகம்.

மட்டாயுதம்—வாள்.

மட்டி — படைக்கலம், மட்டியென்னேவல்.

மட்டித்தல்—மண்டலித்தல்.

மட்டியம்—ஓர்தாளம்.

மட்டு—அவதி, அளவு, கள்.

மட்டை—உடற்குறை, கமுகு, தெங்கு, பனையிவற்றின்மட்டை.

மட்பகைஞன்—குயவன்.

மணக்கல்—பானை.

மணங்கு—ஆட்டுக்குட்டி, ஓர்நிறை.

மணத்தல்—கமழ்தல், கூடல், வாசனை, விடுதல், வெட்டல்.

மணமகள்—மனைவி.

மணமகன்—புருடன்.

மணம்—கலியாணம், வாசனை.

மணவாட்டி—மனைவி.

மணவாளன்—புருடன்.

மணவை—அடுப்பு.

மணாளன்—ஆண்மகன்.

மணி—அழகு, ஓசை, கறுப்பு, நவமணிப்பொது, மணிப்பொது, முத்து.

மணிமலை—பொன்மாலை.

மணிவடம்—பாதசாலம், வீரக்கழல்.

மணை—ஓராசனம்.

மண்—ஒப்பனை, சுட்டசாந்து, பூமி, மண்ணென்னேவல், மலை, மார்ச்சிமை, முழவின் மார்ச்சனை.

மண்கணை—குடமுழவு, வாச்சியம்.

மண்டகம்— சருக்கரைப்போடாதகோதுமைப்பூரி.

மண்டம்—தயிரோடு.

மண்டர்—படைவீரர்.

மண்டலம்—நாடு, பூமி, வட்டம்.

மண்டலி—ஓர்வகைப்பாம்பு, கூட்டம், நாய், பூமி, பூனை.

மண்டலீகர்—அரசர்.

மண்டலேச்சுவரன்—நாற்பதினகாவதமுள்ளதேயமாயினுநூறுயிரங்கிராமமாயினும் புரக்குமரசன், மற்றொருவனைப்பணியாநலகாள்வோன்.

மண்டல்—நெருங்கல், மிகல், வியங்கோண்முற்று.

மண்டிகை—அப்பவர்க்கம்.

மண்டிலம் — குதிரை, கூத்து, நாடு, போர், வட்டமாயோடல்.

மண்டுதல்—நெருங்கல்.

மண்டூகம்—தவளை.

மண்டை — இரப்போர்கலம், தலையோடு.

மண்டோதரி—இராவணன்மனைவி.

மண்ணம்—சுட்டசாந்து.

மண்மங்கள்—சூத்திரர்.

மண்ணரிநார்—குயவர்மண்ணரிநார்.

மண்ணரியான்—குயவன்.

மண்ணல்—அலங்கரித்தல், கழுவல், வியங்கோண்முற்று.

மண்ணவர்—மனிதர்.

மண்ணிலம்—பூமி.

மண்ணீடு—திண்ணை, மாடம்.

மண்ணீட்டாளர்—சிற்பாசாரியர்

மண்ணுடையான்—குயவன்.

மண்ணுலகு—பூமி.

மண்ணை—அறிவில்லான், இளமை, பிசாசம்.

மண்ணோர்—மனிதர்.

மண்பொதுத்தந்தை—பிரமன்.

மண்மகள்புதல்வர்—வேளாளர்.

மதகயம்—யானை.

மதகரி—ஆண்யானை.

மதகு—நீரோடி.

மதங்கம்—ஓர்மலை.

மதங்கர்—ஓரிருடி, பாணர்.

மதங்கி—காளி,பதினாறுவயதுப்பெண், பாடுவாள்.

மதத்தல்—கொழுத்தல்.

மதமத்தகம்—கஞ்சா.

மதமொய்—யானை.

மதம்—கருத்து, சமயமதம், சம்மதம், செருக்கு, யானைமதம், வலி.

மதர்-களிப்பு, மதனென்னேவல், மிகுதி.

மதர்த்தல்—களித்தல்.

மதர்ப்பு—மதர்வு.

மதர்வு—களிப்பு, மிகுதி.

மதலிகை—ஆபரணத்துடக்குவடிவு,தூக்கங்கள்.

மதலை — கொடுங்கை, கொன்றைமரம், தூண், மகன், மரக்கலம்.

மதனம்—கடைதல், காமம், மௌனம்,

மதன்—அழகு, கலக்கம், காமன்,மாட்சிமை, வலி, வளமை.

மதாணி—ஆபரணம், பெரும்பதக்கம்.

மதாவளம்—யானை.

மதி—அறிவு, கார்க்கடகவிராசி, சந்திரன், நிதானம், மதியென்னேவல், மாதம், முன்னிலையசைச்சொல், (உ-ம். சென்மதிபெரும்.)

மதிகம்—மோர்.

மதிதிசை—வடக்கு.

மதித்தல்—கடைதல், மதத்தல், வரையறுத்தல்.

மதிநாள்—மிருகசீரிடம்.

மதிப்பகை—இராகு.

மதிமகன்—புதன்.

மதியம்—சந்திரன்.

மதியுண்ணி—இராகு.

மது—இருப்பைப்பூத்திராவகம், ஓராக்கன், கள், சித்திரைமாதம், தேன், மகரந்தம், வசந்தகாலம்.

மதுகம்—அதிமதுரம், எட்டி, தரா, தித்திப்பு.

மதுகரம்—ஆண்வண்டு, கள், வண்டு.

மதுகை—வலி.

மதுசகன்—மன்மதன்.

மதுசூதனன்—திருமால்.

மதுபதி—காளி.

மதுபம்—வண்டு.

மதுரசம்—முந்திரிகை.

மதுரம்—ஓர்கவி, சமனிசை, செஞ்சந்தனம், தித்திப்பு, முந்திரிகை.

மதுரை—ஓர்நகர், கள்.

மதுவம்—கள்.

மதூகம்—இருப்பை, வண்டு.

மத்தகம் — தலை, நுதல், பொல்லாநிலம்.

மத்தம் — ஊன்மத்தம், ஊமத்தை, களிப்பு, மத்து.

மத்தவாரணம் — அர்த்தசந்திரவடிவுள்ளதலையணை, மதயானை

மத்திகை — குதிரைச்சம்மட்டி, விளக்குத்தண்டு.

மத்திமம்—இடை, சமனிலை, நடு.

மத்திமன் — சாமானியன், நடுவுநிலையுள்ளவன்.

மத்தியமம்—நடு, நடுவிரல்.

மத்தியமாவதி—ஓரிசை.

மத்தியம்—இடை, கள், நடு.

மத்தியவிருத்தம—உந்தி.

மத்தியானம்—உச்சிப்பொழுது.

மத்திமை—காமமுதாரணமுஞ்சமமாகவுள்ளவள்.

மத்திரிபபு—சினம.

மத்து—தயிர்முதலியகடையுமத்து

மத்துமலை—மந்தரமலை.

மத்துவம்—மத்துவமதம்.

மந்தமா—யானை

மந்தம்—அரியம், ஓர்நோய், கூர்மையின்மை, சோம்பல, மத்து, மெல்லெனல்.

மந்தரம்—அட்டகிரியிலொன்று, தேவலோகம், மந்தவிசை.

மந்தரை—கூனி, விரோசனன்மகள்.

மந்தனம—யானைமுகபடாம்.

மந்தனி—தயிர்கடைதாழி.

மந்தன்—கூர்மையில்லாதான். சனி.

மந்தாகினி — அறுபதாண்டுள்ளவள், கங்கை.

மந்தாரம்—ஐந்தருவிலொன்று, செம்பரத்தை.

மந்தானம்—மத்து.

மந்தி—கருங்குரங்கின்பெண், பெண்குரங்கு, பெண்முசு, மந்தியென்னேவல், வண்டு.

மந்திக்கல்—மந்தப்படல்.

மந்திரம் — அரசன்மனை, ஆலோசனை, எண்ணல், ஒருநூல், தேவர்கோயில், நாற்புறமடப்பெயரால் ஆகச்சாலை, வீடு.

மந்திரி—அமைச்சன், சுக்கிரன், வியாழன், புதன், மந்திரியென்னேவல், நங்காரியஞ்சொல்வோன், வியாழம்.

மந்திரித்தல்—மந்திரப்பண்ணல்.

மந்துரை—குதிரைப்பந்தி.

மந்தோதரி—மண்டோதரி.

மயக்கம்—துன்பம், மயக்கம்.

மயக்கம்—உன்மத்தம்.

மயக்கு—மயக்கம் மயக்கென்னேவல்.

மயங்கல்—மயங்குதல், விடங்கொண்முற்று.

மயம்—அழகு, ஒட்டை.

மயர்வு—மயக்கம்.

மயல்—உன்மத்தம், செத்தை, பிசாசம், மயக்கம்.

மயன்—அசுரர்தச்சன், கின்னரன், தச்சன், விஞ்ஞானன்.

மயானம—சுடுகாடு.

மயிடம—எருமை.

மயிடற்செற்றாள்—காளி. துர்க்கை.

மயிரகம—மயிர்க்கயிறு.

மயிரொழுக்கு—மயிர்க்குழற்சி.

மயிர்—உரோமம்.

மயிர்வாரி—சீப்பு.

மயிர்வினை—சவரத்திரிகை.

மயிர்வினைஞன்—நாவிதன்.

மயிலை—இருவாட்சி, ஓர்நகர், மீனவிராசி, மீன்.

மயில்—மயில்.

மயூரம்—மயில்.

மரகதம்—பச்சை, பச்சைமணி.

மரகதவல்லி-தருமதேவதை, பார்வதி.
மரகதன்—குபேரன்.
மரக்கலம்—கப்பல்.
மரக்கலன்—மீகாமன்.
மரக்கா—நந்தனவனம்.
மரக்கால்—உப்பளம், சோதிநாள், துர்க்கைகூத்து, முகந்தளக்குங்கருவியிலொன்று, விட்டுணுகூத்து.
மரக்கோல்—மொட்டம்பு.
மரச்செறிவு—சோலை, மரப்பொது.
மரணம்—சாவு.
மரணை—சாதல்.
மரபு—குணம், பழமை, முறைமை.
மரம்—விருக்கம்.
மரல்—அரலை.
மரவட்டம்—நெடும்பரிசை.
மரவம்—குங்குமமரம்.
மரவினையாளர்—தச்சர்.
மரவுரி—நார்ச்சீலை.
மரவை—மரச்செபபு.
மரா—வெண்கடம்பு.
மராடம்— பதினெண்பாடையிலொன்று, மகாராட்டிரதேயம்.
மராட்டம்-இடம்,புறமயிர்,பெண்மயிர்.
மராமரம் — அரசமரம், ஆச்சாமரம், கடப்பமரம்.
மராம்—கடம்பு, வெண்கடம்பு.
மராளம்—அன்னம், பாம்பு, மாதளை.
மரிசம்—மிளகு.
மரிசி—புதுவரம்புவழி.
மரித்தல்—சாதல்.
மரியாதம்—நீதி.
மரியாதை—அமைவித்தநிச்சயம், கடற்கரை, வரம்பு.
மரீசம்—மிளகு.
மரீசி—கிரணம், சத்தவிருடிகளிலொருவர்.
மரீசிகம்—கானல்.
மரீசிகை—கானல்.
மரு—ஒருபரிமளப்புதல்,மருவென்னேவல், வாசனை.
மருகன்—மருமகன்.
மருகி—மருமகள்.
மருகு—மகரவாழை.
மருங்கு—இடை, பக்கம்.
மருங்குல்—இடை, பக்கம்.
மருட்சி—அறிவின்மை, மயக்கம்.
மருட்டம்—கள்.
மருட்டல்—மயக்குவித்தல், வியங்கோண்முற்று.
மருண்மா—யானை.
மருதம் — ஓர்மரம், மருதநிலத்திராகம், மருதநிலம், வயல்.
மருதவேந்தன்—இந்திரன்.
மருது—மருதமரம்.
மருத்து—காற்று.
மருத்துவர்—அச்சுவினிதேவதைகள், வைத்தியர்.
மருத்துவநாள்—அச்சுவினிநாள்.
மருத்துவன்—இந்திரன், வைத்தியன்.
மருந்தம்—நஞ்சு.
மருந்து—அமுதம், மருந்து.
மருப்பு—இஞ்சி, விலங்கின்கொம்பு.
மருமம்—மார்பு.
மருமராஞ்சம் — அசையுஞ்சீலையானுமிலையானுமெழுமொலி.
மருமான் — மகன், மருமகன், வழித்தோன்றல்.

மருவலர்—பகைவர்.
மருவல்—கிட்டல், வியங்கோண்முற்று.
மருவுதல்—கிட்டல்.
மருளல் — அஞ்சல், எழுச்சிலாவோசை, பேசலாவெழுமொலி, மயங்கல், வியங்கோண்முற்று.
மருளிந்தராகம்—ஓர்பண்.
மருள்—உவமையுருபு, உன்மத்தம், ஓர்கிழங்கு, பிசாசம், மருளென்னேவல்.
மரை—ஓர்மிருகம், தவளை, தாமரை.
மரைநிகம்—தவளை.
மர்க்கடம்—குரங்கு.
மலகரி—ஓரிராகம்.
மலங்கல்—அசைதல், குளம்,வியங்கோண்முற்று.
மலங்கு—ஓர்மீன், மலங்கென்னேவல்.
மலம்—அழுக்கு.
மலயககால்—தென்றல்.
மலயசம்—சந்தனம், தென்றல்.
மலயம்—பொதியமலை.
மலரோன்—பிரமன்.
மலர்—பூமலர், மலரென்னேவல்.
மலர்ச்சி—எழுதல், களிப்பு, பொலிவு.
மலர்தல்—எதிர்தல், தோன்றல், நிறைதல், விரிதல்.
மலர்த்திரள்—பூங்கொத்து.
மலர்த்தேன்—பூந்தாது.
மலாடு—மலைநாடு.
மலாவகம்—பிண்ணாக்கு.
மலிதல்—நிறைதல், பெருகல்.
மலினமுகன்—இறந்தோன், தீக்கடவுள், தீயோன், முசு, வண்டு.
மலினம்—கருமை, மாசு.
மலீமசம்—மாசு.

மலை—உவமை,மலை, மலையென்னேவல்.
மலைச்சார்பு—குறிஞ்சிநிலம்.
மலைதல் — அணிதல், எதிர்த்தல், பொருதல், மறுத்தல்.
மலைநாடன்—சேரன்.
மலைப்பசளை—குளவி.
மலைப்பாறை—மலைப்பக்கம்.
மலைப்பு—கூத்தின்விகற்பம், போர், மலைவு.
மலைமகள்—பார்வதி.
மலைமடந்தை—பார்வதி.
மலையமான்—சேரன்.
மலையம்—குறிஞ்சியாழ்த்திறம், மலையுச்சி.
மலையன்—கடையெழுவள்ளலிலொருவன், குறிஞ்சிநிலத்தலைவன், சேரன்.
மலையாரம்—சந்தனம்.
மலைவு—உவமை, போர், மயக்கம், மறுபாடு.
மல்—கூத்தின்விகற்பம், திருமால்கூத்து, வலி, வளமை.
மல்கல் — நிறைதல், பெருகல், வியங்கோண்முற்று.
மல்லம்—தட்டம்.
மல்லரி—பம்பைமேளம்.
மல்லல்—மிகுதி, வலி, வளமை.
மல்லன்—ஓரரசன், வலியோன்.
மல்லாரி—பம்பைமேளம்.
மல்லிகை — இரப்போர்கலம், ஓர்பூஞ்செடி, விளக்குத்தண்டு.
மல்லை—இரப்போர்கலம், வட்டம்.
மழலை—நிரம்பாமென்மொழிச்சொல்.
மழவன்—கட்டிளமையோன்.
மழவு—இளமை, குழந்தை.

மழித்தல்—மொட்டையாக்கல்.

மழு—எரியிரும்பு, பரசாயுதம்.

மழுங்கல்—பொலிவழிதல், வியங்கோண்முற்று.

மழுவாளி—சிவன்.

மழை—குளிர்ச்சி, நீர், மேகம்.

மழைகோள்—சுக்கிரன்.

மளமளெனல்—ஈரடுக்கொலிக்குறிப்பு.

மள்ளம்—வலி.

மள்ளர்—உழவர், குறிஞ்சிநிலமாக்கள், திண்ணியர், படைவீரர்.

மள்ளல்—வலி.

மறத்தல்—பொச்சாப்பு.

மறத்தியர்—பாலைநிலைப்பெண்கள்.

மறப்பு—மறதி.

மறப்புலி—சிங்கம்.

மறமலி—யானை.

மறம்—கொலை, கோபம், சினம், நமன், பாவம், பிணக்கு, வலி, வீரம்.

மறலி—நமன், மயக்கம்.

மறல்—எழுச்சி, ஓர்கூத்து, காலன், குற்றம், சாதல், தரித்திரம், நமன், பகை, பிணக்கு, போர், மயக்கம், மறதி, வியங்கோண்முற்று.

மறவர்—படைவீரர், பாலைநிலமாக்கள், வேடர்.

மறவி—ஈனம், கள், மறதி.

மறி—அருங்கு, ஆடு, குதிரை, மானிவற்றின்குட்டி, மறியென்னேவல், மான், மேடவிராசி.

மறிதல்—மடங்கல்.

மறித்தல்—தடுத்தல்.

மறிதரல்—மீளல்.

மறு—குற்றம், மறுவென்னேவல், மாசு

மறுகல்—சுழலல், வியங்கோண்முற்று.

மறுகு—குறுந்தெரு, நெடுந்தெரு, மறுகென்னேவல்.

மறுத்தல்—கொடாமை, நீக்கல், வெட்சம்.

மறுமை—வருபிறப்பு.

மறுவல்—கத்தூரிமிருகம்.

மறுவி—கத்தூரிமிருகம்.

மறை—அடைக்கலம், இராசியம், சேடகம், சொல், மந்திரம், மறை, மறையென்னேவல், வேதம்.

மறைக்கொடியோர்—பார்ப்பார்.

மறைக்கொடியோன்—துரோணாசாரியன், பிரமன்.

மறைதல்—மறைவு.

மறைத்தலைவி—இலக்குமி, உமை.

மறைபுகல்—அடைக்கலம்புகல்.

மறைப்பு—மறைவு.

மறைமுதலி—சிவன்.

மறையவர்—அந்தணர்.

மறையிலார்—கீழ்மக்கள்.

மறையோன்—பிரமன், வியாழம்.

மறைவு—மறைதல்.

மற்கொல்—பகை.

மற்று—அசைநிலை, (உ-ம். அதுமற்றவலங்கொள்ளாது,) வினைமாற்று, (உ-ம். இனிமற்றொன்றுரை.)

மற்றை—சுட்டியதற்கினம்.

மற்றையது—சுட்டியதற்கினம்.

மற்றோ—அதிசயவிரக்கச்சொல்.

மனக்கோட்டம்—அழுக்காறு.

மனத்தழுக்கம்—அழுக்காறு.

மனவிழி—இசைப்பாட்டு.

மனவு-அக்குமணி, சங்கு, மணிப்பொது.

மனைவு—அனைப்பட்டிகை.
மனு— அட்டாதசதருமநூலிலொன்று, மந்திரம், மனுச்சக்கரவர்த்தி.
மனுவர்—கொல்லர்.
மனை—மனை, மனைவி, வீடு.
மனையாட்டி—மனைவி.
மனையாள்—மனைவி.
மனோகரம்—அழகு, இச்சை.
மனோக்கியம்—அழகு. மனதிற்குவப்புளது.
மனோசன்—மன்மதன்.
மனோபலம்—தைரியம்.
மனோபு—மன்மதன்.
மனோரதம்—இச்சை.
மனோற்பவன்—மன்மதன்.
மனோன்மணி—பார்வதி.
மன்—அசைநிலை, (உ-ம். அதுமற்கொண்கன்றேரோ,) அரசன், ஆக்கம், (உ-ம். பண்டுகாடுமன்,) ஒழியிசை, (உ-ம். கூரியதோர்வாண்மன், (கழிவு, (உ-ம் சிறியகட்பெறினேயெமக்கீயுமன்னே,) பெருமை, மிகுதி, (உ-ம். எந்தையெமக்கருளுமன்.
மன்பதை—மக்கட்பரப்பு.
மன்மதன்—காமன், மனங்கலக்குவிப்போன்.
மன்விருத்தம்—ஆசிரியவிருத்தம்.
மன்ற—தேற்றம், (உ-ம். கடவுளாயினுமாகமடவைமன்றவாழியமுருகே.)
மன்றம்—அம்பலம், நிச்சயம், நெடுந்தெரு, வாசனை, வெளி.
மன்றல் — கலியாணம், நெடுந்தெரு, வாசனை.
மன்று—வெளி.
மன்றுபடுதல்—வெளிப்படல்.
மன்னர்—அரசர்.
மன்னர்பின்னோர்—வைசியர்.
மன்னர்மன்னன்—துரியோதனன்.
மன்னல் — நிலை, நிலைபெறுதல், வியங்கோண்முற்று.
மன்னவன் — அரசன், உத்திரட்டாதி, எப்பொருட்குமிறைவன்.
மன்னார்—பகைவர்.
மன்னுலகு—தேவலோகம்.
மன்னோ—அசைச்சொல்.

மா

மா—அழகு, ஆண்குதிரை, ஆண்பன்றி, ஆண்யானை, இலக்குமி, ஓரெழுத்து, கறுப்பு, குதிரை, சீலை, செல்வம், பெருமை, மா, மாமரம், வயல், வியங்கோளொடுவருமசைச்சொல், (உ-ம். உப்பின்றுபுற்கையுணகமாகொற்கையோனே,) வண்டு, வலி, விலங்கின்பொதுப்பெயர், வெறுப்பு.
மாகதம்—மகதநேசத்துள்ளது.
மாகதர் — அரசமாதக்கும்வைசியனுக்கும் பிறந்தொருவர் வீரமுதலியவற்றைப்புகழ்வோர், பாணர்.
மாகதி—ஓர்பாடை, திப்பிலி, முல்லைக்கொடி.
மாகம் — ஆகாயம், மகநாள், மாசிமாதம்.
மாகரி—ஆண்யானை.
மாகாளி—காளி.
மாகுலவர்—வேடர்.
மாக்கருவி—குதிரைக்கல்லணை.
மாக்கள்—மனிதர்.
மாசறல்—நயம்மை.
மாசி—ஓர்மாதம், புதுவரம்பு, மகநாள்.

மாசு — அழுக்கு, கருமை, குற்றம், மேகம்.

மாசுணம்—பாம்பு, பெரும்பாம்பு.

மாசுதீர்ப்பான்—நாவிதன்.

மாசேனன்—அருகன், கடவுள்.

மாசை—பொன்.

மாஞ்சி—வாசனைப்பண்டம்.

மாஞ்சில்—சடாமாஞ்சில்.

மாடகம்—வீணைமுறுக்காணி.

மாடம்—உழுந்து, வீடு.

மாடல்—செய்தல்.

மாடு — அகன்மணி, இடம், செல்வம், பக்கம், பொன், மாடு.

மாடை—பொன்.

மாட்சி—பெருமை.

மாட்சிமை—பெருமை.

மாட்டல் — மூட்டல், வியங்கோண்முற்று.

மாணம்—மாட்சிமை.

மாணல் — நன்மை, மாட்சிமை, வியங்கோண்முற்று.

மாணவகன்—எட்டாண்டிற்குள்ளாயசிறுவன், மாணாக்கன்.

மாணாக்கன்—கற்போன்.

மாணார்—பகைவர்.

மாணி—பிரமசாரி.

மாணிக்கம்—ஓரிரத்தினம்.

மாணிக்குழி—ஓரூர்.

மாண்—மாட்சிமை, மாணெனேவல்.

மாண்டல்—மாட்சிமை.

மாண்டார்—இறந்தோர், பெரியோர்.

மாண்பு—அழகு, மாட்சிமை.

மாதங்கம்—யானை.

மாதங்கர்—சண்டாளர்.

மாதங்கன் — அரசமாதுக்கும்வேடனுக்கும் பிறந்துசெருப்புத்தைப்போன்.

மாதங்கி—காளி, துர்க்கை.

மாதண்டம்—பெரும்பாதை.

மாதம்—மாசம்.

மாதரி—காளி.

மாதர்—அழகு, ஆசை, மகளிர்.

மாதலி—இந்திரசாரதி.

மாதவம் — கள், தவம் வசந்தகாலம், வைகாசிமாதம்.

மாதவர்—முனிவர்.

மாதவன்—திருமால், வசந்தன்.

மாதவி — அருச்சுனன்மனைவி, கண்ணன்மனைவி, கள்ளினையட்டவெல்லம், குருக்கத்திமரம், கோவலன்கூத்தி, துதிகை, நாடகக்கணிகை, வசந்தகாலமல்லிகை.

மாதவிகொழுநன்—அருச்சுநன்.

மாதா—தாய், பார்வதி.

மாதி—வட்டமாயோடல்.

மாதிகம்—குதிரைமார்க்கம்.

மாதிரம்—ஆகாயம், திசை, பூமி, மலை, யானை.

மாதிரி—ஒப்பு.

மாது—அசைச்சொல், (உ-ம். விளிந்தன்றுமாதவர்த் தெளிந்தவென்னெஞ்சே, பெண்.)

மாதுலன் —மாமன்.

மாதுலுங்ககம்—மாதளை.

மாதுவம்—கள்.

மாதுளங்கம—மாதளை.

மாதுளம்—மாதளை.

மாதேவன்—சிவன்.

மாத்திரம்—பிரமாணம்.

மாத்திரை—அளவு, காலநுட்பம், கால விரைவு, குளிகை.

மாநடன்—சிவன்.

மாந்தம்—ஓர்நோய்.

மாந்தர்—ஆண்மக்கள், மனிதர்.

மாந்தல் — குடித்தல், புசித்தல், வியங் கோளுற்று.

மாந்தி—மாமரம், வினையெச்சம்.

மாபலன்—காற்று.

மாபலி—மாவலி.

மாபுலி—சிங்கம்.

மாமகன்—மன்மதன.

மாமணி—மாணிக்கம்.

மாமருத்துநூலோர்—வைத்தியர்.

மாமன்—அம்மான்.

மாமாத்திரர்—வைத்தியர்.

மாமி—மாமன்மனைவி.

மாமுனி—அருகன்.

மாமை—அழகு, நிறம்.

மாயம்—அழகு, கறுப்பு, தீமை, பொய், வஞ்சம்.

மாயவள்—இடாகினி, காளியேவல்செய்மகள், தெய்வப்பெண்.

மாயன்—திருமால்.

மாயாதேவி—புத்தன்றாய்.

மாயாதேவிசுதன்—புத்தன்.

மாயாபுரி — சத்தபுரியிலொன்று, பித்தளை.

கலப்பை—அலம், இதை, இலாங்கலி, உழுபடை, கலனை, ஞாஞ்சில், தொடுப்பு, நாஞ்சில், படை, படைவாள்.

கலித்துறை—கரிகை, திலகம், இதழ்கிராகம, ப்யிரவி.

கலிப்பா—முரட்கை.

கலியாணத்தின்பெயர்— விவாகத்தைக்காண்க.

கலைவல்லோர்—கவிஞர்.

கல்—கிராவம், சிராவணம், சிலை, சையம், அன்றியுந்திரண்டசல், உலம், குண்டு, பெருங்கல்லின்பெயர், கௌிதம், சிறுகல்லின்பெயர், உபலம், கற்பதித்தவிடத்தின்பெயர், குட்டிமம், சலதாரைமுதலியவற்றை யடைக்குங்கல்லின்பெயர், துறுகல், பொறை.

கல்வி—உறுதி, ஊதியம், ஓதி, சரணம், கலை, கேள்வி, சால்பு, தேர்ச்சி, விஞ்சை, வித்தை.

கல்விபயிலுமிடம்—கல்லூரி, கல்விபூரி, கழகம்.

கவசம் — அந்தளம், அபரம், அரணம், அரணி, ஆசு, கசை, கச்சை, கண்டம், கந்தளம், கருவி, சடாரி, சாலி, சாலிகை, சுடாரி, சுரிகை, தடை, தம்பம், பரணம், பரம், பருமம், பாசம், பாரம், மெய்யுறை, மேழகம், வாரணம்,

அன்றியுங்கைக்கவசத்தின்பெயர், கைப்புடை, கோதை.

கவண் — ஒடிசில், கவணை, குணில், குளிர், தட்டை, தழல்.

கவரிமா—அன்னம், எகினம், ஓதிமம், நானம், படகம், பட்டம், மானமா, இதனுண், ஏறு, ஒருத்தல், இதன்பெண், பிடி, பிணை, இதன்குட்டி, கன்று.

கவுதாரி—இதல், கோரசம், சிரவம், சிவல், புறான்.

கழலைக்கட்டி—அரலை.

கழற்கொடி—கற்சூரம், கழங்கு, கழல், முழல்.

கழி — உப்பளம், கயல், கானல், முரம்பு.

கழிமுகம்—அழிதாமுகம், அருவி, கயவாய், சவு, கூடல், புகார்.

கழிவுநாள்—வைகல், காலை.

கழுகு — உவணம், எருவை, சகுந்தம், பவனை, புண்டரம், புண்டரிகம்.

கழுதை—அத்திரி, இராடம், கத்தை, கரம், கழோடிகை, கர்த்தபம், கார்த்தபம், காளவாய், கோகு, வாலேயம், வேசரி, இதன்பெண், பெட்டை.

கழுத்து—கண்டம், கந்தரம், களம், களரி, கிரீவம், இல்லம், மிடறு, கழுத்தடியின்பெயர், கந்து.

கழுமரம்—கழுமுள்.

கழுவுதல்—மண்ணல்.

கழைக்கூத்தாடிகள்—கழாயர், கோரம்பர், வேழம்பர்.

களர்—களம், களரி, காரி, முதுநிலம்.

களவு—கடுதல், கயவு, கரப்பு, கரவடம், கரவு, கள், கள்ளம், கள்ளல், சோரம், சோர்வு, தேயம், படிறு, பட்டிமை.

களாச்செடி— களா, களவு.

களித்தல்—உவத்தல், செருக்குதல், மகிழ்தல், மதர்த்தல்.

களிப்பு—அபிமானம், ஆமோதம், உவகை, உவப்பு, ஏமம், கடி, களி, செருக்கு, தருக்கு, தனுகு, நகை, நயன், பாடவும், பெருமிதம், மகிழ்ச்சி, மதம், மதர், மதர்ப்பு, மதர்வ, மத்தம், மலர்ச்சி, யௌவனம், அன்றியுமிகுகளிப்பின்பெயர், இறுமாப்பு, எக்களிப்பு, எக்கமுத்தம் ஏமாப்பு, செம்மாப்பு, பூரிப்பு.

கள்—அம்மியம், அரி, அரிட்டம், அருகி, அருப்பம், அளி, அறிவழி, ஆசவம், ஆதவம், ஆம்பல், ஆம்பியம், ஆலி, ஆலை, இக்கு, இரோயம், ஈழம், எலி, சருசா, கல்லியம், கவ்வை, களி, காலி, குடு, குந்தி, கொங்கு, சாதி, சாயனம், சாலி, சாறு, சிக்கர், சுண்டி, சுமாலி, சுரா, சுலோகி, சுவிகை, சுழிகை, சேறு, சொல், சொல்விளம்பி, சோபம், ஞாளி, தணியல், தம்பி, தேம், தேறல், தேன், தொண்டி, தொப்பி, நறவு, நனை, நாற்றம், படு, பாடலி, பாணி, பாலி, பானம், பிரசம், பிழி, பேதை, மகாந்தம், மட்டு, மது, மதுகரம், மதுரை, மதுவம், மருட்டம், மறலி, மாதவம், மாரி, மாலி, முண்டகம், முருகு, மேதை, மைரலி, யானம், வடி, வாணிதம், வாருணி, விகுணி, விசுளி, வெறி, வேரி.

கள்விற்போர்—சவுண்டியர், துவசர், படுவர், பழையர், பிழியர், இவ்வகைப்பெண், சாலினி.

கள்ளி—வச்சிரம்.

கறிகள்—நீடாணம், அன்றியும் தாளித்தகறியின்பெயர், சூய், துவட்டற்கறியின்பெயர், வறை, பொரிக்கறியின்பெயர், கருணை, புளிப்புளகறியின்பெயர், துவை, புளிங்கறி.

கறுப்பு — அஞ்சனம், இருள், கருமை, கருள், களங்கம், களம், களரி, கறை, காரி, கார், காழகம், காளம், காளிமம், சாமம், நல்லம், நீலம், நீலி, பரி, மா, மாசு, மாயம், மால், மை.

கறையான் — ஆழல், சிதலை, செல்.

கற்பகதருவிற்படர்கொடி — காமவல்லி.

கற்பு — முல்லை.

கற்புடையாள் — சதி.

கற்போன் — படிப்போன், மாணாக்கன், வித்தியார்த்தி.

கற்றாழை — கன்னி, குமரி.

கற்றோர் — நாவலர்.

கன்னன் — அங்கர்கோமான், அதிரதிந்திரன், கச்சைக்கொடியினன், கருணன், கவசகுண்டலன், கனகக்கொடியோன், கானீனன், குந்திமுதற்புதல்வன், சவுரியன், பராயனி, பாண்டவர்முன்பிறந்தோன், மிகுகொடையாளன்.

கன்னார் — கஞ்சகாரர், கன்னுவர்.

கன்னி — குமரி.

கன்னியிற்பெற்றபிள்ளை — கானீனன்.

கன்னிராசி. — பெண்பொதுப்பெயரெல்லாஞ்சொல்லும்.

கா

காக்கணஞ்செடி — உயவை, கருவிளை, கன்னி, கிகிணி, கிருட்டிணி.

காக்கை — அரிட்டம், உரண்டம், கரடம், காவாகம், கரும்பிள்ளை, காகம், காரி, கோரண்டம், கொடி, துரோணம், நரந்தம், நாராந்தம், பரபிருதம், பலிபுட்டம், புட்டம், வாயசம், அன்றியும், அண்டங்காக்கையின்பெயர், காலோலம்.

காசி — வாரணசி.

காசிபப்பிரமா — சுராசுரர்க்குப்பொதுத்தந்தை, இவன்மனைவிகள், அதிதியுந்திதியும் அதிதிமைந்தர், சுரரெல்லாரும், திதிமைந்தர், அசுரரெல்லாரும்.

காஞ்சிபுரம் — கச்சி.

காஞ்சொறிச்செடி — கண்டூதி.

காடி — இலாலம்.

காடு — அடவி, அத்தம், ஆரணியம், ககனம், கடம், கடறு, கட்சி, கட்டம், கண்டகம், கவனம், கவை, களரி, காண்டகம், காண்டம், காந்தாரம், கானகம், கானம், கானல், கான், குறும்பொறை, சங்கிரம், சிரணி, சுரம், தாவம், தில்லம், பழுவம், பாணி, புறவம், பொச்சை, முளரி, வனம், விடர், விபினம், வியல், அன்றியுங்குறுங்காட்டின்பெயர், இறம்பு, பெருங்காட்டின்பெயர், வல்லை, முதுகாட்டின்பெயர், முதையல்.

காடுகாள் — கொற்றி, சூரி, சூலி, மாரி, முதணங்கு, மோடி, வடுகன்றாய், வடுகி.

காடை — இதல், கபிஞ்சலம், குறும்பூழ்.

காட்டல் — சுட்டல், தோற்றுவித்தல்.

காட்டா — ஆமா, கவயம், இதனுண்போத்து, இதன்பிள்ளை, கன்று.

காணல் — கண்ணுறல், காண்டல், தரிசித்தல், தெரிதல், நோக்கல், பார்த்தல்.

காதணிவகுப்பு — கடிப்பம், கடிப்பிணை, கம்பி, கன்னப்பூ, கன்னவதங்கம், குணுக்கு, குண்டலம், குழை, கொட்டை, செவிமலர், தாடங்கம், தூக்கம், தொங்கல், தோடு, மஞ்சிகை, வல்லிகை, வேடம்.

காதம் — காவதம்.

காது — அள், கன்னம், கேள்வி, சிரவ

ணம், சிரவம், சுருதி, சுரோத்திரம், செவி, வள்.

காத்தல்—அளித்தல், தாங்கல், திதி, நிலைபெறுத்தல், நோக்கல், புரத்தல்.

காத்தளித்தோன் — பாலனன், புரவலன்.

காந்தம்—சலாகை, சும்பகம்.

காந்தள்—கோடை, தோன்றி, அன்றி வெள்ளைகாந்தளின்பெயர், காந்துகம், கோடல், கோடை, செங்காந்தளின் பெயர், இலாங்கலி, தோன்றி, பற்றை.

காமத்தின்பெயர்— ஆசைப்பெருக்கத் தைக்காண்க.

காமநூல்—சுரதநூல்.

காமநோய்-காமக்கவலை, மதனம், மோகம், விகாரம், விரகம், அன்றியும் ஒருதலைக் காமத்தின்பெயர், கைக்கிளை, இருவரிலொருவர்க்குப் பொருந்தாக் காமம், பெருந்திணை.

காயா—அஞ்சனி, அவ்வி, காசை, புன்காலி, பூவை, வச்சி.

காய்—தீயளி, பலன், அன்றியும் இளங் காயின்பெயர், பிஞ்சு, வடு.

காய்தல்—உலரல், முதிர்ந்திடல், முனித்தல், வறத்தல்.

காரணச்சொல்—கதை.

காரணம்—ஏது, திறம், நிபம், நிமித்தம், பொருட்டு, மூலம், வழி, வாயில், அன்றியும் ஆதிகாரணம், நிதானம்.

காராமணி—இதை, கூலம், முதிரை.

காரீயம்—நாகம்.

காரோவி—இரும்பன், கருப்பை.

கார்காலம்—கார், சரற்காலம், தவம், மாரிக்காலம்.

கார்த்தல்—உறைத்தல், கடு, கடுகம், கரில், காயம், காரம், காழ்த்தல்.

கார்த்திகைநாள்—அங்கி, அளகு. அளக்கர், அறுமீன், அறுவாய், ஆரல், இருல், எரிநாள், தழல், நாடன், நாவிதன், வாணன்.

கார்த்திகைமாதம் — ஊர்ச்சம், பாகுலம்.

காலணிப்பொது—பாதசாலம், இவற்றின்பேதப்பெயர், காற்சரி, கிண்கிணி, சதங்கை, சிலம்பு, பாடகம், இவற்றைத்தத்தம்வரியிற்காண்க, அன்றியும், ஆடவர்கொடை வீரத்தணிவது, கழல்.

காலநுட்பம்—கலை, துடி, விகலை.

காலநெடுமை—சிரம்.

காலவிரைவு — இலேசம், இறை, ஒல்லை, கணம், சிறுவரை, மாத்திரை, வல்லை.

காலன்—கூற்று, சண்டன், பாசகரன், மறல்.

காலாள்—பதாதி.

கால்—அங்கிரி, அடி, கழல், சரணம், சரண், தாள், பதம், பாதம்.

காவடி—கா, தோட்சுமை.

காவலர்—கஞ்சுகி, மெய்காப்பாளர்.

காவல்—அரண், ஏமம், ஓம்படை, கடி கட்டு, கதவம், கதவு, கழுது, காப்பு, சிறை, செயல், சேமம், சேவல், தட்டு, திராணம், பாது, வேலி.

காவற்காடு—அரணம், அரண், இளை, கணையம்.

காவிக்கல் — காரிகம், தாது, நற்செங்கல்.

காவேரி—காவிரி, பொன்னி.

காவேரிப்பூம்பட்டினம்—புகார்.

காளம் — அம்மியம், காகளம், காளகம், சின்னம், தாரை.

காளான்—ஆம்பி.

காளி—அலகைக்கொடியாள், ஆரணி, ஐயை, எண்டோளி, கங்காளி, கவுரி, குண்டலி, குமரி, சண்டிகை, சாமுண்டி, சூரி, சூலி, தாருகவிநாசி, தாருகற்செற்ருள், நீலி, பதுமை, பத்திரி, பயிரவி, மதுபதி, மாதங்கி, மாதரி, மாயை, மாயையுற்ருள், மாலினி, முக்கண்ணி, யாமளை, யாளியூர்தி, யோகினி, வல்லணங்கு, வீரி, வேதாளி.

காளிக்கொடி—அலகைக்கொடி.

காளியேவல்செய்மகளிர்—இடாகினி, மாயவள், வஞ்சனி, வலவை.

காளிவாகனம்—ஓரி.

காற்சரி—பரியகம்.

காற்ருடி—கதலி, கறங்கு, சுழல்.

காற்று—அம்போதி, அரி, அநிலம், ஆசுகம், உயிர், உயிர்ப்பு, உலவை, ஊதல், ஊதை, ஒலி, கந்தவகன், கந்தவாகன், கம், காலசம், காலிலி, கால், கோதை, சதாகதி, சமீரணன், சமீரன், சலனம், சுசனம், நிழலி, நீலம், நீல், பவமானன், பவனம், பிரபஞ்சனன், மருத்து, மாருதம், மால், வங்கூழ், வளி, வாதம், வாயு, விண்டு, வேற்றலம், அன்றியுங்கார்ப்பருவத்தின் காற்று, வாடை, கூதிர்ப்பருவத்தின்காற்று, கூதிர், கூதை, முன்பனிப்பருவத்தின்காற்று, கொண்டல், பின்பனிப்பருவத்தின்காற்று, தென்றல், முதிர்வேனிற்பருவத்தின்காற்று, கோடை, அன்றியுங்கீழ்காற்று, கொண்டல்,மேல்காற்று, கோடை, தென்காற்று, தென்கால், தென்றல், வசந்தம், வடகாற்று, வடந்தை, வாடை.

கானல்—பேய்த்தேர், மரீசிகை, வெண்டேர், வேனில்.

கானுங்கோழி—பூழ்.

கி

கிடைத்தல்—சிக்கல், பயத்தல், பெறல், வாய்த்தல்.

கிட்டல்—அணவல், அணுகல், அண்டல், அருகுறல், உறல், குறுகல், சிவணல், சேரல், துன்னல், நணுகல், நண்ணல், நேர்தல், மருவுதல்.

கிணறு—அசும்பு, உறவி, குழி, கூபம். கூவல், நீரவின்பெயர், கேணி, பூவல்.

கிண்கிணி—நூபுரம், பரிபுரம், பரியகம்.

கிண்கிணிமாலை—தார்.

கிண்டல்—கிளர்தல், கிளைத்தல், தோண்டல்.

கிரணம்—கதிர், கற்றை, காந்தி, பிரபை.

கிராமணி—கிராமமுற்ருேன், கிராமியன்.

கிருபை—அபயம், அருள், இரக்கம், ஈரம், கருணை, காருண்ணியம், தகவு, தயாளம், தயை, நிழல்.

கிருபையுடையோன்—காருணிகன், காருணியன், கிருபாளு, தயாளன்.

கிலுகிலுப்பைச்செடி—பகன்றை.

கிழக்கு—இந்திரி, ஐந்திரம், கீழ், கீழ்த்திசை, குணக்கு, பிராசி, பூருவம்.

கிழங்கு—கந்தம், சகுனம்,பலம், மூலகம், மூலம்.

கிழமை—வாரம்.

கிழவி—மூத்தோள், விருத்தை.

கிழித்தல்—அவிர்தல், கீண்டல், கீழ்தல், கீளல், கீறல், பீறல்.

கிளப்புதல்—திமைத்தல்.

கிளி—அரி, அவந்திகை, ஏசி, கிள்ளை, கீரம், சாரு, சுகம், சுவாகதம், தத்தை,

வன்னி, அன்றியுங்கருங்கிளியின் பெயர், கிள்ளை, கீரம்.

கிளிஞ்சில்—எருந்து, ஏரல்.

கீ

கீரி—காத்திரி, தீர்வை, நகுலம், இதன் பிள்ளை, குட்டி, பறழ், பிள்ளை.

கீழறுத்தல்—அறைபோதல்.

கீழறை—பிலம்.

கீழ்—கயம், கிழக்கு.

கீழ்மக்கள் — அசடர், அநீதர், அற்பர், இதரர், இயவர், கண்டகர், கயவர், கலர், கல்லார், கனிட்டர், கையர், சிதையர், சிறியர், சிறுமையர், சித்தையர், சுமடர், தீக்குணர், தீப்பர், தீயோர், தேரார், நீசர், நெறியிலார், பதகர், புல்லர், புள்ளுவர், பூரியர், பேதையர் பொறியிலார், மறையிலார், முசடர், முசுண்டர், முறையிலார், மூடர், மூர்க்கர்.

கீற்று—கிழி.

கு

குங்கிலியம்—குக்குலு, குங்குலு.

குங்குமமரம் — கொங்காரம், ஞாழல, துருக்கம், நறவம், மரவம், மாலம.

குடங்கை—அங்கை.

குடம் — இடக்கர், இடங்கர், இரும்பை, இறங்கர், கடம், கலசம், குடங்கர், குடந்தம், குணம், கும்பம், தசும்பு, தாழி

குடி—திணை.

குடித்தல்—பருகல், பானம், மாந்தல்.

குடியிறை-இறுப்பு, கடன், காப்பு, கறை, வரி, அன்றியும், பகைவரிடமிறையின் பெயர், கப்பம், குறை, திறை, பாகுடம்.

குடுமி — சிகை, சிக்கம், சிமி, சிமிலி, மமை.

குடுவை—குண்டம்.

குடை—ஆதபத்திரம், கவிகை, கவிப்பு சத்தி, சத்திரம், தொங்கல், பிச்சம், அன்றியுஞ்செங்குடை, சிந்தூரம், வெண்குடை, சுசி.

குடைக்காம்பு—தண்டம்.

குடைதல்—துளைதல்.

குடைவேல்—உடை.

குட்டுதல்—தகர்த்தல், புடைத்தல்.

குணம்—இயல், இயல்பு உரிமை, உழுவல், ஊழ், கிழமை, கொள்கை, கோள், சால்பு, சீலம், தகவு, தகுதி, தகை, தகைமை, தன்மை, திறன், நிலை, நிறம், நீர், நீர்மை, நுணித்தல், படி, பண்பு, பரிசு, பாடு, பாலம், பான்மை, பிரகிருதி, பெற்றி, மரபு, மாலை, முறை, வண்ணம், விதி, இவற்றுட்டையகுணத்தின்பெயர், காரணம், கராளி.

குண்டலம் — காதணி, குழை, மஞ்சிகை.

குதித்தல்—உகளல், உறுக்கல், குப்புறல், துடித்தல், துள்ளல், பாய்தல், மிதித்தல்.

குதிரை — அசுவம், அச்சுவம், அத்திரி, அயம், அரி, இவுளி, உத்தரி, உன்னி, கண்ணுகம், கந்தருவம், கந்துகம், கர்க்கி, காண்டம், கிள்ளை, குந்தம், குரகதம், துளை, கொக்கு, கொய்யுளை, கோடகம், கோடரம், கோடை, கோணம், கோரம், சடிலம், சயிந்தவம், துரகதம், துரகம், துரங்கம், துரி, தேனு, நாறுகம், பத்திரி, பரி, பாடலம், பாய்மா, புரவி, மண்டிலம், மா, வயம், வாசி, இதறுண், குலம், சேவல், மா, இதன்பெண், கோளிகை, பெட்டை, வடவை, இதன்பிள்ளை, கன்று, குட்டி, மறி, அன்றியும், பெருங்குதிரை, [illegible]

குதிரைக்கடிவாளம்—கலினம், கவியம், கூறுள், குசை, மூட்டு, இதன் பூண், விருளை.
குதிரைக்கயிறு—குசை, வடிகயிறு, வற்கம், வாய்வட்டம்.
குதிரைக்கல்லணை — படை, பண், பரம், பருமம், பல்லணம், பாரம், மாக்கருவி.
குதிரைக்கழுத்திலணியுமயிர்—உளை.
குதிரைக்குளம்பு—குரச்சை, குரம்.
குதிரைச்சம்மட்டி—கோல்,மத்திகை.
குதிரைநடை—கதி, கவனம், தாவு, இவையைவகைப்படும், மெல்லியநடை, தவுரிதகம், விரைவுநடை, ஆக்கிராந்திதம், இருகாற்றூக்கியாடிவருநடை, வல்கிதம், சுற்றியோடல், இரேசிதம்,முழுவோட்டம், புலிதம்.
குதிரைப்பந்தி-சாலை, பணை, மந்துரை.
குதிரைப்பாகர்—பண்ணுவர், பரிமாவடிப்போர், மாவலர், வதுவர், வாதுவர்.
குதிரைமயிர்—குசை, கூந்தல், கேசம், சுவல்.
குதிரைமார்க்கம்—மாதிகம்.
குதிரையங்கவடி—கச்சம், படி.
குதிரையிருப்பு—தூளி.
குதிரைவாய்நுரை—விலாழி.
குதிரைவையாளிவீதி—செண்டு, செண்டுவெளி, திருமுற்றம், புரவிவட்டம்.
குதிர்—புகல்.
குத்தல் — எறிதல், எற்றல், பற்றல், புடைத்தல், அன்றியும், நென்முதலியனகுத்தல், அவைத்தல்.
குந்திநிற்றல்—குஞ்சித்தல்.
குபேரனகர்—அளகை.
குபேரன்—அரன்றோழன், அளகையாளி, இயக்கர்கோமான், இயக்கன்,இருநிதிக்கிழவன், கின்னரர்பிரான், தனதன், தனபதி, நரர்பிரான், நரவாகனன், நிதிக்கிழவன்,நிதியோன்,நிறைசெல்வன், பிங்கலன், புட்பகவிமானன், புருடவாகனன், மந்திரி, மரகதன், மானிடத்தன்மன், வடதிசைத்தலைவன், வைச்சிரவணன்.
குபேரன்மகன்—நளகூபரன்.
குபேரன்வாகனம்—நரவாகனம், புட்பகவிமானம்.
குமிழமரம்—கடப்பல், கூடப்பல்.
குமிழ் — கொப்புள், நுரை, புற்புதம், பௌவம், மொச்குள்.
கும்பராசி — கரீரம், குடங்கர், குடம், சாடி.
கும்பிடுதல் — அஞ்சலி, கைகூப்பல், தொழுதல்.
கும்மியாடல்—துணங்கைகொட்டல்.
குயவன்—கும்பகாரன், குலாலன், சக்கிரி, மட்பகைஞன், மண்ணெரியான், மண்ணுடையான், வேட்கோவன்.
குயில்—அன்னியபுட்டம், களகண்டம், காளகண்டம், கோகிலம், கோரகை, பரபிருதம், பரபுட்டம், பிகம்.
குரங்கு—அரி, கச்சகம், கடுவன், கபி, கவி, கள்வன், கானவன், கீசகம்,கோகுலம், கோடரம், சிறை,சொங்கு,தோரணம், நாகம், நிரந்தரம், பிலவங்கம், மந்தி, மர்க்கடம், வலீமுகம், வானரம், அன்றியும் கருங்குரங்கு, காருகம், நாகம், யூகம், ஆண்குரங்கு, கடுவன், பெண்குரங்கு, மந்தி, யூகம்.
குரங்குமுதற்கோட்டின்வாழ் விலங்கின்பிள்ளை — குட்டி, குழவி, பறழ், பார்ப்பு, பிள்ளை, மகவு.
குரு—அடிகள், அத்தன், ஆசாரி, ஆசான்,ஆதன், ஆரியன், இறைவன், ஈசன்,

ஐ, ஐயன், கடவுள், குரவன், கோமான், சாமி, தலைவன், தீர்த்தன், தேசிகன், பகவன், பட்டாரகன், பண்ணவன், பதி, புங்கவன், பெருமான்.

குருகு—சாரசம், தாரா, நாரை, புட்கரம்.

குருகுலவேந்தர்—கௌரவர், பாரதர், பௌரவர்.

குருக்கத்தி—அதிகம், குருந்து, நாகரி, மாதவி, வாசந்தி.

குருடன்—அதரிசனன், அந்தகன், சிதடன்.

குருத்து—முருந்து.

குருந்து—குந்தம்.

குலங்கலந்தோர் உயர்குலத் தந்தைக்கு மிழிகுலத் தாய்க்கும் பிறந்தோர்—அனுலோமர், இழிகுலத்தந்தைக்குமுயர்குலத் தாய்க்கும் பிறந்தோர் பிரதிலோமர், அனுலோமத்தந்தைக்கும் பிரதிலோமத் தாய்க்கும் பிறந்தோர், அந்தராளர், பிரதிலோமத்தந்தைக்கும் அனுலோமத்தாய்க்கும்பிறந்தோர் விராத்தியர், அன்றியுஞ் சாதிதருமம்விட்டவருக்கும் விராத்தியரென்றுபெயர்.

குலமுளோன்—குலீனன்.

குலம்—இனம், உம்பல், ஒழுக்கம், குடி, திணை, வருணம், விழுப்பம்.

குவளைப்பொது — உற்பலம், குவலயம், அன்றியும் செங்குவளையின் பெயர், அரத்தம், அரத்தோற்பலம், எருமணம், கல்லாரம், செங்கழுநீர், கருங்குவளையின்பெயர், இந்தீவரம், காவி, நீலம், நீலோற்பலம், பானல்.

குவிதல்—இராசி, குப்பை, குவவு, குவால், குவிவு, குவை, கூம்பல், சாம்புதல், திற்றல், நூறில்.

குழந்தை—இளவல், குட்டன், குழவி, சிசு, சேய், பிள்ளை, மகவு, மழவு.

குழம்பு—ஆணம், பாகு.

குழைதல் — அணைதல், ஈடு, ஒல்கல், சுணைதல், நெகிழ்தல்.

குழைத்தல்—இகுத்தல்.

குளநெல்—நீர்வாரம்.

குளவி—வேட்டுவன்.

குளித்தல்—ஆடல், குடைதல், தோய்தல், நானம், படிதல், மஞ்சனம், முழுகல்.

குளிர்ச்சி—அளி, ஈரம், சாந்தம், சீதம், சீதளம், தண், தண்ணம், தண்மை, நளி, நளிர், நிழல், பனி, மழை.

குள்ளன்—குஞ்சன், குறளன், சிந்து, வாமனன்.

குறவரின்பெயர் — குறிஞ்சிநிலமக்களைக்காண்க.

குறியின்பெயர் — அடையாளத்தைககாண்க.

குறிக்கொள்வோர்—பாராயணர்.

குறிஞ்சித்தலைவன் — கானகநாடன், சிலம்பன், நண்பன், பொருநன், பொருப்பன், மலையன், வெற்பன்.

குறிஞ்சிநிலத்தூர் — குறிஞ்சி, குறும்பொறை, சிறுகுடி, சிற்றூர், சீறூர்.

குறிஞ்சிநிலப்பறை—துடி, தொண்டகம், முருகியம்.

குறிஞ்சிநிலப்பெண்கள்- குறத்தியர், கொடிச்சியர்.

குறிஞ்சிநிலமக்கள்—இறவுளர், கானவர், கிராதர், குறவர், குன்றவர், புனவர், மள்ளர்.

குறிஞ்சிநிலம்—புறம்பணை, புறவணி, புறவம், மலைச்சார்பு, வன்பால்.

குறித்தல்—எண்ணல், கண்ணல், கருதல், காணல், சுட்டல், நுதலல், புகறல், பேணல்.

குறிப்பு—இங்கிதம், எண்ணம், கருத்து, சிந்தை, சூழல், நாட்டியம்.

குறுமை—குறள், வாமம்.

குறும்பாடு — சரபம், வருடை, வரையாடு.

குறைதல்—அஃகல், அருகல், அல்கல், எஞ்சல், குலேதல், குன்றல், சிகல், சிங்கல், சிறக்கணித்தல், சிறுகல், சுருங்கல், தவறல், தேய்தல்.

குறைபாடு — ஈனம், ஊனம், எச்சம், கயம், கிணம், தேய்வு, நிரப்பு, விகலம்.

குற்றம்—அரி, அரிப்பு, அரில், ஆசு, இழிவு, ஏசு, ஏதம், கசடு, கடவை, கரில், கழிப்பு, களங்கம், களை, கறை, காசு, குறை, கொழிப்பு, கோது, சழக்கு, செயிர், தட்டு, தப்பு, தவறு, தீங்கு, தீது, துகள், தோம், நவை, நறை, பழி, பழுது, பிழை, புகர், புரை, போக்கு, மறு, மாசு, மானம், மிறை, மை, வசை, வடு, வண்டு, விடல், விழுதி.

குன்றிக்கொடி—குஞ்சம்.

கூ

கூகை — உளமன், கவுசிகம், நிசாசரி, பெரும்புள்.

கூடல்—குவிதல், சங்கு, பயினி, புல்லல், பொருந்தல், மணத்தல்.

கூடிநிற்றல்—இசை, இசைப்பு, உடங்கு, ஒருங்கு.

கூடு—கூண்டு, பஞ்சரம்.

கூடை—இறைவை, புட்டில், வட்டிகை.

கூட்டம்—அவை, ஆசிடை, இராசி, இனம், ஈட்டம், ஈண்டல், ஐமை, கணம், கருவி, களரி, குப்பை, குலம், குவவு, குவால், குவிதல், குழாம், குழு, குழுமல், கூளி, கோட்டம், கோட்டி, சங்கம், சஞ்சயம், சமாசம், சமவாயம், சமூகம், சமுதாயம், சயம், சரி, சவை, சாலம், ஞாட்பு, திரள், தூறு, தொகுதி, தொகுத்தல், தொகை, தொழுதி, தொறு, தோடு, நளி, நிகரம், நிகாயம், நிவகம், பிருந்தம், மூகை, மேளனம், மொய், யோகம்.

கூதாளிச்செடி—கூதாளம், துடி.

கூத்தர்பெயர்—நாடகனைக்காண்க.

கூத்தினூல்—பரதம்.

கூத்தின்விகற்பம்—அலேப்பு, இலயம், உள்ளாளனம், கடகம், கரணம், குனிப்பு, கூடை, கொந்தளம், சிங்களம், சேசிகம், பவுரி, பிரமரி, மலேப்பு, மல், வீரட்டானம்.

கூத்து — இலயம், கன்றூன், குரவை, தாண்டவம், துணங்கை, தூக்கு, நடம், நடனம், நடை, நட்டம், நாடகம், நாட்டியம், நிருத்தம், பழகம், பரணி, பரதம், புரியம், மண்டிலம், வாணி, அன்றியும் தேவர்க்காடுங்கூத்து. அணங்கு, ஆஞ்சி, கழங்கு, வெறியாடல், வேலனாடல்.

கூந்தற்பனே — கூந்தற்கமுகு, தாலம், பூகம்.

கூப்பிடல்—அலறல், அழைத்தல், கதறல், கத்துதல்.

கூர்மை—அயில், அரி, அளம், அள், ஆர், உசி, எஃகு, கடி, தாரை, நிசிதம், நுணுக்கம், பூ, வசி, வயிரம், வள், வை.

கூர்மையின்மை—மந்தம்.

கூறியதுகூறல்—புனருத்தி.

கூறுபாடு—திறம், வகை.

கூனன்—கூன், கோணன்.

கெ

கெடுதல்—அவிதல், அழுங்கல், இரிதல், இறுதல், உடைதல், ஒருங்கல், கந்தல், குறைதல், சிகல், சிதைதல், சிந்தல், தபுதல், தௌவல், நந்தல், படல், பொடிதல், மங்கல், மடிதல், மூரிதல், வட்கல், விளிதல், வீதல்.

கெண்டிகை—கரகம், கெண்டி, கோடிகம்.

கெண்டைமீன்—கயல், சபரம், சேல்.

கெந்தபொடி—சுண்ணம்.

கெளிற்றுமீன்—கெளிறு.

கே

கேகயப்புள்—அசுணமா, சிஞ்சுகம்.

கேடகம் — கடகம், கிடுகு, தட்டு, பரிசை, பலகை, மறை, வட்டணம், வட்டம், வேதிகை, அன்றியுந் தோலாற் செய்தது, தோல், தோற்பரம், பிரம்பினாற்செய்தது, தண்டை, வள்ளி, நெடும்பரிசையின்பெயர், நெடியவட்டம், மரவட்டம்.

கேடு—அரிட்டம், அழிவு, ஆனி, இழிவு, இழுக்கு, இறல், ஏதம், கயம், சிதைவு, சுதம், சேதம். தா, துரிதம், நட்டம், பாடு, மடி, மிகை, வழுவு.

கேட்டைநாள்—இந்திரநாள், எரி, செந்தழல், சேட்டை, வல்லாரை, வேதி.

கேது—கதிர்ப்பகை, சிகி, செம்பாம்பு, மதிப்பகை, மதியுணி.

கேளாமை—வாளா, வெளா.

கை

கை—அத்தம், கரம், கைத்தலம், சயம், தோள், பாணி.

கைகோத்தாடல்—குரவை.

கைக்கவசம் — ஆசு, கைக்கட்டி, கைப்புடை.

கைத்தாளம் — கஞ்சம், கிட்டி, கிணி, பாண்டில்.

கைம்பெண் — அமங்கலி, கலன்கழிமடந்தை, கைமை, கைனி, திருவிலி, விதவை.

கைம்பெண்பிள்ளை—கோளகன்.

கைம்மணி— எல்லரி, படலிகை, பரந்தவட்டம், வட்டம்.

கையாந்தகரை—அறுபதம், கோகனம்.

கைவளை — கன்று, குருகு, சங்கு, சரி, சூடகம், தொடி, வண்டு, வள்ளி, அன்றியும், பிள்ளைக்கைவளையின்பெயர், பிடிகம்.

கொ

கொக்கு — குரண்டம், பலாகம், புதா, மஞ்சுகம்.

கொசுகு—அசவல், அருலம், அருல். உலங்கு, கொதுகு, சகல், தும்பு, நுளம்பு, நிலம்பி, நுளம்பு, நொள்ளல், மசகம், முருல், வலு.

கொடாமை—கரத்தல், கரவு, நிறுத்தல், மறுத்தல், மாற்றல்.

கொடி—கதலி, கதலிகை, கத்திகை, கேதனம், கேது, சத்தி, சருத்தி, துகிர், துவசம், தோகை, படம், பதாகை, விலோதனம், சிறுகொடியின்பெயர், கத்திகை, வீதியிற்கட்டியகொடியின்பெயர், விடங்கம்.

கொடிக்கொத்தான்—நூழில்.

கொடியினுட்படர்கொடி — இலதை, நூழில், வல்லி, வள்ளி.

கொடுங்கை—மதலை, விடங்கம்.

கொடுமை—அகோரம், உக்கிரம், உறைப்பு, உற்பாதம், கடூரம், கடுமை, கரில்,

கலாம், குரூரம், கூரம், கோடணை, கோரம், சடம், சண்டம், நாமகேது, பூதி, வக்கிரம், வஞ்சம், விபூதி.

கொடுமையுள்ளோன்—வெய்யோன்.

கொடுவாள்—அரிவாள், குயம், புள்ளம்.

கொட்டாவிவிடுதல்—ஆவலித்தல், ஆவித்தல்.

கொண்டாடல்—குலாவல், பாராட்டல், மெச்சல்.

கொத்தமல்லி—உருளரிசி.

கொத்தான்செடி—நந்தை.

கொத்து—குச்சம், குப்பு, குலை, சாறு, தாறு, படு, குலையுள்ளன, ஈந்து, கமுகு, காந்தள், தெங்கு, பனை, வாழை, முதலாயின, தாறுள்ளன, ஈந்து, கமுகு, வாழை.

கொப்பரி—கடாரம், கொப்பரை, தகளி.

கொப்பளித்தல்—உமிழ்தல், உமிழ்தல், ஒக்குதல், காலல், கொப்புட்டல், பிலிற்றல், பிளிர்த்தல், பில்கல்.

கொப்பிகொட்டல்—கைகுவித்தாடல், கைகூப்பல், கைகொட்டி, கொம்மை.

கொப்புளம்—கொப்புள், கொம்மை, மொக்குள்.

கொப்பூழ்—ஆகு, இதலை, இலஞ்சி, உதரி, நாபி, பொகில்.

கொய்சகம்—நீவி.

கொலை—அசனம், ஊறு, ஊறுகோள், காதம், காதை, கோள், நிகாரணம், நிசாரணம், நிபேதனம், நாசம், பராசனம், பிஞ்சம், மறம், மாரணம், வதை, விசரம், விசசனம், விறுதம்.

கொலைசெய்வோன்—காதகன், காதன், சாருகன், நிகாரணன், நிசாரணன், நிபேதனன், பராசனன், பிஞ்சகன், வதன், விறுசன்.

கொல்லல்—அடுதல், இருத்தல், எருக்கல், எற்றுதல், ஒழித்தல், களைதல், காதுதல் கோறல், சட்டித்தல், சவட்டல், செகுத்தல், செகிடடல், செறித்தல், செற்றுதல், தெறுதல், தொலைத்தல், நீக்கல், படுத்தல், மாய்த்தல், முருக்கல், வதைத்தல், வீட்டுதல்.

கொல்லன்—கருமான், மறுவன்.

கொல்லை—ஆவலம், துடவை, தொடுவு, தோட்டம், படப்பை, பாவகம், அன்றியும் பழங்கொல்லையின்பெயர், விதைப்புனம், காடுவெட்டிச்சுட்ட கொல்லையின்பெயர் முதை.

கொழிஞ்சி—கோளி.

கொழித்தல்—தெளித்தல், தெள்ளுதல், வரன்றல்.

கொளல்—கவர்தல், வவ்வல், வளைத்தல், வாருதல்.

கொள்—காணம், குலுத்தம், முதிரை.

கொள்ளல்—ஏற்றல், கொளல், கோடல், வாரதல், வாங்கல்.

கொள்ளிக்கட்டை—தெருகிழி.

கொள்ளோ—கொண்டி, சூறை.

கொள்ளையிடல்—கவரல், வவ்வல், வாரல்.

கொறுக்கை—எருவை, கொறுக்கச்சி, சரம், சரவணம், வேழம்.

கொன்றைமரம்—ஆர்க்குவதம், இதழி, கடுக்கை, தாமர், மதலை.

கோ

கோங்குமரம்—கன்னிகாரம், ஞாழல், தருமோற்பலம், பவினி, பிணர்.

கோடாலி—குடாரம், கோடரி, தாத்திரம், நவியம்.

கோடை—வேனில்.

கோட்டான்—உலூகம், குடிஞை, கூகை, பொய்கை.

கோட்டை — அரணம், அரண், அரலை, அருப்பம், ஆவரணம், கவை, வல்லை; அன்றியுமலைமேற் கோட்டையின்பெயர், அழுவம், துருக்கம், துர்க்கம், அது நால்வகைப்படும், கடலரண், காட்டரண், மதிளரண், மலையரண்.

கோட்டையிற்கள்ளவழி—கற்படை, சுருங்கை.

கோணாய்—தோண்டான்.

கோதாவரி—விருத்தகங்கை, அதன்பிரிவு, கௌதமநதி.

கோதும்பை—கோதி.

கோத்திரம்—உம்பல், குடி, சந்ததி, சந்தானம்.

கோபத்தின்பெயர் — சினத்தைக்காண்க.

கோபுரம்—சிகரி.

கோபுரவாயில் — அரிகூடம், ஆத்தானம், கோட்டி, கோபுரம்.

கோபுரவாயிற்கதவுவிட்டுப்புகும்வழி—புதவு, பூழை.

கோபுரவாயிற்றிண்ணை—அளிந்தம்.

கோயிலின்பெயர்—தேவர்கோயிலைக்காண்க.

கோரை—எருவை, பஞ்சாய், அன்றி புந்திரள்கோரை, சாய், வாட்கோரை, செருந்தி, கோரங்கிழங்கு, களம், முத்தக்காசு.

கோலஞ்செய்வோள்—வண்ணமகள்.

கோல்—காண்டம்.

கோவேறுகழுதை—வேசரி.

கோவைக்கொடி—கொவ்வை, தொண்டை, விம்பம்.

கோழி-ஆண்டலை, காலாயுதம், குக்குடம், குருகு, வாரணம், இதனாண், சேவல்

கோழை—ஐ, கபம், காசம், காசு.

கோளன்—பிசுனன்.

ச

சகாயம் — இணை, உதவி, உபகாரம், துணை, துப்பு.

சக்கரவாகப்புள்—கோகம், சகோரம், சக்கரம், நேமிப்புள், பெருங்குருகு.

சக்கராயுதம்—அரி, ஆழி, எஃகம், ஒளிவட்டம், சுதரிசனம், திகிரி, நேமி, பருதி, வட்டம், வளை.

சக்கிலியர் — சருமர், செம்மார், துன்னர், தோற்றுன்னர், பொல்லர்.

சங்கறுப்போர்—வளைபோழ்நர்.

சங்காத்தி—அருகன், ஆத்தன், சமதன், அன்றி புஞ்சினேகிதனைக்காண்க.

சங்கிலி — அந்துகம், இடங்கணி, சிருங்கலம், துவக்கு, தொடர், அன்றியும் பாதசங்கிலி, தளை.

சங்கு—இடம்புரி, இப்பி, ஊரி, கம்பு, கட்புள், கூனல், கோடு, சுத்தி, சுரிமுகம், தரா, நத்தம், நத்து, நந்து, நாகு, பணிலம், புரி, மனவு, வண்டு, வளை, வளையகம், வாரணம், வெள்ளை, இதனாண், ஏறு.

சங்குமணி—அக்கு.

சடை—கிடை, குடிலம், கோடீரம், சடிலம், பின்னல், வேணி.

சடைமுனிவர்—தாபதர்.

சட்டப்பலகை—கிரிகு.

சட்டி—குண்டை, விசளை.

சட்டுவம்—சிலாகம், தவ்வி. தருவி.

சட்டை—அங்கி, கஞ்சுகம், கஞ்சுகி, கஞ்சுளி, காஞ்சுகம், காஞ்சுகி, குப்பாயம்,

கைப்பை, மெய்ப்பை, வாணம், வாரணம்.

சண்டாளர் — அகலர், இழிஞர், கவுண்டர், களைஞர், கனகதர், குறுங்கர், கொலைஞர், புலைஞர், மாதங்கர், வங்கர்.

சதங்கை — காலணி, கிண்கிணி, சிறுமணி.

சதுரக்கள்ளி—கண்டீரவம், வச்சிரம், வச்சிராங்கம்.

சதையநாள்—குன்று, சுண்டன், செக்கு, போர், வருணனாள்.

சத்திக்கொடி—தாடிமஞ்சம்.

சத்திபண்ணல்—உக்காரம், உமிழ்தல், ஓங்கல், கக்கல்.

சத்திரம்—மடம்.

சந்தனம்-அனுக்கம், ஆரம், ஈகம், கோரவாரம், சந்தம், சந்திரதிலகம், சந்து, சாந்தம், படீரம், மலயசம், மலையாரம்.

சந்திரனாள்—கலை, திதி, விளக்கம், அன்றியுஞ் சந்திரனொருகலை தெரியுமிரா, சினிவாலி, கலைதெரியாவிரா, குகு, முன்பக்கத்தின்பெயர், சுக்கிலம், பூருவம், பின்பக்கத்தின்பெயர், அபரம், கிருட்டிணம், அன்றியுஞ் சந்திரனுட்கூறுபாடு, கலை, மூன்றுநாள்வட்டம், பக்கம், முதற்பக்கம், நந்தை, இரண்டாம்பக்கம், பத்திரை, மூன்றாம்பக்கம், சயை, நான்காம்பக்கம், இருத்தை, ஐந்தாம்பக்கம், பூரணை.

சந்திரனொளி—சந்திரிகை.

சந்திரன் — அமுதகதிரோன், அம்புலி, அரி, ஆசசிகன், அலவன், அல்லோன், ஆலோன், இந்து, இமகரன், இராக்கதிர், இனன், உடுபதி, உடுவின்வேந்தன், கலாநிதி, கலையினன், களங்கன், குபேரன், குமுதநண்பன், குரங்கி, சசி, சிதன், சுதாகரன், சோமன், தண்சுடர், தண்ணவன், தராபதி, தானவன், திங்கள், தெவ்வு, நிசாகரன், நிசாபதி, நிலவு, பசுங்கதிர்த்தே, மதி, மதியம், மானேந்தி, முயலின்கூடு, விது, வீபத்து, வெண்கதிரோன், வேந்தன், அன்றியுமிளஞ்சந்திரன்பெயர், குழவி, பிறை.

சந்து—கத்து, கந்து, கொளுத்து, பொருத்து, மூட்டு.

சந்தேகத்தின்சொல் — எவன், என், கொல், யா, யாது, யாதோ.

சந்தேகம்—அயிர்ப்பு, அனுமானம், ஐயம், கடுத்தல், சகடு, சங்கை, செத்து.

சமணமுனிவர்—சாரணர், சமணதவத்தோர்பெயர், ஆசீவகர்.

சமணர்—அருகர், சாவகர், சைனர்.

சமயம்—அமைதி, அவகாசம், அற்றம், ஓரை, காண்டம், தருணம்.

சம்பங்கோழி—கம்புள்.

சம்மட்டி—கூடம்.

சம்மதித்தல்—அமைதல், அனுமதி, இணங்கல், உடன்படல், நேர்தல், அன்றியும், உடன்படலைக்காண்க.

சரச்சுவதி—அயன்மனைவி, இசைமடந்தை, உலகமாதா, கலைமகள், காயத்திரி, சாவித்திரி, ஞானமூர்த்தி, தண்டாச்சிறப்பினள், தூயாள், நாமகள், நான்முகன்கிழத்தி, பனுவலாட்டி, பாமகள், பாமுதல்வி, பாரதி, பிராமி, பூரவாகினி, வாக்காள், வாணி, வெண்டாமரையாள், வெண்சலசமுற்றாள், வெள்ளைநிறத்தாள், வெள்ளைமெய்யாள்.

சரமணிக்கோவை-கலாபம், தோரை.

சரி—கைவளை, காற்சரிக்குங்கைச்சரிக்கும்பெயர், பரியகம்.

சரித்திரம்—கையாறு, சரிதம், சரிதை, சாரித்திரம், சீலம்.

சருக்கரை—அக்காரம், அயிர், அமுது, கட்டி, கன்னல், குடம், சூரம், சயம், பஞ்சதாரை, பாகு, விசயம்.

சர்ச்சரைவடிவு—பிணர்.

சலசூத்திரம்—அம்பி, கம்பி, காராம் பி, கிழார், பூட்டை.

சலஞ்சாதித்தல்—கறுவு, சாதனை, செறும்பு, செற்றம், தொந்தம், வயிரம், வேரம்.

சலதாரை—அங்கணம், சுருங்கு, தூம்பு, புழல்.

சலாகை—சராவம், நாராசம்.

சவை — அவை, கோட்டி, சங்கம், சமூகம், சாலம், அன்றியும், தருமசவை, ஆத்தானம்.

சனி—அந்தணன், அந்தன், கதிர்மகன், கரியவன், காரி, கிழ்மகன், சந்தில், சவுரி, சாவகன், தமனியன், நீலன், நோய்முகன், பங்கு, மந்தன், முடவன், முதுமகன், மேற்கோள்.

சா

சாட்சி—கரி.

சாணைக்கல்—சிலாவட்டம்.

சாதகப்புள்—சாரங்கம்.

சாதகமெழுதல்—சனனமெழுதல்,

சாதல்—அருகல், அலன்றல், இல்லென்றல், இறத்தல், உலத்தல், ஒழிதல், ஒய்தல், கழிதல், தபுதல், தவறல், துஞ்சல், துவன்றல், பொன்றல், மடிதல், மாய்தல், மாளல், முஞ்சல், முடிதல், மூசல், விடல், விளிதல், வீடல், வீதல்.

சாதியின்பெயர்—குலத்தைக்காண்க.

சாதிலிங்கம்—இங்குலிகம், குலிகம்.

சாந்து—கலம்பகம், கலவைச்சேறு, களபம், காலேகவண்ணம், பீதம், வண்ணம், விரை, நால்வகைச்சாந்தின்பெயர், காலேகம், பீதம், புலி, வட்டிகை, பலவற்றுங்கூட்டிய குழம்பின்பெயர், கலம்பகம், கலவை, களபம், செச்சை, தேய்வை. சாந்திலுடலிலிடுங் கோலத்தின்பெயர், தொய்யில், நுதலிலிடுங்குறியின்பெயர், திலகம், திலதம், புண்டரம்.

சாமம்—யாமம்.

சாமரம்—ஆகு, கவரம், கவரி, சவரம், சவரி, சீகரம், நரை, வெண்மயிர்.

சாம்பல்—அடலை, பலி, பூதி, வெண்பலி.

சாயை—இயல், சாயல், நிழல்.

சாய்தல்—இடைதல், இரிதல், உடைதல், கெடுதல், சரிதல், நெரிதல், வழுவுதல்.

சாய்ந்தோர்மேற்படராமை-தழிஞ்சி.

சாரைப்பாம்பு—இராசிலம், இலஞ்சி. துண்டம்.

சார்தல்—அணவுதல், அண்ணுதல், சார்ச்சி, தொடல், தோய்வு, நணுகுதல், பிடித்தல், புணர்தல், புல்லல.

சாவு—அந்தம், அனிமாலினம், இலயம், இறப்பு, இறுதி, உலப்பு, சமாதி, நாசம், நிதனம், நெடுந்துயில், பஞ்சதம், பஞ்சதை, மரணம், மாய்வு, யோகம், விளிவு, வீ, வீவு.

சாறடை—திரிபுரி.

சி

சிங்கம்—அரி, அறுகு, ஆளி, கண்டீரவம், காளி, கேசரி, கொடும்புலி, கோளரி, சீயம், தெரிமா, நகாயுதம். பஞ்சானனம், மடங்கல், மாபுலி, மிருகராசன், முடங்குளை, வட்புலி, வயப்புலி, வயப்போத்து, வயமா, இதன்பெண், பெட்டை, இதன்குட்டி போதகம்.

சிங்கவிராசி—அரிமா, ஆளி, ஐயானனம், புலி, சிங்கம்புலி இவற்றின்பெயரெல்லாம்பெறும்.

சிங்காசனம்-அரியணை, பத்திராசனம்.

சிச்சிலிக்குருவி—கவுதம், சிரல், தித்திரி, பொன்வாய்ப்புள்.

சித்திரகாரர்—ஓவியர், சித்திரர், சிற்பர், மோகர், யவனர்.

சித்திரகாரர்வீதி—ஆவேசனம்.

சித்திரகூடம்—அம்பலம், தெற்றி.

சித்திரப்படம்—கிழி.

சித்திரமெழுதல் — இரேகை, தீட்டல், பொறித்தல், வரித்தல், வனைதல்.

சித்திரம்—ஓவியம், துகிலிகை, வட்டிகை.

சித்திரைநாள்—அறுவை, ஆடை, சுவை. செல்வி, தச்சன், துவட்டா நாள், துசு, நடுநாள், நெய், பயறு, மீன்.

சித்திரைமாதம்—சைத்திரம், மது.

சிந்தல்—உகுத்தல், உளர்தல், சிதர்தல், தவர்தல், தூவல்.

சிந்தூரம்—சேலேகம்.

சிரமஞ்செய்தல்—உழக்குதல், பருமித்தல்.

சிரிப்பு—ஆசம், ஆர்ப்பு, இளி, நகை, முறுவல், மூரல், அன்றியும் அவமதிச்சிரிப்பு, அசி, ஆசியம், இளி.

சிலந்திப்பூச்சி—உலூதை, சிலம்பி.

சிலப்பக்கூடம்—அரங்கம்.

சிலம்பிற்பெய்தபருக்கைக்கல்- அரி, சிரம்பம், சிலம்பம்.

சிலம்பு—அரவம், அரி, ஞெகிழி, தளை, நூபுரம், பரிபுரம்.

சிவசமயத்துட்சமயத்தோர்— காளாமுகர், சைவர், பாசுபதர், மாவிரதியர், வாமர், வைரவர்.

சிவப்பு—அத்து, அரக்கு, அரத்தம், இங்குலிகம், இராகம், உலோகிதம், கிஞ்சுகம், குருதி, குலிகம், சிந்தூரம், சிந்தூரம், செக்கர், செம்மை, செய், சே, சேதகம், சேது, சேத்தல், சேத்து, சேந்து, சேப்பு, சோணம், சோணிதம், துப்பு, துவர், பாடலம், பாடலம், பூவல், அன்றியுமிகுசிவப்பு, அருணம், கறுப்புகலந்தசிவப்பு, தூமலம், தாமிரம், பொன்மைகலந்தசிவப்பு, பிங்கம், பிசங்கம்.

சிவல்—பகண்டை.

சிவனாயுதங்கள்—சூலம், பாசம், பினாகமென்னும்வில்.

சிவனூர்தியுங்கொடியும்—விடபம்.

சிவனைம்முகம்—அகோரம், ஈசானம், சத்தியோசாதம், தற்புருடம், வாமம்.

சிவன்—அந்தகாரி, அந்திவண்ணன், அரவணிந்தோன், அரன், அழலாடி, அழலேந்தி, அனந்தன், ஆதி, ஆலமர்கடவுள், ஆனந்தன், இறைவன், ஈசானன், ஈச்சுரன், ஈமத்தாடி, உமாபதி, உருத்திரன், எண்குணத்தோன், எண்டோளன், ஏறூர்ந்தோன், ஐமுகன், கங்காதரன், கங்காளன், கங்கைவேணியன், கண்ணுதல், கபாலி, கயிலையாளி, கரியன், கறைமிடற்றோன், காமநாசன், காமாரி, காலகாலன், கிரிசன், கிரீசன், குன்றவில்லி, கூற்றுதைத்தோன், கொன்றைசூடி, சங்கரன், சசிதரன், சடைமுடியோன், சதாசிவன், சந்திரசேகரன், சம்பு, சுடலையாடி, சூலபாணியன், சூலி, சோதி, ஞானமூர்த்தி, தந்திபுரியோன், தற்பரன், தாணு, திரிபுராந்தகன், திரியம்பகன், நக்கன், நந்தி, நந்திகேசுரன், நம்பன், நித்தன், நிருமலன், நீலகண்டன், நீறணிந்தோன், பகவன், பசுபதி, பரசுபாணி, பரமன், பர்க்கன், பவன், பாண்டரங்கன், பார்வதிகொழுநன், பிஞ்ஞக

கன், பித்தன், பிறப்பிலி, பிறைசூடி, பிநாகபாணி, புரமூன்றெரித்தோன், புலித்தோலுடையோன், பூதநாதன், பெருமான், பேயுடனாடி, மகேச்சுரன், மங்கைபாகன், மழுவாளி, மறைமுதல், மாதேவன், மாலயற்கரியோன், மானிடமேந்தி, முக்கண்ணன், முன்னோன், மூர்த்தி, யானையுரித்தோன், யோகி, வரன், வாமதேவன், விடைக்கொடியோன், விடையோன்.

சிவன்கூத்து—காபாலம், கொடுகொட்டி, பாண்டரங்கம்.

சிவன்புதல்வர்—குமரன், விநாயகன், அன்றியும்சிவனிந்திரியத்தாற்றிருமாறுகையிற்பிறந்தபுத்திரன், ஐயனார்.

சிவன்மனைவிகள்—கங்கை, பார்வதி.

சிவேதை—பகன்றை.

சிள்வண்டு—சிதடி, சிமிலி, சில்லி, சில்லை, சில்லை, சிள்வீடு, நெடி.

சிறுகிளா—சாகம், சாகினி, சில்லி, மேகநாதம்.

சிறுசவளம்—குந்தம்.

சிறுசின்னம்—தாளா, பீலி.

சிறுசெண்பகம்—கருமுகை, சாதி, பித்திகை, மாலதி.

சிறுநாறு—அரில், அறல், இறும்பு, பதுக்கை, பொற்றை.

சிறுபூளை—உழிஞை.

சிறுமை—அணு, அற்பம், ஆசு, இறை, கன்று, கிஞ்சம், கிலம், கை, சிறுவரை, சின்னம், தனு, தன்னம், திணை, தொசம், பையுள், முளரி, வஞ்சம், வறிது.

சிறை—காவல், சிக்கம்.

சிறைப்படல் — தளைப்படல், வலைப்படல்.

சிற்பாசாரியர் — மண்ணீட்டாளர், மறைதெரிந்தோர்.

சிற்றில்—குடங்கர், குடிசை, குடில், குரம்பை, கூரை.

சிற்றுண்டி—அங்குலி, அப்பம், இடி, பிட்டு.

சினக்குறிப்பு—கனூறல், கறுப்பு, கன்றல், காந்தல், குறுகுறுப்பு, கொதித்தல், சிவப்பு, சுளித்தல், சுளிவு, புகைதல், புழுங்கல், பைத்தல், வெதிர்ப்பு, வெய்துறல்.

சினம்—உடற்றல், உடன்றல், உருத்தல், உறுக்கல், கடிதல், கடுத்தல், கதம், கலாம், கறுவம், காத்திரம், காய்தல், குரோதம், கோபம், சினவுதல், சீற்றம், சுளித்தல், சுளிவு, செயிர், செற்றம், துனி, தெழித்தல், தெழுத்தல், மறம், முனிதல், முனிவு, முனைவு, விடைதல், வியர்ப்பு, வெகுளி, வெறுதல், வேகம், அன்றியும் பெருங்கோபத்தின்பெயர், உரறல், உருத்தல், உருத்திரம், கரிதல், கனிதல், குருத்தல், கொந்துதல், கோம்பல், சிறல், தீவிரம், விடைத்தல், வெம்பல், தணியாக்கோபத்தின்பெயர், கறுவு, சலம்.

சினேகம்—இகுளை, கருவி, களன், கேண்மை, கேள், சிரேயம், தொடர்பு, நட்பு, நவம், பக்கம், மித்திரம்.

சினேகிதர்—ஆர்வலர், ஆவலர், இல்லுநர், எட்டினர், ஒட்டுநர், ஒல்லுநர், ஒன்றுநர், காதலர், காதலித்தோர், சேர்ந்தோர், துன்னுநர், தொடர்ந்தோர், நசைநர், நயந்தார், நயவர், நல்லவர், நள்ளுநர், நேர்ந்தார், பசைந்தார், புரிந்தோர், புல்லுநர், பெட்டார், மித்திரர், மேவினர், விழைந்தோர், வேட்டோர்.

சீ

சீக்கிரத்தின்குறிப்பு—ஐயெனல், கதுமெனல், குத்திரம், கோரம், சண்டம்,

ஞெரோலெனல், ஞெள்ளல், நொய்தெனல், பொருக்கெனல், பொள்ளெனல், வெய்தெனல்.

சீக்கிரமுடையோன்—கவனன், வேகி.

சீக்கிரம்—ஆசு, ஈண்டு, ஒல்லை, கடி, கடுகல், கடுப்பு, கதழ்வு, கவனம், சடுதி, சபதி, சவம், துனைவு, துரிதம், துருசு, துவல், நொறில், பரி, முடுகல், வல், வல்லை, விசை, விதப்பு, விரைவு, வெம்மை, வெறி, வேகம்.

சீதை—சானகி, செய்யாள், மைதிலி, வைதேகி.

சீந்திற்கொடி—அமுதவல்லி, சீவந்தி.

சீப்பு—சங்கம், சிக்கம், மயிர்வாரி.

சீலை — அம்பரம், அறுவை, ஆசாரம், ஆசிடை, ஆடை, ஆவரணம், இடைதல், இலக்காரம், உடுக்கை, உடை, ஏடகம், ஒலியல், கஞ்சிகை, கண்டை, கத்தியம், கந்தை, கப்படம், கலிங்கம், கலை, காடகம், காண்டம், காழகம், கூறை, கோசிகம், கோடி, கோடிகம், சம்படம், சம்பரம், சாடி, சிற்றில், சீரை, சூடி, சேலை, தானை, துகில், தூசு, தூட்டி, தூரியம், தோக்கை, நீவி, நீவியம், பஞ்சு, படாம், பட்டம், பட்டி, பட்டிகை, பரிவட்டம், பிடியல், புங்கம், புடைவை, புட்டம், புனை, மடி, மாறுகம், மேகலை, வட்டம், வட்டுடை, வத்திரம், வாசம், வாதனம், அன்றியும் பட்டுச்சீலையின்பெயர், கவுசிகம், காம்பு, சோசிகம், தேவாங்கம், நேத்திரம், பணி, பரனம், பாளிதம், நற்சீலையின்பெயர், நாகம், பாரி, மரவுரியின்பெயர், ஆசினி, இறைஞ்சி, சீரம், சி[illegible]வரம், வற்கலை, மயிர்ப்படாத்தின்பெயர், மயிரகம், வயிரியம், சீலைத்துணியின்பெயர், சிதர், சிதலை, சீரை, பட்டிகை, பறிவை, சித்திரப்படாத்தின்பெயர், புத்தகம்.

சு

சுக்கிரன்—அசுரர்மந்திரி, அநாவிலவன், ஆசான், உசனன், ஒள்ளியோன், கவி, காப்பியன், சல்லியன், சிதன், [illegible]தகன், சுங்கன், தைத்தியமந்திரி, நற்கோள், பளிங்கு, பார்க்கவன், பிரசுரன், பிருகு, புகர், புயல், மழைக்கோள், வெள்ளி.

சுக்கு—சுண்டி, நாகரம்.

சுடுகாடு — அறக்காடு, இடுகாடு, இறந்தோர்சேரிடம், ஈமம், காடு, காளவனம், சுடலை, சுடுநிலம், படுகாடு, பிணக்காடு, பிதிர்வனம், புறங்காடு, மயானம், முதுகாடு, வனம்.

சுட்டசாந்து — களபம், சுடுசுண்ணம், சுதை, மண்.

சுட்டி—சுட்டிகை, திலகம், திலதம்.

சுட்டிடைச்சொல்—அ, இ, உ.

சுட்டுச்சொல் — அது, அவன், அவை, அவ், இது, இவன், இவை, இவ், உது, உவன், உவை, உவ்.

சுண்டில்—சுச்சு.

சுத்தஞ்செய்தல்—உவளித்தல், துப்புரவாக்கல்.

சுத்தம்—உபலாளனம், சுசி, சௌசம், துப்பு, தூ, தூய்து, தூய்மை, பவித்திரம், பாவனம், புனிதம், பூதம், மேத்தியம், வால்.

சுமத்தல்—தரித்தல், தாங்கல், தூரியம், தூர்வகம், பரித்தல், பொறுத்தல்.

சுமை—பரி, பாரம்.

சும்மாடு—கடும்பு, சிம்புரி, சுடுவு, சுமடு, சுமையடை.

சுரபுன்னை—வழை.

சுரை—அலாபு, தும்பி.

சுவர்—குட்டியம், பித்திகை.

சுவாலை—இந்தனம், கீலம்.

சுவை—இரதம், சுதை.

சுழலல்—அலமரல், உழலல், உழிதரல், கறங்கல், கொட்பு, சுலவுதல், சூர்த்தல், சொரிதரல், திரிதரல், தெருமரல், பிரமணம், பிரமரி, மறுகல்.

சுழல்காற்று — சாரிகை, சூருவளி, சூறை, வளி.

சுறு—ஏறு, கலை, களிறு, சுறவு, தகர், மகரம்.

சூ

சூடு—சந்தாபம், தாபிதம், நூபிதம்.

சூதகப்பொது—ஆசூசம், புனிறு, அன்றியுமகளிர்சூதகம், இருது, தீட்டு, பூப்பு, வாலாமை.

சூதாடுகருவி—ஆயம், கவறு, கழங்கம், சாரி, சாரிகை, தாசு, தாயம், வட்டு, வல்.

சூதாடுதற்குவகுத்தவறை—அரங்கு.

சூத்திரர் — அயன்பதத்துதித்தோர், இசையுந்தொழிலவர், உழவர், ஏரின்வாழ்நர், களமர், காராளர், சதுர்த்தர், பின்னவர், மண்மக்கள், வளமையர், வார்த்தைத்தொழிலோர், வினைஞர், வெண்களமர், வேளாளர்.

சூரியகிரணம்—கதிர், கரம், தீவிரம்.

சூரியசந்திரரைச்சூழத்தோன்றும்வட்டம்—ஊர்கோள், பரிவேடம், பரிதி, வட்டம்.

சூரியமண்டலம்—விசயம்.

சூரியன்—அண்டயோனி, அரி, அரியமா, அருக்கன், அருணன், அலரி, அழலவன், அனலி, ஆதவன், ஆதித்தன், ஆயிரஞ்சோதி, இரவி, இருள்வலி, இனன், உதயன், எல், எல்லை, என்று, என்றூழ், ஏழ்பரியோன், ஒளி, ஒளியோன், கதிரவன், கனலி, கிரணமாலி, சண்டன், சவிதா, சான்றோன், சித்திரபானு, சுடரோன், சூரன், செங்கதிரோன், சோதி, ஞாயிறு, தபனன், தரணி, திவாகரன், தினகரன், தினமணி, நபோமணி, பகலோன், பகல், பங்கயன், பதங்கன், பரிதி, பர்க்கன், பனிப்பகை, பானு, பாற்கரன், மார்த்தாண்டன், மித்திரன், விகர்த்தனன், விண்மணி, விரிச்சிகன், விரோசனன், வெஞ்சுடர், வெயில், வெய்யோன்.

சூரியன்வாகனம்- ஒற்றையாழித்தேர், பொற்றேர்.

சூரியன்றேர்ப்பாகன்—அருணன், அனூரு, கருடன்மூத்தோன், காலில், சூரசூதன்.

சூலம் — கழு, கழுமுள், காளம், குளிர், சத்தி, முக்குடுமி, முத்தலை, மூவிலை.

சூழ்ந்திடல் — கோலல், சுற்றுதல், சூழ்தல், சூழ்போதல், வலத்தல், வளாகம், வளைத்தல்.

சூளை—சுள்ளை.

செ

செக்கான்—சக்கிரி, நந்தி.

செக்கு—காணம், பூட்டை.

செங்கருங்காலி—சிறுமாரோடம்.

செங்கல்—இட்டிகை.

செங்கழுநீர்—குவளையைக்காணக.

செஞ்சந்தனம்—அட்டி, அனுகம், சந்வியம், பிசனம், மதுரம்.

செண்பகம்—சண்பகம்.

செத்தை — காடு, சிக்கு, சோதினி, தூரால், தூர்வை, நரல், மயல்.

செந்நாய்—அண்டிகம், கொக்கு, கோகம், முடுவல், விருகம்.

செப்பஞ்செய்தல் — சீத்தல், தூய்தாக்கல்.

செம்பஞ்சு—அரத்தம், அலத்தகம், அலத்தம்.

செம்பரத்தை—மந்தாரம்.

செம்பு—உதும்பரம், எருவை, சிருணம், சிருள், சுற்பம், தாம்பிரம், வடு.

செம்போத்து—குக்கில.

செம்மறிக்கடா—அரி, ஏழகம், கம்பளம், தகர், திண்ணகம், மேழகம்.

செம்மறியாடு—கொறி, துருவை, மை.

செம்முள்ளி—குறிஞ்சி.

செயகண்டி—பரந்தவட்டிகை.

செயலின்மை—கையறல்.

செய்கடன்—நியதி, நியமம்.

செய்தல் — அமைத்தல், அயர்தல், ஆடல், ஆற்றல், இழைத்தல், குயிறல், குயிற்றல், சமைத்தல், செய்கை, பண்ணல், புரிதல், மாடல், வினைதல், அறிபுமிக்கசெயல், ஊராண்மை, அரிய செயல், பேராண்மை, தொழிற்பயில்வு, தொறு.

செருந்திமரம்—செங்கோடு, பஞ்சரம்.

செருப்பு — கழல், தொடுதோல், பாதகாப்பு.

செலுத்தல் — அகைத்தல், இயக்குதல், உகைத்தல், உய்த்தல், ஊர்தல், ஏவல், ஒச்சல், ஓட்டல், கடத்தல், தூண்டல், நடத்தல், முடுக்கல்.

செல்வம்—ஆக்கம், இடம், உத்தி, சீர், திரு, நடை, நிழல், பூதி, பெருக்கம், பொறி, போகம், மா, மாடு, வாழ்க்கை, விபவம், விபூதி, விருத்தி, வெறுக்கை.

செவிடர்—வதிரர்.

செவிலித்தாய்—கைத்தாய், கோடாய், தாதி, வளர்த்தாள்.

செவ்வாய்—அங்காரகன், அரத்தன், அழலோன், அழல், அறிவன், ஆரல், உதிரன், குசன், குருதி, செந்நிவண்ணன், சேய், நிலமகன், பௌமன், மங்கலன், வக்கிரன்.

செவ்வை—அந்து, இருசு, செப்பம், செம்மை, செவ்வன், செவ்வு, நெறி, நேர்.

செறித்தல் — அளித்தல், பாரிடு, பெய்தல்.

சே

சேங்கொட்டைமரம் — எரிமுகி, பல்லாதகி, வீரசாகி.

சேமக்கலம்—எறிமணி.

சேம்பு—சகுடம், சாகினி.

சேரன் — உதியன், குடகன், குடக்கோன், குட்டுவன், கேரளன், கொங்கன், கொல்லிவெற்பன், கோதை, சேரலன், பனந்தாரான், பூழியன், பொருநைத்துறைவன், பொறையன், போந்தின்றாரோன், மலையமான், மலையன், வஞ்சிவேந்தன், வானவரம்பன், வானவன், வில்லவன்.

சேரன்குதிரை—பாடலம், அவன்கொடி, விற்கொடி, அவன்மாலை, பனைமாலை.

சேறு — அக்கணம், அசறு, அளக்கர், அளறு, அள்ளல், கலவை, கழனி, காவாழ், கும்பி, குழம்பு, குழை, கூழை, கொள்ளம், சகதி, சிறுமியம், செதும்பு, செய்ம்பல், சேதகம், தொய்யல், தொளி, தொள்ளம், தொள்ளி, தோணி, பங்கம், பூழி, வதி, அன்றியும்பெருஞ்சேறு, நொதி. சேற்றிலெழுங்குமிழி, பூழி, பொகுட்டு.

சொ

சொரிதல்—உமிழ்தல், எக்கர், சோனை, பனித்தல், பொழிதல்.

சொலித்திடல்—இடத்தல்.

சொல்—அசைப்பு, அறை, இசை, இசைப்பு, இயம், உத்தி, உரை, கதை, கரை, காதை, கிளவி, கீர், குயில், கூற்று, செப்பு, தோல், தோற்றம், நுலை, நுவற்சி, நொடி, பகர்ச்சி, பணி, பதம், பயில், பறை, பனுவல், பாணி, புகறல், பேச்சு, மறை, மாற்றம், மொழி, வாக்கு, வாணி, வாய்மை, விளம்பு, விறு, அன்றியும்பயனில்சொல்லின்பெயர், அநர்த்தம், பலரறிசொல்லின்பெயர், பெருஞ்சொல், மறைத்தசொல்லின்பெயர், இடக்கரடக்கல், எக்கர், கூசனம், நிரம்பாமெல்லியசொல்லின்பெயர், உல்லாபம், குதலை, கொஞ்சல், மழலை, மிழலை, மிழற்றல், தேவர்மொழியின்பெயர், சங்கதம், சானுக்கிரகம், இழிசனர்மொழியின்பெயர், அவப்பிரஞ்சம், எல்லாநாட்டின்மொழியின்பெயர், பாத்தம், இவைமூவகைப்படும், வடசொற்றிரிந்தமொழி, தற்பவம், வடமொழிக்கும் பிறபாடைக்கும் பொதுமை, தற்சமம், அவ்வவநாட்டிற்குரியசொல், திசைச்சொல், தேசியம்.

சொல்லுதல்—அதிர்த்தல், அறைதல், ஆடல், இசைத்தல், இயம்பல், இறுத்தல், உரைத்தல், ஓதுதல், கதைத்தல், கத்துதல், கரைதல், கிளத்தல், குயிலல், குயிறல், கூவல், கூறல், சாற்றல், செப்பல், சொற்றல், தெரித்தல், நவிலல், நவிறல், நுவலல், நொடித்தல், பகர்தல், பணித்தல், பயிலல், பயிறல், பரவல், பறைதல், பன்னல், பிதற்றல், பிறழ்தல், புகலல், புகறல், பேசல், மிழற்றுதல், மொழிதல், வகுத்தல், வலத்திடல், வழங்கல், விதித்தல், விரித்தல், விளம்பல், அன்றியும்விடாதுபேசலின்பெயர், கத்துதல், பிதற்றல், சிரித்துப்பேசலின்பெயர், அசதி, நகைச்சொல்லின்பெயர், நயச்சொல், நளினச்சொல், கூறியதுகூறலின்பெயர், புனருத்தி, பரிந்துபேசலின்பெயர், கொண்டாடல், மெச்சல்.

சோ

சோதிடநூல்—எண், கணிதம்.

சோதிநாள்—அனிலநாள், காற்று, தீபம், துணி, துளக்கம், மரக்கால், விளக்கு, வீழ்க்கை, வெறுநுகம்.

சோம்பல்—அசைதல், அலசல், அலைதல், அழுங்கல், ஆஞ்சி, ஆலசியம், சம்படம், சோகம், சோபம், சோம்பு, ஞொள்கல், தளர்ச்சி, துஞ்சல், தூங்கல், மடி, மந்தம், மாழ்தல், மூரி.

சோர்வு—கயக்கு.

சோலை—அடவி, அரி, ஆராமம், உத்தியானம், உய்யானனம், கா, கானம், கோடரம், தண்டலை, துடவை, நந்தனவனம், பூந்தோட்டம், பொழில், மரச்செறிவு, அன்றியுமூர்செறிந்தசோலையின்பெயர், பாணி, வனம், கடற்கரைச்சோலையின்பெயர், கானல்.

சோழன்—அபயன், ஆரக்கண்ணியன், எலுநன், கிள்ளி, கோழிவேந்தன், சூரியன், செம்பியன், சென்னி, நேரியன், நேரிவெற்பன், நேரிறை, புலிக்கொடியோன், புனனாடன், பொன்னித்துறைவன், மால், வளவன்.

சோழன்குதிரை—கோரம், கொடி, புலிக்கொடி, மாலை, ஆத்திமாலை.

சோளம்—இறுங்கு, சொன்னல்.

சோறு—அசனம், அடிசில், அமலை, அமுது, அயினி, அவி, அழுப்பு, அன்னம், உணா, உண்டி, ஊண், ஓதனம், கவளம், கூழ், சதி, சரு, சாதம், சொன்றி, துப்பு, தொடபதம், தோரி, நிமிர்

தல், பதம், பலி, பாத்து, பாளிதம், பிசி, பிண்டம், புகர்வு, புழுக்கல், புளகம், புன்கம், பொம்மல், பொருகு, போசனம், போனகம், மடை, மிசை, மிதவை, மூரல், வல்சி, அன்றியுங் கட்டுச்சோறு, ஆற்றுணா, தோட்கொட்பு, பாதேயம், பொதிசோறு.

சோனகர்—உவச்சர், யவனர்.

ஞா

ஞாழல்—பலினி.

ஞானம — ஆற்றல, உரம், ஓதி, சிதம், போதம், வித்தம், வித்தை.

த

தகழி—இடிஞ்சில், பாண்டில்.

தங்கல்—அசைதல், அல்கல், ஆர்தல், இயங்கல், இருத்தல், இறுத்தல், இறை, [illegible], தாழ்தல், தெவுட்டல், தேறல், வதிதல், வலிதல், வைகல்.

தச்சர் — சித்திரர், [illegible], தபதியர், மரவினையாளர், யாணர்.

தடவல் — உளர்தல், தைவரல், நீவல், வருடல், இவற்றுட் காலைத்தடவலின் பெயர், தைவரல்.

தடாகம்—அயம், அலந்தை, ஆவி, இலஞ்சி, உவளகம், ஏரி, ஏல்வை, ஓடை, கயம், கிடங்கு, குட்டம், குண்டம், குழி, குளம், கேணி, கோட்டம், சரசு, சலதரம், சுனை, சூழி, தடம், தாங்கல், நளினி, நீர்நிலை, பங்கம், படு, படுகர், பட்டம், பண்ணை, பயம், பல்வலம், பொய்கை, மடு, வட்டம், வாவி.

தடி—எறுழ், கதை, தண்டு, அன்றியுங் குறுந்தடியின்பெயர், குணில்.

தடுத்தல் — ஆணை, தகைதல், தட்டல், வாரணம், வாரணை, வாரணையம், வாரித்தல்.

தட்டார்—அக்கசாலையர், செங்கோலவர், சொன்னகாரர், பொன்செய்கொல்லர், பொன்வினைமாக்கள்.

தணக்குமரம்—நுணவை.

தண்டாயுதம் — எறுழ், கதை, சீர், முளை, வயிரம்.

தண்டை—காற்றண்டை, சிர்.

தந்திரியர்—அமாத்தியர், [illegible], விதியர்.

தந்தை—அத்தன், அப்பன், அம்மான், அய்யன், ஈன்றோன், குரவன், சனகன், தப்பன், தாதா, தாதை, பிதா.

தமிழ — திரமிடம், திரவிடம், திராமிடம், திராவிடம்.

தமிழ்க்கூத்தர்—வாயிலோர்.

தமையன்—அண்ணல், அண்ணன், சேட்டன், தலைவன், முன்றோன்றல், முன்னவன், மூத்தோன், வரன்.

தம்பட்டம்—ஆனகம், திண்ம, படகம், பணவம்.

தம்பலப்பூச்சி — இந்திரகோபம், ஈயல், கோபம், மூதா.

தம்பலம்—தம்பல்.

தம்பி — அவரசன், அனுசன், இளவல், இளையோன், உவா, கனிட்டன், பின்னை, பின்றோன்றல், பின்னவன், பின்றோன்.

தயிர்—ததி. பெருகு, முசரு.

தயிர்கடைதறி—வெளில்.

தயிர்கடைதாழி—குடாரு, மந்தனி.

தரா—மதுகம்.

தரித்திரம்—அல்கல், இரப்பு, இலம்பாடு, இல்லாமை, இன்மை, உறுகண், ஒற்கம், குறுவாழ்க்கை, குறை, சிறுமை, நல்குரவு, நிரப்பு, மறல், மிசை, மிச்சை, மிடி, வறுமை.

தரித்திரன் — அற்றான், ஆதுலன், ஆற்றான், இலம்பாட்டோன், இல்லோன், உறுகணாளன், ஏழை, கிஞ்சன், தீனன், துயருழவோன், நல்கூர்ந்தோன், பேதை, மிடியன், வறியோன்.

தருக்கம்—நியாயம், யூகம், வாதம்.

தருப்பை—குசம், குசை, கூர்ச்சம், பவித்திரி.

தருமம்—அறம், சீலம், சுகிர்தம், புண்ணியம்.

தருமராசன் — அறத்தின்மைந்தன், உதிட்டிரன், குந்திபுதல்வன், குவளைத்தாரான், பாண்டுமைந்தன், பொறையன், முரசுக்கொடியோன், மெய்விரதன்.

தலை—உச்சி, உத்தமாங்கம், உவ்வி, கம், சிரகம், சிரம், சென்னி, நவிரம், மத்தகம், முடி, முண்டம், மூர்த்தம், மூர்த்தினி, தலையோட்டின்பெயர், ஓடு, கபாலம், வெண்டலை, தலையோட்டுப்பொருத்து, கரோடி, தலையிற்றரிப்பதின்பொது, சேகரம், தலைச்சாத்து.

தலைக்காவல்—இளை, உக்கிரம்.

தலைக்கோலம்—பங்குசம், பிஞ்ஞகம்

தலைச்சிரா — கிசகம், சித்தகம், சிரகம், தலைத்திராணம்.

தலைப்பாளை—தொய்யகம்.

தலையணை—உபதானம்.

தலைவனைப்பிழைத்தின்றசோரபுத்திரன்—குண்டகன்.

தலைவன்—அன்பன், ஆர்வலன், உரியோன், கணவன், கண்டன், காதலன், காந்தன், காவலன், கிழவன், கேள்வன், கொண்கன், கொழுநன், கோமான், தலைமகன், தவன், துணைவன், நண்பன், நாயகன், பதி, பத்தா, பிரியன், புருடன், பெருமான், மணமகன், மணவாளன், முதல்வன், வல்லவன், வேட்டோன்.

தலைவி—அடிகள், அத்தை, அரசி, ஆசாள், ஆட்டி, இறைமையாட்டி, இறைவி, ஐயை, கிழத்தி, கோமாட்டி, கோமாள், சாமி, செல்வி, பெருமாட்டி, முதல்வி.

தவத்தோர்பீடம்—விட்டரம்.

தவப்பெண்—அம்மை, அவ்வை, ஐயை, கந்தி, கவுந்தி, கன்னி, பைமை.

தவம்—உவவு, தவசு, நன்னிலை, நோற்றிடல், நோன்பு, நோன்மை, படிவம், மாதவம், வாகை, விரதம்.

தவளை—அண்டசம், அரி, காளூரம், தேரை, நீசம், நுணலை, பேகம், மண்டூகம், மனை.

தவிடு—முட்டை.

தழும்பு—அங்கிதம், கசடு, கச்சை, சாய்ப்பு, சுவடு, வசி, வடு, வடுப்படலின்பெயர், கதுவாய்.

தழுவுதல்—ஆலிங்கனம், முயங்கல், விள்ளல்.

தளர்தல—இழுக்கல், ஒல்கல்.

தளர்வு-இட்டளம், உடைப்பு, எளிமை, ஏட்டை.

தளிர்—அலங்கல், உலவை, உல்லரி, கிசம், கிசலம், கிசலயம், கிளை, குழை, தழை, பல்லவம், மஞ்சரி, முறி, வல்லரி.

தள்ளல்-ஊன்றல், நூக்கல், நோன்றல்.

தறித்தல்—எற்றல், கண்டித்தல், காதுதல், தடிதல், துண்டித்தல், பகுத்திடல், பரிதல், வெட்டல்.

தனித்திருக்குமிடம்—ஏகாந்தம், ஒருவந்தம், வேறிடம்.

தனிமை—அந்தரம், ஏகம், ஒருமை, கேவலம், புலம்பு, வீறு.

தனுவிராசி—காண்டீபம், கொடுமரம், சாபம், சிலை, துரோணம்.

தன்மேம்பாடுதானிகழ்த்தல்—நெடுமொழிகூறல்.

தா

தாடி—கட்டம், சிம்வாய், மோவாய்.

தாண்டல்—அகறல், இகுத்தல், கடத்தல், தத்துதல், தரணம், தாவுதல், நீந்தல், பாய்தல், பாவுதல்.

தாமதம்-பாணி, விளம்பம், விளம்பனம்.

தாமரை—அம்புயம், அம்போருகம், அரவிந்தம், ஆய்மலர், இண்டை, கஞ்சம், கமலம், குசேசயம், சதபத்திரம், சரோசம், சரோருகம், சலசம், சா[illegible]ட்ருகு, திருமலர், திருமாலுந்திகோடகம், நளினம், நீரருகம், பங்கயம், பதுமம், பற்பம், புட்கரம், முண்டகம், முளரி, வனசம், வாரிசம், இவையுஞ் செந்தாமரையின்பெயர், கோகனகம், வெண்டாமரையின்பெயர், புண்டரீகம்.

தாமரைககாய்—உராடகம்.

தாமரைக்கொட்டை-கஞ்ஞிகை, பொகுட்டு

தாமரைப்பூ—இராசீவம், இறும்பு.

தாமரையுட்சுருள்—பிசம், வினயம்.

தாம்பூ—கண்ணி, தாமணி.

தாய்—அம்மனை, அம்மை, அவ்வை, அச்சி, ஆயி, ஆய், ஈன்றாள், சநநி, தம்மனை, தவ்வை, தௌவை, பயந்தாள், மாதா, மொய்த்தாய்.

தாழி—அகளி, சாடி, கடம், பதலை.

தாழை—கண்டல், கேதகை, கைதை, மடி, முகரி, முசலி, முடங்கல், முண்டகம்.

தாழ்தல்—இறைஞ்சல், குரங்கல்.

தாழ்த்தல்-ஆழ்த்தல், இருத்தல், தாலல்.

தாழ்வு—அகப்பு, அதம், இழிபு, குறைவு, சாய்வு, தஞ்சம், தண்மை, தாக்க[illegible] வட்டம்.

தாளம்—சஞ்சரம், கஞ்சனம், கிட்டம்.

தாளம்போடல்—ஒத்தறுத்தல், தட்டல், வட்டித்தல்.

தாளவொத்து—சதி, சீர்.

தாளிக்கெட்டி—மஞ்சிகம், மஞ்சி[illegible]

தாள்-சழக்கை, [illegible]ப்பு, தாழ், தாழ்ப்பாள்.

தான்றிமரம்—கலித்துருமம்.

தி

திசை—அம்பரம், அரிதம், ஆசை, [illegible]கு, [illegible]றுடம், காட்டை, கோ, திசை, திக்கு, மாதிரம், வம்பல், விசும்பு.

திட்டை—திடர், பதுக்கை, பாறை, மு[illegible]ரப்பு, ஆற்றிடைமணற்றிட்டை[illegible]யம், புளினம்.

திண்ணியன் — அவனன், [illegible] திறலோன், பன்னகன், பொருநன், மள்ளன், மிண்டன், மிளி, வண்டன், வயவன், வல்லான், வல்லுநன், வயவன், விறலோன், வீரன்.

திண்ணை — குறடு, திட்டை, மண்டபம், வேதி, வேதிகை.

தித்திப்பு — அமுதம், இனிது, இனிப்பு, இனிமை, கனி, சுவாது, சேறு, தீம், தேக்கு, தேம், மதுகம், மதுரம்.

திப்பிலி—[illegible], கலினி, காமன், [illegible]குடலம், பிப்பிலி, மாகதி.

திமிர்தல்—தடவுதல், துழுடல்.

தியானம்—யோகம்.

திரட்சி—அவயல், இராசி, இனம், [illegible]டை, குழாம், கணம், கண்டம், [illegible]தம், குப்பை, குவவு, குவிதல், [illegible] குழியம், கொட்பம், சேகரம், [illegible] சோகம், தானம், திரள்[illegible]

தொகுதி, பந்தம், பிண்டம், பிழம்பு, புஞ்சம், பூகம், மாழை, முடலை, முண்டம், முத்தை, வட்டு, வழி.
திரிகை—தட்டு, பந்து, வட்டம்.
திருடர்—கரவடர், சரவர், கள்வர், கையர், சோரர், தேனர், பட்டிகர், பித்தர், புனையோர்.
திருடல்—கரத்தல், கவர்தல், வவ்வல், வாருதல்.
திருவாதிரைநாள்—ஆதிரை, ஈசனுள், செங்கை, மூதிரை, யாழ்.
திருவிழா—உற்சவம், சாறு, சேறு, தீர்த்தம், துணங்கறல், முருகு.
திருவோணநாள் — உலக்கை, ஓணம், சிரவணம், சோணை, நன்று, மாயோனாள், முக்கோல், வயிரம்.
திரை—அலை, அறல், அறை, கல்லோலம், சிகரம், தரங்கம், வாரம்.
திரைச்சீலை—அவிடி, எழினி, எமம், கஞ்சிகை, கஞ்சுகி, கண்டம், கவழிகை, கழனி, காண்டம், கையடம், படகம், படாம், பாரகம்.
திறக்குதல்—அங்காந்திடல்.
திவவு—கண்டுதி, சொறி.
தினை-ஏனல், அன்றியுங்கருந்தினை, இறடி, கங்கு, செந்தினையின்பெயர், கம்பு, கவலை, பைந்தினையின்பெயர், ஏனல்.
தினைத்தாள்—அருவி, இருவி.
தினைப்புனம்—ஏனல், வளாகம்.
தினைமா—இடி, நுவணம், நுவணை, பிண்டி.

தீ

தீ—அக்கினி, அங்காரகன், அங்கி, அயவாகனன், அரி, அழல், அனல், ஆரல், உதகவன், உதாசனன், எரி, எழுநா, ஒளி, கருநெறி, கனலி, கனல், காலவம், காற்றின்சகாயன், சாதவேதா, சிகி, சித்திரபானு, சுசி, சுடர், சூரன், செஞ்சுடர், சேர்ந்தார்க்கொல்லி, தெருகிழி, தகனன், தபனன், தழல், தனஞ்சயன், தூமகேது, தென்கீழ்த்திசையோன், தேயு, நெருப்பு, பாவகன், முளரி, வசு, வன்னி, அன்றியும், ஆரல்நாள்த்தீயின்பெயர், உத்தரம், உற்கம், கடையனல், தீத்திரள், மடங்கல், வடவாமுகம், வடவை.
தீக்கடைகோல்—அரணி, ஞெலிகோல்.
தீத்திரள்—அனற்றிரள், உற்கம்.
தீப்பொறி — கங்கம், ஞெகிழி, புலிங்கம், காட்டுத்தீயின்பெயர், தாவம்.
தீமை—அந்தரம், அந்தராயம், அலாபம், இன்னல், இன்று, ஊறு, கோள், தீ, தீங்கு, தீது, துட்டு, மாயம், முட்டுப்பாடு, வலாபம், விக்கினம்.
தீர்தல்—நிவாரணம், நீங்கல், மோக்கம், மோசனம், விடுதல், விமோசனம்.
தீர்த்தம்—காண்டம், புட்கரம்.

து

துப்பு—கசிதம், முழை, முழி.
துடைத்தல்—இகுத்தல், துவட்டல், நீவல்.
துடைப்பம் — வாருகோல், விளக்குமாறு.
துணிவு — தெளிவு, தேறல், தேற்றம், அன்றியுங் கருமமுடியுந்தனையும்விடாத்துணிவின்பெயர், ஓர்ப்பு, கடைப்பிடி, குறிக்கோள், தேற்றம்.
துண்டம்—கடிகை, கண்டம், துணி.
துதித்தல்—ஏத்தல், துதி, தோத்திரம், நுதி, பரசுதல், பரவல், பழிச்சுதல், புகழ்தல், போற்றல், மீக்கூறல், மெச்சல், வழுத்தல், வாழ்த்தல், வியத்தல்.
தும்பை—துரோணம்.

துரியோதனன்—அரவக்கொடியோன், காந்தாரிமைந்தன், குருடன்மைந்தன், சுயோதனன், திருதராட்டிரன்மைந்தன், நந்தியாவட்டத்தாமன், மன்னர்மன்னன், வணங்காமுடியினன்.

துரியோதனன்குலத்தோர் — குருகுலத்தார், கௌரவர், பரதர், பாரதர், பௌரவர்.

துருத்தி—தோல், அன்றியும், உலைத்துருத்தி, அத்திரி, உதி, சிவை, பதித்திரி, பெருந்துருத்தியின்பெயர், சிவிறி, பந்தம், மட்டத்துருத்தியின்பெயர், பந்து, நீராவீசுந்துருத்தியின்பெயர், சிவிறி, சிறுதாரை.

துரோணாசாரியன்—கும்பசம்பவன், பாரத்துவாசி, மெய்ந்நூலன், வின்னூலாளன், வேதக்கொடியோன்.

துர்க்கை—அந்தரி, அமரி, அம்பணத்தி, அரியேறி, ஆளிபூர்தி, எண்டோளி, ஐயை, கலையானத்தி, கலைபூர்தி, கன்னி, காத்தியாயினி, கார்த்திகை, குமரி, கொற்றவை, கோற்றி, கௌரி, சக்கரபாணி, சக்கராயுதத்தி, சண்டிகை, சமரி, சயமகள், சுந்தரி, சூலி, தேவி, நாரணி, நாராயணி, நீலி, பகவதி, பாலைக்கிழத்தி, மயிடற்செற்றாள், மாலினியாள், மேதிச்சென்னிமிதித்தாள், வாள்கைக்கொண்டாள், விசயை, விந்தை, விமலை, வீரச்செல்வி, வீரி.

துர்க்கைக்கூத்தின்பெயர்—மரக்கால்.

துலாராசி—கட்டளை, கோல், சீர், தராசு, துலை, தூக்கு, நிறை, வாணிகன்.

துவரை—ஆடகம், ஆடகி, முதிரை.

துவர்ப்பு—கசாயம், துவரம்.

துவளல்—அசைதல், உவளல், ஒல்கல், துவளல், நுடங்கல், நுணங்கல்.

துளசி—குல்லை, துழாய், துளவம், துளவு, பிருந்தைவனம்.

துளைத்தல்—குயிறல், துருவல், தொளிதல், தொள்ளல்.

துளையுடைப்பொருள்—குயில், குழல், குழை, கோகுலம், தண்டு, தொள்ளை, புழல், புழை.

துறவு—சார்பறுத்தல், துறத்தல், நிவிர்த்தி, நீத்தல், நீப்பு, விரத்தி.

துன்பம்—அரு, அரந்தை, அரித்தை, அலக்கண், அலந்தலை, அலந்தை, அல்லகண்டம், அல்லல், இடர், இடுக்கண், இடும்பை, இட்டளம், இரக்கம், இன்னல், இன்னு, உறுகண், உறுவல், எவ்வம், ஏதம், கப்பலை, கலக்கம், கவலை, கவ்வை, கிலேசம், கேதம், கைதவம், கையாறு, கோட்டாலை, சிந்தை, சிறுகு, சிறுகு, சிறுமை, சூர், செல்லல், தாபம், துக்கம், துயர், துரால், துரிசு, துரிதம், துனி, தொய்யல், நடலை, நொ, நோய், படர், பரிவு, பழங்கண், பனி, பாசறை, பிணி, பீடை, பீழை, புன்கண், பைதல், பையுள், மம்மர், மிகை, யாதனை, வருத்தம், விழுமம், வினா, வெய்துறல், வெறுப்பு, வேதனை.

தூ

தூக்கங்கள்—அறை, உத்தி, சல்லி, துணி, தூக்கு, தொங்கல், மதலிகை.

தூக்கணங்குருவி—சிதகன், சிந்தன், தூக்கு, தூதணம்.

தூண்—கந்து, கம்பம், கால், தம்பம், தாணு, தூணம், நிலைபேறு, மதலை.

தூண்டில்—கோல், படிசம், வெளிசம்.

தூதர்—ஒத்தபண்புரைப்போர், வழியுரைப்போர், வித்தகர், வினையுரைப்போர்.

தூபக்கால்—இந்தளம், தடவு, தூபமுட்டி.

தூரம்—சேண், சேய், சேய்மை, நீளம், அன்றியுங் கூப்பிடுதூரத்தின்பெயர், எல்லை, குரோசம், பறவையளவுதூரத்தின்பெயர், கிரவுஞ்சம்.

தூர்த்தர்—இடங்கழியர், காமுகர், நாகரிகர், படிறர், பரத்தர், பல்லவர், விடர்.

தூறு—குன்மம், பஞ்சி, வி...

தூறுதல்—கோள்.

தூற்றல்—பழிகூறல், புறங்கூறல், அன்றியுஞ் சிலரறிந்தபழி தூறலின்பெயர், அம்பல், பலரறிந்த தூறலின்பெயர், அலர், வெறும்புறங்கூறலின்பெயர், குச்சம், குறளை, கொடுவாய், கொண்டியம், தொடுப்பு, பிசினம்.

தெ

தெங்கு — இலாங்கலி, ஏடகம், கேளி, தாழை, தென், நாரிகேளம், நாளிகேரம்.

தெப்பம்—அம்பி, உடுபம், கோலம், தொளம், பகடு, பஃறை, பட்டி, புணை, மிதவை, யாதனம், வள்ளம்.

தெய்வப்பெண்—அணங்கு, சூர்.

மீன்—அண்டசம், சகுலி, சலசரம், மச்சம், மயிலை, மீனம், வகுலி, இதனுண்,

போத்து, இதன்பெண், நாகு, இதன்பிள்ளை, குண்டி, இதன் முள்ளிருந்திடும் சந்நிதியின்பெயர், அயிரி.

மீன்குத்திக்குருவி—சிரல், மீனெறி.

மு

முகடு—மஞ்சு.

முகத்தல் — தோண்டல், மொள்கல், நோண்டல், மொள்ளல்.

முகம் — ஆசியம், ஆனனம், துண்டம், வதனம், வத்திரம்.

முசு—கடுவன், கலை, கள்வன், கோலாங்கூலம், மைமுகன், இருளன், ஓரி, கவி, இதன்பெண், மந்தி.

முடங்கல்—நடங்கல், நுணங்கல், மடங்கல்.

முடவன்—அனூரு, சூதியன், பங்கு.

முடி—கிரீடம், கோடீரம், சுடிகை, சூடிகை, சேகரம், மகுடம், பதுமம்.

முடிதல்—இறத்தல், முற்றுதல், மூவுதல்.

முடித்தல்—நீடித்தல்.

முடியாக்காலம் — ஊழி, மாயவன்யாழ்நாள்.

முடிவு—அந்தம், அந்தரம், இறுதி, ஒடுக்கம், ஒய்வு, கடை, கரை, காண்டம்.

முடுகியல்—அராகம், வண்ணகம்.

முட்டை — அண்டம், அரிட்டம், கரு, குடம்பை, கோசம், சினை.

முட்பன்றி—எய், சமர், சல்லபம், சல்லியம், முண்மா, இதன் முள்ளின் பெயர், சலம், சலலம், சலலி.

முதலை—அண்டசம், இடங்கர், சிஞ்சுமாரம், முசலி, வன்மீன், இருளன், கரா, கராம்.

முதல் — அடி, ஆதி, தலை, தாள், முன்னர்.

முதுகு— அபரம், சுவல், தூன்று, புறம். வெரிந், வெந்.

முத்திரை—பொறி, அன்றியுமடையாளத்தைக்காண்க.

முத்து—ஆரம், தரளம், திரட்சி, நாலி, நித்திலம், மணி, முத்தம், முத்தாபலம், மௌத்திகம்.

முத்துப்பிறக்குமிடம்-இப்பி, உடும்பு, கடன்மீன், கதலி, கமலம், கமுகு, கரும்பு, கொக்கு, சங்கு, செந்நெல், திங்கள், நத்து, நாகம், பசுவின்பல், பன்றிமருப்பு, மடந்தையர் கந்தரம், முதலை, மூங்கில், மேகம், யானைமருப்பு.

முந்திரிக்கொடி—கோத்திரிகை, மதுரசம், மதுரம்.

முயல்—சசம், இதன்பிள்ளை, குட்டி, குருளை, பறழ், பிள்ளை.

முயற்சி—ஆள்வினை, இயற்றி, உற்சாகம், உஞற்று, உத்தியோகம், உழப்பு, உள்ளம், தாளாண்மை, தாள்.

முருகனாயுதம்—வேல்.

முருகன் — அரன்மகன், அறுமீன்காதலன், அறுமுகன், ஆசான், ஆண்டலைக்கொடியோன், கங்கைமைந்தன், கடம்பன், கந்தன், கலையுணர் புலவன், காங்கேயன், கார்த்திகேயன், குகன், குழகன், குறிஞ்சிவேந்தன், குன்றெறிந்தோன், கௌரிநந்தனன், சண்முகன், சரவணபவன், சிலம்பன், சுப்பிரமணியன், சுரேசன், சூர்ப்பகைவன், செட்டி, செவ்வேள், சேந்தன், சேய், சேவற்கொடியோன், தாருகற்செற்றோன், தாருகாரி, தெய்வயானைகாந்தன், தேவசேனாபதி, பாவகிமஞ்ஞையூர்தி, மாயோன்மருகன், முருகு, மேலவர்க்கிறைவன், [illegible]றிந்தோன், வள்ளிமணாளன், வாகுலேயன், விசாகன், வேலன், வேலிறையன், வேள்.

முருகன்கூத்து—குடை, கொடுகொட்டி, துடி.

முருகன்கொடி—சேவற்கொடி.

முருகன்வாகனம்-மயில், யாடு, யானை.

முருக்கு—கவிர், கிஞ்சுகம், புலாசு, இவற்றுட்புனமுருக்கின்பெயர், பலாசு.

முருங்கை—சிக்குரு, அன்றியும்புனமுருங்கையின்பெயர், புன்கு.

முலை—அம்மம், உரோருகம், குயம், குருக்கண், கொங்கை, கொம்மை, சேக்கை, சுவர்க்கம், தனம், நகிலம், பயோதரம், பறட்டு.

முலைக்கண்—சிலீமுகம், ருசுகம்.

முலைப்பால்—பீர்.

முல்லை—ஊதிகை, கற்பு, தளவம், தளவு, நைதிகை, மாலதி.

முல்லைநிலத்தலைவன்—அண்ணல், கானக நாடன், குறும்பொறை நாடன், தோன்றல்.

முல்லைநிலத்தாறு-கலுழி, கான்யாறு.

முல்லைநிலத்திராகம்—சாதாரி.

முல்லைநிலத்தூர் — ஆய்ப்பாடி, ஆவிரம், இடைச்சேரி, உவளகம், பாடி, வல்லி, வல்லியம்.

முல்லைநிலப்பறை--ஏறங்கோட்பறை, பம்பை.

முல்லைநிலமக்கள்—அண்டர், அமுதர், ஆயர், ஆன்வல்லோர், இடையர், இப்பர், கானவர், குடவர், கோபாலர், கோவர், கோவர்த்தனர், கோவலர், கோவிந்தர், தொறுவர், பொதுவர், முல்லையர், அந்நிலப்பெண்கள், ஆய்ச்சியர், இடைச்சியர், குடத்தியர், தொறுவியர், பொதுவியர்.

முழங்கை—கூபரம், கூற்பரம்.

முழந்தாள்—சானு, முழந்து.

முளை—அங்குரம், கால், தழி.

முளைத்தல் — உருத்தல், கெழுமுதல், தோற்றல், நாறுதல், பொடித்தல்.

முள்-கடு, கண்டகம், அன்றியுமுட்செடிப்பொதுப்பெயர், மூண்டகம், முளரி.

முள்ளி—கண்டலம், முண்டகம்.

முறம்—சின்னம், சுளகு, சூர்ப்பம், தட்டு, முற்றில்.

முறித்தல்—அகைத்தல், இறுத்தல், ஒசித்தல், ஒடித்தல், கோடல், முரித்தல்.

முறுக்கல்—திருகல்.

முறைமை—ஊழ், ஒப்புரவு, ஒழுக்கம், கடன், சுதம், செய்கடன், நியதி, நியமம, நிலை, பத்தி, பாரம்பரியம், மரபு, வழி.

முற்றம்—அங்கணம், முன்றில்.

முனிவரிருக்கும்பீடம் — பிடிகை, விட்டரம்.

முனிவரிருக்கும்வாசம் — சாண்டை, குகை, தாபதம், பள்ளி, பாழி, மடம்.

முனிவர்—அடிகள், அந்தணர், அருந்தவர், அறவோர், அறிஞர், இருடிகள், இலிங்கிகள், உயர்ந்தோர், உறுவர், ஐம்புலன்வென்றோர், ஐயர், கடவுளர், கடிந்தோர், சார்பில்லோர், சௌமியர், தபோதனர், தவத்தர், தவர், தாபதர், துறந்தோர், துறவோர், நீத்தோர், படிவர், பண்ணவர், பலமூலசாகாசனர், பற்றற்றோர், பெரியோர், மாதவர், முனைவர், மெய்யர், மோனர், மௌனியர், யதிகள், யோகர், யோகியர்.

முனை—நுதி, நுனை.

முன்—புரம், முன்பு.

முன்பிறந்தாள் — அக்காள், அக்கை, அன்னை, செவிலி, சேட்டை, தந்தை, தௌவை, முன்னை, மூத்தாள்.

முன்றுளை—சச்சம், கஞ்சகம், சாரவா ரம், தோகை, விடுத்தலைப்பு.

முன்னிலையசைச்சொல் — அத்தை, இக, இத்தை, ஈ, மதி, மாள, மியா, மோ, யாழ, வாழிய.

முன்னைநாள்—நெருநல், நென்னல்.

மூ

மூக்கு—ஆக்கிராணம், கோணம், துண்டம், நாசி, நாசிகை, நாடி.

மூக்குக்கண்ணாடி—உபநயனம், சுலோசனம்.

மூங்கில்—அமை, அட்டு, அரி, அம்பல், ஏக்கல், கண், கழை, காம்பு, கிளை, சசம், சந்தி, சம்பம், சானகி, தட்டை, தண்டு, திகிரி, துளை, தூம்பு, நெட்டில், நேமி, பணை, பாசம், பாணையல், பாதிரி, புனை, முடங்கல், முந்தூழ், முளை, வரை, விண்டல், விண்டு, வெதிர், வேணு, வேய், வேரல், வேல், வேழம், இருளரி, தோமா.

மூஞ்சூறு—சுசுந்தரி, சுண்டன், சுவவு, சூறன்.

மூடிதல்—கவித்தல், பொதிதல், போர்த்தல், மூய்தல், மொய்த்தல், வேய்தல்.

மூட்டல்—பொருத்தல், மாட்டல்.

மூதுணர்ந்தோர்—முதுவர்.

மூதேவி — இந்திராக்குமூத்தாள், ஏகவேணி, கலதி, கழுதைவாகனி, காக்கைக்கொடியாள், கேட்டவள்க்கு, கேட்டை, சிறப்பிலாதாள், சீர்கேடி, சேட்டை, தௌவை, முகடி.

மூத்தோன்—அடிகள், அத்தன், அய்யன், ஆசான், ஆதிரன், இறை, ஈசன், உரவோன், குரவன், கோமான், சாமி, சேட்டன், நாதன், பதி, பெருமான், முந்தியோன்.

மூப்பு—கிழமை, முதுமை, முற்றல், விருத்தம்.

மூலநாள்—அசுரநாள், அன்றில், ஆனி, குருகு, கொக்கு, சிலை, தேட்கடை, வில்.

மெ

மெத்தை—அணை, அமளி, காகுளி, தவிசு, தளிமம், தற்பம்.

மெய்—ஆணை, உண்மை, சச்சம், சத்தியம், சாதம், தத்தியம், திடம், திண்மை, திசாதனம், நிசயம், நிலைமை, நீதி, பருமை, பட்டாங்கு, பொருள், வண்மை, வாய், வாய்மை, விதி, வேளாண்மை.

மெய்காப்பாளர் — கஞ்சுகி, காவலர், வாயிலாளர், வாயிலோர்.

மெலிவு—அற்றம், இளைப்பு, தேம்பல், பசுக்கண், புன்கண், வாடல்.

மெல்லல்—கதட்டல்.

மெழுகு—வள்ளியம்.

மே

மேகம்—அப்பிரம், அம், அம்புதம், இளை, எழிலி, எழிலி, கதம்பம், கந்தரம், கருவி, கனம், கார், கார்முகம், காளம், குயின், கொண்டல், கொண்மூ, சலதரம், சீதம், சீமூதம், செல், தாராதரம், நீகம், பயோதரம், புயல், மங்குல், மஞ்சு, மழை, மாசு, மாரி, மால், முகில், மூதிரம், மை, வான், விசும்பு, விண், விலாமி, விளைவு.

மேடவிராசி—ஆடு, உதள், கொறி, தகர், மறி, மை, யாடு, வருடை.

மேடு — உயர்நிலம், ஓங்கல், கருக்குப்பை, குவால், குவை, சுவல், திடர், திட்டு, திட்டை, பார், மிசை, வல்லை, வன்பால், அன்றியும் பரண்மேடு, புடைப்பு.

மேல்—இந்தனம், உபரி, உம்பர், ஞாங்கர், மிசை, மீ, முன்,மேக்கு, மேற்கு, வலம்.

மேற்கட்டி—கம்பலம், படங்கு, வானி, விதானம்.

மேற்கு—குடக்கு, பச்சிமம், பிரத்தியக்கு, மேக்கு, மேல், வாருணம்.

மேன்மை—ஏற்றம்,கயம்,கயவு, கியாததம்,சாயல், சாலூரம், ஞெள்ளல்,மேகம், மேதை, மேற்கோள், இவற்றுள் மேன்பாடுணைத்தல், நெடுமொழிகூறல்.

மொ

மொட்டை—தட்டை, முண்டம், முண்டிதம்.

மொட்டையாக்கல்—மழித்தல்.

மொய்த்தல்—முடுகல், மூசல், முந்சல், மூழ்த்தல்.

மோ

மோக்கம்—அபவருக்கம், அமுதம், கேடிலுவகை, கேவலம், கைவல்லியம், சித்தி, சிவம், நிருவாணம், நிலைபேறு, பஞ்சமகதி, பரகதி, மீளாக்கதி, முத்தி, வீடு.

மோதிரம்—ஆழி, இலச்சினை, வீகம்.

மோர்—அரிட்டம், அருப்பம், அளை, காலேயம், தக்கிரம், மச்சிகை, மதிகம், முசர்.

மௌ

மௌனம்—மதனம், மூகம், மோனம், வாளா.

யா

யாகத்தம்பம்—யூபம்.

யாகம் — இட்டி, எச்சம், ஓமம், கிருது, சத்திரம், சித்து, மகம், யசனம், யூபம், வேள்வி.

யாளி — அறுகு, பூட்கை, இதலுண், தகர், இதன்பிள்ளை, குருளை, குழவி.

யானை—அத்தி, அறுகு, ஆம்பல், இபம், இம்மடி, உம்பல், உவா, எறும்பி, ஒருத்தல், ஓங்கல், கடிவை, கயம், கரி, கரிணி, கரேணு, களபம், களிறு, கவ்வன், கறையடி, குஞ்சரம், கும்பி, கைப்புலி, கைம்மலை, கைம்மா,கோட்டுமா, சிந்தூரம், சுண்டாலி, சூசை, தந்தாவளம், தந்தி, தாமப், திண்டி, தும்பி, தூங்கல், தெள்ளி, தோல், நாகம், நால்வாய், நூழில், பகடு, புகர்முகம், புழைக்கை, பூட்கை, பெருமா, பொங்கடி, போதகம், மதகயம், மதமொய், மதாவளம், மந்தமா, மருண்மா, மறமலி, மாதங்கம், மாதிரம், மொய், வயமா, வல்விலங்கு, வழுவை, வாரணம், வேதண்டம், வேழம், இதலுண், உம்பல், ஒருத்தல், களிறு, தகர், பகடு, மா, இதன்பெண், அத்தினி, கரிணி, பிடி, வடவை, இதன்கன்று, கயந்தலை, கயமுனி, களபம், குழவி, துடியடி, போதகம், முனி, அஃறிய மலையிற்பிறந்தயானை, கிரிசரம், ஆற்றுசார்பிற்பிறந்தயானை, நதிசரம், வனத்திற்பிறந்தயானை, வனசரம்.

யானைக்கச்சை—கண்டம்.

யானைக்கடைக்கண்—நிரியாணம்.

யானைக்கட்டுந்தறி — ஆளானம், வெளில்.

யானைக்கதுப்பு—கடம், கரடம், கவுள், கொடிறு.

யானைக்கயிறு—கச்சம், கச்சை, கவடு, ஏராசு, புரோசை.

யானைக்கூட்டந்துதலையானை—யூதநாதன், யூதபம்.

யானைக்கூட்டம்-கடகம், கடம், யூதம்.
யானைக்கொம்பு—எயிறு, கோடு, தந்தம், இவற்றினடி, கீரம், இவற்றினடு, பிருஅமானம்.
யானைசெல்வழி—தண்டம்.
யானைச்சங்கிலி—அந்துகம், சிருங்கலம், நிகளம்.
யானைச்செவி—கன்னம், தாலம்.
யானைதிரியுங்காடு—கரிகாடு.
யானைதுயிலிடம்—சேவகம்.
யானைத்தோட்டி — அங்குசம், குடாரி, கோணம், இதன்பிடர், இயாதம்.
யானைநிற்குங்கூடம் — ஆலயம், ஓவி, வாரி.
யானைநுதற்பட்டம்—ஓடை.
யானைநோய்—பாகலம்.
யானைப்படுகுழி—பயம்பு.
யானைப்பாகர்—ஆதோரணர், பண்ணுறுவர், வதுவர், வாதுவர்.
யானைமணி—கன்னடை.
யானைமதம் — கடம், கடாம், தானம், மதமொழிந்தயானை, நிருமதம்.
யானைமத்தகம்—கும்பம்.
யானைமீன்—திமிலம், பனைமீன், பெருமீன்.
யானைமுகபடாம்—சூழி, படம், மர்த்தனம்.
யானைமுதுகு—மஞ்சு.
யானைமுன்கால் — காத்திரம், பின்காலின்பெயர், அபரம்.
யானைமேற்றவிசு — இலகடம், பலகாரம்.
யானையுண்ணுமுணவு—அம்சதம்
யானைத்துதிக்கை—கை, சுண்டு, தண்டம், தொண்டலம், தொண்டை, இது னிமின்பெயர், ஆழி, புட்கரம், இது விடுநீரின்பெயர், கரசீகரம், விலாழி.
யானையைப்பாகரதட்டுமோசை—அப்புது, ஆது, ஐ.
யானையைவிழுங்குமீன்—திமிங்கிலம், திமிதிமி, அப்பீனைவிழுங்குமீன், திமிங்கிலகிலம்.
யானைவால்—தாலவட்டம், வாலதி, இதனுனி, வேசகம்.

யு

யுகமுடிவு—ஊழி, மடங்கல்.

யோ

யோகம்—கூடல்.
யோகினி—சத்தினி, சூர்மகள்.

வ

வசமாக்கல்—வசித்துவம், வடிப்தம்.
வாசம்—உபகரணம், வசீகரம்
வசவி—அசதி, குட்டினி, குண்டலி, நுறனி, கூலி, தட்டை, தொழுத்தை, படுவி.
வசனம் — ஆமரி, பாசுரம், வலர்தம், வாக்கு, வாசகம், வார்த்தை.
வச்சிராயுதம் — அசனி, குலிசம், சதகோடி, சதமுனை, சம்பம், வயிரம்.
வஞ்சகம்—அகாதம், கஞ்சம், கபடம், கலி, கிருத்திமம், குடிலம், குத்திரம், குய்யம், பட்டிமை, புள்ளுவம், மாயம், வஞ்சனை.
வஞ்சனையாளன்—அகாதன், தூர்த்தன், நிகாதன்.
வடக்கு—உதக்கு, உத்தரம்.
வடமொழி—ஆரியம், பிராகிருதம்.
வடமொழிக்கும்பிறபாடைக்குமொத்தமொழி—தற்சமம்.

வடமொழியிற்றிரிந்தமொழி— தற்பவம்.

வடிவு — ஆகாரம், உரு, உருவம், சட்டகம், சந்தம், செண்ணம், படிவம், மேனி, வண்ணம்.

வட்டம்—ஆழி, கடகம், கணம், குண்டலம், கொம்மை, கோளகை, சக்கரம், சில்லி, தட்டு, திகிரி, நேமி, படலிகை, பருதி, பாண்டில், பாலிகை, மண்டலம், மல்லை, வட்டணை, வலயம், வல்லை, வளையம், விம்பம், விருத்தம், இவற்றுட்டிரண்டவட்டம், குழியம்.

வட்டில்—கரகம், கோரம், சகடம், சாகை, சிகரம், வள்ளம், அன்றியுஞ்சிறுவட்டிலின்பெயர், கிண்ணம், கிராணம்.

வணங்குதல் — அஞ்சலி, இறைஞ்சல், காணல், காண்டல், குரங்கல், கைகூப்பல், சலாம், தாழ்தல், தெண்டனிடல், தொழுதல், பணிதல், பரவல், பார்த்தல், போற்றல், வந்தனை, வந்தித்தல், வழிபடல்.

வண்டி — ஊர்தி, ஒழுகை, சகடம், சகடு, சகடை, சாகாடு, சாடு, பண்டி, வையம், அன்றியும் பாணடில்பூண்டவூர்தி, சகடம், சிவிகை, வையம்.

வண்டியுள்ளிரும்பு—இருசு, கந்து.

வண்டு—அராபதம், அரி, அளி, அறுபதம், ஈ, கரும்புள், கழுது, கள்ளுண், காமன், கீடம், கீதம், கேசரம், கேசவம், சஞ்சரிகம், சஞ்சாளிகம், சாரங்கம், சிலீமுகம், சுரும்பு, சூதம், ஞிமிறு, தும்பி, தேன், பிரசம், பிரமரம், பிருங்கம், புண்டரீகம், புள், மதுகரம், மதுபம், மந்திமா, மிஞிறு, மொய், வடு, வரி, வரிக்கடை, இவற்றுளாண்வண்டு, சுரும்பு, தும்பி, மதுகரம், பெண்வண்டு, தேன்.

வண்ணார்—ஈரங்கொல்லியர், ஏகாலியர், காழியர், தூசர்.

வயல்—அகணி, ஆலவாலம், கம்பலை, கழனி, கைதை, கோட்டம், செய், செறு, தடி, பணை, பண்ணை, பழனம், பானல், புலம், விளைபுலம், அன்றியுஞ்சிறுவயல், குண்டில், பாத்தி, செந்நெல்விளையுநிலம், சாலேயம்.

வயிடூரியம்—வாலவாயம்.

வயித்தியர் — ஆமாத்தியர், ஆயுள்வேதியர், ஆரியர், பண்டிதர், பிடகர், மருத்துவர்.

வயிரத்தின்பெயர் — மரவயிரத்தைக் காண்க.

வயிரமணி—வச்சிரம்.

வயிரவன்—ஆபதோத்தாரணன், ஆரியைதநயன், கருங்குதிரையாளி, காரி, குதிரையாளி, குமரன், கேத்திரபாலன், சித்தன், ஞாளியூர்தி, தண்டாயுதன், பச்சைச்சடையன், பவழநெடுங்குஞ்சியோன், பிள்ளை, முடுவல்வெம்படையோன், முத்தமிழ்க் குரியோன், முத்தலைவேலோன், முத்தன், மூர்த்திகன், வடுகன், வித்தகன்.

வயிறு—அகடு, உதரம், குக்கி, குழி, சடரம், துத்தம், பண்டி, மடி, மேடு, மோடு, வயின்.

வரகு—கோத்திரவம்.

வரகுவைக்கோல்—கருவை.

வரம்பின்பக்கம்—கங்கு.

வரம்பு—அணை, கங்கு, குரம்பு, கூலம், கோடு, தடம், படம்பு, பாரம், வரை, வாரம்.

வரிசை—பதம்.

வருங்காரியஞ்சொல்வோர்—கருமத்தலைவர், சாக்கையர், நிமித்தர், புரோகிதர், வள்ளுவர்.

வருடம்—ஆண்டு, ஆயனம், சமை, தெய்வம், யாண்டு, வற்சரம், இதன்பாதி, அயனம்.

வருணன்—புனல்வேந்தன், புனற்கரசன், மேற்றிசைப்பாலன்.

வருத்தஞ்செய்வோன்—அருந்துதன்.

வருத்தந்தீர்தல்—அயர்வுயிர்த்தல்.

வருத்தம்—அணங்கு, அயர்வு, அறுகம், அவலம், ஆகுலம், ஆய்வு, உயவு, உலைப்பு, ஏவு, கசிவு, கவற்சி, கொல், தாவு, நொசி, நோய், பரி, மிகை, மிறை, வயாவு, வேதனை.

வருந்துதல்—அகைத்தல், அணுங்கல், அலமரல், அலேதல், அவலித்தல், அவிசல், அழுங்கல், ஆகுலித்தல், உயங்குதல், உலைதல், ஒறுத்தல், ஓவல், கவலல், துகைத்தல், பருவரல், பனித்தல், மிறைத்தல், அன்றியும்வருத்தமாற்றாது நிறம்வேறுதல், பசத்தல், பசலை.

வரையாடு—சரபம், வருடை.

வரையாதுகொடுப்போர் — வள்ளியோர்.

வலதுபக்கம்—சவ்வியம், தக்கணம், வலம்.

வலம்புரிச்சங்காயிரஞ்சூழ்ந்தது — பாஞ்சசன்னியம்.

வலம்புரிச்சங்கு—கொக்கரை, சங்காயிரஞ்சூழ்ந்தசங்கு, சலஞ்சலம், பணிலம்.

வலி—அடல், அரி, ஆண்மை, ஆற்றல், இகல், ஈடு, உம்பல், உரம், உழப்பு, உறதி, ஊக்கம், எழில், எறும், ஏண், கருமை, கலி, கூளி, கொம்மை, கொற்றம், கோள், சத்தி, சத்துவம், ஞாட்பு, தரம், தற்செல்வம், தாவு, தானம், திண்ணம், திண்மை, திறம், திறல், தீரம், துப்பு, தோற்றம், நாட்டு, நோன்மை, பம்பல், பராக்கிரமம், பாழி, பீடு, மஞ்சு, மதம், மதன், மதுகை, மல், மல்லல், மள்ளல், மறம், மாவுரம், மானம், மிடல், மீளி, முடலை, முகெல், முரண், முன்பு, மூரி, மெய்ந்நலம், மைந்து, மொய்ம்பு, வயம், வலம், வள், வன்மை, வாய்மை, விறல், வீரம்.

வலிதருதல்— ஆற்றுவித்தல், வலியுறுத்தல்.

வலியழித்தல்—ஆற்றறுத்தல்.

வலியன்—கரிக்குருவியிற்காண்க.

வலை—கண்ணி, கொக்கரை, சாலம்.

வல்லான்—சமர்த்தன், வலவை, வல்லவன், வல்லாளன், வல்லுநன்.

வழி — அடைவு, அதர், அயனம், ஆறு, இடவை, இயவு, இயவை, உத்தரம், ஒழுக்கம், கால், கிறி, சரி, செப்பம், செலவு, தடம், தாரி, தானை, துறை, தெரு, நடவை, நடை, நெறி, படர், பட்டம், பதம், பதவி, பதவை, பரி, பரிதை, போக்கு, மார்க்கம், வகிர், வீகுந்தம், வட்டை, வதி, வயவை, வரி, வனம், வாரி, வீதி, அன்றியுமருவழியின்பெயர், அத்தம், கடம், கடறு, சுரம், நூம்பு, கவர்வழியின்பெயர், கவலை, கவை, சிறுவழியின்பெயர், இடங்கர், நீள்வழியின்பெயர், அசாக்கர், இறங்கியேறும்வழியின்பெயர், படுகர், புதுவரம்புவழியின்பெயர், மரிசி, பழையவரம்புவழியின்பெயர், மஞ்சில், இடுக்குவழியின்பெயர், இட்டிகை.

வழிச்செல்வோர்—பதிகர்.

வழிப்படுத்தல்—ஆற்றுப்படை.

வழிப்பறித்தல் — அதர்கோளல், ஆறலைத்தல்.

வழுக்குநிலம்—இழுக்கல்.

வளமை—கெழுமை, கொழுமை, மதன், மல், மல்லல், யாணர், வண்மை, வளப்பம், வளம்.

வளர்தல்—உருத்திதம், நிமிர்தல், நிமிறல், நிமிர்தல், வளர்ச்சி, விருத்தி.

வளை—சுவப்பிரம், பிலம்.

வளைதடி—எழு, கணையம், சுழல்படை, பரிகம், பாராவளையம், வட்டம்.

வளைத்தல்—குனித்தல், கோலல், சூழ்போதல், திருகல், தொடுத்தல், முற்றுதல், வணக்கல், வளையுறுத்தல், வலத்தல், வளாவல், வாங்கல்.

வளைவு—ஆவல், குடிலம், குலாவல், கூன், கோடல், கோட்டம், கோணல், கோண், தடவு, தட்டு, முற்றல், வக்கிரம், வசிவு, வணங்கல், வணர், வலந்தம், வளாவல், வாங்கல்.

வள்ளை—ஞாளிகம், நாளிகம்.

வறட்சுண்டி—சமங்கை.

வறத்தல்—முதிர்ந்திடல், முளித்தல்.

வறுமை — அல்கல், இலம்பாடு, இளமை, ஒற்கம், வீதல்.

வற்புறுத்தல்—தெருட்டல், வருட்டல்.

வனமல்லிகை—மௌவல்.

வன்னிமரம் — கலிசம், குலிசம், சமி, தமனி.

வா

வாகனம்—வருது, கரி, சிவிகை, தேர், பரி, வணடில், இவைமுதலியவற்றிற்குப்பொதுப்பெயர், ஊர்தி, வாகனம், வையம்.

வாகைமரம்—சிரீடம், பாண்டில், பீரம்.

வாசனை — ஆவி, கடி, கந்தம், கானம், கால், கொங்கு, சுரபி, தகரம், தேம், தேசன், நரந்தம், நறவம், நறவு, நறை, நாரி, நாற்றம், நானம், பச்சை, மணம், மரு, மன்றம், மன்றல், முருகு, மோதம், வசந்தம், வதுவை, வம்பு, வாசம், விரை, வெறி, அன்றியு மிகு வாசனையின்பெயர், ஆமோதம், சுகந்தம், பரிமளம், தீயவாசனையின்பெயர், துர்க்கந்தம், பூதி, முடை.

வாசனைக்குறிப்புச்சொல் — கம்மெனல்.

வாசனைப்பொடி — கதம்பம், கந்தபொடி.

வாசனைவிடுதல் — கந்தித்தல், கமழ்தல், நறவுதல், நாறல், மணத்தல்.

வாசித்தல்—ஓதல், படித்தல், பாடல், வேதமோதலின்பெயர், அத்தியயனம்.

வாச்சியப்பொது—அரியம், இயம், கருவி, காண்டம், கோடணை, சகடை, சகண்டை, தகுணிதம், தக்கை, தடாரி, தூரியம், பறை, பீலி, மண்கணை, மேளம், இவற்றுட்பலவாச்சியக்கூட்டம், மேளம்.

வாச்சியமடிக்குங்குறுந்தடி—குணில்.

வாச்சியம்வாசித்தல்—இயம்பல், கொளுத்துதல், துவைத்தல், முழக்கல்.

வாச்சியவகுப்பு—இடக்கை, உடுக்கை, உறுமி, தம்பட்டம், பம்பை, பேரிகை, மத்தளம், முரசு, முருடு, முழவு, இவற்றினிடக்கையின்பெயர், திரிகை, யாமம், உடுக்கையின்பெயர், இடை, சுருங்குபறை, துடி, உறுமியின்பெயர், தண்ணுமை, தம்பட்டத்தின்பெயர், ஆனகம், திண்டி, திண்டிமம், படகம், பணவம், பம்பையின்பெயர், சல்லரி, தக்கை, தடாரி, திமிலை, மல்லரி, பேரிகையின்பெயர், தடாரி, தண்ணுமை, பதலை, முரசின்பெயர், அமுவம், தூரி

யம், பணை, பெருங்கோட்டணை, முரசம், முழவம், முழவின்பெயர், குடமுழா, குளிர், முழவம், முழா, அன்றியுமொருகட்பறையின்பெயர், உடுக்கை, தண்ணுமை, நிசாளம், மொந்தை, வாயகன்ற பறையின்பெயர், பதலை, சிறுபறையின்பெயர், ஆகுளி,உவகைப்பறையின்பெயர், தூரியம், சாப்பறையின்பெயர், நெய்தற்பறை, அன்றியுங் குறிஞ்சிமுதலைந்திணைக்குரியபறை தத்தம்வரியிற் காண்க.

வாடல்—அனுங்கல், உணங்கல், குழைதல், சுணைதல், சோரல், தேம்பல்,நைதல், புலர்தல், வெம்பல்.

வாட்கோரை—செருந்தி.

வாயில் — அருநெறி, கடை, துவாரம், தூம்பு, தொட்டி, வாய், வாரி, அன்றியுநுழைவாயிலின் பெயர், சுருங்கை, நுழை.

வாயில்காப்போர் — வாயிலாளர், வாயிலோர்.

வாயினுட்கீழ்வாய்—அணல்,மேல்வாயின்பெயர், அணம், அணரி, அண்ணம்.

வாய்க்கால்—கால்.

வாரம்—கிழமை, வாசரம்.

வாருகோல்—சோதினி, ஏனையவற்றைத்துடைப்பத்திற் காண்க.

வாருதல்—கவர்தல், கொழித்தல்,கொள்ளல், தெள்ளுதல், வரன்றல், வளைத்தல், வார்தல், வெளவல்.

வார்—கச்சம், வகிர், வள்.

வானின்கீழிடம்—வெருகம்.

வால்—இலாங்கூலம், உலோமம், கூலம், தோகை, புச்சம், வாலகம், வாலதி, வேசகம்.

வாழை—அம்பணம், அரம்பை, ஓசை, கதலி, கவர், சேகிலி, திரணபதி.

வாழ்த்து—ஆசி, ஆசிடை, கைவாரம், சோபனம், பல்லாண்டு.

வாழ்நாள்—ஆயுகம், ஆயுள், உறை.

வாளின்முட்டி—பாலிகை.

வாளுறை—வள்.

வாள்—அசி, உவணி, எதி, கடுத்தலை, கட்கம், கண்டகம், கண்டம்,கரவாளம், கரவாள், சாயகம், துவத்தி, நவிரம், நாட்டம், நாந்தகம், புட்கரம், மட்டாயுதம், வசி, வஞ்சம், வள், வேணு, அன்றியும் வளைந்தவாளின்பெயர், கோணம், சிறுவாளின்பெயர், கண்டம், குறும்பிடி, சுரிகை, பத்திரம்.

வானம்பாடி—கம்புள், கலிங்கம், காருணி,சாதகப்புள், தற்பாடி,மேகப்புள்.

வானவில்—இந்திரதனு.

வான்மீகி—பிராசேதசன்,வாமலூருதநயன்.

வான்மீன்—உடு, உற்கை, ஒளி, சிதம், சுக்கை, சோதி, தாரகை, தாரா, தாரை, பம், மீன், அன்றியும், அசுவினிமுதலிருபத்தேழுக்கு நாளென்றுபெயர்.

வி

விசாகநாள்—அனிலநாள், காற்றுமுந்துநாள், சுளகு, சேட்டை, முறம், முற்றில், வைகாசி.

விசிறி—கால்செய்வட்டம், சாந்தாற்றி, சிற்றாலவட்டம், தாலவிருந்தம், பீலி, விசனம், வீசனம்.

விசுவாமித்திரன்-காதிமைந்தன்,கௌசிகன்.

விடம்—ஆலம், ஆலகாலம், கடு, காரி, காளகூடம், நஞ்சு.

விடியல் — உதயம், காலை, புலரி, வைகல், வைகறை.

விடுதல்—உகுத்தல், செலவிடல், தும்மல், துவைத்தல், நியதுதல, பெய்தல், மாறல், விடை, வியோகம்.

விடுத்தல்—உயிர்த்தல், ஒக்குதல், தீர்தல், நிவாரணம், நீக்கல், மோக்கம், மோசனம், வாரணம்.

விட்டிற்பறவை—சலபம், பதங்கம்.

விட்டுணு—அச்சுதன், அரவணைச்செல்வன், அரி, அரிந்தமன், அறிதுயிலமர்ந்தோன், அனந்தசயனன், உந்திபூத்தோன், உவணகேதனன், கடல்வண்ணன், கமலக்கண்ணன், கரியன், கருடகேதனன், கேசவன், கொண்டல்வண்ணன், சக்கரபாணி, சக்கராயுதன், சக்கிரி, சங்கமேந்தி, சநார்த்தனன், சலசலோசனன், சாரங்கபாணி, சீதரன், சௌரி, திருநாதன், துழாய்மௌலி, நாரணன், நாராயணன், நெடியோன், பச்சை, பஞ்சாயுதன், பதுமநாபன், பிரமன்றுதை, பின்னைகேள்வன், பீதாம்பரன், பூமிகொழுநன், பெம்மான், பெருமாள், மாதவன், மாயன், மால், முகுந்தன், முண்டகாசனைகேள்வன், வலவன், வனமாலி, வாசுதேவன், விண்டு, வேலையிற்றுயின்றோன், வைகுந்தநாதன், அன்றியுமுதலவதாரத்திலெடுத்தபெயர், மச்சன், - இரண்டாமவதாரத்திலெடுத்தபெயர், கூர்மன், - மூன்றுமவதாரத்திலெடுத்தபெயர், வராகன்,- நான்காமவதாரத்திலெடுத்தபெயர், நாரசிங்கன்,-ஐந்தாமவதாரத்திலெடுத்தபெயர், வாமனன், இந்திராவரசன், உலகளந்தோன், திரிவிக்கிரமன்,- ஆறுமவதாரத்திலெடுத்தபெயர், பரசிராமன்,-ஏழாமவதாரத்தி லெடுத்தபெயர், இராகவன், இராமன், காகுத்தன்,-எட்டாமவதாரத்திலெடுத்தபெயர், பலபத்திராமன், குண்டலன், பலவும்,- ஒன்பதாமவதாரத்திலெடுத்தபெயர், அலகைமுலையுண்டோன், உலகுண்டோன், கண்ணன், கிருட்டிணன், கோவிந்தன், தாமோதரன், தேவகிமைந்தன், நந்தநந்தனன், பஞ்சவர்தூதன், புத்தன், மதுசூதனன், முராரி, பத்தாமவதாரத்தி லெடுத்தபெயர்,-கற்கி, அயக்கிரீவன்.

விட்டுணுகூத்து — அல்லியம், குடம், மரக்கால், மல்.

விட்டுணுகொடியும்வாகனமும்- கருடன், பஞ்சாயுதம், சக்கரம், சங்கு, தண்டு, தனு, வாள், இவற்றுட்டனுவின்பெயர், சார்ங்கம்.

விட்டுணுசமயத்தார்—பாகவதர், வைணவர்.

விட்டுணுபதம்—வைகுண்டம், வைகுந்தம்.

விட்டுணுபத்தவதாரம்—மச்சம், கூர்மம், வராகம், நாரசிங்கம், வாமனன், பரசிராமன், இராமன், பலபத்திராமன், கண்ணன், கற்கி.

விட்டுணுமனைவிகள்—இலக்குமி, பூமிதேவி, புதல்வர்பெயர், பிரமன், மன்மதன், அன்றியு மிராமாவதாரத்திலிவனுக்குமனைவி, சீதை, புதல்வர், குசன், இலவன், அன்றியுமிவன் மோகினியாகிக் கையிலேந்திய சிவனிந்திரியத்தாற் பிறந்தபிள்ளை, ஐயனார்.

விண்வீழ்கொள்ளி—உற்கை.

விதை—காழ், பரல், பீசம், வித்து.

வித்தியாதாருலகு—சேடி, சேணி.

வித்தியாதார்—கேசரர், விஞ்சையர்.

விநாயகன் — அங்குசபாசமேந்தி, அம்பிகைதநயன், அரிமருகன், ஆகுவாக

ளான், இறைமகன், ஈசன்மைந்தன், ஏகதந்தன், ஏரம்பன், ஐங்கரன், ஒற்றைக்கொம்பன், கங்கைபெற்றோன், கணபதி, கயமுகன், கரிமுகன், காமன்மைத்துனன், கௌரிசேயன், நால்வாயன், பாசாங்குசன், முக்கண்ணன், மூன்றோன், மூத்தோன், விக்கினேச்சுரன்.

விநாயகன்வாகனம்—பெருச்சாளி.

விபூதி—ஏமம், ஓமப்பொடி, காப்பு, திருநீறு, பூதி, விசிதம்.

வியாசன் — கிருட்டிணன், துவைபாயனன், பராசரன்மைந்தன், புலத்தியன்.

வியாழம்—அந்தணன், அமைச்சன், அரசன், ஆசான், ஆண்டளப்பான், குரு, சிகண்டிசன், சீவன், சுரகுரு, தாராபதி, தெய்வமந்திரி, நற்கோள், பிரகற்பதி, பீதகன், பொன், மறையோன், வேதன், வேந்தன்.

விரலிறை—தோரை, பிறங்கு, பொறி, வரி, வளை.

விரல்—அங்குலி, இவற்றுட்பெருவிரல், அங்குட்டம், கடைவிரல், கனிட்டம்.

விரிவு—அகலம், இடப்பாடு, விசாலம், விபுலம், வியல்.

விருச்சிகவிராசி—தெறுக்கால், தேள், பறப்பன்.

விருந்து—மகமுறை.

விலங்கினுட்கொம்பிலாவிலங்கு—குமரம்.

விலங்கினுளிலைநுகர்விலங்குணவு—குளகு.

விலங்கின்கூட்டம்—கணம், குலம், சாலம், யூதம், வியூகம், விருந்தம்.

விலங்கின்கொம்பு — உலவை, கோடு, சிருங்கம், மருப்பு, விடாணம்.

விலங்கின்படுக்கை—சேக்கை, பட்டம், பணை, பண்ணை, பாழி, போத்து.

விலங்கின்பொது—குரங்கம், மா, மான், மிருகம், இவற்றினாண் பொதுப்பெயர், ஆண், பெண்பொதுப்பெயர், பிணவல், பிணா, பெண்.

விலங்கின்வகுப்பு—அணில், ஆடு, குறும்பாடு, செம்மறியாடு, வெள்ளாடு, எருது, எருமை, எலி, காரெலி, ஒட்டகம், கத்தூரிப்பிள்ளை, கரடி, கவரிமா, கழுதை, கோவேறுகழுதை, காட்டா, கிரி, குதிரை, குரங்கு, சிங்கம், நரி, நாய், செந்நாய், நீர்நாய், நாவிப்பிள்ளை, பசு, பன்றி, முட்பன்றி, புலி, புல்வாய், பூனை, பெருச்சாளி, மரை, மான், முசு, முயல், மூஞ்சூறு, யாளி, யானை, இவைதத்தம்வரியிற்காண்க.

வில்—கார்முகம், கொக்கரை, கொடுமரம், கோதண்டம், சராசனம், சாபம், சானகம், சிந்துவாரம், சிலை, தடி, தவர், தனு, துரோணம், முனி, வேணு, அன்றியுஞ்சிவன்வில், பினாகம், திருமால்வில், சார்ங்கம், அருச்சுனன்வில், காண்டீபம்.

வில்லின்குதை—குலை, தாறு.

வில்வமரம்—கூவிளம், கூவிரம், கூவிளை, மாலூரம், மாவிளம், வில்லுவம்.

விவாகமில்லான்—பிரமசாரி.

விவாகம்—உபயமம், கடி, கலியாணம், கைப்பற்றல், தீவலஞ்செய்தல், பரிணயம், மங்கலம், மணம், மன்றல், வதுவை, விதியுளி, வேட்டல்.

விழல்—விரணம்.

விழுங்கல் — நுகர்தல், நுங்கல், தொண்டல்.

விழுதல்—சோர்தல், தாழ்வு, வீழ்தல்.

விளக்கு—இராவணம், ஒளி, சுடர், தீபம், தீபிகை.

விளக்குத்தண்டு—கம்பம், கௌசிகம், சுடர்நிலை, தனி, தீபமதத்திகை, மல்லிகை.

விளாமரம்—கபித்தம், விளவு, வெள்ளில்.

விளையாட்டு—ஆடல், இலீலை, உண்டாட்டு, உப்பு, ஓரை, கிரீடை, கெடவரல், கேலம், கேளி, தளம், தொடலை, பண்ணை, விலாசனை, இவற்றுண் மகளிர்விளையாட்டு, உண்டாட்டு, உப்பு, ஓரை, கெடவரல், தொடலை, பண்ணை, பொய்தல், வண்டல்.

விளைவு—போகம், வளாவல்.

விறகு—இந்தனம், சமம், கட்டை, காட்டம், முருடு, முளரி, அன்றியு மோமவிறகின்பெயர், சமிதை, முளரி.

விற்றல்—கூறல், நொடை, பகர்தல், மாறல், விலை.

வினைதகர்—கோலம்.

வினவலுக்கெதிர்மொழி—விடை.

வினவலும்விடையுங்கூடல்—சல்லாபம்.

வினவல்—கடாவல், வினவல்.

வினவெழுத்து—ஆ, எ, ஏ, ஓ, யா.

வீ

வீடு—அகம், ஆகாரம் இடம், இடவகை, இல், இல்லம், உறையுள், கிரகம், குலப், கேகம், சதனம், சரணம், சேப்பு, தாமம், நகர், நிகாயம், நிகேதனம், நிசாந்தம், நிவேசனம், பதி, பவனம், பாத்தி, புக்கில், மந்திரம், மனை, மாடம், மாளிகை, வசதி, வயின், இவற்றுட்பார்ப்பார் வீடு, அகாரம்.

வீட்டிறப்பு — இறவு, இறை, வளவி, தாழ்வாரத்தின் பெயர், ஆசாரணம், சோபானம்.

வீட்டின்மேலுலாவும்வெளி— அரங்கியம், நிலாமுற்றம்.

வீட்டுத்திரம்—தூலம், அன்றியுஞ்சுவர்ப்புறத்துநீண்டவுத்திரத்தின்பெயர், சுற்றுவாரி, தாழ், துடை, முகடு, விடங்கம்.

வீட்டுமாசாரியன்— கங்கைமைந்தன், காங்கேயன், சந்தனுமுன்மகன், தாலகேதனன், தெய்வவிரதன், பிரமசாரி, வன்னி, வீரன்.

வீணைக்கருவி—கலம், கின்னரம், கோடவதி, கோட்டம், தண்டு, மாடகம், வல்லகி, விபஞ்சிகம், அன்றியுநிறைநரம்புள்ளது, பண், குறைநரம்புள்ளது, திறம், எழுநரம்புள்ளது, இன்னிசை.

வீணைமுறுக்காணி—குப்பி, மாடகம்.

வீணையினரம்பு—குரல், கோல், தந்திரி, நாடி, இவையெழுவகைப்படும், குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம்.

வீணைவலிக்கட்டு—திவவு.

வீணைவாசித்தல்—கொளுத்துதல், நடவல், மீட்டுதல்.

வீதி—செப்பம், ஒள்ளல்.

வீமன் — இடும்பிகொழுநன், கதாயுதன், கிசகாரி, குந்திபுதல்வன், பகாசுரவயிரி, பாண்டுபுத்திரன். மடங்கற்கொடியோன், மாருதி, வாயுமைந்தன், விருகோதரன்.

வீரபத்திரன் — அழற்கண்வந்தோன், உக்கிரன், உமைமகன், ஐங்கரற்கிளையோன், குரோதன், சிங்கத்தோலுடையோன், சிப்புனனேறன், சிறுவிதிமகந்தீர்த்தோன், சுடர் விழியோன், செங்கர்வானிறத்தோன், தக்கன்மகந்தொலைத்தோன், பத்திமைகேள்வன்,

பானைமுகவற்கிளையோன், வெருச்சிலை ச்செல்வன்.

வீரம்—சாகசம், சூரம், சேவகம், சௌரியம், பராக்கிரமம், புறம், மறம், விறல, வீரியம்.

வீரரின்பெயர்-படைவீரரைக்காண்க.

வீழ்த்தல்—இருத்தல், விழுத்தல்.

வெ

வெட்கம்—இருளி, இலச்சை, உட்கல், [illegible]ரு, சமழ்த்தல், சமழ்ப்பு, நாணம், நாவை, மருத்தல், மானம், வட்கல், வெள்கல்.

வெட்சி—குல்லை, சித்திரம், செச்சை, சேத்தாரம்.

வெட்டல்—இறுத்தல், எருக்குதல், எற்றல், எற்றல், கடிதல், கண்டித்தல், காய்தல், [illegible]சித்தல், சிடுதல், [illegible], [illegible]தல், துணித்தல், [illegible], [illegible]ல், [illegible], பகுத்திடல், [illegible].

வெட்டிவேர்—இருவேலி, பீதகம், [illegible], வேரி.

வெட்பாலைமரம்—கிரிமல்லிகை, குடசம்.

வெண்சலம்—[illegible]றை, சருசம், [illegible].

வெண்காயம்—காயம், ஆன்றியம், வெள்ளைவெண்காயம், அரிட்டம், இலசுனம், ஈருள்ளிவெண்காயத்தின்பெயர், சுகந்தம், பலாண்டு.

வெண்ணொச்சி—சிந்துவாரம், நிர்க்குண்டி.

வெண்பா—முதற்பா, வெள்ளை, இதற்கிராகம். சங்கராபரணம்.

வெண்மை—அரிணம், அருச்சுனம், அவதாதம், கம், கவுரம், குருகு, குருத்து, சிதம், சுக்கிலம், சுசி, சுவேதம், சுப்பிரம், சுவேதம், தவளம், நரை, பாண்டரம், பாண்டு, பாண்டுரம், பாலை, வால், விசதம், விளர், வெளிறு, வெள்ளி, வெள்ளை, அவ்வியஞ்சிறு வெண்மையின்பெயர், துசாரம்.

வெயில் — ஆதபம், ஊழ், என்றூ, எல், என்றூழ், ஒளி, கோடை.

வெளி—செண்டு, மன்றம், மன்று, வயல், வெடி, வெள்ளிடை.

வெளிப்படல்—மன்றுபடுதல்.

வெள்ளம்—ஒகம், நீத்தம். பிரளயம். பெருக்கு, வாரி, இழுக்குட்டம், கோவம்.

வெள்ளரி—உருவாரம்.

வெள்ளாடு — சாரடு, கொச்சை, பள்ளை, வருகாசி, வெள்ளை. இதன்குட்டி, வெள்ளை.

வெள்ளாட்டுக்கடா — உதள், சகலகம், சாகம், செச்சை, மோத்தை.

வெள்ளி—இரசிதம், [illegible], கலதௌதம், தாரம், [illegible], [illegible], வெண்டாது, வெண்பொன்.

வெறியாட்டாளன்-முருகன், வேலன்.

வெறுப்பு — அயர்ப்பு, [illegible], [illegible], [illegible], [illegible], [illegible], [illegible], [illegible], [illegible], [illegible], [illegible].

வெற்றி — அடல், [illegible], [illegible]னை, [illegible], [illegible], [illegible], [illegible], புகல், [illegible], [illegible], [illegible], [illegible], [illegible], [illegible], [illegible], [illegible].

வெற்றிமாலை—[illegible].

வெற்றிலை—[illegible]புலம், திரையல், [illegible]டை, மெல்லிலை.

வெற்றிலைக்கொடி—[illegible]க்கொடி, தாம்பூலவல்லி, தாம்புலி, நாகவல்லி.

வெறுவிலைமுகக்கிருத்தி-[illegible], [illegible]

வே

வேகமுள்ளோன்—சவனன்.

வேங்கைமரம் — கணி, திமிர், திமில, பீதசாரம்.

வேசி—கணிகை, சூளை, பயனிலாள், பரத்தை, பொதுமகள், பொருட்பெண்டு, வரைவின் மாது, விலைமகள், வேசை.

வேடர் — ஆவியர், கானவர், கிராதர், குறவர், குன்றவர், கூளியர், கொலைஞர், சவரர், சிலவர், சில்லர், தீயர், பாவமூர்த்திகள், புல்லர், புளினர், பொறையிலார், மறவர், மாக்குலவர், முருடர், வனசரர், வியாதர்.

வேடர்வீதி—பக்கணம், வாடை.

வேட்டை—ஆகேடகம், பாபத்தி.

வேண்டல்—இரதி, நேர்தல்.

வேதநூலுணர்ப்போன் — அத்தியாபகன்.

வேதநூற்பொருள் — அருத்தபாகை, ஞானயாகை, கருமபாகை, இதனுட்பம், உபநிடதம்.

வேதமார்க்கம் — வைதிகம், அம்மார்க்கத்தினடப்போர், வைதிகர்.

வேதம்—அத்தியாயம், அந்தணர்வாக்கு, ஆதிநூல், ஆரணம், எழுதாக்கிளவி, ஒத்து, சாகை, சுருதி, நிகமம், மறை, முன்னூல், இவைநான்காம், இவற்றுண்முதல்வேதம, இருக்கு, பவுடிகம், இரண்டாம்வேதம், தைத்திரியம், யசுசு, மூன்றாம்வேதம், கீதவேதம், கௌசிகம், சாமம், நான்காம்வேதம், அதர்வணம்.

வேதனைசெய்வோன்—அருந்துதன்.

வேம்பு—நிம்பம், பிசிதம், பிசுமந்தம், மாலுகம்.

வேர்—சடை, சிவை, தூர், மூலம்.

வேர்வை—கசிவு, சுவேதம், வியர்த்தல்.

வேலமரம்—உடை, குடை.

வேலி—இளை, காவல்.

வேல் — அயில், அரணம், உடம்பிடி, எஃகம், குந்தம், சத்தி, ஞாங்கர், விட்டேறு, அன்றியுங்கைவேலின் பெயர், கப்பணம், சத்திரம், தோமரம்.

வேவு—ஒற்று, வே.

வேவுகாரர் — ஒற்றர், சாரணர், சாரர், வேயர், வேய்கள்.

வேள்வியின்பெயர் — யாகத்தைக்காண்க.

வேறுபடுத்தல்—விகற்பித்தல்.

வேற்றுமை—அந்தரம், திரிபு, பங்கம், பின்னம், பேதம், மாற்றம், விகடம், விகற்பம், விகாரம், விகிர்தம், விபரீதம், விருபம், விரோதம், வில்லங்கம், வீற்று, வேறுபாடு.

வை

வைகாசிமாதம்—மாதவம், வைகாசம.

வைகையாறு—வேகவதி.

வைக்கோல்—பலாலம், வழுது, வை.

வைசியர்—அயனூருவில்வந்தோர், இப்பர், இளங்கோக்கள், எட்டியர், சிரேபியர், செட்டியர், தருமக்கிழவர், தாளாளர், தூணிகர், தேசிகர், தோன்றிகர், நாய்கர், பரதர், மன்னர்பின்னோர், முத்தொழிலோர், வணிகர், வாணிகர், இவர்தொழிலான் மூவகையார், கோவைசியர், தனவைசியர், பூவைசியர்,

வைடூரியம்—வாலவாயசம்

வைத்தியர் — ஆமாத்தியர், ஆயுள்வேதியர், ஆரியர், பண்டிதர், பிடகர், மருத்துவர்.

வௌ

வௌவால் — அஞ்சலிகை, ஆவாலம் துரிஞ்சில், வாவல்.

இரண்டாவது

பொருளகராதி முற்றிற்று.

மூன்றாவது

தொகையகராதி.

அருட்டொகை வகைவகுத் துலகனைத்) ... ...து
மங்கையி லேந்திய தயையிற்கா... ... ... த்
திருட்டொகை துடைந்தெழும் பருதியைப்... ... ... போ
லெங்கணும் விளக்கிய வோரொன்பா... ... ... ன்
மருட்டொகை விலகெனப் பணிந்தேத் ... ...தி
வழக்கொடு புலமையோர் முன்னுரைத் ... ... த
பொருட்டொகை வகைப்பட விரித்துணர்த்தி ... ...ப்
புகலுநர் தொகையகராதியென் ... ...றே

அங்க

அகிற்கூட்டு, ரு—சந்தனம், கர்ப்பூரம், எரிகாசு, தேன், ஏலம்.

அக்கினி, ரு—இராகம், கோபம், காமம், சடம், நிபனம்.

அங்கம், ச—தேர், கரி, பரி, காலாள், இவைசதுரங்கமெனப்படும்.

அங்கம், ரு—திதி, வாரம், நட்சத்திரம், யோகம், கரணம், இவைபஞ்சாங்கமெனப்படும்.

அங்கம், ய—மலை, யாறு, நாடு, ஊர், மாலை, பரி, கரி, முரசு, கொடி, செங்கோல், இவையரசர்க்குரிய தசாங்கம்.

அங்கயோகம், அ—இயமம், நியமம், ஆதனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி, இவற்றுள், இயமம், கொல்லாமை, மெய்மைகூறல், கள்ளாமை, பிறர்பொருளிச்சியாமை, இந்திரியமடக்கல்,—நியமம், தவம், தூய்மை, தத்துவனூலோர்தல், மனமுவந்திருத்தல், தெய்வம்வழிபடல்,—ஆதனம், சுவத்திகம், கோமுகம், பதுமம், வீரம், கேசரி, பத்திரம், முத்தம், மயூரம், சுகம், அவையாவன, சுவத்திகம், தொடைக்கு முழங்காற்கு நடுவேயிரண்டுள்ளங்காலையுஞ்செலுத்தியிறுமாந்திருத்தல்,—கோமுகம், சகனப்பக்கத்திலிருகாற்பரட்டையுமாறவைத்தவ்விருகாற்பெருவிரலைக்கைப்பிடித்திருத்தல்,—பதுமம், இருதொடைமேலுமிரண்டுள்ளங்காலையுமாறித்தோன்றவைத்தல்,—வீரம், வலத்தொடையிலிடக்காற்பரட்டைச்சேர்த்தி யிறுமாப்புற்றிருத்தல்,—கேசரி, பீசத்தின்கீழ்ச்சீவனியிடத்துப் பரட்டைவைத்திட முழங்கையைமுழந்தாளில்வைத் தங்குலிவிரித்

னு நாசியைப்பார்த்திருத்தல்,—பத்திரம், பீசத்தின் கீழ்ச்சிவனியிடத் திருகாற்பாட்டையும்வைத் தவ்விருபதத்தையுமிருகையாலிறுகப்பிடித் தசையாதிருத்தல்,—முத்தம், இடக்காற்பரட்டாற் சிவனியையழுந்தி வலக்காற்பரடப் பரட்டின்கிழுந்தவிருத்தல்,—மயூரம், முழங்கையிரண்டு முந்திப் புறத்திலழுந்தப்புவியிற் கையூன்றிக்கானீட்டித் தலைநிமிர்ந்திருத்தல்,—சுகம், சுகமுந்திடமுமெய்வாறிருந்தி னெவ்வாறுமோ வவ்வாறிருத்தல்,—பிராணாயாமம், பிராணவாயுவை இரேசகபூரககும்பகஞ்செய்தல், —பிரத்தியாகாரம், உபாதியைநீக்கி யுள்ளொடுக்கல் —தாரணை, கண்டம், இதயம், நெற்றி, கபாலம், நாபி, இவற்றிலொன்றிற் சந்ததம், சிந்தைவைத்தல்,—தியானம், ஐம்புலமடக்கிச் சிவயோகஞ்சேர்தல்,—சமாதி. இந்திரியமுதலிய தத்துவசேட்டைகட் கேதுவா யாக்கையுணின்றவற்றோடுகூடினு மவற்றிற் பற்றின்றியிருக்கு மான்மாவாகிய தன்னைத் தான்காண்டல்.

அச்சுவினிதேவர், உ.

அரசச்சின்னம், உ௰க—முடி, குடை, கவரி, தோட்டி, முரசு, சக்கரம், யானை, கொடி, மதில், தோரணம், நீர்க்குடம், பூமாலை, சங்கு, கடல், மகரம், ஆமை, இணைக்கயல், சிங்கம், தீபம், இடபம், ஆசனம்.

அரசர், ௩—சேரன், சோழன், பாண்டியன்.

அரசர்க்குக்குழு, ௫—மந்திரியர், புரோகிதர், சேனாபதியர், தூதர், சாரணர்.

அரசர்க்குத்துணைவர், அ—மந்திரியர், கருமாதிகாரர், சுற்றம், கடைகாப்பாளர், நகரமாக்கள், படைத்தலைவர், இவுளிமறவர், யானைவீரர்.

அரசர்க்குறுதிச்சுற்றம், ௫—நட்பாளர், அந்தணாளர், மடைத்தொழிலோர், மருத்துவக்கலைஞர், நிமித்திகப்புலவர்.

அரசியல், ௬—படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண்.

அரசியல், ௬—அறநிலையறம், மறநிலையறம், அறநிலைப்பொருள், மறநிலைப்பொருள், அறநிலையின்பம், மறநிலையின்பம், அவையாவன. தன்வருணத்திற்பிறழாது நிலைபெறப் பாதுகாத்தலறநிலையறம்,—திணைமயக்குறுபகைவென்று செங்கோற்றுக் கடக்கமுடியாதானைத் தண்டித்துக் குறைவுறச்செய்தன் மறநிலையறம்,—நெறியினின்று தத்தநிலையினான் முயன்றுபெறுபொருளறநிலைப்பொருள்,—பகைஞர்பொருளுந் திறைப்பொருளுஞ் சுங்கத்தில் வரும்பொருளு மறநிலைப்பொருள்,—பருவமுங் குலமு மொழுக்கமுங் குணமு மொத்த கன்னிகையைத் தீ வெட்டிப்பலத் திருத்த லறநிலையின்பம்,—ஏறுதழுவியும் வில்லிறுத்து மொருத்தி வம்பினுக்கமெய்து மிவ்வாறு மாறுடைநெறியின் மணத்தல் மறநிலையின்பம்.

அரண், ௪—மலை, காடு, மதில், கடல்.

அலங்காரம், ௩௰௫—தன்மை, உவமை, உருவகம், தீவகம், பின்வருநிலை, முன்னவிலக்கு, வேற்றுப்பொருள்வைப்பு, வேற்றுமை, விபாவனை, ஒட்டு, அதிசயம், தற்குறிப்பேற்றம், ஏது, நுட்பம், இலேசம், நிரனிறை, ஆர்வமொழி, சுவை, தன்மேம்பாட்டுரை, பரியாயம், சமாயிதம், உதாத்தம், அவநுதி, சிலேடை, விசேடம், ஒப்புமைக்கூட்டம், விரோதம், புகழ்நிலை, புகழாப்புகழ்ச்சி, நிதரிசனம், புணர்நிலை, பரிவருத்தனை, வாழ்த்து, சங்கீரணம், பாவிகம்.

அலங்காரம், ௱ — உவமை, இயைபின்மை, புகழ்பொருளுவமை, எதிர்நிலை, உருவகம், திரிபு, பலபடப்புனைவு, நினைப்பு, மயக்கம், ஐயம், ஒழிப்பு, தற்குறிப்பு, உயர்வுநவிற்சி, ஒப்புமைக்கூட்டம், விளக்கு, பின்வருவிளக்கு, தொடர்முழுதுவமை, எடுத்துக்காட்டுவமை, காட்சி, வேற்றுமை, உடனிகழ்ச்சி, இன்மைநவிற்சி, உருவகச்சொல்லல், கருத்துடையடை, கருத்துடையடைகொளி, பலபொருட்சொற்றொடர், புனைவிலிபுகழ்ச்சி, புனைவுளிவிளைவு, பிறிதினவிற்சி, வஞ்சப்புகழ்ச்சி, வஞ்சப்பழிப்பு, எதிர்மறை, முரணவிளைவழிவு, பிறிதாராய்ச்சி, காரணவாராய்ச்சி, கூடாமை, தொடர்பின்மை, தகுதியின்மை, தகுதி, வியப்பு, பெருமை, சிறுமை, ஒன்றற்கொன்றுதவி, சிறப்புநிலை, மற்றதற்காக்கல், காரணமாலை, ஒற்றைமணிமாலை, மாலைவிளக்கு, மேன்மேலுயர்ச்சி, நிரனிறை, முறையிற்படர்ச்சி, மாற்றுநிலை, ஒழித்துக்காட்டு, உறழ்ச்சிக்கூட்டம், வினைமுதல்விளக்கு, எளிதின்முடிவு, விறலவிசாள், தொடர்நிலைச்செய்யுட்பொருட்பேறு, தொடர்நிலைச்செய்யுட்குறி, வேற்றுப்பொருள்வைப்பு, மலர்ச்சி, கற்றோர்நவிற்சி, உட்கருத்துணர்வு, பொய்த்தற்குறிப்பு, வனப்புநிலை, இன்பம், துன்பம், அகமலர்ச்சி, இகழ்ச்சி, வேண்டல், இலேசம், குறிநிலை, அரதனமாலை, பிறிதின்குணம்பெறல், தொல்லுருப்பெறல், பிறிதின்குணம்பெறாமை, தன்குணமிகை, மறைவு, பொதுமை, மறையாமை, சிறப்பு, இறை, நுட்பம், கரவுவெளிப்படுப்பு, வஞ்சநவிற்சி, குறிப்புநவிற்சி, வெளிப்படைநவிற்சி, புத்தி, உலகவழக்குநவிற்சி, வல்லோர்நவிற்சி, மடங்குதல்நவிற்சி, தன்மைநவிற்சி, நிகழ்வினவிற்சி, வீறுகோள், மிகுதிநவிற்சி, பிரிநிலைநவிற்சி, விலக்கு, விதி, ஏது.

அவத்தை, ரு — சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம்.

அளவு, ச — எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல் — தெறித்தலொடைந்தெனவுங்கூறுப.

அளவை, அ — காட்சி, அனுமானம், உவமானம், ஆகமம், அருத்தாபத்தி, அபாவம், ஐதிகம், சம்பவம், அவையாவன, காணல்காட்சி, — புகையைக்கண்டு நெருப்புண்டெனலனுமானம் — மரைபசுப்போலெனலுவமானம் — பெரியோர்வாய்ச்சொலாகமம், — பகலுண்ணான் பருத்திருப்பானென்பு யிரவிலொளித்துண்பானெனவுணர்தலருத்தாபத்தி, — முன்றுமில்லைபின்றுமில்லை ஒன்றிலொன்றில்லையொருகாலத்துமில்லையெனலபாவம், — இம்மரத்திற்பேயுளதென்பதைதிகம், ஆயிரத்திலாறுண்டெனல் சம்பவம்.

அறத்துறப்பு, அ — ஐயப்படாமை, விருப்பின்மை, வெறுப்பின்மை, மயக்கமின்மை, பழியைநீக்கல், அழிந்தோரைக்காத்தல், அறம்விளக்கல், பேரன்புடைமை.

அறம், உ — இல்லறம், துறவறம்.

அறம், ௩௰௨ — ஆதுலர்க்குச்சாலை, ஓதுவார்க்குணவு, அறுசமயத்தார்க்குண்டி, பசுவுக்குவாயுறை, சிறைச்சோறு, ஐயம், தின்பண்டநல்கல், அறவைச்சோறு, மகப்பெறுவித்தல், மகவுவளர்த்தல், மகப்பால்வார்த்தல், அறவைப்பிணஞ்சுடுதல், அறவைத்தூரியம், சுண்ணம், நோய்மருந்து, வண்ணார், நாவிதர், கண்ணாடி, காதோலை, கண்மருந்து, தலைக்கெண்ணெய், பெண்போகம், பிறர்துயர்காத்தல், தண்ணீர்ப்பந்தல், மடம், தடம், சோலை, ஆவுரிஞ்சுதறி, விலங்கிற்குணவு, ஏறு

விடுத்தல், விலைகொடுத்துயிர்காத்தல், கன்னிகாதானம்.

அனுபந்தம், ௪—விடயம், சம்பந்தம், பிரயோசனம், அதிகாரி.

அன்னுவயவிலக்கணம், ௫—விசேடணம், விசேடியம், கருத்தா, கருமம், கிரியை.

ஆ

ஆச்சிரமம், ௪ — பிரமசாரி, இல்வாழ்வோன், வானப்பிரத்தன், சந்நியாசி, இவருட்பிரமசாரி, ஆசிரியனிடத்தோதிவிரதங்காத்து விவாகமின்றியிருப்போன்,—இல்வாழ்வோனில்லறத்தின் வழாதில்லாளோடுங்கூடி வாழ்வோன்,—வானப்பிரத்தன், இல்லந்துறந்தில்லாளோடாயினுந் தனித்தாயினும் வனத்திற்றவஞ்செய்வோன்,—சந்நியாசி முற்றத்துறந்தோன்.

ஆதாரம், ௬ — மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆஞ்ஞை, இவற்றிற்கு முறையேயிடம், குதம், குய்யம், நாபி, இதயம், அடிநா, நெற்றி.

ஆயுதவகை, ௨—அத்திரம், சத்திரம், இவற்றுட்கைவிடுமாயுதமத்திரம், கைவிடாவாயுதஞ்சத்திரம்.

ஆன்மா, ௨—சீவான்மா, பரமான்மா, அவையாவன, சரீராவச்சின்னவான்மா, சீவான்மா, இதரபதார்த்தானவச்சின்னவான்மா, பரமான்மா.

இ

இசை, ௩ — மந்தரம், மத்திமம், தாரம்.

இசை, ௭—குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம், இவற்றுண்மிடற்றாற்குரல், நாவினாற்றுத்தம், அண்ணத்தாற்கைக்கிளை, சிரத்தாலுழை, நெற்றியாலிளி, நெஞ்சால்விளரி, மூக்காற்றாரம், இங்ஙனந்தனித்தனிப்பிறக்கும், இவையே, யேழ்சுரமெனவும் வீணையிலேழ் நரம்பெனவும்படும், இவற்றிற்கோசையுவமை, மயில், இடபம், ஆடு, கொக்கு, குயில், குதிரை, யானை,—சுவையுவமை, பால், தேன், கிழான், நெய், ஏலம், வாழை, மாதுளங்கனி, — வாசனையுவமை, மௌவல், முல்லை, கடம்பு, வஞ்சி, நெய்தல், பொன்னாவிரை, புன்னை,—அக்கரம், ஆ அ, ஈ இ, ஊ உ, ஏ எ, ஐ இ, ஓ ஒ, ஔ உ, — மாத்திரை, நான்குகுரல், நான்குதுத்தம், இரண்டுகைக்கிளை, மூன்றுழை, நான்கிளி, மூன்றுவிளரி, இரண்டுதாரம்,— இவற்றாலேழுபாலைபிறக்கும், அவையாவன, குரலேகுரலாயிற்செம்பாலை,—துத்தமேகுரலாயிற்படுமலைப்பாலை, — கைக்கிளையேகுரலாயிற் செவ்வழிப்பாலை,—உழையே குரலாயினரும்பாலை,—இளியேகுரலாயிற்கொடிப்பாலை,—விளரியேகுரலாயின் விளரிப்பாலை,—தாரமேகுரலாயின்மேற் செம்பாலை,—இவற்றுட் செம்பாலைக்குக் கொடிப்பாலை வலிது, கொடிப்பாலைக்கு விளரிப்பாலையுமேற்செம்பாலையுவலிது, அன்றியுந்தாரத்துளுழையுமுழையுட் குரலுங்குரலுளிளியு மிளியுட்டுத்தமுந்துத்தத்துள்விளரியும் விளரியுட்கைக்கிளையும் பிறப்பதுதகுதி,—இவற்றிற்கிறைவர், விசுவாமித்திரன், சமதக்கினி, சந்திரன், சூரியன், கௌதமன், காசிபன், ஈசன், இவற்றிற்குயிர், ஈசன்.

இடம், ௩—தன்மை, முன்னிலை, படர்க்கை.

இதிகாசம், ௨ — பாரதம், இராமாயணம்.

இரதம், ௯ — சிங்காரம், வீரியம், பெருநகை, கருணை, இரௌத்திரம், குற்சை, சாந்தம், அற்புதம், பயம்.

இராகத்தகுதி, ௪ — இடம், செய்யுள், குணம், காலம், இவற்றுளிடம்பற்றியவிராகமைந்திணையிராகம், — செய்யுட்பற்றியவிராகத்துள், வெண்பாவிராகஞ் சங்காராபரணம், அகவலிராகந்தோடி, கலியிராகம், பந்துவராளி, கலித்துறையிராகம்பைரவி, தாழிசையிராகந்தோடி, விருத்தவிராகங் கலியாணி, காம்போதி, மத்தியமாவதிபலவும், உலாவிராகஞ்சௌராட்டிரம், தோடையவிராகஞ் சௌராட்டிரம், நாட்டை, மங்களராகம் மங்களகௌசிகம், தேவாரத்திராகம், பூபாளம், பிள்ளைக்கவிராகங் கேதாரகௌளம், பரணிராகங்கண்டாரவம், —குணம்பற்றியவிராகத்துள், இரக்கராகம், ஆகரி, கண்டாரவம், நீலாம்பரி, பியாகடம், புன்னாகவராளி, துக்கவிராகம், இரக்கராகங்களன்றி வராளியின்மேலாம், மகிழ்ச்சியிராகம், காம்போதி, சாவேரி, தன்னியாசி, யுத்தவிராகம், நாட்டை, —காலம்பற்றிய விராகத்துள், வசந்தகாலவிராகம், காம்போதி, அசாவேரி, தன்னியாசி, அன்றியுமாலையிராகங்கலியாணி, காபி, கன்னடம், காம்போதி, யாமராகம், ஆகரி, விடியவிராகம், இந்தோளம், இராமகலி, தேசிகாட்சரி, நாட்டை, பூபாளம், உச்சியிராகம், சாரங்கம், தேசாட்சரி, அன்றியும், ஆகரி, இந்தோளம், இராமகலி, சாரங்கம், பூபாளநீக்கிநின்றமற்றவையெக்காலத்தும் பொதுவையை.

இராகம், ௩௨ — பைரவி, தேவக்கிரியை, மேகவிரஞ்சி, குறிஞ்சி, பூபாளம், வேளாவளி, மலகரி, பௌளி, சிராகம், இந்தோளம், பல்லதி, சாவேரி, படமஞ்சரி, தேசி, இலலிதை, தோடி, வசந்தம், இராமக்கிரியை, வராளி, கைசிகம், மாளவி, நாராயணி, குண்டக்கிரியை, கூர்ச்சரி, பங்காளம், தன்னியாசி, காம்போதி, கௌளி, நாட்டை, தேசாட்சரி, காந்தாரி, சாரங்கம், இவற்றுள், பைரவி, புருடவிராகம் பிராமணசாதி. இதின் மனைவிகள், தேவக்கிரியை, மேகவிரஞ்சி, குறிஞ்சி, அதிதேவதையீசன், — பூபாளம், புருடவிராகம், பிராமணசாதி, இதின் மனைவிகள், வேளாவளி, மலகரி, பௌளி, அதிதேவதைதிருமால், —சிராகம், புருடவிராகம், அரசசாதி, இதின்மனைவிகள், இந்தோளம், பல்லதி, சாவேரி, அதிதேவதைசரச்சுவதி, — படமஞ்சரி, புருடவிராகம், அரசசாதி, இதின் மனைவிகள், தேசி, இலலிதை, தோடி, அதிதேவதை, இலக்குமி, —வசந்தம், புருடவிராகம், வைசியசாதி, இதின் மனைவிகள், இராமக்கிரியை, வராளி, கைசிகம், அதிதேவதைசூரியன், —மாளவி, புருடவிராகம், வைசியசாதி, இதின் மனைவிகள், நாராயணி, குண்டக்கிரியை, கூர்ச்சரி, அதிதேவதை, நாரதன், —பங்காளம், புருடவிராகம், சூத்திரசாதி, இதின் மனைவிகள், தன்னியாசி, காம்போதி, கௌளி, அதிதேவதைவிநாயகன், — நாட்டை, புருடவிராகம், சூத்திரசாதி, இதின் மனைவிகள், தேசிகாட்சரி, காந்தாரி, சாரங்கம், அதிதேவதைதும்புருவன், — இவையன்றிப் பலவகைப்படவழங்கு மிராகம் பலவுளவவைகூறிற்பெருகும்.

இராசி, ௧௨ — மேடம், இடபம், மிதுனம், கர்க்கடகம், சிங்கம், கன்னி, துலாம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம், மீனம், இவற்றுண் முன்னாறுமுத்தராயணராசி, பின்னாறுந் தக்கணு

யன்ராசி, அன்றியு மூலநாண் மூன்றுங் கடைமூன்றுமேறுமிராசி, இடையாறுமிறங்குமிராசி.

இருமை, உ—இம்மை, மறுமை

இலக்கணம், ரு — எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி.

இலிங்கம், ரு—பிருதுவிலிங்கங் காஞ்சியில், அப்புலிங்கம் திருவானைக்காவில், தேயுலிங்கந் திருவண்ணாமலையில், வாயுலிங்கஞ் சீகாளத்தியில், ஆகாயலிங்கஞ் சிதம்பரத்தில், இவையே பஞ்சபூத வடிவங்களான பிரதானபஞ்சலிங்கம்.

இழிச்சொல், ச—குறளை, பொய், கடுஞ்சொல், பயனில்சொல்.

ஈ

ஈச்சுரன்குணம், அ—தன்வயத்தனாதல், தூயவுடம்பினனாதல், இயற்கையுணர்வினனாதல், முற்று முணர்தல், இயல்பாகவே பாசங்களினீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்ற லுடைமை, வரம்பிலின்பமுடைமை. இவை சைவாகமத்திற் கூறப்பட்டன. அன்றியும், வரம்பின்ஞானம், வரம்பில்காட்சி, வரம்பிலின்பம், வரம்பிலாற்றல், நாமமின்மை, கோத்திரமின்மை, ஆயுவின்மை, இடையூறின்மை, என்பன ஆருகதராற்கூறப்பட்டன.

ஈச்சுரன் பிரபுத்துவ சாமர்த்தியகுணம், ௩—கர்த்தத்துவம், அகர்த்தத்துவம், அன்னியதாகர்த்தத்துவம்.

ஈச்சுரன்முகம், ரு — ஈசானம், தற்புருடம், அகோரம், வாமம், சத்தியோசாதம், இவற்றுள், ஈசானமனைத்துமாளுதல், தற்புருடங்காத்தல், அகோரமழித்தல், வாமம்விளக்கல், சத்தியோசாதந்தோற்றுவித்தல்.

ஈச்சுரன்முக்கியகுணம், சு — சருவஞ்ஞத்துவம், சருவேச்சுரத்துவம், சருவநியந்திருத்துவம், சருவாந்தரியாமித்துவம், சருவகர்த்திருத்துவம், சருவசத்தித்துவம், அன்றியும், தன்வயத்தனாதல், முதலிலனாதல், உடம்பிலனாதல், எல்லா நலமுளனாதல், எங்கும் வியாபகனாதல், எவற்றிற்குங் காரணனாதல்.

உ

உட்பகை, சு — காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாற்சரியம்.

உண்டி, ச—உண்டல், தின்றல், நக்கல், பருகல், அவையாவன, சோறுமுதலியவுண்டல், கறிமுதலியதின்றல், தேன்முதலியநக்கல், நீர்முதலியபருகல்.

உபசாரம், ௰சு—தவிசளித்தல், கைக்குநீர்தரல், கால்கழுநீர்தரல், முகக்குடிநீர்தரல், நீராட்டல், ஆடைசாத்தல், முப்புரிநூறால, சேய்வைபூசல், மலர்சாத்தல், மஞ்சளரிசிதூவல், நறும்புகைகாட்டல், விளக்கிடல், கருப்பூரமேற்றல், அமுதமேந்தல், அடைகாய்தரல், மந்திரமலரா னருச்சித்தல்.

உபநிடதம், ௩௰௨ — [illegible] பிருகதாரண்ணியம், சுவேதாசுவதரம், கைவல்லியம், காலாக்கினி, கடவல்லி, காத்தியாயனம், பிரமம், நாராயணம், அங்கிசம், பரமாங்கிசம், பாற்கரம், பிரமபிந்து, ஆருணி, அமிர்தபிந்து, பகுவபஞ்சம், பிரமசாபாலம், தேசோபிந்து, வார்சியாநீயம், போதாயநீயம், ஆசுவலாயநீயம், சாங்கியாயநீயம், வாசிராயநீயம், சௌனகீயம், சிவசங்கற்பம், சிரவணம், பாராகம், கிம்புரோடியம், மாண்டூகம், முண்டிரம், மௌண்டிரம்.

உபாயம், ௪—சாமம், தானம், பேதம், தண்டம், அவையாவன, சமாதானத்தோடாயினும் பொருள்கொடுத்தாயினும் பிறரைப்பிரித்தாயினும்படைகொண்டாயினுங்காரியங்கொள்ளவிருநான்குமரசர்க்குரியனவாம்.

உயிர்வேதனை, ௰௨ — அனல், சீதம், அசனி, புனல், வாதம், ஆயுதம், விடம், மருந்து, பசி, தாகம், பிணி, முனிவுறுமை.

உருத்திரர், ௰௧—மாதேவன், அரன், உருத்திரன், சங்கரன், நீலலோகிதன், ஈசானன, விசயன், வீமதேவன், பவோற்பவன், காபாலி, சௌமியன்.

உரை, ௪—கருத்துரை, பதவுரை, பொழிப்புரை, அகலவுரை, அவையாவன, செய்யுட்கருத்துரைத்தலே கருத்துரை, சொற்றொறும் பதப்பயனுரைத்தலே பதவுரை, பொருட்டொகுத்துரைத்தலே பொழிப்புரை, இலக்கணமுமிலக்கியமு மெடுத்துக் காட்டிப் பொருள்விரித் துரைத்தலே யகலவுரை.

உரையிலக்கணம், ௫ — பதம், பதப்பொருள், வாக்கியம், வினா, விடை.

உலகம், ௩ — பூமி, அந்தரம், சுவர்க்கம், அன்றியும், பூலோகம், பரலோகம், பாதாளலோகமென்பாருமுளர்.

உலகம், ௰௪ — மேலுலகேழுங் கீழுலகேழும், மேலுலகாவன, பூலோகம், புவலோகம், சுவலோகம், சனலோகம், தபோலோகம், மகாலோகம், சத்தியலோகம்—கீழுலகாவன அதலம், விதலம், சுதலம், தராதலம், இரசாதலம், மகாதலம், பாதாளம்.

உலோகம், ௫—பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம், இவையே பஞ்சலோகம்.

உலோகம், ௭ — செம்பொன், வெண்பொன், கரும்பொன், செப்பு, ஈயம், வெண்கலம், தரா.

உவர்ப்பு, ௬—ஆசியம், இரதி, அரதி, சோகம், பயம், குற்சை, இவைமுறையே, சிரிப்பு, ஆசை, வெறுப்பு, சோர்வு, அச்சம், அருவருப்பு.

ஊ

ஊறு, ௮—வெம்மை, தண்மை, மென்மை, வன்மை, திண்மை, நொய்மை, சீர்மை, சர்ச்சரை, இவையே தொடப்படும் பொருட்கெண்குணம்.

ஊறுபாடு, ௪—அறிதல், குத்தல், வெட்டல், எய்தல்.

எ

எச்சம், ௨—பெயரெச்சம், வினையெச்சம்.

எச்சம், ௮—குறள், கூன், ஊமை, செவிடு, குருடு, முடம், உறுப்புமயக்கம், உறுப்பிலிண்டம், இவையெண்வகையுடற்குறை.

எழுத்துத்தானம், ௫— பாலன், குமரன், அரசன், விருத்தன், மரணம், இவற்றிற்குமுறையே யெழுத்துக்களாவன, அ, இ, உ, எ, ஒ, பாட்டுடைத்தலைவன், பேரெழுத்தை பாலதானமாகக்கொண்டெண்ணப்படும், இவற்றுண் முன்னையமூன்று நன்மை பயக்கும், பின்னையவிரண்டுந் தீமைபயக்கும்.

ஐ

ஐச்சுவரியம், ௮—இராசாங்கம், மக்கள், சுற்றம், பொன், மணி, நெல், வாகனம், அடிமை.

ஐம்புலநுகர்ச்சியினிறப்பன, ௫ — சுவையாலிறப்பதுமீன், நாற்றத்தால் வண்டு, பரிசத்தால்யானை, ஓசையால சுணம், ஒளியால்விட்டில்.

ஒ

ஒருமை, க—இறையுணர்வு.

க

கடல், எ—உவர்நீர், நன்னீர், பால், தயிர், நெய், கருப்பஞ்சாறு, தேன்.

கடுகம், ௩—சுக்கு, திப்பிலி, மிளகு, இவையே திரிகடுகெனப்படும்.

கடைப்படுதானம், எ — ஆர்வம், புகழ், அச்சம், கைம்மாறு, காரணம், கண்ணோட்டம், கடப்பாடு.

கணக்குவகை, ச — தொகை, பிரிவு, பெருக்கு, கழிவு.

கணம், அ—நிலம், நீர், மதி, இயமானன், சூரியன், தீ, வாயு, ஆகாயம், இவற்றுண் முன்னர் நான்கு நன்று, பின்னர் நான்குங்கலகம், நிரைநிரைநிரை நிலக்கணம், நேர்நிரைநிரை நீர்க்கணம், நிரைநேர்நேர் மதிக்கணம், நேர்நேர்நேர் உயிர்க்கணம், நேர்நிரைநேர்சூரியகணம், நிரைநேர் நிரைதீக்கணம், நேர்நேர் நிரைவாயுக்கணம், நிரைநிரைநேர் ஆகாயக்கணம்.

கணம், ௰அ—அமரர், சித்தர், அசுரர், தைத்தியர், கருடர், கின்னரர், நிருதர், கிம்புருடர், காந்தருவர், இயக்கர், விஞ்சையர், பூதர், பைசாசர், அந்தரர், முனிவர், உரகர், ஆகாயவாசிகள், போகபூமியர்.

கணிதம், அ—சங்கலிதம், விபகலிதம், குணனம், பாகாரம், வர்க்கம், வர்க்கமூலம், கனம், கனமூலம், இவற்றுள், சங்கலிதம் கூட்டல்,—விபகலிதம் கழித்தல்,—குணனம் பெருக்கல்,—பாகாரம் பங்கிடல்,— வர்க்கம் சமமாகிய விரெண்ணின் பெருக்கம், அஃதாவது நிலத்தைச்சமமாக நாற்கோணஞ்செய்தல்,— வர்க்கமூலம் அவ்வர்க்கத்தொகையினின்றதன் மூலமாகிய வரம்பறிதல்,—கனம் சமமாகியமூவெண்ணின்பெருக்கம், அஃதாவது, குழியைச் சமமாகப் பன்னிருகோணப்படுத்தல்,-கனமூலம் அக்கனத்தொகையினின்றதன் மூலமாகியவொருமூலை யறிதல்.

கண்டம், ௯ — கீழ்விதேகம், மேல்விதேகம், வடவிதேகம், தென்விதேகம், வடவிரோபதம், தென்னிரோபதம், வடபரதம், தென்பரதம், மத்திமகண்டம், இவையே நவகண்டம்.

கதி, ச — தேவகதி, மக்கட்கதி, விலங்கின்கதி, நரககதி.

கந்தம், உ—நறகந்தம், துர்க்கந்தம்.

கரணம், ச—மனம், புத்தி, அகங்காரம், சித்தம்.

கரணம், ௰க—பவ, பாலவ, கவுலவ, தைதுலை, கரசை, வனசை, பத்திரவா, சகுனி, சதுர்ப்பாத,நாகவா, கிமித்துக்கின.

கருமபூமிக்குரிமை, ௬-வரைவு, தொழில், வித்தை, வாணிகம், உழவு, சிற்பம்.

கருமேந்திரியம், ௫—வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபத்தம்.

கருவுள்ளமைப்பு, ௬—பேறு, இழவு, இன்பம், பிணி, மூப்பு, சாக்காடு.

கலைஞானம், ௬௰ச — அக்கரவிலக்கணம், இலிகிதம், கணிதம், வேதம், புராணம், வியாகரணம், நீதிசாத்திரம், சோதிடசாத்திரம், தருமசாத்திரம்,

யோகசாத்திரம், மந்திரசாத்திரம், சகுனசாத்திரம், சிற்பசாத்திரம், வைத்தியசாத்திரம், உருவசாத்திரம், இதியாசம், காவியம், அலங்காரம், மதுரபாடனம், நாடகம், நிருத்தம், சத்தப்பிரமம், வீணை, வேணு, மிருதங்கம், தாளம், அத்திரபரீட்சை, கனகபரீட்சை, இரதபரீட்சை, கசபரீட்சை, அசுவபரீட்சை, இரத்தினபரீட்சை, பூமிபரீட்சை, சங்கிராமவிலக்கணம், மல்லயுத்தம், ஆகருடணம், உச்சாடனம், வித்துவேடணம், மதனசாத்திரம், மோகனம், வசீகரணம், இரசவாதம், காந்தருவவாதம், பைபீலவாதம், கவுத்துகவாதம், தாதுவாதம், காருடம், நட்டம், முட்டி, ஆகாயப்பிரவேசம், ஆகாயகமனம், பரகாயப்பிரவேசம், அதிரிசயம், இந்திரசாலம், மகேந்திரசாலம், அக்கினித்தம்பம், சலத்தம்பம், வாயுத்தம்பம், திட்டித்தம்பம், வாக்குத்தம்பம், சுக்கிலத்தம்பம், கனனத்தம்பம், கட்கத்தம்பம், அவத்தைப்பிரயோகம்.

கவி, ச—ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம், இவற்றுள், பொருளடிபாவணிமுதலிய கொடுத்துமற்றொருவன் பாடுகவென்றவுடனே பாடுவோனாசுகவி,—பொருட்செல்வம், சொற்செல்வம், தொடை, தொடைவிகற்பஞ்செறியவுருவகமுதலிய வலங்காரந்தோடின்னோசைத்தா யமுதமுறப் பாடுவோன் மதுரகவி,—மாலைமாற்று, சுழிகுளம், ஏகபாதம், சக்கரம், எழுகூற்றிருக்கை, காதைகரப்பு, கரந்துறை, நாகபந்தம், முரசபந்தம், மாலைமாற்று, பாதமயக்கு, பாவின்புணர்ப்பு, கூடசதுக்கம், கோமூத்திரி, ஓரெழுத்தினம், ஒற்றெழுத்தொழிந்த வொருபொருட்பாட்டு, சித்திரப்பா, விசித்திரப்பா, வினாவுத்தரம், சருப்பதோபத்திரம், எழுத்துவருத்தன மிவைமுதலிய மிறைக்கவிதெரிந்து பாடுவோன், சித்திரக்கவி,— மும்மணிக்கோவை, பன்மணிமாலை, மறம், கலிவெண்பா, தசாங்கம், மடலூர்தல், கிரீடை, இயல், இசை, கூத்து, பாசண்டத்துறை, இவைமுதலிய விரித்துப்பாடுவோன் வித்தாரக்கவி.

கன்னிகை, ரு—அகலிகை, துரோபதை, சீதை, தாரை, மண்டோதரி.

கா

காதலர், ந—புருடன், தோழன், மகன்.

காலம், ந—இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம்.

காலம், சு—பருவத்தைக்காண்க.

கி

கிரகம், கூ—ஆதித்தன், சோமன், அங்காரகன், புதன், பிரகற்பதி, சுக்கிரன், சனி, இராகு, கேது, இவையேநவக்கிரகங்களெனப்படும்.

கு

குணம், ந—சத்துவம், இராசதம், தாமதம்,—அமையாவன, ஞானம், அருள், தவம், பொறை, வாய்மை, மேன்மை, மௌனம், ஐம்பொறியடக்கமெனவெட்டுஞ்சத்துவம்,—மனவூக்கம், ஞானம், வீரம், தவம், தருமம், தானம், கல்வி, கேள்வியென வெட்டுமிராசதம்,—பெருண்டி, நெடுந்துயில், சோம்பு, தீநெறி, ஒழுக்கவழு, வஞ்சம், மற்றி, பொய், கோபம், காமம், கொலை, இவைதமசு.

குணம், ச—ஆதிக்குணம், அறிவு, நிறை,

ஊர்ப்பு, கடைப்பிடி,—மகடூஉக்குணம், நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு.

குரவர், ௫—அரசன், உபாத்தியாயன், தந்தை, தேசிகன், மூத்தோன்.

குற்றம், ௩—காமம், வெகுளி, மயக்கம்.

குற்றம், ௫—கொட்டாவி, நெட்டை, குறுகுறுப்பு, கூன்கிடை, நட்டுவிழல்.

குற்றம், ௮—ஞானாவரணியம், தரிசனாவரணியம், வேதநீயம், மோகநீயம், ஆயு,நாமம், கோத்திரம், அந்தராயம்.

கூ

கூத்துவகை, ௨-தேசிகம், மார்க்கம்.

கே

கேள்வி, ௪—அறம், பொருள், இன்பம், வீடு, இந்நான்குங்கேட்டல்.

கேள்வி, ௫—அறம், பொருள், இன்பம், வீடு, இந்நாற்கேள்வியோடிவற்றின்வழிநிற்றல்.

கை

கைத்தொழில், ௫—எண்ணல், எழுதல், இலைகிள்ளல், பூத்தொடுத்தல், யாழ்வாசித்தல்.

கோ

கோசம், ௫—அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம், ஆனந்தமயம், அவையாவன,உடல் அன்னமயகோசம், கருமேந்திரியமும் பிராணனும் பிராணமயகோசம், கருமேந்திரியமுமனமு மனோமயகோசம், ஞானேந்திரியமும் புத்தியும் விஞ்ஞானமயகோசம், அவித்தையானந்தமயகோசம்.

கௌ

கௌடம், ௫—சுத்தகௌடம், காளருப்சம், சாரசுவதம், உற்கலம், மைதிலை.

கௌவியம், ௫—கோசலம், கோமயம், பால், தயிர், நெய்.

ச

சக்கரவர்த்திகள், ௬—அரிச்சந்திரன், நளன், முசுகுந்தன், புருகுற்சன், புரூரவன், கார்த்தவீரியன், இவர்களுமொருவனைப்பணியாது, தரணியாண்டோர்.

சதுரங்கம்—அங்கங்காண்க.

சத்தம், ௫—தோற்கருவி, துளைக்கருவி, நரப்புக்கருவி, கஞ்சக்கருவி, மிடற்றுக்கருவி,இவையேசத்தத்துக்குக்காரணம்.

சத்தி, ௩—இச்சாசத்தி, ஞானசத்தி, கிரியாசத்தி, இவற்றுளிச்சாசத்தியுயிர்க்கருணேசம், ஞானசத்தி, கருமங்களையறிந்தூட்டல், கிரியாசத்தி, உலகங்களாக்கல்.

சத்தி, ௫—சிற்சத்தி, பராசத்தி, இச்சாசத்தி, ஞானசத்தி, கிரியாசத்தி, அவையாவன, உயிர்க்கொளியாகநிற்பதுசிற்சத்தி,-பிராணன்முதலிய வாயுவாகநிற்பது பராசத்தி,-பஞ்சபூதமாநிற்பதிச்சாசத்தி,—ஐம்பொறியுணர்ச்சியாகநிற்பதுஞானசத்தி,—மற்றைவினைத்துணையாகநிற்பதுகிரியாசத்தி.

சமயம், ௬—வைரவம், வாமம், காளாமுகம், மாவிரதம், பாசுபதம்,சைவம், அன்றியும் புறச்சமயமாவன, ௬, உலகாயிதம், புத்தம், சமணம், மீமாஞ்சை, பாஞ்சராத்திரம், பாட்டாசாரியம்.

சயனம், ௫—இலவம்பஞ்சு, செம்பஞ்சு, வெண்பஞ்சு, மயிர், அன்னத்தூவி, இவற்றாற்செய்யப்பட்டவைவகைமெத்தை, இவையேபஞ்சசயனம்.

சா

சாதி, ௪—ஆந்திரம், கன்னடம், திராவிடம், மகாராட்டிரம்.

சாத்திரம், ௩—சாங்கியம், பாதஞ்சலியம், வேதாந்தம், இவைமுறையேகபிலர், பதஞ்சலி, வியாசரிம்மூவராற்கூறப்பட்டன, இவற்றையத்தியான்மிகநூலென்ப.

சாத்திரம், ௬—வேதாந்தம், வைசேடிகம், பாட்டம், பிரபாகரம், பூருவமீமாஞ்சை, உத்தரமீமாஞ்சை.

சாந்துவகை, ௪—பீதம், கலவை, வட்டிகை, புலி.

சி

சித்தர், ௯—சத்தியநாதர், சதோகநாதர், ஆதிநாதர், அநாதிநாதர், வகுளிநாதர், மதங்கநாதர், மச்சேந்திரநாதர், கடேந்திரநாதர், கோரக்கநாதர்.

சித்தி, ௮—அணிமா, மகிமா, கரிமா, இலகிமா, பிராத்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம், அவையாவன ஆன்மாப்போலாதலணிமா,—மகத்துவமாதலேமகிமா,—தன்னுடற்கண்டிப்பின்றாய்க் கண்டிப்புள்ளவற்றையுருவவல்லவனாதல் கரிமா,—இலகுத்துவமாதலேயிலகிமா,—வேண்டுவனவடைதலேபிராத்தி,—நிறைவுளனாதலேபிராகாமியம்,—ஆட்சியுளனாதலேயீசத்துவம்,—எல்லாந்தன்வசமாக்கவல்லனாதலேவசித்துவம்.

சிரஞ்சீவியர், ௭—அசுவத்தாமன், மாபலி, வியாசன், அனுமான், விபீடணன், கிருபாசாரியன், பரசுராமன்.

சிவதத்துவம், ௫—சுத்தவித்தை, ஈச்சுரம், சாதாக்கியம், சத்தி, சிவம், அவையாவன, ஞானமேறிக் கிரியைகுறைந்தது சுத்தவித்தை,—ஞானங்குன்றிக் கிரியையுயர்ந்ததீச்சுரம்,—ஞானங்கிரியையொத்தது சாதாக்கியம்,—கிரியைநாடல் சத்தி,—ஞானமொன்றல் சிவம்.

சிவபூசையியல்பு, ௪—சரியை, கிரியை, யோகம், ஞானம்.

சிவாகமம், ௨௮—காமிகம், யோகசம், சிந்தியம், காரணம், அசிதம், தீப்தம், சூக்குமம், சகத்திரம், அஞ்சுமான், சுப்பிரபேதகம், விசயம், நிசுவாசம், சுவாயம்புவம், அனலம், வீரம், இரௌரவம், மகுடம், விமலம், சந்திரஞானம், விம்பம், புரோற்கிதம், இலளிதம், சித்தம், சந்தானசருவோத்தம், பாரமேச்சுரம், கிரணம், பேதம், வாதுளம்.

சிற்பத்தொழிற்குறிப்பு, ௰—கல், உலோகம், செங்கல், மரம், மண், சுதை, தந்தம், வண்ணம், கண்டசருக்கரை, மெழுகு.

சிற்பநூல், ௩௰௨—விச்சுவதருமம், விச்சுவேசம், விச்சுவசாரம், விருத்தம், தாவட்டம், நளம், மயம், அனுமான், பானு, கற்பாரியம், சிருட்டம், மானசாரம், வத்துவித்தியாபதி, பாராசரியம், அரிடிகம், சயித்தகம், வாத்துபோதம், வித்தாரம், இந்திரம், வச்சிரம், சயுமம், விச்சுவகாசிபம், மகதந்திரம், விசாலம், சித்திரம், காபிலகாவியூபம், நாமசங்கிதை, சாத்திகம், விச்சுவபோதம், ஆதிசாரம், செளுச்சுருதம், மானபேதம்.

சீ

சீவதேகம், ௩—தூலம், சூக்குமம், காரணம்.

சீவாவத்தை, ௩—சாக்கிரம், சொப்ப னம், சுழுத்தி.

சு

சுடர், உ—சூரியன், சந்திரன்.

சுடர், ௩ — சந்திரன், சூரியன், அக் கினி.

சுபம், அ—மங்கலங்காண்க.

சுப்பிரமணியர்பிரதானத்தலம், ௬— திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, திருவேரகம், குன் றுகள், சோலைமலை.

சுரம், எ—ச, ரி, க, ம, ப, த, நி, அன்றி யுமேழிசைகாண்க.

சுவை, ௬—கைப்பு, தித்திப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, கார்ப்பு.

சூ

சூதகம், ரு—சனனசூசம், மரணசூச ம், சண்டாளநீரிற்றோய்தல், சுராபா னம்பண்ணல், பொய்கூறல்.

சூரியர், ௰உ—தாத்துரு, சங்கரன், அரி யமன், மித்திரன், வருணன், அஞ்சு மான், இரணியன், பகவான், திவச்சு வான், பூடன், சவித்திரு, துவட்டன், இப்பெயர் சித்திரைமாதமேடவிராசி முதலொவ்வொருமாதத் தொவ்வோ ரிராசியிற்புகுந்து சூரியனுக்குமுறை யேசெல்லுமென்பர், இவரே துவாத சாதித்தர்.

சூரியர்சந்திரர்முதலியவீதி, ௩-மே டவீதி, இடபவீதி, மிதுனவீதி, அவை தாம், இடபம், சிங்கம்,மிதுனம், கடக ம், நான் குமேடவீதி,-மீனம்,மேடம், கன்னி, துலாம், நான்கு மிடபவீதி,- தனுசு, மகரம், கும்பம், விருச்சிகம், நான்கு மிதுனவீதி.

சே

சேனைத்தொகை, ௰ — பதாதி,சேனு முகம், குமுதம், கணகம், வாகினி, பி ரளயம், சமுத்திரம், சங்கம், அநிகம், அக்கோணி, அவையாவன, யானை க, தேர் க, குதிரை ௩, காலாள் ரு, இ வைகூடியது பதாதி, பதாதி மும்மடி கொண்டதுசேனுமுகம், சேனுமுகமு ம்மடி குமுதம், குமுதமும்மடி கண கம், கணகமும்மடி வாகினி, வாகினி மும்மடி பிரளயம், பிரளயமும்மடி ச முத்திரம், சமுத்திரமும்மடி சங்கம், சங்கமும்மடி யநிகம், அநிகமும்மடி அக்கோணி.

சை

சைவம், ௰௬ — ஊர்த்தசைவம், அநா திசைவம், ஆதிசைவம், மகாசைவம் பேதசைவம், அபேதசைவம், அந்தர சைவம், குணசைவம், நிற்குணசைவ ம், அத்துவாசைவம், யோகசைவம், ஞானசைவம், அணுச்சைவம், கிரியா சைவம், நாலுபாதச்சைவம்,சுத்தசை வம்.

சொ

சொல், ச—பெயர், வினை, இடை, உரி.

த

தத்துவம், ௬௰௬ — ஆன்மதத்துவம் உ௰௪,நாடி ௰, அவத்தை ரு,மலம் ௩, குணம் ௩, மண்டலம் ௩, பிணி ௩, விகாரம் அ, ஆதாரம் ௬, தாது எ, வாயு ௰, கோசம் ரு, வாயில் க, இவற்றுளான்மதத்துவமாவன, பூதம் ரு, புலன் ரு, ஞானேந்திரியம் ரு, கரு மேந்திரியம் ரு, கரணம் ச, இவைத த்தம்வரியிற்காண்க.

தந்தையர், ரு—பிறப்பித்தோன், கற்

பித்தோன், மணமுடிப்பித்தோன், அன்னந்தந்தோன், ஆபத்துக்குதவினோன்.

தமிழ், ௩—இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ்.

தமிழ்நாடு, ௰௩— செந்தமிழ்நாடொன்று, இதற்கெல்லை, கருவூரின் கிழக்கு, மருவூரின் மேற்கு, வைகையாற்றின் றெற்கு மருதயாற்றின் வடக்கு, இதனைச்சூழ்ந்த கொடுந்தமிழ்நாடு ௰௨. தென்பாண்டி, குட்டம், குடம், கற்கா, வேண், பூழி, பன்றி, அருவா, அருவா வடதலை, சீதம், மலாடு, புனனாடு.

தயாவிருத்தி, ௰௪—களாபடனம், வியாதாகாரம், நிற்கததண்டனம், சந்தேகவாரணம், அன்னியகுணசகனம், பரிருதானயோகம், பாரர்த்ததேவப்பிரார்த்திதம், அவையாவன முறையே, கல்விபயிற்றல், துயர்தீர்த்தல், தண்டத்தினீக்கல், ஐயந்தேற்றல், பிறர் குணத்தழுக்காறின்றிப் பொறுத்தல், பிறராற் செய்யப்படுந் தீமைமறந்து நன்றிநினைத்தல், பிறர்க்குவேண்டித் தெய்வம்வழிபடல், இவையுயிர்க்கேழுபகாரம், அன்றியுஞ் சத்தாங்கோபகாரம், அன்னம், பானம், அம்பரம், மந்திரம், தாசபாலனம், காராமயத் திரிதயமோசனம், சவச்சேமம், அவையே, உணவு, பானம், உடை, இடம், அடிமைகாத்தல், சிறைநோய்மூன்றுந் தீர்த்தல், பிணமடக்கல், இவ்வயுடற்கேழுபகாரம்.

தயாவிருத்தி, ௮—பிறர்க்குப்பொருள் வரவையுவத்தல், பிறர்செல்வம்பொறுத்தல், பிறர்கருமத்திற்குடன்படல், தீமைக்கஞ்சல், பிறர்கரும முடிக்க விரைதல், பிறனையந்தீர்த்தல், நன்மைகடைப்பிடித்தல், பிறர்துயர்க்கிரங்கல்.

தரு, ௫—அரிச்சந்தனம், கற்பகம், சந்தானம், பாரிசாதம், மந்தாரம்.

தருமநூல், ௰௮—மநு, அத்திரி, ஔரிதம், விட்டுணு, யாஞ்ஞவற்கியம், உசனம், ஆங்கிரசம், யமம், ஆபத்தம்பம், சமவர்த்தம், காத்தியாயனம், பிரகற்பதி, பராசரம், வியாசம், சங்கலிதம், தக்கம், கௌதமம், சாதான்மம், வசிட்டம், இவற்றுட் சங்கலிதம் பொது, இவற்றுள், கிருதயுகத்தில், மநுமிருதியும், திரோதாயுகத்திற் கௌதமமிருதியும், துவாபரயுகத்திற்சங்கலிதமிருதியும், கலியுகத்திற் பராசரமிருதியு முக்கியமாயிருக்கும்.

தா

தாது, ௭—இரதம், இரத்தம், சுக்கிலம், மூளை, தசை, எலும்பு, தோல்.

தாயர், ௫-பாராட்டுந்தாய், ஊட்டுந்தாய், முலைத்தாய், கைத்தாய், செவிலித்தாய், அன்றியுமரசன்றேவி, குருவின்றேவி, அண்ணன்றேவி, தன்றேவியையீன்றாள், தன்னையீன்றாள்.

தாரணை, ௯—நாமதாரணை, வச்சிரதாரணை, மாயாதாரணை, சித்திரதாரணை, செய்யுட்டாரணை, நிறைவு குறைவாகிய வெண்பொருட்டாரணை, சத்ததாரணை, வத்துத்தாரணை, சதுரங்கதாரணை.

தாளம், ௫ — சச்சற்புடம், சாசற்புடம், சட்பிதாபுத்திரிகம், சம்பத்துவேட்டம், உற்கடிதம், இவற்றுட் சச்சற்புடமாவது, குரு ௨, இலகு ௧, புலுதம் ௧, ஓ௨|௪, ஆகமாத்திரை ௮, இஃதீசன்சத்தியோசாத முகத்திற்பிறந்தது, பிரமசாதி,—சாசற்புடமாவது, குரு ௧, இலகு ௨, குரு ௧, ஓ| |ஓ, ஆகமாத்திரை ௯, இஃதீசன்வாமமுகத்தி

ற்பிறந்தது அரசசாதி,— சட்பிதாபு த்திரிகமாவது, புலுதம் க, இலகு க, குரு உ, இலகு க, புலுதம், க, தி । ௩௩ । தி, ஆகமாத்திரை ௰உ, இஃதீசன கோரமுகத்திற்பிறந்தது, வைசியசாதி,— சம்பத்துவேட்டமாவது, புலுதம் க, குரு ௩, புலுதம், க, தி, ௩௩௩, தி, ஆகமாத்திரை ௰உ, இஃதீசன்றற்புருடமுகத்திற் பிறந்தது, சூத்திரசாதி,—உற்கடிதமாவது, குரு, ௩, ௩௩௩, ஆகமாத்திரை ௬, இஃதீசானமுகத்திற் பிறந்தது, சங்கிரமசாதி.

தாளம், ௭—துருவம், மட்டியம், உருபகம், சம்பை, திரிபுடை, அடதாளம், ஏகதாளம், இவற்றுள், துருவத்திற்கு, இலகு க, குரு க, துரிதம் க, । ௩௦, இதற்குச்சுரம், சரிகம, கரிசரி கரிசரி கம,—மட்டியத்திற்கு, இலகு க, துரிதம் க, இலகு க, ।௦।, இதற்குச்சுரம், சரிசரி, சரி, சரிகம,—உருபகத்திற்கு, இலகு க, துரிதம் க, ।௦, இதற்குச்சுரம், சரி, சரிகம,—சம்பைச்கு, இலகு க, அநுதுரிதம் க, துரிதம் ச, ।, ◡௦, இதற்குச்சுரம், ச, ரிக, சிரிசரி, கமா,—திரிபுடைக்கு, துரிதம் ௩, அநுதுரிதம் க, ௦௦௦◡, இதற்குச்சுரம், கரிகசரிகம,— அடதாளத்திற்கு, இலகு க, துரிதம் உ, இலகு க, ।௦௦। இதற்குச்சுரம், சரிகா, சாரிகா, மா, மா, — ஏகதாளத்திற்கு இலகு க, ।, இதற்குச்சுரம், சரிகம,—சம்பைக்குப் பிரமசாதி தவிர நான்குசாதியுமுள திரிபுடைக்கு மூன்று விராமமுமோரநுதுரிதமுமானுலொரோசாதி, இலகு விருந்தாலேந்து சாதியுமுள, மற்றையைந்து தாளங்கட்கு மைந்து சாதியுமுள, அவற்றை யவ்வவசாதியேகதாளலகு, அக்கரங்களாலறியுமாறு, பிரமசாதியிலகுவிற்கு நான்கக்கர காலம், அரசசாதியிலகுவிற்கு மூன்றக்கரகாலம், ஆறக்கரசாலமுமென்ப, வைசியசாதியிலகுவிற் கேழக்கரகாலம், சூத்திரசாதியிலகுவிற் கைந்தக்கரகாலம், சங்கிரமசாதியிலகுவிற் கொன்பதக்கரகாலம், எச்சாதியிலு மநுதுரிதமோ ரக்கரகாலமுந் துரிதமிரண்டக்கரகாலமுமாம்.

தாளம், ௯—அரிதாளம், அருமதாளம், சமதாளம், சயதாளம், சித்திரதாளம், துருவதாளம், நிவிர்த்ததாளம், படிமதாளம், விடதாளம், இவையே நவசந்திதாளம்.

தாளப்பிராணம், ௰ — காலம், மார்க்கம், கிரியை, அங்கம், கிரகம், சாதி, களை, இலயை, யதி, பிரததாரம், இவையே தாளதசப்பிராணமென்ப, இவற்றுட்காலப்பிரமாணம், ௰, அவையாவன, கணம், இலவம், காட்டை, நிமிடம், துடி, துரிதம், இலகு, குரு, புலுதம், காகபதம், இவற்றுட் கணம், தாமரையிதழ் நூறடுக்கி யதிலோரிதழி லூசிசெலுத்துங்காலம்.— கணமெட்டுக்கொண்ட திலவம், — இலவமெட்டுக்கொண்டது காட்டை,— காட்டையெட்டுக்கொண்டது நிமிடம்,—நிமிடமெட்டுக்கொண்டது துடி,—துடியிரண்டுகொண்டது துரிதம்,—துரிதமிரண்டுகொண்டதிலகு, — இலகிரண்டுகொண்டது குரு,—இலகு மூன்றுகொண்டது புலுதம்,—குருவிரண்டுகொண்டது காகபதம்,—மார்க்கம்-௬, தக்கணம், வார்த்திகம், சித்திரம், சித்திரதரம், அர்த்தசித்திரம், அதிசித்திரம், இவற்றுள், எட்டுமாத்திரையோர்களையாகக்கொண்டது தக்கணம்,—நான்குமாத்திரையோர்களையாகக்கொண்டது வார்த்திகம்,—இரண்டுமாத்திரையோர்களையாகக்கொண்டது சித்திர

ம், — ஒருமாத்திரை யோர்கலையாக
க்கொண்டது சித்திரதரம், — அரை
மாத்திரை யோர்கலையாகக்கொண்ட
து அர்த்தசித்திரம், — கான்மாத்திரை
யோர்கலையாகக்கொண்ட நிசித்தி
ரம், — தொழிலளவுமாத்திரை, — கிரி
யை உ, மார்க்கம், [illegible], [illegible]
ன மார்க்கம் ௪, இவ[illegible] [illegible]
[illegible], சசத்தம் ௬, [illegible]
[illegible] நிட்கிராமம், [illegible], [illegible]
[illegible], — [illegible] [illegible], [illegible]
யம், தாளம், [illegible] [illegible]
[illegible], துருவகம், சர்ப்பிணி, [illegible],
பதுமினி, விசர்ச்[illegible] [illegible],
பதாகை, பதாகம், [illegible]
[illegible] [illegible], — [illegible]
அவையாவன, [illegible], [illegible]
[illegible], [illegible], [illegible], [illegible]
பு, புள்ளடி, முறையேயிவற்றின்பெ
யர், அநுத்[illegible], [illegible], [illegible] குரு,
புலுதம், காகபதம், இவற்றிற் பத்
[illegible], [illegible] [illegible]
[illegible], [illegible] [illegible], [illegible]
[illegible], அந்தரக் [illegible]
[illegible], [illegible] [illegible],
[illegible] [illegible], — [illegible], ௬, அ[illegible],
அநாகதம், சமம், விடமம், இவற்றுட்
குரன் முன்னுந் தாளம்பின்னும் வரு
வததீதம், — தாளமுன்னுங்குரம்பின்
னும்வருவதநாகதம், — குரமுந்தாள
முமொத்துவரிற் சமம், — குரமுந்தா
ளமுமுன்னும் பின்னுங்கலந்து வரு
வதுவிடமம், சாபு, ரு, சதுரசிரம், தி
ரிசிரம் மிசிரம், கண்டம், சங்கீரணம்,
இவைமுறையே, பிரமவரச வைசிய
சூத்திர சங்கீரமம், இவற்றை முறைகூ
றியவிலகு, அக்கர காலங்களாலறிவ
து, — கலை, ௩, ஏககலை, துவிகலை, ச
துர்க்கலை, இவற்றுளக்கரகாலமாய்க்
கிரியையோடும் வருவது ஏககலை, —

இரண்டக்கரகாலத்துக் கிரியையோடு வ
ருவது துவிகலை, — இரண்டக்கரகாலத்து
க்கிரியையோடு வருவது சதுர்க்கலை, —
இலயம் ௩, விளம்பம், மத்திமம், து
தம், இவற்றுளக்கரகாலமாய்க் கிரி
யையோடு வருவது விளம்பம், — இர
ண்டக்[illegible] கிரியையோடு வருவ
[illegible], — இரண்டக்கரகாலத்துக்கிரி
யையோடு [illegible], — [illegible] ௩,
[illegible], [illegible], வேதமத்
[illegible], [illegible] புச்சம், [illegible],
[illegible], தெட்ட[illegible] [illegible]
[illegible] [illegible] வருவ
[illegible], ௰. ௰ — எல்லாவ[illegible]
[illegible] [illegible] வருவது வி
[illegible], ௫௰ — [illegible] கடையி
[illegible] [illegible] [illegible]
[illegible] ௰௫௰, —
[illegible] [illegible] தெட்ட[illegible]
[illegible] [illegible] வருவது வேசம
[illegible], ௰௰, — [illegible]
[illegible] [illegible] [illegible]
[illegible] [illegible] ௫௦௰, —
[illegible] [illegible] [illegible]
[illegible] [illegible]. [illegible]
ம், ௰௰௮௦ — [illegible] விவ்விலக்க
[illegible].

தானம், ௩ — தலைப்பட்ட தானம், இடைப
[illegible], கடைப்பட்டதானம், அவை
யாவன, அறத்தாலீட்டிய பொருளை
முக்குற்றமற்ற [illegible] தோனைக்
[illegible] குறையாத்து
[illegible], தலைப்பட்டதா
னம், — ஆதுலர், குருடர், மடசர், முதற்
[illegible] சிறுமையைப்பற்றி மனமிரங்கி
[illegible] இடைப்பட்டதானம், — புகழ்ச்சிவ
[illegible] [illegible] [illegible]
[illegible] [illegible]
கடைப்பட்டதானம்.

தானை, ௬—தேர், கரி, பரி, வாள், வில், வேல்.

தி

திக்கு, ௮—கிழக்கு, தென்கிழக்கு, தெற்கு, தென்மேற்கு, மேற்கு, வடமேற்கு, வடக்கு, வடகிழக்கு, இவையெட்டதிக்கு.

திக்கு, ௰ — மேற்சொன்னவையன்றி மேலுங்கீழுங்கூட்டித் தசதிசையென்ப, கிழக்கு கருடதிசை, தென்கிழக்குப் பூனைத்திசை, தெற்குச் சிங்கத்திசை, தென்மேற்குச் சுனகதிசை, மேற்கு நாகத்திசை, வடமேற்கெலித்திசை, வடக்கு யானைத்திசை, வடகிழக்கு முயற்றிசை, மேல் விசும்புத்திசை, கீழ் பாதாளதிசை.

திக்குப்பாலகர், ௮—கிழக்காதிமுறையே, இந்திரன், அக்கினி, யமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன், இவர்க்குமுறையே குறிகளாவன, சொடி, புகை, சியம், நாய், இடபம், கழுதை, யானை, காகம்.

திக்குயானைகள், ௮ [illegible]முறையே, ஐராவதம், புண்டரீகம், வாமனம், குமுதம், அஞ்சனம், புட்பதந்தம், சாருவபூமம், சுப்பிரதீபம், இவையெட்டதிக்கயம், இவற்றிற்குமுறையே பிடியானைகளாவன, அப்பிரமை, கபிலை, பிங்கலை, அனுபமை, தாமிரபருணி, சுதந்தி, அஞ்சனை, அஞ்சனவதி.

திணை, ௨—உயர்திணை, அஃறிணை, இவற்றுள் உயர்திணை, மக்களுந் தேவரும், நரகருமாம், அஃறிணை மற்றவுயிருள்ளனவு முயிரில்லனவுமாகிய யாவுமாம்.

திணை, ௫—குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல், இவற்றுள், மலைச்சார்பு குறிஞ்சி, நீரில்லாக்காடுநிலம் பாலை, காட்டுச்சார்பு முல்லை, வயற்சார்பு மருதம், கடற்சார்பு நெய்தல்.

திதி, ௰௫ — பிரதமை ௧, துதியை ௨, திரிதியை ௩, சதுர்த்தி ௪, பஞ்சமி ௫, சட்டி ௬, சத்தமி ௭, அட்டமி ௮, நவமி ௯, தசமி ௰, ஏகாதசி ௰௧, துவாதசி ௰௨, திரயோதசி ௰௩, சதுர்த்தசி ௰௪, இவற்றிற் சுக்கிலபக்கத்திற்குத்தமென்றுங் கிருட்டிணபக்கத்திற் பகுளமென்றுங்கூட்டுக, பதினைந்தாந் திதியாவது, சுக்கிலபக்கத்திற்குப் பௌர்ணமி, கிருட்டிணபக்கத்திற்கு, அமாவாசியை.

திராவிடம், ௫ — திராவிடம், ஆந்திரம், கன்னடம், மகாராட்டிரம், கூர்ச்சரம்.

திரவியம், ௪—மலைபடுதிரவியம், காடுபடுதிரவியம், நாடுபடுதிரவியம், நகர்படுதிரவியம், கடல்படுதிரவியம், இவற்றுள் மலைபடுதிரவியம், மிளகு, கோட்டம், அகில், தக்கோலம், குங்குமம்,—காடுபடுதிரவியம், இறால், தேன், அரக்கு, மயிற்பீலி, நாவி,—நாடுபடுதிரவியம், செந்நெல், சிறுபயறு, கரும்பு, வாழை, செவ்விளநீர்,— நகர்படுதிரவியம், அரசன், பிரதமன், மந்திரி, யானை, கணிகை,— கடல்படுதிரவியம், உப்பு, முத்து, பவளம், சங்கு, [illegible] கோவை.

திருமாலவதாரம், ௰ —மச்சம், கூர்மம், வராகம், நரசிங்கம், வாமனன், பரசுராமன், இராமன், பலபத்திரன், கண்ணன், கற்கி, இவற்றிற்குக் காரணம், வேதத்தைத்திருடிக் கடலிலொளித்தசோமுகாசுரனைமிராக்கதனைக்கொல்லமச்சாவதாரம்,—கடலைக்கடையும்போது மந்தரமலையைத்தாங்கக் கூர்மாவதாரம்,—பூமியைப் பாயாக விரணியாக்கன் சுருட்டினதை விரிக்கவுமவனைக் கொல்லவும் வரா

காவதாரம்,-இப்பழிவாங்கச் சருவதே வவணக்கம் விலக்கினவவன் றப்பிரணியகசிபனைக்கொல்ல நரசிங்காவதாரம்,-இந்நான் கவதாரத்திற்குந்தாயில்லை, மாவலியையடக்கக் காசிபனுந் திதியுந் தந்தைதாயாக வாமனவதாரம்,—அரசராற் றுய்த்தப்பட்ட பார்ப்பார்நிமித்த மவ்வரசரைக்கொல்லச் சமதக்கினியு மிரேணுகையுந் தந்தைதாயாகப்பரசுராமவதாரம்,- இராவணன் முதலிய விராக்கதரைக் கொல்லத் தசரதனுங் கௌசலையுந் தந்தைதாயாக விராமாவதாரம்,—பிரலம்பன்முதற் பல விராக்கதரைக் கொல்ல வசுதேவனுந் தேவகியு முரோகணியுந் தந்தைதாயாகப் பலபத்திர ராமாவதாரம்,— பாரதபடத்து வசுதேவனுந் தேவகியுந் தந்தைதாயாகக் கண்ணனவதாரம்,—உலகத்தை யழிக்கச் சங்கரிக்கக் கற்கியவதாரம்.

திருமாலவதாரம், (௰௫)— சனகன், சனந்தனன், சனாதனன், சனற்குமாரன், நரநாராயணன், கபிலன், இடபன், நாரதன், அயக்கிரீவன், தத்தாத்திரேயன், மோகினி, யாகபதி, வியாதன், தன்வந்திரி, பௌத்தன்.

திருமாலாயுதம், (௫)—சக்கரம், தனுசு, வாள், தண்டு, சங்கம்.

தீ

தீ, (௬)—உயிரினுள்ளதீ, உதரத்திலுள்ளதீ, சினத்திலெழுந்தீ, அக்கினியும், வேதாக்கினி (௩), காருகபத்தியம், தக்கணாக்கினியம், ஆகவனீயம்.

தீக்குணம், (௰)-பொய்சொல்லல், கோட்சொல்லல், கோபித்துச்சொல்லல், பயனிலசொலல், இந்நான்குமொழியின்றீக்குணம், களவாடப்போதல், வதைதே தொழில்செயல், கொலைசெயல், இம்மூன்றுங்காயத்தீக்குணம் சொலநினைக்கை, காமப்பற்று, ஆசை, இம்மூன்று மனத்தீக்குணம்.

தீவு, (எ)—நாவல், இறலி, குசை, கிரவுஞ்சம், புட்கரம், தெங்கு, கமுகு. இவ்வேழுவகைப்பொருளு மவ்வத்தீவின் மிக்கனவாகையா லவற்றாற் பெயர் பெற்றன.

து

துரககதி, (௫)—மல்லகதி, மயூரகதி, வியாக்கிரகதி, வானரகதி, விடபகதி.

துவர், (௯)—நாவல், கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், ஆல், அரசு, அத்தி, இத்தி, முத்தக்காசு. மாந்தளிர்.

தே

தேயம, (௫௰௬)—அங்கம், அருணம், அவந்தி, ஆந்திரம், இலாடம், யவனம், ஒட்டியம், கருநாடம், கலிங்கம், கவுணம், [illegible], காசம், காசுமீரம், காந்தாரம், காம்போசம், கிராடம், [illegible], குருநாடு, குடகம், குந்தளம், கூர்ச்சரம், கேகயம், கொங்கணம், கோசலம், சகம், சவ்வீரம், சாலுவம், சிங்களம், சிந்து, சீனம், சூரசேனம், சோழம், சோனகம், திராவிடம், துளுவம், தெலுங்கம், நேபாளம், பாஞ்சாலம், பப்பரம், பல்லவம், பாண்டியம், புளிந்தம், போடம், மகதம், மச்சம், மராடம், மலையாளம், மாளவம், யுகந்தரம், வங்கம், வங்காளம், விதர்ப்பம்.

தேவர், (௫)— பிரமா, விட்டுணு, உருத்திரன், மயேச்சுரன், சதாசிவன், இவரைந்துதேவரையும், பஞ்சகருத்தாக்களென்ப.

தேவர்வகை, ௩௰௩—ஆதித்தர் ௰௨, அச்சுவினிகள் ௨, உருத்திரர் ௰௧, வசுக்கள் ௮.

தொ

தொழில், ௩—ஆக்கல், காத்தல், அழித்தல்.

தொழில், ௬—உழவு, தொழில் வரைவு, வாணிபம், விச்சை, சிற்பம்.

தொழில், ௬ — அந்தணர்தொழில், ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல், — அரசர்தொழில் ஓதல், வேட்டல், ஈதல், உலகோம்பல், படைபயிற்றல், பொருதல்,—வைசியர்தொழில், ஓதல், வேட்டல், பொருளீட்டல், ஈதல், பசுக்காத்தல், ஏருழல்,—சூத்திரர்தொழில், முதன்மூவர்க் கேவல்செயல், பொருளீட்டல், உழுதல், பசுக்காத்தல், குயிலுவத்தொழிற்செய்தல், காருகவினைகளாக்கல்,—இவற்றுட் குயிலுவத்தொழில்களாவன, தோற்கருவிகளைக்கொட்டலுந் துளைக்கருவிகளையூதலுமாம்,—காருகவினைகளாவன, பட்டுநூலையும்பருத்திநூலையுங்கொண்டாடையாக்கலுந் தைத்தலு முழுதலுமாம்.

தோ

தோற்றம், ௨—சரம், அசரம், இவற்றுட் சரம் நடையுள்ளன, அசரம் நடையில்லன.

தோற்றம், ௪—பை, முட்டை, நிலம், வியர்வை.

ந

நட்சத்திரம், ௨௭ — அச்சுவினி, பரணி, கார்த்திகை, உரோகணி, மிருகசீரிடம், திருவாதிரை, புநர்பூசம், பூசம், ஆயிலியம், மகம், பூரம், உத்திரம், அத்தம், சித்திரை, சுவாதி, விசாகம், அனுடம், கேட்டை, மூலம், பூராடம், உத்திராடம், திருவோணம், அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி, இரேவதி, இவற்றுள், ஒவ்வொன்று, முறையே மேடமுதற் பன்னிரண்டிராசிகளிற் பதின்மூன்றுபாகமும் மிருபதுகலையுங்கொண்டவிடம்.

நதி, ௭—கங்கை, யமுனை, சரச்சுவதி, நருமதை, காவேரி, குமரி, கோதாவரி, இவையே சத்தநதிகளெனப்படும்.

நதி, ௰௧—மேற்சொல்லியவையன்றியே, சிந்து, தாமிரபருணி, துங்கபத்திரி, கிட்டிணியென்றுகூட்டுக.

நரகம், ௭—அள்ளல், இரௌரவம், கும்பிபாகம், கூடசாலம், செந்துக்காளம், பூதி, மாபூதி.

நரகவட்டம், ௭—தமப்பிரபை, இமப்பிரபை, தூமப்பிரபை, வாலுகப்பிரபை, சாரப்பிரபை, இரத்தப்பிரபை, அழற்பிரபை, அவையாவன, இருள், குளிர், புகை, மணல், ஆயிலாயம், இரத்தம், தீ.

நரம்பு, ௭—இசைகாண்க.

நற்குணம், ௰—மெய்ம்மை, நல்வார்த்தை, இனியவைகூறல், பயன்படுசொல், இந்நான்கும் வாக்கினற்குணம், கொல்லாமை, வரைவு, தவம்புரிதல், தானஞ்செயல், இம்மூன்றுங் காயநற்குணம், அருணினைவு, ஆசையகற்றல், தவப்பற்று, இம்மூன்றும் மனநற்குணம்.

நா

நாகம், ௮—வாசுகி, அனந்தன், தக்கன், சங்கபாலன், குளிகன், பதுமன், மகாபதுமன், கார்க்கோடகன், இவற்

றைக் கடவுட்பாம்பென்ப, இவைமுறையே கிழக்குமுதலெண்டிக்கிற்பூமியைத்தாங்குவதன்றியே நடுவே சேடனென்னுநாகம் பூமியைத்தாங்காநிற்கும், இந்நவநாகமுங் காசிபப்பிரமாவுக்குமவன்மனைவிகள் பதின்மூவருட்கத்துருவைக்கும்பிறந்தன.

நாடி, ய — சுழிமுனை, இடை, பிங்கலை, காந்தாரி, அத்தி, சிகுவை, அலம்புடை, புருடன், குகு, சங்கினி, அவையாவன, சுழிமுனையாதாரமாகி நடுவிருவி நிற்பது, —இடை, பிங்கலையிரண்டுங் கத்திரிகைக்கால்போற் பின்னிநிற்பன,— காந்தாரி நாபியிற் றோன்றிச் சத்தமேழுக்குமேழுநாடியாய்க்கண்டத்துறைவது— அத்தி, சிகுவையிரண்டும் பக்கநாடியுற்றுக் கண்ணினிற்பன, — அலம்புடை, புருடனிரண்டுஞ்செவியினுட்டிருப்பதுநாம்பு பற்றிநிற்பன,—குகு, நாபியசுற்றி குய்யம்பற்றி நிற்பது,—சங்கினி, உபத்தத்தைப்பற்றியிருப்பது.

நாட்டமைதி, ௬ — செல்வம், விளைநிலம், செங்கோல், நோயின்மை, வாணம், குறைபின்மை.

நாட்டுக்குற்றம், எ — தொட்டியர், களவர், யானை, பன்றி, விட்டில், கிள்ளை, பெருமழை.

நாட்டிற்குற்றம், அ — விட்டில், தன்னரசு, வேற்றரசு, யானை, பெருமழை, பெருங்காற்று, கிள்ளை, நட்டம்.

நி

நிலம், ச — குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல்.

நிலை, ச—பைசாசம், மண்டலம், ஆலீடம், பிரத்தியாலீடம், இவை நான்கும் விற்றொடுத்தம்பினையெய்வார்க்குரியநிலை, இவற்றுளொருகாலினின்றொருகான்முடக்கல் பைசாசநிலை.—இருகாலும் பக்கல்வளைய மண்டலித்தல் மண்டலநிலை,— வலக்கான்மண்டலித்திடக்கான்முந்துறலேயாலீடநிலை.— வலக்கான் முந்துற்றிடக்கான் மண்டலித்தலே பிரத்தியாலீடநிலை.

நூ

நூல், ௩—முதனூல், வழிநூல், சார்புநூல், இவற்றுளொருவன் முன்சமைத்ததே முதனூல்,—முதனூல்வழியேவிகற்பித்துரைத்த நூலே வழிநூல்,—அவ்விருநூல்பொருட்கூட்டித்திரிபுவேறுடையநூலே சார்புநூல்.

நூற்பயன், ச—அறம், பொருள், இன்பம், வீடு.

ப

பக்குவர், ௩—கருமகாண்டி, ஞானகாண்டி, பத்திகாண்டி.

பஞ்சமூலம், ரு—செவ்வியம், சித்திரமூலம், கண்டுபாரங்கி, பேரரத்தை, சுக்கு.

படைவகுப்பு, ச—அணி, உண்டை, ஒட்டு, யூகம்.

பட்சி, ரு—வல்லூறு, ஆந்தை, காகம், கோழி, மயில், இவற்றிற்குமுறையேயெழுத்து, அ, இ, உ, எ, ஒ. உண்டி, நடை, அரசு, துக்கம், சாவு, பிற்பக்கமாயின், உண்டி. சாவு. துக்கம், அரசு, நடை,—சாவுக்கயில்லாதபொழுது மிந்த செய்யுமுதலிய வைந்தனவ்மை.

பண், ச—பாலை, குறிஞ்சி, மருதம், செவ்வழி.

பதவி, ச—சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம். இவற்றுட்கடவுளுல

கத்தில் வாழ்தலே சாலோகம்,—கட
வுள்சமீபத்துவாழ்தலே சாமீபம்,—க
டவுளுருப்போன்றுவாழ்தலே சாருப
ம்,—கடவுளோடொன்றிவாழ்தலே சா
யுச்சியம்.

பரிச்சேதம், ௩—காலபரிச்சேதம்,தே
யபரிச்சேதம், வத்துபரிச்சேதம், அ
வையாவன,ஒருகாலத்துண்டொருகா
லத்தின்றென்பது காலபரிச்சேதம்,
ஒருதேயத்துண்டொருதேயத்தின்றெ
ன்பது தேயபரிச்சேதம்,—ஒருபொரு
ளிதுவாகு மொருபொருளிஃதல்லெ
ன்பது வத்துபரிச்சேதம்.

பருவகாலம், ௬—கார், கூதிர், முன்ப
னி, பின்பனி, இளவேனில், முதிர்வே
னில், இவையே யாவணிமுதலாக வி
ரண்டிரண்டுமாதமொவ்வொன்றும்.

பருவம், ௪—வாலை, தருணி, பிரவிடை,
விருத்தை, இவைபெண்கட்குரியபரு
வமாம்.

பருவம், ௭—பேதை, பெதும்பை, மங்
கை, மடந்தை,அரிவை, தெரிவை, பே
ரிளம்பெண், இவர்க்குமுறையே வய
தெல்லை, ஐந்துமுத லேழளவும் பே
தை,—எட்டுமுதற் பதினொன்றளவும்
பெதும்பை, பன்னிரண்டுமுதற்பதின்
மூன்றளவுமங்கை,—பதினான்குமுதற்
பத்தொன்பதளவுமடந்தை,—இருபது
முதலிருபத்தைந்தளவுமரிவை,—இரு
பத்தாறுமுதன் முப்பத்தொன்றளவு
ந்தெரிவை,—முப்பத்திரண்டுமுதனாற்
பதளவும்பேரிளம்பெண், —ஆகையா
லொவ்வொரு பருவங்கொண்டவருட
ம், ௩, ௪, ௨, ௬, ௬, ௬, ௯, இவைபெ
ண்கட்குரிய பருவமாம்.

பலே, ௩—கடுக்காய், நெல்லிக்காய், தா
ன்றிக்காய்,இவையே திரிபலேயென்ப.

பா

பா, ௪—வெண்பா, ஆசிரியப்பா, கலிப்
பா, வஞ்சிப்பா, மருட்பாவொன்று
கூட்டியைந்தென்பாருமுளர்.

பாடை, ௰௮—அங்கம், அருணம், கலி
ங்கம், கௌசிகம், காம்போசம், கொ
ங்கணம், கோசலம், சாவகம், சிங்கள
ம், சிந்து, சீனம், சோனகம், திரவிட
ம், துளுவம்,பப்பரம்,மகதம்,மராடம்,
வங்கம்.

பாதகம், ௫ — கொலை, பொய், களவு,
கள்ளுருந்தல், குருநிந்தை, இவையே
பஞ்சமாபாதகம்.

பாதகம், ௭—சித்தசமுன்னதி, அருத்
தலோபம், காமப், வைடம்மியம், அச
னப்பிரியம், கோபம், அருட்டணம்,
இவையேசந்தவிசனம், இவைமுறை
யே, அகங்காரம், உலோபம், காமம்,
பகை,போசனப்பிரியம்,காய்தல்,சோ
ம்பல், இவையேமுந்தலைமையான பா
தகமெனப்படும்.

பாலே, ௭—இசையைக்காண்க.

பால், ௫—ஒருவன், ஒருத்தி, பலர், ஒன்
று, பல.

பால், ௫—முடி, கொண்டை, சுருள், கு
ழல், பனிச்சை. இவற்றுண்மையினாயு
ச்சியின்முடித்தலேமுடி,—பக்கன்மு
டித்தலேகொண்டை,—பின்னேசெரு
கல்சுருள்,—சுருட்டிமுடித்தலேகுழல்,
பின்னிவிடுதலேபனிச்சை.

பாவபுண்ணியவழக்கம், ௩ —செய்த
ல், செய்வித்தல், உடன்படல்.

பாவினம், ௩—தாழிசை, துறை, விரு
த்தம்.

பி

பிணி, ௩—வாதம்,பித்தம்,சிலேட்டுமம்.

பிரபந்தம், ௯௰௬ — அவையாவன, சாதகம், — திதிநிலை, வாரநிலை, நாண்மீனிலை, யோகநிலை, கரணநிலை, ஓரைநிலை, கிரகநிலை, இவ்வேழ்வகைப்புறப்புக் கணிலையையுஞ் சோதிடநூலானன் குணர்ந்தவற்றை யமைந்தவற்றுற்ற லைவற்குறுவன கூறுவது, மற்றும்புகாரியாண்டு முதலியவுங்கொள்க.

பிள்ளைக்கவி, — காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வாரானை, அம்புலி, சிறுபறை, சிற்றில், சிறுதேர். இவற்றைமுறையே யகவல்விருத்தத்தாற்பப்பத்தாகக்கூறுவ தாண்பாற்பிள்ளைக்கவி, இவ்வுறுப்பிறுட் கடைநின்றொழிந்து, கழங்கு, அம்மனை, ஊசல், என்பவற்றைக்கூட்டி மேற்சொல்லியவாறுகூறுவது பெண்பாற்பிள்ளைக்கவியாம்.

பரணி, — போர்முகத்தாயிரங்களிற்றியானையைக் கொன்றவீரனைத் தலைமகனாகக்கொண்டு கடவுள்வாழ்த்துங் கடைதிறப்பும் பாலைநிலமுங் காளிகோயிலும் பேய்களோடு காளியோடு பேய்களுஞ் சொல்லுதலும் அவள் சொல்லக்கேட்டிய தம்மையன் கீர்த்தி விளங்குமவன் வழியாகப்புறப்பொருட்டோன்ற வெம்போர்வழங்க விரும்பலுமென் றிவையெல்லா மிருசீர்முச்சீரடி யொழித்தொழிந்த மற்றையவடியாக வீரடிப் பஃறொடையாற்பாடுவது.

கலம்பகம், — ஒருபோகும், வெண்பாவும், கலித்துறையுமுதற் கவியுறுப்பாகமுற்கூறிப் புயவகுப்பு, மதங்கம், அம்மானை, காலம், சம்பிரதம், கார், தவம், குறம், மறம், பாண், களி, சித்து, இரங்கல், கைக்கிளை, தூது, வண்டு, தழை, ஊசல், என்னும்பதினெட்டுறுப்புக்களுமியைய, மடக்கு, மருட்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, ஆசிரியவிருத்தம், கலிவிருத்தம், கலித்தாழிசை, வஞ்சிவிருத்தம், வஞ்சித்துறை, வெண்டுறையென்னுமிவற்றாலிடையிடையே வெண்பா, கலித்துறை, விரவியந்தாதித்தொடையான் முற்றுறக்கூறுங்கால் தேவர்க்குநூறும், அந்தணர்க்குத் தொண்ணூற்றைந்தும், அரசர்க்குத் தொண்ணூறும், வைசியர்க்கைம்பதும், சூத்திரர்க்கு முப்பதுமாகப் பாடுவது.

அகப்பொருட்கோவை, — இருவகைப்பட்டமுதற்பொருளும் பதின்மூன்றுவகைப்பட்ட கருப்பொருளும் பத்துவகைப்பட்ட உரிப்பொருளும் பொருந்தக் கைக்கிளைமுதலுற்ற அன்புடைக் காமப்பகுதியாங் களவொழுக்கத்தினையுங் கற்பொழுக்கத்தினையுங் கூறுதலை யெல்லையாகக் கட்டளைக்கலித்துறை, நானூற்றுமுதலாகத் தொகுத்துரைக்கப்பட்ட பன்னிரண்டகப்பாட்டுறுப்பும் வழியின்றித் தோற்றப்பாட்டு, வெண்பா. அகவல், கலி, வஞ்சி, ... முறையும் வழங்கப்படும்.

ஐந்திணைச்செய்யுள், — புணர்தன்முதலிய வைந்துரிப்பொருளும் விளங்கக் குறிஞ்சிமுதலிய வைந்திணையினையுங் கூறுவது.

வருக்கக்கோவை, — அகரமுதலாகிய வெழுத்து வருக்க மொழிக்கு முதலெழுத்து முறையே காரிகைத்துறைப்பாட்டாற்பாடுவது.

மும்மணிக்கோவை, — ஆசிரியப்பாவும், வெண்பாவும், கலித்துறையு நிரையமைவுபடவொன்றெழுத்தெண்ணிப்பாடுவ கலித்துறையு முறையேகோவை முப்பதுபெற வடுக்கியந்தாதித் தொடையாற்பாடுவது.

அங்கமாலை, — ஆண்மகளுக்கும் பெண்மகளுக்குமிக்கவுள வெடுத்துக் கூறு

மெய்யங்களை வெண்பாவாலாயினும் வெளிவிருத்தத்தாலாயினும் பாதாதிகேசங்கேசாதிபாதமுறைபிறழாது தொடர்வுறப்பாடுவது.

அட்டமங்கலம்,—கடவுளைப்பாடிய கடவுள்காக்கவென வாசிரியவிருத்த மெட்டிலந்தாதித்துக் கூறுவது.

அநுராகமாலை,—தலைவன் கனவின் கணொருத்தியைக் கண்டுகேட்டுண்டுயிர்த்தினிமையுறப் புணர்ந்தகதைத் தன்னுயிர்ப்பாங்கற்குரைத்ததாக நேரிசைக் கலிவெண்பாவாற் கூறுவது.

இரட்டைமணிமாலை,—முறையானே வெண்பாவுங் கலித்துறையுமிருபஃதந்தாதித் தொடையான் வருவது, நேரிசைவெண்பாப் பத்தும், ஆசிரிய விருத்தம் பத்துமந்தாதித் தொடையாற் பாடுவது.

இணைமணிமாலை,—வெண்பாவுமகவலும், வெண்பாவுங்கலித்துறையுமாக விரண்டிரண்டாக விணைந்து வெண்பா வகவலிணைமணிமாலை, வெண்பாகலித்துறை யிணைமணிமாலை யெனநூறுநூறு, அந்தாதித்தொடை [illegible] பாடுவது.

நவமணிமாலை,—வெண்பா முதலாக வேறுபட்ட பாவும் பாவினமுமாக வொன்பது செய்யுளந்தாதித்துப் பாடுவது.

நான்மணிமாலை,—வெண்பாவுங்கலித்துறையும் விருத்தமுமகவலுமந்தாதித் தொடையாக நாற்பதுபாடுவது.

நாமமாலை,—அகவலடியுங் கலியடியும் விரவிமயங்கிய வஞ்சிப்பாவாலாண்மகனைப் புகழ்ந்துபாடுவது.

பலசந்தமாலை,—பப்பத்துச் செய்யுளொவ்வோர் சந்தமாக நூறுசெய்யுட்கூறுவது.

பன்மணிமாலை,—மேற்சொல்லிய கலம்பகத்துள் வருமொருபோகு மம்மானையுமூசலுமின்றி யேனையுறுப்புக்களெல்லாமமையவவ்வாறு கூறுவது, இதையே கலம்பகமாலையென்ப.

மணிமாலை,—எப்பொருண்மேலும் வெண்பாவிருபதுங் கலித்துறை நாற்பதும் விரவிவருவது.

புகழ்ச்சிமாலை,—அகவலடியுங்கலியடியும் வந்து மயங்கிய வஞ்சிப்பாவான் மாதர்களினது சீர்மையைக் கூறுவது.

பெருமகிழ்ச்சிமாலை,—தலைவியினதுருகுணமாக்கஞ் சிறப்பினைக் கூறுவது.

வருக்கமாலை,—மொழிக்குமுதலாம் வருக்கவெழுத்தினுக்கொவ்வோர் செய்யுட்கூறுவது.

மெய்க்கீர்த்திமாலை,—சொற்சீரடியென்னுங் கட்டளைச் செய்யுளாற் குலமுறையிற்செய்த கீர்த்தியைக்கூறுவது.

காப்புமாலை,—தெய்வங்காத்தலாக மூன்றுசெய்யுளானும், ஐந்துசெய்யுளானும், ஏழுசெய்யுளானும் பாடுவது.

வேனின்மாலை,—வேனிலையுமுதிர்வேனிலையுஞ்சிறப்பித்துப்பாடுவது.

வசந்தமாலை,—தென்றல் வருகைச் சிறப்பித்துப்பாடுவது.

தாரகைமாலை,—அருந்ததிக்கற்பின் மகளிர்க்குள்ள வியற்கைக்குணங்களை வகுப்பாற் கூறுவது, அரிப்படையினணியைப் புகழ்ந்து வகுப்பென்பாருமுளர்.

உற்பவமாலை,—திருமால் பிறப்புப் பத்தினையு மாசிரியவிருத்தத்தாற் கூறுவது.

தானைமாலை.—அகவலோசையிற் பிறழாதாசிரியப்பாவான் முன்னெடுத்துச் செல்லுங் கொடிப்படையைக் கூறுவது.

மும்மணிமாலை,— வெண்பாவுங் கலித்துறையு மகவலு மந்தாதித்தொடையான் முப்பதுபாடுவது.

தண்டகமாலை,-வெண்பாவான் முந்நூறுசெய்யுட்கூறுவது. இதுவெண்புணர்ச்சிமாலையெனவும்படும்.

வீரவெட்சிமாலை,—சுத்தவீரன் மாற்றாருரிற்சென்று பசுநிரைகோடற்கு வெட்சிப்பூ மாலைசூடி யவ்வண்ணம் போய் நிரைகவர்ந்துவரி னவனுக்கு முன்பு த்சாங்கம்வைத்துப் போய்வந்தவெற்றிப்பாடுவது.

வெற்றிக்கரந்தைமஞ்சரி, — பகைவர்கொண்ட தந்நிரைமீட்போர் கரந்தைப்பூமாலைசூடிப்போய் மீட்பதைக் கூறுவது.

போர்க்கெழுவஞ்சி,— மாற்றார்மேற்போர்குறித்துப் போகின்ற வயவேந்தர் வஞ்சிப்பூமாலைசூடிப் புறப்படும்படையெழுச்சிச்சிறப்பை யாசிரியப்பாவாற்கூறுவது.

வரலாற்றுவஞ்சி,—குலமுறை பிறப்புமுதலிய மேம்பாட்டின் பலசிறப்பையுங் கீர்த்தியையும் வஞ்சிப்பாவாற்கூறுவது.

செருக்களவஞ்சி,—போர்க்களத்திலே யட்டமனிதருடலையும் யானைகுதிரையுடலையு நாயும் பேயும் பிசாசமுங் கழுகும் பருந்துங் காகமுந் தின்றுகளித் திரவாரமாயிருக்கப் பூதமும் பேயும் பாடியாட விங்ஙனமிருந்த சிறப்புப்பாடுவது.இதையே பறந்தலைச் சிறப்புப்பாட்டுமென்ப.

காஞ்சிமாலை,— மாற்றாரூர்ப்புறத்துக் காஞ்சிப்பூமாலைசூடி யூன்றலைக் கூறுவது.

நொச்சிமாலை,—புறத்தூன்றியமாற்றார்க்கோடலன்றி நொச்சிப்பூ மாலைசூடித்தன் மதில்காக்குந்திறங் கூறுவது.

உழிஞைமாலை,—மாற்றா ரூர்ப்புறஞ்சூழவுழிஞைப்பூ மாலைசூடிப்படை வளைப்பதைக்கூறுவது.

தும்பைமாலை,—மாற்றாரோடு தும்பைப்பூமாலைசூடிப் பொருதுவதைக் கூறுவது.

வாகைமாலை,—மாற்றாரைவென்று புகழ்படைத்து வாகைமாலை சூடுவதை யாசிரியப்பாவாற் கூறுவது.

வாதோரணமஞ்சரி,—கொலைபுரிமதயானையை வயப்படுத்தியடக்கினவர்கட்கு மெதிர்பொருகளிற்றை வெட்டியடக்கினவர்கட்கும் பற்றிப் பிடித்துச் சேர்த்தவர்கட்கும் வீரப்பாட்டின்சிறப்பை வஞ்சிப்பாவாற் றொடுத்துப்பாடுவது.

எண்செய்யுள்,— பாட்டுடைத் தலைவனதூரினையும் பெயரினையும் பத்து முதலாயிரமளவும்பாடி யெண்ணாற் பெயர்பெறுவது.

தொகைநிலைச்செய்யுள்,— நெடிலடிச்செய்யுளாற் றொகுத்தது நெடுந்தொகையும், குறளடிச் செய்யுளாற் றொகுத்தது குறுந்தொகையும், கலிப்பாவாற்றொகுத்தது கலித்தொகையும் போல்வன.

ஒலியலந்தாதி,—பதினாறுகலையோரடியாகவைத் திங்ஙனநாலடிக்கூப்பத்து நாலுகலைவகுத்துப் பலசந்தமாக வண்ணமுங் கலைவைப்புந் தவறாமலந்தாதித்து முப்பதுசெய்யுட்பாடுவது, சிறுபான்மை யெட்டுக்கலையானும்வரப்பெறும், அன்றியும், வெண்பாவகவல் கலித்துறையாகிய விம்மூன்றையும் பப்பத்தாக வந்தாதித்துப்பாடுவதுமாம்.

பதிற்றந்தாதி,—பத்துவெண்பா பத்துங் கலித்துறைப் பொருட்டன்மை தோன்றவந்தாதித்துப்பாடுவது.

நூற்றந்தாதி — நூறு வெண்பாவி னாலேனு நூறுகலித்துறையினாலே னுமந்தாதித் தொடையாற்கூறுவது.

உலா,—இளமைப்பருவமுற்ற தலை மகனைக்குலங்குடிப்பிறப்பு மங்கலம் பரம்பரை யிவற்றானின்றானென்பது தோன்றத்தலைமையாய் மாதர்நெரு ங்கிய வீதியிடத்தவன்பவனிவரப் பே தைமுதலிய வேழு பருவப்பெண்களு ங்கண்டு தொழுவதாக நேரிசைக்கலி வெண்பாவாற்கூறுவது.

உலாமடல், — கனவிலொருபெண் ணைக்கண்டு கலவியின்ப நுகர்ந்தோ ன் விழித்தபின் னவள்பொருட்டுமட லூர்வேனென்பதைக் கலிவெண்பா வான் முற்றுவிப்பது.

வளமடல், — அறம்பொரு ளின்ப மாகிய வம்முக் கூறுபாட்டின்பயனை யெள்ளி, மங்கையர் திறத்துறுங் கா மவின்பத்தினையே பயனெனக் கொ ண்டு பாட்டுடைத்தலை மகனியற்பெய ர்க்குத்தக்கதை யெதுகையாக நாட்டி யுரைத் தவ்வெதுகைபடத் தனிச்சொ லின்றி யின்னிசைக் கலிவெண்பாவா ற்றலைமகனிரந்து குறைபெறாது மட லேறுவதாயீரடி யெதுகைவரப் பாடு வது.

ஒருபாவொருபஃது, — அகவலும் வெண்பாவுங் கலித்துறையுமாய விவ ற்றி லொன்றானு லந்தாதித் தொடை யாற் பத்துப்பாடுவது.

இருபாவிருபஃது,—பத்துவெண்பா வும் பத்தகவலு மந்தாதித் தொடை யானிருபதினைந்து வருவது.

ஆற்றுப்படை, — அகவற்பாவால், விறலி, பாணர், கூத்தர், பொருநரிந் நால்வருளொருவர் பரிசிற்குப் போ வானைப்பரிசுபெற்று வருவாராற் றி டைக்கண்டு தலைவன்கீர்த்தியுங் கொ டையுங், கொற்றமுஞ்சொல்வது.

கண்படைநிலை,—அரசரு மரசனை ப்போல்வாரு மவைக்கணெடிதுவை கியவழி மருத்துவரு மமைச்சருமுத லியோரவர்க்குக் கண்டுயில் கோடலை க்கருதிக்கூறுவது.

துயிலெடைநிலை, — தன் வலியாற் பாசறைக்கண்ணொரு மனக்கவற்சியி ன்றித் துயின்றவரசர்க்கு நல்ல புக ழைக்கொடுத்தலைக் கருதியசூதர் துயி லெடுப்புதலாகப் பாடுவது.

பெயரின்னிசை, — பாட்டுடைத்த லைவன் பெயரினைச்சார, இன்னிசை வெண்பாவாற் றொண்ணூறேனும்,எ ழுபதேனும் ஐம்பதேனும் பாடுவது.

ஊரின்னிசை, — பாட்டுடைத்தலை வனூரினைச்சாரவின்னிசைவெண்பா வாற்றொண்ணூறேனு மெழுபதேனு மைம்பதேனும் பாடுவது.

பெயர்நேரிசை,- பாட்டுடைத்தலை வன் பெயரினைச்சார நேரிசைவெண் பாவாற் றொண்ணூறேனுமெழுபதே னு மைம்பதேனும் பாடுவது.

ஊர்நேரிசை,— பாட்டுடைத்தலைவ னூரினைச்சார நேரிசைவெண்பாவா ற் றொண்ணூறேனு மெழுபதேனு மைம்பதேனும் பாடுவது.

ஊர்வெண்பா, — வெண்பாவானூ ரைச்சிறப்பித்துப் பத்துச்செய்யுட்கூ றுவது.

விளக்குநிலை,—வேலும் வேற்றலை யும் விலங்காதோங்கிய வாறுபோல க் கோலொடு விளக்குமொன்று பட் டோங்குமாறோங்குவதாகக்கூறுவது.

புறநிலை,—நீவணங்குந்தெய்வநின் னைப் பாதுகாப்ப நின்வழிவழி மிகுவ தாகவெனக் கூறுவது.

கடைநிலை,—சான்றோர் சேணிடை வருதலாற் பிறந்தவருத்தந்தீர வாயி ல் காத்நின்றவனுங்கென் வரவினைத்

தலைவற் கிசையெனக் கடைக்கணின்று கூறுவது.

கையறுநிலை,—கணவனொடுமனைவி கழிந்துழியவர்கட்பட்ட வழிவுப்பொருளெல்லாம் பிறர்க்கறிவுறுத்தித்தாமிறந்துபடா தொழிந்தவாய்த்தாரும் பரிசில்பெறும் விறலியருந் தனிப்படருழந்தசெயலறு நிலையைக்கூறுவது.

தசாங்கப்பத்து,—நேரிசை வெண்பாவா லரசன்படைத்த தசாங்கத்தினைப் பத்துச்செய்யுளாற் கூறுவது.

தசாங்கத்தயல்,—அரசன் றசாங்கத்தினை யாசிரியவிருத்தம் பதினாற் பாடுவது.

அரசன்விருத்தம்,—பத்துக் கலித்துறையுமுப்பது விருத்தமுங் கலித்தாழிசையுமாகிய விவற்றால், மலை, கடல், நாட்டு வருணனையு நில வருணனையும் வாண்மங்கலமுந் தோண்மங்கலமும் பாடிமுடிப்பது, இது முடிபுனைந்தவேந்தற்காம்.

நயனப்பத்து,—கண்ணினைப் பத்துச் செய்யுளாற்கூறுவது.

பயோதரப்பத்து,—முலையினைப்பத்துச்செய்யுளாற்கூறுவது.

பாதாதிகேசம்,—கலிவெண்பாவாலடிமுதன்முடியளவுங்கூறுவது.

கேசாதிபாதம்,—கலிவெண்பாவான் முடிமுதலடியளவுங்கூறுவது.

அலங்காரபஞ்சகம்,—வெண்பா, கலித்துறை, அகவல், ஆசிரியவிருத்தம், சந்தவிருத்தமிவற்றையே மாறிமாறி நூறுசெய்யுளாகவந்தாதித்துப்பாடுவது.

கைக்கிளை,—ஒருதலைக் காமத்தினையைந்துவிருத்தத்தாற் கூறுவது, அன்றி, வெண்பா முப்பத்திரண்டுசெய்யுளாற் கூறுவதுமாம்.

மங்கலவள்ளை,—உயர்குலத்துதித்த மடவாரை வெண்பாவொன்பதாலும் வகுப்பொன்பதாலும் பாடுவது.

தூது,—ஆண்பாலும்பெண்பாலுமவரவர்காதல் பாணன்முதலியவுயர்திணையோடுங்கிள்ளைமுதலிய வஃறிணையோடுஞ்சொல்லித்தூதுபோய்வாவெனக்கலிவெண்பாவாற்கூறுவது.

நாற்பது,—காலமுமிடமும் பொருளுமாகியவிவற்றுளொன்றனை நாற்பது வெண்பாவாற்கூறுவது.

குழமகன்,—கலிவெண்பாவான் மாதர்க டங்கையிற்கண்ட விளமைத்தன்மையுடைய குழமகனைப் புகழ்ந்து கூறுவது.

தாண்டகம்,—இருபத்தேழெழுத்து முதலாக வுயர்ந்தவெழுத்தடியினவாயெழுத்துங் குருவு மிலகுவுமொத்து வந்தன. அளவியற் றாண்டகமெனவும், எழுத்தொவ்வாது மெழுத்தலகொவ்வாது வந்தன, அளவழித்தாண்டகமெனவும் படும்.

பதிகம்,—ஒருபொருளைக்குறித்துப் பத்துச்செய்யுளாற் கூறுவது.

சதகம்,—அகப்பொருளொன்றன் மேலாதல்புறப்பொருளொன்றன்மேலாதல் கற்பித்து நூறுசெய்யுட்கூறுவது.

செவியறிவுறூஉ,—பொங்குதலின்றிப்புரையோர் நாப்பணவிதல்கடனெனவவையடக்கியற்பொருளுற வெண்பாமுதலு மாசிரியமிறுதியுமானமருட்பாவாற்கூறுவது.

வாயுறைவாழ்த்து,—வேம்புங்கடுவும் போல்வனவாகிய வெஞ்சொற்கண்முன்னர்த் தாங்கக்கூடாவாயினும் பின்னர்ப்பெரிதும் பயன்றருமெனமெய்ப்பொருளுற வெண்பாமுதலு மாசிரியமிறுதியுமான மருட்பாவாற்கூறுவது.

புறநிலைவாழ்த்து,—வழிபடுதெய்வ நிற்புறங்காப்பப்பழிதீர் செல்வமொடொருகாலைக்கொருகாற்சிறந்துபொ

லிவாயென வெண்பாமுதலுமாசிரியமிறுதியுமானமருட்பாவாற்பாடுவது.

பவனிக்காதல், — உலாக்காட்சியாலெய்தியகாமமிகுதியாலவைபிறரொடு முறைத்துவருந்துவது.

குறத்திப்பாட்டு—தலைவன்பவனிவரவு, மகளிர்காமுறுதல், மோகினிவரவு, உலாப்போந்த தலைவனைக்கண்டு மயங்கல், திங்கள், தென்றன்முதலியவுவாலம்பனம், பாங்கியுற்றதென்னெனவினவல், தலைவி பாங்கியோடுற்றதுகூறல், பாங்கிதலைவனைப் பழித்துக்கூறல், தலைவி தலைவனைப் புகழ்ந்துகூறல், தலைவி பாங்கியைத் தூதுவேண்டல், தலைவி பாங்கியோடு தலைவனடையாளங்கூறல், குறத்திவரவு, தலைவி குறத்தியை மலைவளமுதலியவினவல், குறத்தி மலைவள நாட்டுவளமுதலியகூறல், தலைவன் நலவளங்கிளைவளமுதலியகூறல், குறிசொல்விவந்தமைகூறல், தலைவிகுறிவினவல், குறத்திதெய்வம்பராவல், குறிதேர்ந்துநல்வரவுகூறல், தலைவிபரிசிலுதவிவிடுத்தல், குறவன்வரவு, புள்வரவுகூறல், கண்ணிகுத்தல், புட்படுத்தல், குறத்தியைக்காமுற்றுத்தேடல், குறவன்பாங்கனொடு குறத்தி யடையாளங்கூறல், குறவன் குறத்தியைக்கண்ணுறல், குறவனணிமுதலிய கண்டையுற்றுவினவலு மாண்டாண்டுகுறத்தி விடைகூறலுமாகக்கூறல், பெரும்பான்மையு மிவ்வகையுறுப்புக்களால், அகவல், வெண்பா, தரவுகொச்சகம், கலித்துறை, கழிநெடில்விருத்தம், கலிவிருத்தம், இச்செய்யு ளிடைகிடைகூறிச் சிந்துமுதலிய நாடகத்தமிழாற்பாடுவது.

உழத்திப்பாட்டு,—கடவுள் வணக்கமுறையே மூத்தபள்ளி யிளையபள்ளி குடும்பன் வரவோடவர் பெருமைகூறல் முறையே யவர்வரலாறு, நாட்டுவளன் குயிற்கூக்கேட்டல், மழைவேண்டிக் கடவுட்பரவல், மழைக்குறியோர்தல், ஆற்றின்வரவு, அதன்சிறப்புக்காண்டலிவற்றிற் கிடையிடை யகப்பொருட்டுறையுங்கூறிப் பண்ணைத்தலைவன் வரவு பள்ளிக ளிருவர் முறையீடு, இளையாளை யவனுராப்பல், பள்ளன்வெளிப்படல். பண்ணைச்செயல்வினவல், அவனதுகூறல், ஆயனை வருவித்தல், அவர்வரல், அவர்பெருமைகூறல், மூத்தபள்ளி முறையீடு, குடும்பன்கிடையிலிருந்தான்போல்வரல், அவனைத்தொழுவின்மாட்டல், அவன் புலம்பல், மூத்த பள்ளியடிசிற்கொடுவரல், அவனவளோடுகூறல், அவனவளைமன்னித்தல்கேட்கவேண்டல், அவன்மறுத்தல், அவன்சூளுறல், அவளவனைமீட்கவேண்டிப்பண்ணைத் தலைவனைப்பரவல், விதைமுதலிய வளங்கூறல், உழவருழல், காளைவெருளல், அதுபள்ளனைப்பாய்தல், பள்ளிகள்புலம்பல், அவனெழுந்துவித்தல், அதைப் பண்ணைத்தலைவர்க்கறிவித்தல், நாறுநடல, விளைந்தபிற் செப்பஞ்செயல், நெல்லளத்தல், மூத்தபள்ளி முறையீடு, பள்ளிகளு ளொருவர்க்கொருவரேசலெனு மிவ்வுறுப்புக்களுறப் பாட்டுடைத்தலைவன் பெருமையாங்காங்கு தோன்றச் சிந்தும் விருத்தமும்விரவிவரவிவற்றாற்பாடுவது.

ஊசல்,—ஆசிரிய விருத்தத்தானுதல் கலித்தாழிசையானுதல் சுற்றத்தோரும் பொலிவதாக, ஆடிருசல், ஆடாமோவூசலென்றிறக்கூறுவது.

எழுகூற்றிருக்கை,—ஏழறையாக்கிக்குறுமக்கண் முன்னின்றும் புக்கும் போந்தும் விளையாடும்பெற்றியால்வழுவாமையாவொன்று முதலாகவேழிறுதியாக முறையானேபாடுவது.

கடிகைவெண்பா,— தேவரிடத்து மரசரிடத்து நிகழுங்காரியங் கடிகையளவிற்றோன்றி நடப்பதாக முப்பத்திரண்டு நேரிசைவெண்பாவாற்கூறுவது.

சின்னப்பூ,- நேரிசைவெண்பாவாலரசனதுசின்னமாகிய தசாங்கத்தினைச்சிறப்பித்துவிரித்து, நூறு, தொண்ணூறு, எழுபது, ஐம்பது, முப்பது என்னுமெண்படக்கூறுவது.

விருத்தவிலக்கணம்,—வில், வாள் வேல், செங்கோல், யானை, குதிரை, நாடு, ஊர், கொடை, இவ்வொன்பதினையும் பப்பத்துவிருத்தத்தா லொன்பதுவகையுறப்பாடுவது.

முதுகாஞ்சி,—இளமைகழிந்தறிவு மிக்கோரிளமைகழியாத வறிவின்மாக்கட்குக்கூறுவதாம்.

இயன்மொழிவாழ்த்து,—இக்குடிப்பிறந்தோர்க்கெல்லா மிக்குண மியல்பென்று மவற்றை நீயு மியல்பாகவுடையையென்றுமின்னோர்போல நீயு மியல்பாகவியென்று முயர்ந்தொரவனை வாழ்த்துவதாகக்கூறுவது.

பெருமங்கலம்,—நாடோறுந்தான் மேற்கொள்கின்ற சிறைசெய்தன் முதலிய செற்றங்களைக் கைவிட்டுச் சிறைவிடுதன் முதலியசிறந்ததொழில்கள் பிறந்ததற்குக்காரணமான நாளிடத்துநிகழும் வெள்ளணியைக் கூறுவது.

பெருங்காப்பியம்,— தெய்வவணக்கமுஞ் செயப்படுபொருளு மிவற்றிற்கியைய வாழ்த்துமுன்னுளதா யறம் பொருளின்பம் வீடென்னு நாற்பொருளும் பயக்கு நெறியுடைத்தாய் நிகரில்லாத்தலைவனை யுடைத்தாய் மலையுங் கடலுநாடுநகரும் பருவமுமிருசுடர்த் தோற்றமு மென்றிவற்றின் வணங்கூறுதலு மணமுமுடிகவித்தலும் பொழில்விளையாட்டு நீர்விளையாட்டும், உண்டாட்டு மகப்பேறும் புலவியுங் கலவியுமென் றிவற்றைப் புகழ்தலும், மந்திரமுந்தூதுஞ்செலவும்போரும்வென்றியுமென் றிவற்றைத் தொடர்ந்து கூறலுமாகிய வினை முறையே தொடர்வுறச் சருக்கமிலம்பகம் பரிச்சேதமென்னும் பகுதியையுடைத்தாய் வீரமுதலிய சுவையுமவற்றை விளக்குங் கருத்து விளங்கக்கற்றோரானியற்றப்படுவதாம்.

சிறுகாப்பியம்,—அறம்பொருளின்பம் வீடென்னு நான்கனு ளொன்றும்பலவுங் குறைந்தேனைய வுறுப்புக் கண்மேற் கூறியவாறியல்வது.

பிறப்பு, எ—தேவர், மக்கள், விலங்கு, புள், ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம், இவற்றின் யோனிபேதமெண்பத்திநான்கு நூறாயிரம், அவையாவன, தேவர்பதினான்கு நூறாயிரம்,–மக்களொன்பதுநூறாயிரம்,—விலங்கு பத்துநூறாயிரம்,—புள்பத்துநூறாயிரம்—ஊர்வன பதினொருநூறாயிரம்—நீர்வாழ்வன பத்துநூறாயிரம்-தாவர மிருபதுநூறாயிரம்,—அன்றி, தேவர்பதினாறுநூறாயிரமெனவுந் தாவரம்பதினெட்டுநூறாயிரமெனவுங் கூறுப.

ப

புண்ணியத்தோற்றம், ச—தவம், ஒழுக்கம், கொடை, கல்வி.

புண்ணியம், எ—நகங்கிருமி, தானம், விரதம், ஸ்நேகம், நயபோசனம், கமை, உற்சாகம்.

புண்ணியம், கூ—எதிர்கொளல், பணிதல், ஆசனத்திருத்துதல், தாள்கழுவல், அருச்சித்தல், தூபங்கொடுத்தல், தீபங்காட்டல், புகழ்தல், அமுதமேந்தல், இவை, துறந்தோர்க்குச் செய்யனவாம்.

புரம், ௩—இருப்புமதில், வெள்ளிமதில், பொன்மதில், இவையே முப்புரம்.

புராணம், ௰அ—மச்சியம், கூர்மம், வராகம், வாமனம், பிரமம், வைணவம், பாகவதம், சைவம், இலிங்கம், பௌடிகம், நாரதீயம், காருடம், பிரமகைவர்த்தம், காந்தம், மார்க்கண்டேயம், ஆக்கினேயம், பிரமாண்டம், பதுமம், இவற்றுள், சைவம், காந்தம், இலிங்கம்,கூர்மம், வாமனம். வராகம்,பௌடிகம்,மச்சியம்,மார்க்கண்டேயம்,பிரமாண்டம், இவைபத்துஞ் சிவபுராணம், —நாரதீயம், பாகவதம், காருடம், வைணவம், இவை நான்கும்விட்டுணுபுராணம்,-பிரமம், பதுமம்,இவையிரண்டும் பிரமபுராணம்,— பிரமகைவர்த்தனம், சூரியபுராணம், ஆக்கினேயம், அக்கினிபுராணம்,— அன்றியும்,உபபுராணம், ௰அ, உசனம், கபிலம்,காளி, சனற்குமாரீயம், சாம்பவம்,சிவதன்மம், சௌரம், தைர்வாசம், நந்தி, நாரசிங்கம்,நாரதீயம், பராசரீயம்,பார்க்கவம், ஆங்கிரம்,மாரீசம், மானவம் வாசிட்டம், இலேங்கம், வாருணம், இவை யவ்வவர் பெயரால்விளங்கும்.

புரி, எ—அயோத்தி, மதுரை, மாயை, காசி, காஞ்சி, அவந்திகை,துவாரகை.

புலமையோர், ச—கவி, கமகன், வாதி, வாக்கி, இவருள், ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரமென்னு நாற்கவிகளைப் பாடுவோன்கவி,— அரும்பொருளைச் செம்பொருளுடையாகக் காட்டிவிவகரிப்போன் கமகன்,-காரணமுமேற்கோளுமெடுத்துக் காட்டிப் பிறன்கோண் மறுத்துத் தன்மீதநிறுத்துபவன் வாதி,—அறம், பொருள்,இன்பம், வீடெனு நாற்றிறங்களைக் கேட்கவேட்கவிரித்துக் கூறுவோன் வாக்கி.

புலன், ரு—சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்.

பூ

பூ, ச—கொடிப்பூ, கோட்டுப்பூ,நீர்ப்பூ, புதற்பூ.

பூதம், ரு—நிலம், நீர், தீ, காற்று, விசும்பு.

பெ

பெண்வகை, ச-பதுமினி, சித்திரிணி, சங்கினி, அத்தினி.

பெரியோரியல்பு, எ—அறம், பொருள், இன்பம், அன்பு, புகழ், மதிப்பு, பொறுமை.

பே

பேதம், ௩--சுகதபேதம், சுசாதிபேதம், விசாதிபேதம், அவையாவன, மரத்துக்கிலையரும்புபூகாய்கனிமுதலிய சுகதபேதம்,-மரத்துக்குமறுமரஞ்சுசாதிபேதம், — மரத்துக்குக்கல் விசாதிபேதம்.

பேறு, ௰சு—புகழ், கல்வி, வலி, வெற்றி, நன்மக்கள், பொன், நெல், நல்லூழ், நுகர்ச்சி, அறிவு, அழகு, பெருமை, இளமை, துணிவு, நோயின்மை, வாழ்நாள்.

பொ

பொருள், உ—கல்விப்பொருள், செல்வப்பொருள்.

பொருள், ச—அறம், பொருள், இன்பம், வீடு.

பொழுது, சு—மாலை, யாமம், வைகறை, விடியல், நண்பகல், எற்பாடு, இவையே யத்தமனகாலமுதல வொவ்வொன்று பப்பத்து நாழிகையாக மு

றையேகொள்க. இவற்றைச்சிறுபொழுதென்பர்.

பொறி, ௩—மனம், வாக்கு, காயம்.

பொறி, ரு—மெய், வாய், கண், மூக்கு, செவி.

பொன்வகை, ச — ஆடகம், கிளிச்சிறை, சாதரூபம், சாம்பூநதம்.

போ

போகபூமி, சு—ஆதியரிவஞ்சம், நல்லரிவஞ்சம், ஏமதவஞ்சம், ஏமவஞ்சம், தேவகுருவம், உத்தரகுருவம்.

போகம், அ—பெண்,ஆடை, அணிகலன், போசனம், தாம்பூலம், பரிமளம், பாட்டு, பூவமளி.

போதப்பிரகாரம், ௩—உத்தேசம், இலக்கணம், பரீக்ஷை, அவையாவன, தான்விவகரிக்கும்பொருளைப் பெயர்மாத்திரங்கூறலுத்தேசம்,— அப்பொருளின் சிறப்புத்தன்மைகூற லிலக்கணம், — அப்பொருளி லிவ்விலக்கணமுண்டோ வின்றோவெனப்பார்த்தல் பரீக்ஷை.

ம

மகளிரான்மலர்மரம், ௰ — மகிழமரஞ்சுவைக்க, ஏழிலைம்பாலை மரநட்புற, பாதிரிமரநிந்திக்க, முல்லைக்கொடிநகைக்க, புன்னையாட, குராவணைக்க, அசோகுதைக்க, குருக்கத்திபாட, மராபார்க்க, சண்பகநிழல்படத் தளிர்த்துப்பூப்பனவாம்.

மங்கலச்சொல், ௨௨—திரு,யானை,தேர், பரி, கடல், மலை, மணி, பூ, புகழ், சீர், மதி, நீர், எழுத்து, பொன், ஆரணம், சொல், புயல், நிலம், கங்கை, உலகம், பரிதி, அமிழ்தம், இவற்றின் பரியாயப்பெயரும் பிறவுமாம்.

மங்கலம், அ—சாமரம், நிறைகுடம், கண்ணடி, தோட்டி, முரசு, விளக்கு, கொடி, இணைகயல், இவையே யட்டசுபமெனவும்படும்.

மங்களாசரணை, ௩—வாழ்த்து, வணக்கம், செயப்படுபொருள்.

மணம், அ — பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம், காந்தருவம், ஆசுரம், இராக்கதம், பைசாசம், இவற்றுட்பிரமசாரிக்குக் கன்னியைத் தீமுன்னர்க்கொடுப்பதுபிரமமணம், —தலைமகனினத்தார் வேண்டத் தலைமகளினத் தாருட்பட்டவளைத் தீமுன்னர்க் கொடுப்பது பிரசாபத்தியமணம்,— ஒன்றிரண்டு பசுவுமெருதும்வாங்கிக் கொண்டு கன்னியைத் தீமுன்னர்க் கொடுப்ப தாரிடமணம்,—வேள்வியால்வந்தகன்னியைத் தீமுன்னர்க்கொடுப்பதுதெய்வமணம்,—கொடுப்பாருங்கேட்பாருமின்றியிருவருந் தனியிடத்தெதிர்ப்பட்டுத்தாமேகூடுவது காந்தருவமணம், -பெண்ணுக்குப் பொன்பூட்டிச்சுற்றத்தார்க்குப்பொன்வேண்டுவன கொடுத்துக்கொள்வ தசுரமணம், -பெண்ணும்பெண்ணினத்தாருமுடன்படாமல் வலிதிற்கொள்வ திராக்கதமணம்,—துயின்றாளைச்சென்றுகூடுவது பைசாசமணம்.

மணி, ௯—கோமேதகம், நீலம், பவளம், புட்பராகம், மரகதம், மாணிக்கம், முத்து, வைடூரியம், வைரம்.

மண்டலம், ௩ — அக்கினிமண்டலம், ஆதித்தமண்டலம், சந்திரமண்டலம்.

மண்டலம், எ— வாயுமண்டலம், வருணமண்டலம், சந்திரமண்டலம், சூரியமண்டலம், நட்சத்திர மண்டலம், அக்கினி மண்டலம், திரிசங்குமண்டலம்.

மரபு, ௨—தந்தைவழி, தாய்வழி.

மருத்துகள், ௭—கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு, கீழ், மேல், பலயோனியுயிர்.

மலம், ௩—ஆணவம், மாயை, காமியம்.

மலை, ௭—கைலை, இமயம், மந்தரம், விந்தம், நிடதம், ஏமகூடம், நீலகிரி, அன்றிக் கந்தமாதனங் கூட்டியெட்டெனவும் படும்.

மன்மதன்கணை, ௫ — வனசம், சூதம், அசோகு, முல்லை, நீலம், இவற்றின் பெயர்முறையே, உன்மத்தம், மதனம், சம்மோகம், சந்தாபம், வசிகரணம், இவைசெய்யுமவத்தை, சுப்பிரயோகம், விப்பிரயோகம், சோகம், மோகம், மரணம், அவையாவன, சுப்பிரயோகம், சொல்லு நினைவும்,-விப்பிரயோகம், வெய்துயிர்த்திரங்கல்-சோகம், வெதுப்புந் துய்ப்பன தெவிட்டலும்,—மோகம், அழுங்கலு மொழிபல பிதற்றலும்,—மரணம், அயர்ப்புமயக்கமும்.

மா

மாதம், ௰௨ — சைத்திரம், வைசாகம், சேட்டம், ஆசாடம், சிராவணம், பாத்திரபதம், ஆசுவீசம், கார்த்திகம், மார்க்கசிரம், புசியம், மாகம், பாற்குனம், இவைமுறையே, சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி, தை, மாசி, பங்குனி, இவற்றிற்குமுறையேயுரிய நட்சத்திரம், சித்திரை, விசாகம், மூலம், உத்திராடம், அவிட்டம், பூரட்டாதி, அச்சுவினி, கார்த்திகை, மிருகசீரிடம், பூசம், மகம், உத்திரம்.

மாதர்கள், ௭—அபிராமி, மாயேச்சுவரி, கௌமாரி, நாராயணி, வராகி, இந்திராணி, காளி, இவர்க்கு முறையே வாகனம், அன்னம், இடபம், மயில், கருடன், சியம், யானை, பேய், முறையேயாயுதம், மறை, பினுகம், வேல், ஆழி, கலப்பை, வச்சிரம், சூலம்.

மாயை, ௫ — தமம், மாயை, மோகம், அவித்தை, அநிர்தம், அவையாவன, சிவசைதன்னியத்தை மறைக்கையாற் றமம், சகத்துருபமான வன்னிதாத் தோற்றத்துக்குக் காரண மாகையான் மாயை,—விபரீத ஞானமுண்டாக்குகையான் மோகம், — உணர்வழிக்கையா லவித்தை,—சத்து ரூபத்துக்கன்னியமாகையா லநிர்தம்.

மு

முகம், ௰௪ — அஞ்சிதம், அதோமுகம், ஆகம்பிதம், பிரகம்பிதம், ஆலோலிதம், உலோலிதம், உத்துவாகிதம், சமம், சௌந்தரம், துதம், விதுதம், பராவிருத்தம், பரிவாகிதம், திரச்சீனம், இவற்றுள், வருத்தமாற்றுதிருதோண்மேற் றலைசாய்த்த லஞ்சிதமுகம்,-தலைகுனிந்து பார்த்தலதோமுகம்,—சம்மதித்தற்கு மேல்கீழ் தலையாட்டலாகம்பிதமுகம்,-அதிசயத்தாற் சிறிது தலையாட்டல் பிரகம்பித முகம்,-ஆசையான் மலர்ந்த முகமா யொருவனை யழைத்தலா லோலிதமுகம்,-சிந்தையா லொருதோண்மேற் றலைசாய்த்த லுலோலிதமுகம்,-தலையண்ணாந்துபார்த்த லுத்துவாகிதமுகம்,-தியானிப்பதுபோலத் தலையசையாதிருத்தலே சமமுகம்,—பூரித்த மகிழ்ச்சியான் மலர்ந்தமுகங்காட்டல் சௌந்தரமுகம்—வேண்டாததற்கிடம்வலந்தலையாட்டலே துதமுகம்,—உணவணிமுதலிய வேண்டாமைக்குத் தலைநடுக்கலே விதுதமுகம்,—வேண்டாததற்கு முகந்திருப்பலே பராவிருத்தமுகம்,-மதத்தாலொருபுறஞ் சாய்ந்த

தலையைத் திரிதாகச் சுற்றியாட்டல் பரிவர்த்திதமுகம்.—நாலாந்தரத்தலையாட்டலே திரச்சினமுகம்.

முக்திவிக்கினம், ௩— அறியாமை, ஐயம், திரிபு.

முத்துச்சனிக்குமிடம், ௨௰ — மதி, மேகம், சங்கு, சிப்பி, மீன், தந்தம், மூங்கில், உடும்பு, தாமரை, வாழை, கமுகு, கரும்பு, செந்நெல், ஆம்பல், யானைக்கொம்பு, பன்றிக்கொம்பு, பசுவின்பல், நாகம், கொக்கு, தவளையின்முதுகு.

மும்மை, ௩ — உம்மை, இம்மை, மறுமை.

முனிவர், ௭ — அத்திரி, ஆங்கிரசன், கௌதமன், சமதக்கினி, பரத்துவாசன், வசிட்டன், விசுவாமித்திரன், அன்றியும், அகத்தியன், ஆங்கிரசன், கௌதமன், காசிபன், புலத்தியன், மார்க்கண்டன், வசிட்டன் என்பர்.

முனிவர், ௩௰௧—அகத்தியன், அத்திரி, ஆங்கிரசன், இரணியவர்மாமுனி, உரோமமாமுனி, எண்டமாமுனி, கலைக்கோட்டுமுனி, காசிபன், கௌதமன், சத்தியவான்முனி, சக்கிரதானந்தன், சமதக்கினி, சனகன், சனற்குமாரன், சுகன், சுதிமகாமுனி, துருவாசன், நாரதன், பராந்தசன், பரத்துவாசன், பராசரன், புட்பமாமுனி, பிருகுமாமுனி, பிறுகிமாமுனி, புலத்தியன், மார்க்கண்டன், வசிட்டன், வான்மீகன், விசுவாமித்திரன், வியாக்கிரபாதன், வியாசன்.

மூ

மூர்த்தம், ௮— பூமி, நீர், தேயு, வாயு, ஆகாயம், சூரியன், சந்திரன், ஆன்மா.

மூலம், ௰—கண்டங்கத்திரிவேர், சிறுவழுதுணைவேர், சிறுமல்லிவேர், பெருமல்லிவேர், நெருஞ்சிவேர், இவ்வைந்தும் சிறுபஞ்சமூலமென்ப, வில்வவேர், பெருங்குமிழம்வேர், தழுதாழைவேர், பாதிரிவேர், வாகைவேர், இவ்வைந்தும் பெரும்பஞ்சமூலமென்ப.

மெ

மெய்ப்பரிசம், ௮— ஊன்றல், கட்டல், குத்தல், தடவல், தட்டல், தீண்டல், பற்றல், வெட்டல், இவைமெய்ப்பொறியாற் செயப்படுந்தொழில்.

மே

மேகம், ௭— சம்வர்த்தம், ஆவர்த்தம், புட்கலாவர்த்தம், சங்காரித்தம், துரோணம், காளமுகி, நீலவருணம், இவை பொழிவனமுறையே மணி, நீர், பொன், பூ, மண், கல், தீ.

மொ

மொழி, ௩— ஒட்டுறல், புகுந்துறல், பற்றுறல்.

யா

யாகம், ௫—பிரமம், தெய்வம், பூதம், பிதிர், மானுடம், வேதமோதல் பிரமயாகம், ஓமம்பண்ணுதலே தெய்வயாகம், பலியிடல் பூதயாகம், தர்ப்பணமுதலிய பிதிர்யாகம், இரப்போர்க்குணவுமுதலியவீதலே மானிடயாகம்.

யாகம், ௨௧—அக்கினிட்டோமம், அத்தியக்கினிட்டோமம், உக்தியம், சோடசி, வாசபேயம், அதிராத்திரம், அப்தோரியாமம், அக்கினியாதேயம், அக்கினிகோத்திரம், தரிசபூரணமாசம், சாதுர்மாசியம், நிரூடபசுபந்தம், ஆக்

கிரயணம், சௌத்திராமணி, அட்டகை, பார்வணம், சிராத்தம், சிராவணி, ஆக்கிரகாயணி, சைத்திரி, ஆசுவயுசி.

யாக்கைக்குறுகுற்றம், ௰௮—பசி, நீர்வேட்டல், பயம், வெகுளி, உவகை, வேண்டல், நினைப்பு, உறக்கம், நரை, நோய், மரணம், பிறப்பு, மதம், இன்பம், அதிசயம், வியர்த்தல், கேதம், கையிறவு.

யாழ்வகை, ௪—பேரியாழ், சகோடயாழ், மகரயாழ், செங்கோட்டியாழ்.

யு

யுகம், ௪—கிரேதாயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம்.

யோ

யோகம், ௨௭—விட்கம்பம், பிரீதி, ஆயுட்மான், சௌபாக்கியம், சோபனம், அதிகண்டம், சுகர்மம், திருதி, சூலம், கண்டம், விருத்தி, துருவம், வியாகாதம், அரிடணம், வச்சிரம், சித்தி, விதிபாதம், வரியான், பரீகம், சிவம், சித்தம், சாத்தியம், சுபம், சுப்பிரம், பிரமம், ஐந்திரம், வைதிருதி, இவைமுறையே, கம்பம், பிரியம், வாழ்நாள், புண்ணியம், நலம், மாகண்டம், அறம், துணை, சூலம், கண்டம், ஆக்கம், நிலை, அரவு, எக்களிப்பு, வேல், வல்லமை, கொலை, காயம், தாழ்வு, காட்சி, திறம், புகழ், காவல், தெளிவு, பிரம்மா, இந்திரன், பேய், இவற்றுள், கம்பம், கண்டம், அதிகண்டம், சூலம், வியாகாதம், வச்சிரம், விதிபாதம், பரீகம், வைதிருதியெனவொன்பதன்றி மற்றவை நல்லன, இவற்றுள்ளுங்கம்பத்தின் மூன்றும், சூலத்திலைந்தும், கண்டத்திலு மதிகண்டத்திலு மாறும், வியாகாதத்தி லொன்பதுங் கழித்துநின்ற நாழிகையுமாம்.

வ

வசுக்கள், ௮—அநலன், அனிலன், ஆபச்சைவன், சோமன், தரன், துருவன், பிரத்தியூசன், பிரபாசன்.

வணிகர்குணம், ௮—தனிமையாற்றல், முனிவிலனாதல், இடனறிந்தொழுகல், பொழுதொடுபுணர்தல், உறுவதுதெரிதல், இறுவதஞ்சாமை, ஈட்டல், பகுத்தல்.

வண்ணம், ௫—வெண்மை, கருமை, செம்மை, பொன்மை, பசுமை.

வருடம், கூ௰—பிரபவ, விபவ, சுக்கில, பிரமோதூத, பிரசோற்பத்தி, ஆங்கிரச, சிறீமுக, பவ, யுவ, தாது, ஈச்சுர, வெகுதானிய, பிரமாதி, விக்கிரம, விசு, சித்திரபானு, சுபானு, தாரண, பார்த்திப, விய இவ்விருபதுமுத்தமவருடம், சருவசித்து, சருவதாரி, விரோதி, விகிர்தி, கர, நந்தன, விசய, சய, மன்மத, துன்முகி, ஏவிளம்பி, விளம்பி, விகாரி, சார்வரி, பிலவ, சுபகிருது, சோபகிருது, குரோதி, விசுவாவசு, பராபவ, இவ்விருபதும் மத்திமவருடம், பிலவங்க, கீலக, சௌமிய, சாதாரண, விரோதிகிருது, பரிதாபி, பிரமாதீச, ஆனந்த, இராட்சத, நள, பிங்கள, காலயுத்தி, சித்தார்த்தி, இரௌத்திரி, துன்மதி, துந்துமி, உருத்திரோற்காரி, இரத்தாட்சி, குரோதன, அட்சய, இவ்விருபதுமதமவருடம்.

வருணம், ௪—பிரம, சத்திரிய, வைசிய, சூத்திர, இவற்றைச் சாதியென்றுங்கூறுப.

வள்ளல், உயக — வரையாதுகொடுப் போன் வள்ளலெனப, இவர் முதலிடைக்கடையென மூவகைப்படுவர், அவருள்,முதலெழுவள்ளல், குமுணன், சகரன், சகாரன், செம்பியன், துந்துமாரி, நளன், நிருதி,— இடையெழுவள்ளல். அக்குரன், அந்திமான், அரிச்சந்திரன், கன்னன் சந்திமான், சிசுபாலன், தந்தவக்கிரன்,—கடையெழுவள்ளல். எழிவி, ஓரி, காரி, நள்ளி,பாரி, பேகன், மலையன்.

வா

வாசம், ரு—இலவங்கம், ஏலம், கருப்பூரம், சாதிக்காய், தக்கோலம்.

வாயில், ௬—கண், காது, மூக்கு, வாய், குதம், குய்யம்.

வாயு, ய—பிராணன், அபானன், சமானன், உதானன், வியானன், நாகன், கூர்மன், கிருதரன், தேவதத்தன், தனஞ்சயன், இவையுடலினிற்பன, அவையாவன, இதயத்தியங்குவது பிராணன், — உச்சாக்கத் தலத்திடைநிற்பதபானன்,—கந்தரசக்குழியிற்சந்திடைநிற்பது சமானன்,—நாபியினிற்ப துதானனை,—சரீரமுழுதும் வியாபித்திருப்பது வியானன்,—நீட்டலுமுடக்கலுங்கிளக்கலுநாகன்,—உரோமம் புளகித்திமைப்பதுகூர்மன்,— முகத்திடைநின்று தும்மலுஞ் சினமும்வெம்மையும் விளைப்பது கிருதரன்,—ஓட்டமுமிளைப்பும் வியர்த்தலும் விளைப்பது தேவதத்தன்,—உயிர்போகினும் போகா துடலினைவீக்கித் தலைகிழித்தகல்வது தனஞ்சயன்.

வாரம், எ—ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழம், வெள்ளி, சனி.

வாஞோர்கணம், ௬—அக்கணத்தோராவார், பத்திச்சுவாலகர், ஞானுதிக்கர், பத்திராசனர், நாதகிருத்தியர், சத்துவகர், பலவத்தர், பிராதமிகர், அதிதூதர், தூதர், இவையேநவவிலாசசபையாம், அவையாவன, பத்திச்சுவாலகர் கடவுளைக்குறித்த பத்தியினலே சுவாலிக்கிறவர்,—ஞானுதிக்கர்,கடவுளைக்குறித்த ஞானத்திலாதிக்கம் பெற்றவர்,— பத்திராசனர், கடவுளெழுந்தருளியிருக்குந் தேவ சிங்காதனத்தைப்புகழ்ந்திருப்பவர்,— இவர் முதலாம் அர்ச்சியப் பிரபுத்துவ முடையோராம்,—நாதகிருத்தியர் நாதனுடைய கிருத்தியத்தை யவனருளாற் புரிபவர்,—சத்துவகர், கடவுளருளாற் பற்பலவற்புதங்களைச்செய்யுஞ் சத்துவம்பெற்றவர், சத்திகளென்றுமாம்,- பலவததர், கடவுட்டிருவுளப்படி யெய்துங் கருமங்கட்குவருமிடையூற்றை யவனருளாற் றடுக்கும் பலாத்காரம் பெற்றவர்,— இவரிரண்டாமர்ச்சியப் பிரபுத்துவமுடையோராம்,— பிராதமிகர், கடவுட்டிருவுளப்படியே யிராச்சிய சம்பந்தமான சாதாரண நன்மைகளை நடத்துந் தலைமைபெற்றவர்,—அதிதூதர்,அதிகப்பிரதானவிசேடங்களை யுலகத்திலறிவிக்கத் தானுபதியாக வருபவர்கள்,—தூதர், மனிதர் பிறந்தகணமுதலாகத் தனித்தனியே யவரவரைப் பாதுகாத்து நன்னெறியினடத்தி மற்றும் பிரதானவிசேடங்கட்கனுப்பப்படுவர், — இவர் மூன்றும் அர்ச்சியப் பிரபுத்துவமுடையோர். அர்ச்சியப் பிரபுததுவத்திற்கு அதிச்சுரபதவியென்பாருமுளர். இவை போப்புமார்க்க கிறிஸ்தவர்களாற் கூறப்படுவன.

